# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

ஜூலை 2009

விலை ரூ.10/-



## மூன்றாண்டுகளில் முத்தான சாதனைகள்

தொகுதி - II




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள
பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத்தை திறந்துவைத்தார்.
உடன் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்,
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், முனைவர். ஒளவை நடராசன்,
முனைவர். சிலம்பொலி சு. செல்லப்பன் ஆகியோர் உள்ளனர். (30.6.2008)





மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களையும்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களையும்
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
சந்தித்து வாழ்த்துப் பெற்றார். (30.5.2009)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040
ஆனி-ஆடி
ஜூலை 2009
மலர் : 41 இதழ் : 1

தொகுதி - II

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்
துரை. தாமரைச்செல்வம்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
க. குமாரவேலு
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்
இரா.இளவரசி

நிருபர்கள்
கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ. ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்
வி.இராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு
அ. மதன்
உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
ஆர். பாலாஜி
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு.**

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

1. மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு. **இ. பெரியசாமி** அவர்கள்
வருவாய் மற்றும் வீட்டுவசதி ------------ 3-7

2. மாண்புமிகு சுற்றுலா (ம) பதிவுத்துறை அமைச்சர்
திரு. **என். சுரேஷ்ராஜன்** அவர்கள்
சுற்றுலா மற்றும் பதிவு ------------ 8-13

3. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்
செய்தி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி ------------ 14-22

4. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
திரு. **எ.வ. வேலு** அவர்கள்
உணவு ------------ 23-24

5. மாண்புமிகு குடிசை மாற்று வாரியம் (ம)
இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. **சுப. தங்கவேலன்** அவர்கள்
குடிசைமாற்று வாரியம் (ம)
இடவசதிக் கட்டுப்பாடு ------------ 25-26

6. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்கள்
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்,
சிறுபான்மையினர் நலம் மற்றும்
கைத்தறி ------------ 27-34

7. மாண்புமிகு தொழிலாளர் நலன் (ம)
வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்
திரு. **தா.மோ. அன்பரசன்** அவர்கள்
தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு------------35-38

8. மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **கே ஆர். பெரியகருப்பன்** அவர்கள்
இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் ------------ 39-42

9. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள்
பள்ளிக்கல்வி ------------ 43-48

10. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு. **எஸ்.என்.எம். உபயதுல்லா** அவர்கள்
வணிகவரி ------------ 49-53

11. மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்
திரு. **டி.பி.எம். மைதீன்கான்** அவர்கள்
சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாடு ------------ 54-62

12. மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **என்.செல்வராஜ்** அவர்கள்
வனம் ------------ 63-66

13. மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
திரு. **வெள்ளக்கோயில் மு.பெ.சாமிநாதன்** அவர்கள்
நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் ------------ 67-70

14. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்
டாக்டர். திருமதி. **பூங்கோதை** அவர்கள்
தகவல் தொழில்நுட்பம் ------------ 71-73

15. மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி. **பி. கீதாஜீவன்** அவர்கள்
சமூகநலம் மற்றும் சத்துணவு ------------ 74-77

16. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி. **ஆ. தமிழரசி** அவர்கள்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் ------------ 78-85

17. மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு. **கே.பி.பி.சாமி** அவர்கள்
மீன்வளம் ------------ 86-90

18. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. **உ. மதிவாணன்** அவர்கள்
பால்வளம் ------------ 91-92

19. மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு. **கா.இராமச்சந்திரன்** அவர்கள்
கதர், கிராமத்தொழில்கள் ------------ 93-96



# இணையதளத்தில் நில ஆவண விவரங்கள்

**மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர்**
**திரு. இ.பெரியசாமி அவர்கள்**

★ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ் 2009 ஏப்ரல் வரை 61,59,215 பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து மீண்டும் அரியலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு 23.11.07 முதல் புதிய அரியலூர் மாவட்டமும், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சீரமைத்து 22.02.2009 அன்று முதல் புதிய திருப்பூர் மாவட்டமும் செயல்பட்டு வருகின்றன.

★ தருமபுரி கோட்டம் பிரிக்கப்பட்டு புதிய அரூர் கோட்டம் 13.02.08 முதல் செயல்பட்டு வருகிறது.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 2,500 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் உடன் உள்ளனர்.(26–2–2009)

★ செங்கம் வட்டம் பிரிக்கப்பட்டு 1.11.07 முதல் புதிய தண்டராம்பட்டு வட்டமும்; திண்டுக்கல் வட்டம் பிரிக்கப்பட்டு 12.12.2007 முதல் புதிய ஆத்தூர் வட்டமும்; புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தைச் சீரமைத்து 19.2.2009 முதல் புதிய பொன்னமராவதி வட்டமும்; புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்தைச் சீரமைத்து 19.2.2009 முதல் புதிய கறம்பக்குடி வட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டத்தைச் சீரமைத்து 22.2.2009 முதல் புதிய சூலூர் வட்டமும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

★ 1.3.2009இல் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் குறுவட்டத்தைச் சீரமைத்து புதிய அய்யம்பாளையம் குறுவட்டம் ஏற்படுத்தப்பட்டு 2.3.2009 முதல் செயல்பட்டு வருகிறது.

★ திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் வட்டம் இளையரசனேந்தல் உள் வட்டத்திலிருந்த 12 வருவாய் கிராமங்கள், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்கப்பட்டு 1.5.2008 முதல் செயல்பட்டு வருகிறது.

★ தற்போது தமிழக மாவட்டங்களின் மொத்த எண்ணிக்கை 32; வருவாய் கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை 74; வட்டங்களின் மொத்த எண்ணிக்கை 211; குறு வட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1,121 ஆகும்.

★ 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.1,016.40 இலட்சம் செலவில் 8 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன;

★ 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.1,175 இலட்சம் செலவில் 4 இடங்களில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலருக்கு முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ 8 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்களின் கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ 2007–2008ஆம் ஆண்டு ரூ.417 இலட்சம் செலவில் 3 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டு, குளித்தலை வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பரமக்குடி, கல்குளம். வட்டாட்சியர் அலுவலகக் கட்டங்கள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ ரூ.119 இலட்சம் செலவில் 7 வருவாய்க் கோட்டாட்சியர் குடியிருப்புகளும், ரூ.105 இலட்சம் செலவில் 3 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகளும் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ ரூ.25 கோடி செலவில் புதிதாக சேலம் மாவட்ட ஆட்சியர் வளாகக் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.895.96 இலட்சத்தில் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல், தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டடம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கூடுதல் கட்டடம், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அரூர் கோட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலக முதல் தளத்தில் கூடுதல் கட்டடம், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கூட்ட அரங்கம், அரியலூர் மாவட்ட ஆட்சியர் இருப்பிடம் மற்றும் முகாம் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் குடியிருப்புடன் முகாம் அலுவலகம், ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு குடியிருப்புடன் முகாம் அலுவலகம் செப்பனிடுதல், அரியலூர் மாவட்ட வருவாய் அலுவலருக்குக் குடியிருப்புடன் கூடிய முகாம் அலுவலகம் மற்றும் ரூ.761.88 இலட்சம் செலவில், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 10 வட்டாட்சியர் அலுவலக மறுகட்டுமானப் பணிகள்; ரூ.178.64 இலட்சம் செலவில் 29 வட்டாட்சியர் குடியிருப்புகள்; ரூ52.46 இலட்சம் செலவில் 16 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் கட்ட அரசு ஆணையிடப்பட்டு கட்டட கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகப் புதிய கட்டடம் கட்ட ரூ.12.01 கோடி நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ 31 மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் மற்றும் 31 வரவேற்பு வட்டாட்சியர், துணை வட்டாட்சியர்களுக்குத் ரூ.3,72,000 செலவில் செல்லிடத் தொலைபேசிக்காக சிம் கார்டுகள் வழங்கப்பட்டன.

★ 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பள்ளிப் படிப்பு முடித்து செல்லும் போது பள்ளிகள் மூலமாக சாதிச் சான்று, இருப்பிடச் சான்று மற்றும் வருமானச் சான்று வழங்கும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிகள் மூலம் அச்சடிக்கப்பட்ட நிரந்தர சாதிச் சான்று அட்டைகள் வழங்கும் முறை மீண்டும் செயல்படுத்தப்படுகிறது.

★ 2005 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 22 மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அப்போது ஏற்பட்ட இழப்பினைக் கருத்தில் கொண்டு, 1,415 ஆம் பசலிக்கான நிலவரிகள் உள்ளிட்ட பிற வரிகள் ரூ.11.52 கோடி அளவுக்கு 2006 ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டது.

★ 2008 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தின் போது ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 14.25 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட நெல் மற்றும் பிற பயிர்களுக்கு 10.4 இலட்சம் விவசாயிக்கு ரூபாய் 388 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது; வெள்ளம் பாதித்த 11 மாவட்டங்களில் அந்த ஆண்டிற்கான நிலவரி ரத்து செய்யப்பட்டது.

★ நிலவரியோடு சேர்த்து வசூலிக்கப்படும் தலவரி, தலமேல்வரி, தண்ணீர் தீர்வை போன்றவை ரத்து செய்யப்பட்டு, நிலவரி என்ற பெயரால் இனி பெயரளவிற்கு மட்டுமே வசூலிக்கப்படும். புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டுவரும் 15 ரூபாய் வரி இரண்டு ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு சராசரியாக தற்போது வசூலிக்கப்பட்டுவரும் ரூபாய் 50 என்பதை இனி ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் என்றும் குறைத்து வசூலிக்கப்படும். இதனால் 50 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவர்.

★ 2003ஆம் ஆண்டு அரசு ஊழியர்கள் நடத்திய போராட்டத்தின் போது வருவாய்த்துறையில் மாதம் ரூ.4,000/– தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக இளநிலை உதவியாளர்களுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களில் 777 நபர்கள் தற்காலிக இளநிலை உதவியாளர்களாக பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

★ வருவாய்த்துறையில் உதவியாளர் நிலையில் காலியாக உள்ள 650 பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 22.3.09 அன்று போட்டித்தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

★ 2008–2009 ஆம் ஆண்டிற்கு வருவாய்த்துறையில் பதிவறை எழுத்தர் முதல் உதவியாளர் வரை காலியாக உள்ள 1,749 பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு அரசுக்கு முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டு, காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

★ ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு கிராம உதவியாளர் பணியிடம் என்ற அடிப்படையில் 3,674 கிராம உதவியாளர் காலியிடங்களை நிரப்ப 2006 இல் இந்த அரசு ஆணையிட்டு, 31.3.09 வரை 2,770 பேர் கிராம உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ 24.01.08 முதல் கிராம உதவியாளர்களின் குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.150/– லிருந்து 400/– ஆக உயர்த்தப்பட்டு, 1,503 கிராம உதவியாளர்களின் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுகிறார்கள்.

★ முன்னாள் கிராம அலுவலர்களின் சிறப்பு ஒய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.250/–லிருந்து ரூ.350/– ஆக 24.01.08 முதல் உயர்த்தியும், 1.7.07–இல் வழங்கப்படும் 50 விழுக்காடு அகவிலைப்படியை, அகவிலை ஊதியமாகவும் நிர்ணயித்தும் 24.1.2008 அன்று ஆணையிடப்பட்டு, 5,326 முன்னாள் கிராம அலுவலர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.1,130/– உயர்த்தப்பட்ட சிறப்பு ஒய்வூதியம் பெறுகின்றனர். குடும்ப ஒய்வூதியமும் ரூ.150/– லிருந்து ரூ.400/– அக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆணைப்படி 4,169 குடும்ப ஒய்வூதியதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

★ 20.9.08 ஆணைப்படி பத்தாண்டுகள் பணி நிறைவு செய்யாது ஓய்வு பெற்ற 285 முன்னாள் கிராம நிருவாக அலுவலர்களுக்குக் குறைந்தபட்ச ஒய்வூதியம் (ரூ.1,275/–) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ கிராம நிருவாக அலுவலர்களாக 778 நபர்களுக்கு 18.2.09 அன்று பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. மேலும் வகைபாடு 1,2 மற்றும் 3–ன் கீழ் 34 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

★ ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து இலவச சேலைகளும் வேட்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

★ கனமழை மற்றும் வெள்ளத்தினால் இறந்த நபர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்த்தி வழங்கவும், சிறப்பு நிவாரணமாக, சென்னை மாவட்டம் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.2,000/–ம், மற்ற மாவட்டங்களில் ரூ.1,000/–ம் வழங்க அரசு ஆணையிட்டது.

★ மேலும், கனமழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடும் பொருட்டு, சேதமடைந்த நெற்பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.4,000/– என தற்பொழுது வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.7,500/– என உயர்த்தி வழங்கவும், 2 ஹெக்டேர் அளவிற்கு தான் வழங்க வேண்டும் என்ற வரம்பினைத் தளர்த்தி, பாதிக்கப்பட்ட நிலம் எத்தனை ஹெக்டேராக இருந்தாலும் அத்தனை ஹெக்டேர் நிலத்திற்கும், அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரண உதவி அளித்திடவும் அரசு ஆணையிட்டது. இதேபோல கால்நடைகள் இழப்பிற்கு நிவாரணம் வழங்க எண்ணிக்கை குறித்த உச்சவரம்பினை தளர்த்தி இறந்து போன அனைத்து கால்நடைகளுக்காகவும் நிவாரணம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ மழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்கியிருந்த ஒவ்வொரு பெரிய நபர்களுக்கும் இலவசமாக சேலை / வேட்டி வழங்க அரசு ஆணையிட்டது. இச்சலுகை பொங்கல் திருநாளுக்காக வழங்கப்படும் இலவச சேலை/ வேட்டியுடன் கூடுதலாக வழங்கப்பட்டது.

★ மழை நீர் சூழ்ந்த மற்றும் உட்புகுந்த வீடுகளில் உள்ள பள்ளி செல்லும் மாணவ, மாணவிகளின் பாதிப்படைந்த சீருடை மற்றும் பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கவும் அரசு ஆணையிட்டது. உடனடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகளுக்கென அரசு ரூ.1,064.42 கோடியை வழங்கியது.

★ நில அளவைப் பதிவேடுகள் துறை வாயிலாக 40.80 ச.கி.மீ. பரப்பளவிற்கு நகரளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டம் – தாம்பரம் வட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – திருவள்ளூர் மற்றும் அம்பத்தூர் வட்டங்களில் நத்தம் நில அளவைப் பணி 34 கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது.

★ கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3 கிராமங்களில் மறு நில அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ அனைத்து கிராமங்களின் 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டாக்கள் கணினி மயமாக்கப்பட்டு பொதுமக்கள் வசதிக்காக தொடுதிரைக் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. நில ஆவண நகல்கள் கணினி மூலம் வழங்கியதன் மூலம் மூன்று வருட காலத்தில் ரூ.19.05 கோடி வசூலாகியுள்ளது.

★ சிட்டா அடங்கலில் உள்ள புள்ளி விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மாவட்டம் தவிர) கணினி மயமாக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 1,19,000 புலப்படங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நிலஆவண விவரங்கள் பொதுமக்களின் பார்வைக்காக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

★ சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்திலுள்ள கணினி வரைபட மையத்தில் பலவகைப்பட்ட வரைபடங்கள் கணினி மூலம் தயாரிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்ததன் மூலம் ரூ.51.75 இலட்சம் தொகை வசூலாகியுள்ளது.

★ அனைத்து கிராம வரைபடங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

★ அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின்படி 31.3.2009 வரை 6,69,375 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் 1,74,765 தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், 13,309 பழங்குடியின வகுப்பினரும், 2,54,469 பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், 1,96,359 மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், 30,473 இதர வகுப்பினரும் பயனடைந்துள்ளனர்.

★ நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 2,10,499 ஏக்கர் நிலம் 1,75,467 நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 41,014 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, 44,487 ஏக்கர் நிலங்களும், 3,263 பழங்குடியின வகுப்பினருக்கு, 3,862 ஏக்கர் நிலங்களும், 65,641 பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 81,459 ஏக்கர் நிலங்களும் 50,787 மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 60,889 ஏக்கர் நிலங்களும், 8,656 இதர வகுப்பினருக்கு 19,728 ஏக்கர் நிலங்களும் வழங்கப்பட்டுள்ளன.

★ 2006–க்குப்பின் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,630 பேருக்கு 1,954 ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப்பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தின் கீழ், 22.12.2006 முதல் 31.3.2009 வரை 74,91,116 குடும்பங்களுக்கு குடும்ப அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு மொத்தம் 1,70,70,726 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் 31.3.2009 வரை 3,97,910 பேருக்கு ரூ.283.16 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

★ 2001 முதல் 2006 வரை வீட்டுவசதி வாரிய கட்டுமானப் பணிகள் நடைபெறவில்லை. 2006–07 ஆம் ஆண்டு முதல் வாரிய கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டன. வாரியம் 2006–07 முதல் 2008–09 வரை 1,495 மனைகளையும், 2,768 அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், 348 வீடுகளையும் உருவாக்கியுள்ளது.

★ 2008–09 ஆம் ஆண்டில் ரூ 1,010.58 கோடி மதிப்பீட்டில் 11,311 அலகுகள் கட்டுவதற்காக ஒப்புதல் அளித்துள்ளது.

★ மதுரை, எல்லீஸ் நகரில் ரூ 4.19 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகமும், சென்னை திருவான்மியூரில் ரூ 1.75 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடமும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 2,720 வீடுகள், 451 அடுக்குமாடிக் குடியிருப்புகள், 14,259 மனைகள், 403 வணிக மனைகள் என மொத்தம் 17,833 அலகுகள் விற்கப்பட்டதன் மூலம் ரூ.1,286.24 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

★ 57,643 விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

**மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர்**
**திரு. என்.சுரேஷ்ராஜன் அவர்கள்**

★ தமிழகத்தில் 2004ஆம் ஆண்டில் 11.4 சதவீதமாக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 2005ஆம் ஆண்டில் 7.7 சதவீதமாகக் குறைந்தது. சுற்றுலாத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி, நவீன விளம்பர நடவடிக்கைகள் மேற்கொண்டதால் 2007இல் 29 சதவீதமாகவும், 2008 இல் 36 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.




மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ''எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்'' சுற்றுலாத் திட்டத்தினைத் துவக்கிவைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(20–2–2009)

★ தமிழகத்தில் சுற்றுலாத் திட்டங்களுக்கு 2004இல் 31.29 கோடி என்பதை 2007–2008இல் ரூ.51.63 கோடி என தமிழக சுற்றுலா தலங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தியதால் தமிழகம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் 2ஆம் இடத்தையும், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் 3ஆம் இடத்தையும் வகிக்கிறது.

★ பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்திட முடிவு செய்து, மைய அரசு நிதியுதவித் திட்டத்தில் 2006–2007ஆம் ஆண்டு ரூ. 1,841.41 இலட்சம், 2007–2008 ம் ஆண்டில் ரூ. 2,748.91 இலட்சம் 2008–2009 ஆம் ஆண்டு ரூ. 2,270 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றுள்ளன.

★ மாநில அரசு நிதியில் 2006–2007 ம் ஆண்டில் ரூ.1,206.18 இலட்சம்; 2007–2008 ம் ஆண்டில் ரூ.1,212.14 இலட்சம்; 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.1,557.47 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றுள்ளன.

★ பகுதி – 2 திட்டத்தில் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களும், மாவட்ட உலா மையங்களாக விளங்கும் சுற்றுலா தலங்களையும் மேம்பாடு செய்திட, ரூ.5.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ் ரூ. 2.40 கோடியில் சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

★ செட்டிநாடு சுற்றுலாத்தலத்தை ஊரகச் சுற்றுலாத் தலமாக சிறப்பான முறையில் மேம்படுத்தியமை, தமிழக சுற்றுலாச் செல்வங்களை நவீன முறையிலும், பயணிகள் பயன்பெறும் வகையில் தகவல் கையேடுகள், வண்ணச் சுவரொட்டிகள், குறுந்தகடுகள் போன்ற வர்த்தக மேம்பாட்டுப் பணிகளைச் செம்மையாகச் செய்தமை, செங்கல்பட்டு மாவட்டம் தண்டரை கிராமத்தில் செயல்பட்டுவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இருளர்கள் பெண்கள் மேம்பாடு நலசங்கம், சுற்றுலா நோக்கில் சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டமை ஆகியவற்றுக்காக மூன்று தேசிய விருதுகள் 2007இல் தமிழக சுற்றுலாத்துறைக்குக் கிடைத்துள்ளன.

★ தமிழக சுற்றுலாச் செல்வங்களை நவீன முறையில் பயணிகள் பயன்பெறும் வகையில் உள்நாடு மற்றும் வெளிநாடு தகவல் தொழில் ஊடகங்கள் மூலம் சிறப்பாக விளம்பரம் செய்தமைக்காக தமிழக அரசு சுற்றுலாத்துறைக்கு 2008–ம் ஆண்டுக்கான மைய அரசு விருதும் கிடைத்தது.

★ உலக அளவிலும், தேசிய அளவிலும் 34 கோடியே 34 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவில் விளம்பரப் பணிகள் மேற்கொண்டு அதிக பயணிகளை ஈர்த்ததால் தமிழக சுற்றுலாத்துறைக்கு மைய அரசு மற்றொரு தேசிய விருதையும் வழங்கியுள்ளது.

★ சென்னை – மாமல்லபுரத்திற்கும் மற்றும் சென்னையில் உள்ள சுற்றுலா மையங்களுக்கான **Hop-on, Hop-off Tours** ''எங்கும் ஏறலாம் எங்கும் இறங்கலாம்'' என்ற சிறப்புப் பயணச் சுற்றுலாத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பயணிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

★ சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் மூலம் 400 படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு சுற்றுலா வழிகாட்டி பயிற்சி அளிக்க ஆணைவெளியிடப்பட்டு இதுவரை 395 படித்த பட்டதாரிகளுக்கு சுற்றுலா வழிகாட்டி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டில் 233 பட்டதாரிகளுக்கு சுற்றுலா வழிகாட்டி பயிற்சி நடத்தப்பட உள்ளது.

★ தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப்பயணிகளிடம் ஆட்டோ–டாக்சி ஓட்டுனர்கள், காவல்துறையினர் மற்றும் விமான நிலைய ஊழியர்கள், எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்'' என்ற தலைப்பில் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், தமிழ்நாடு சுற்றுலா வளாகம் மற்றும் சென்னை விமான நிலையம் ஆகிய இடங்களில் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. எல்லா மாவட்ட

தலைநகரங்களிலும் இதே முகாம் படிப்படியாக நடத்தப்பட்டு வருகிறது. சென்னையில் சுற்றுலா பயணிகளை வரவேற்க ஆங்கில மொழிபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.

★ சுற்றுலாத்தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர், புளியஞ்சோலை செட்டிநாடு, திருவரங்கம், மெரினா, வேலூர் கோட்டை, ஏலகிரி மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்கள் 45.89 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ கிராமிய சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கழுகுமலை, தீர்த்தமலை, தேவிபட்டினம், திருவிடைமருதூர், திருக்கருங்குடி, குரங்கனி, தடியன்குடிசை ஆகிய திருத்தலங்கள் ரூ. 3.87 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

★ தஞ்சாவூர் பெரிய கோயில் பகுதியில் ரூ. 1.50 கோடியில் ஒலி–ஒளிக்காட்சி அமைக்கப்படுகிறது.

★ உலகப் புராதனச் சின்னங்களாக விளங்கும் தஞ்சாவூர், தாராசுரம் மற்றும் கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களுக்கு வரும் சுற்றுலாப்பயணிகளைக் கவர ஒலி வழிகாட்டி வசதி அமைக்க ரூ.61.46 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ சுற்றுச்சூழல் மேம்பாடு திட்டத்தின்கீழ் முதல் பகுதியாக உதகமண்டலம்–முதுமலை–ஆனைமலை பகுதி மேம்பாட்டிற்காக ரூ. 439.50 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன.

★ தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களைப் பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் நடைபெறும் விளம்பர முகாம்களில் விளம்பரப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா பற்றிய குறும் படம். நவக்கிரக தலங்கள் பற்றிய குறும் படம். அறுபடை வீடுகள் பற்றிய குறும்படம். மாமல்லபுரம் பற்றிய ஒரு குறும்படம், விருந்தினர் போற்றுதும் விருந்தினர் போற்றதும் என்ற வாசகத்தை மேம்படுத்த ‘‘சுற்றுலா நட்பு வாகனம்’’ பற்றிய குறும்படம் ஆகியன தயாரிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாட்டிலுள்ள ஜைன ஆலயங்களைப் பற்றிய கையேடு முதன் முறையாக வெளியிடப் பட்டுள்ளது.

★ சுற்றுலா தகவல் பற்றிய விபரங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு உடனடியாக கிடைக்க ஏதுவாக சென்னை விமான நிலையம், சென்ட்ரல் ரயில் நிலையம், திருச்சி விமான நிலையம், மதுரை விமான நிலையம், மாமல்லபுரம், கன்னியாகுமரி, கொடைக்கானல், இராமேசுவரம் ஓட்டல் தமிழ்நாடு ஆகிய இடங்களில் தொடு உணர்வு திரைகள் **(Touch Screen Kiosks)** ரூ.9.91 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

**கலைப் பண்பாட்டுத்துறை**

★ 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் கூடுதலாக வயலின், மிருதங்கப் பிரிவுகள் 2006–2007 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

★ நான்கு அரசு இசைக்கல்லூரிகள் மற்றும் பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்காகப் பரதநாட்டிய அணிகலன்கள் 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.8.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ இசைக்கல்லூரிகளில் பயிலும் அனைத்துப் பிரிவு மாணவ, மாணவியருக்கும் வேறுபாடு எதுவுமின்றி ரூ.250/– வீதம் கல்வி உதவித் தொகை 2007–2008 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

★ சென்னை, அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் உள்ள தாகூர் கலையரங்கத்தில் மின்வசதி, குளிர் சாதன வசதி செய்ய 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.6.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "தமிழ்நாடு ஓட்டலுக்கு" வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் "பிளாட்டினம் அட்டை" மற்றும் "தங்க அட்டைகளை" அறிமுகப்படுத்தினார்.
உடன் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள் உள்ளார். (9–7–2008)

★ மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளுக்கு 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.3.15 இலட்சம் செலவில் கணினிகள் வாங்கப்பெற்றுள்ளன.

★ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி இயல் இசை நாடக மன்றத்தின் பொன்விழா கொண்டாட 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

★ நலிந்த கலைஞர்களுக்கு திங்கள் தோறும் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 2006–2007 ஆம் ஆண்டில், ரூ.500/– இல் இருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. தற்போது 6,391 நலிந்த கலைஞர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

★ பல்வேறு கலைப்பணிகள் குறித்து சென்னைக்கு வருகை தரும் அனைத்து தரப்புக் கலைஞர்களும் தங்குவதற்கு உகந்தவாறு மன்ற வளாகத்தில் 363.90 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு விருந்தினர் மாளிகை கட்டும் திட்டம் ஏற்கப்பட்டு 2007–2008 ஆம் ஆண்டு அரசு அறிவிப்பில் ரூ.40.60 இலட்சத்திற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

« நாட்டுப்புறக் கலைஞர்களின் நலன் காக்க நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு நலத்திட்டப் பணிகளுக்காக முதற்கண் ஒரு கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் இதுவரை 14,632 கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். 147 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ. 2,06,500 உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★



# சார் பதிவகங்கள் கணினிமயம்

## மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என்.சுரேஷ்ராஜன் அவர்கள்

★ மூன்று ஆண்டுகளில் 80,15,982 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு மொத்தம் 11,739.40 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

★ விவசாயிகள் அல்லது குறுந்தொழில் முனைவோர் கடனைத் திருப்பி செலுத்துவதற்காக, காப்பீடாக வங்கிகளுக்கு எழுதிக் கொடுக்கும் உரிமை ஆவணங்கள், வைப்பு உடன்படிக்கை அல்லது நகைகள் அடமானம் தொடர்பான ஆவணங்களுக்கு முத்திரைத்தீர்வை முழுமையாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

★ கார்கில் போரில் உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் சம்பந்தப்பட்ட ஆவணப் பதிவுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது.

★ டைடல் பூங்காவிலுள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு எழுதித் தரப்படும் கிரயம் மற்றும் குத்தகை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.




மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள், தொகுதி–2 தேர்வில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 55 சார் பதிவாளர்களின் பயிற்சி முகாமைத் தொடங்கிவைத்து பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டார். (4–9–2008)

- ★ புதிய தொழிற்கொள்கை 2007–ன்படி தனியார் உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்கு எழுதித்தரப்படும் கிரயம் மற்றும் குத்தகை ஆவணங்களுக்கு, ஆவணத்தில் குறிப்பிட்ட மதிப்பின் மீதான முத்திரைத் தீர்வையில் 50 சதவீதம் சலுகை வழங்கப்பட்டுள்ளது. தொழிற் பூங்காக்களிலுள்ள உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்கும் மேற்படி 50 சதவீதம் முத்திரைத் தீர்வை சலுகை வழங்கப்பட்டுள்ளது.
- ★ SIDCO தொழிற்பேட்டையிலுள்ள சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு எழுதித் தரப்படும் குத்தகை மற்றும் கிரயம் ஆவணங்களுக்கு SIDCO நிர்ணயித்த மதிப்பின் மீதான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.
- ★ தனியார் தொழிற்பேட்டையிலுள்ள நிறுவனங்களுக்கு எழுதித்தரப்படும் குத்தகை மற்றும் கிரயம் ஆவணங்களைப் பொறுத்து வழிகாட்டி மதிப்பின் மீதான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.
- ★ சிறு தொழில் நிறுவனங்கள் எழுதித்தரும் அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ★ சமதானத்திட்டத்தின் கீழ் 21,599 ஆவணங்கள் முடிவு செய்யப்பட்டு அரசுக்கு ரூ. 82.45 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.
- ★ 2003 இல் மூடப்பட்ட, 40 சார்பதிவாளர் அலுவலகங்களில் ரூ. 2 கோடி 5 இலட்சம் செலவில் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் 19.9.2007 அன்றும், மேலும் 5 சார்பதிவாளர் அலுவலகங்கள் ரூ. 59.15 இலட்சம் செலவில் 26.2.2009 அன்றும் மீண்டும் திறக்கப்பட்டன.
- ★ ரூ.105.40 இலட்சம் செலவில் பொதுமக்களுடைய மிக முக்கிய ஆவணப் பதிவு பதிவுருக்கள் நெகிழ்வட்டுகள் மற்றும் குறுந்தகடுகள் ஆகியவற்றை பாதுகாக்க 903 அலமாரிகள் வாங்கப்பட்டு பதிவு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- ★ பொதுமக்கள் பதிவுத்துறை அலுவலக நடைமுறையை தெரிந்துகொள்ள ரூ.10 இலட்சம் செலவில் 258 சார்பதிவாளர் அலுவலகங்களில் அறிவிப்புப் பலகை அமைக்கப்பட்டுள்ளன.
- ★ சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்காக, ரூ.60 இலட்சம் செலவில் 300 சார்பதிவாளர் அலுவலகங்களில் மேஜை, நாற்காலி மற்றும் குடிநீர் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ★ பொதுமக்களுக்காக ரூ.5.04 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட 72 சார்பதிவாளர் அலுவலகங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ★ 2008இல் மாநகராட்சி அல்லாத பகுதிகளில் காலியாக உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்களில் 938 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நிரப்பப்பட்டுள்ளனர்.
- ★ ஆள்மாறாட்டம் மற்றும் போலி ஆவணப் பதிவுகள் பதிவு செய்வதை முழுமையாகத் தடுக்கவும், பினாமி நடவடிக்கைகளைத் தடுக்கவும், கிரய ஆவணங்களில் பதிவின்போது வாங்குபவர் மற்றும் விற்பவர் புகைப்படம் ஒட்டுவது 1.7.2006 முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மற்ற ஆவணங்களைப் பொறுத்து பதிவின்போது ஆவணத்தைத் தாக்கல் செய்பவரின் புகைப்படத்தை ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கிரயம் கொடுப்பவர் கிரயம் பெறுபவர் மற்றும் ஆவணத்தைத் தாக்கல் செய்பவரின் விரல் ரேகை பெறுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- ★ அசல் ஆவணங்களில் உண்மைத் தன்மையை உறுதி செய்திட 01.08.2007 முதல் Hologram ஒட்டுவில்லைகள் ஒட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- ★ இந்துத் திருமணங்கள் கட்டாயப் பதிவுக்கு உட்படுத்தப்பட்டு 22.10.07 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- ★ ரூ.225 இலட்சம் செலவில் 15 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- ★ மொத்தமுள்ள 569 சார்பதிவாளர் அலுவலகங்களில் 450 சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.



# தலைவர்களைப் போற்றும் நினைவுப் பணிகள்

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்**
**திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்**

- ★ ரூ. 4.90 இலட்சம் செலவில் சென்னை காமராசர் சாலை, மெரினா கடற்கரையில் கண்ணகி சிலை மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3.6.2006 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- ★ சென்னையில், அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு ரூ.8.95 இலட்சம் செலவில் 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்பட்டு 21.7.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- ★ ''தலைநகர் காத்த தமிழ்ச் செல்வர்'' ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு, 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலை ரூ.6,24,400 செலவில் சென்னையில் அமைக்க நிதி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.
- ★ ரூ.4 இலட்சம் செலவில் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலையின் அருகில் அமையவுள்ள திருவள்ளுவர் மையத்தில் திருக்குறள் ஆய்வு நூல்கள், மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளின் படிகள், புத்தகங்கள் வாங்கி வைப்பதற்கும் புத்தகங்கள் வைக்க அலமாரிகள் மற்றும் மேஜை, நாற்காலிகள் வாங்கவும் நிதி அனுமதித்து ஆணையிடப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், தமிழ் திரைப்பட சீரமைப்புக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.(13–6–2009)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழிசை மூவர் அருணாச்சலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத் தாண்டவர் ஆகியோருக்கு சீர்காழியில் மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளதை யொட்டி, அந்த மணிமண்டபத்தில் நிறுவப்படவுள்ள தமிழிசை மூவர் சிலைகளின் மாதிரி வடிவங்களைப் பார்வையிட்டார். மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.(9–9–2008)

- ★ சென்னை, கலைவாணர் அரங்கத்தில் குளிர்பதனக் கருவியை **(AC Plant)** பழுதுபார்த்து சீரமைக்க ரூ.**16.50** இலட்சம் செலவில் நிதி அனுமதித்து ஆணையிடப்பட்டது.
- ★ சென்னை, கலைவாணர் அரங்கத்தில் சிறப்பு திரைப்படக் காட்சி **(Preview Show)** நடத்த அனுமதித்து ஆணையிடப்பட்டது.
- ★ ''புராதனச் சின்னங்கள்'' பாதுகாப்பின் கீழ் 12–ஆவது நிதி ஆணையத்தின் மானியத்தில் சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்தைப் புதுப்பிப்பதற்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகளுக்காக ரூ.66 இலட்சம் நிதி அனுமதித்து ஆணையிடப்பட்டது.
- ★ சென்னை, வள்ளுவர் கோட்டம் மற்றும் காமராசர் நினைவு இல்லம் ஆகியவற்றிற்கான சீரமைப்புப் பணிகளுக்காகத் திட்ட மதிப்பீட்டுச் செலவினம் முறையே ரூ.60 இலட்சம் மற்றும் ரூ.2.50 இலட்சம் நிதி அனுமதித்து ஆணையிடப்பட்டது.
- ★ சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் "எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம்'' 30.3.2007 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- ★ 2006–2007 ஆம் நிதியாண்டில் 20 நினைவகங்கள் ரூ.26.23 இலட்சம் செலவிலும், 2007–2008 ஆம் நிதியாண்டில் 9 நினைவகங்கள் ரூ.43.45 இலட்சம் செலவிலும் சீரமைக்கப்பட்டுள்ளன.
- ★ பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 100ஆவது ஜெயந்தி விழா கொண்டாடுவதையொட்டி பசும்பொன் கிராமத்திலுள்ள அன்னாரது நினைவு இல்லம் பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா தோரணவாயில் மற்றும் அணையா விளக்கு ஆகியவை அமைக்கப்படுவதோடு, அவரது நினைவிடத்தை

வழிபடவரும் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் பசும்பொன் கிராமத்தில் பால்குடம் மற்றும் முளைப்பாரி எடுக்கும் இடத்தில் மிக அத்தியாவசியமாக தேவைப்படும் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

★ 2007–2008 ஆம் ஆண்டுகளில் மதுரை மாவட்டம், சாத்தமங்கலம் என்ற இடத்தில் மொழிஞாயிறு தேவநேயபாவாணர் அவர்களுக்கு ரூ.39.60 இலட்சம் செலவிலும், தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு என்ற இடத்தில் சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவிலும், கவர்ணகிரியில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவிலும் சிலையுடன் கூடிய மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் மதுரை மாவட்டம், விளாச்சேரி கிராமத்தில் சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற் கலைஞர் அவர்களுக்கு ரூ.7.90 இலட்சம் செலவில் நினைவில்லத்தைப் புதுப்பித்து சிலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவை தவிர எட்டயபுரத்தில் அமுதகவி உமறுப்புலவர் அவர்களுக்கு ரூ.22.50 இலட்சம் செலவில் நினைவகம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

★ திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், உத்தமதானபுரத்தில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா அவர்களுக்கு சிலையுடன் கூடிய நினைவில்லம் அமைக்க ரூ.1.37 இலட்சம் செலவில் அவர் வாழ்ந்த இல்லம் கையகப்படுத்தப்பட்டு ரூ.23 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

★ தமிழ் பெரும் புலவர் அதங்கோட்டாசான் அவர்களின் திருவுருவச்சிலை ரூ.2 இலட்சத்தில் சீரமைக்கப்பட்டுள்ளது.

★ தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில், அதியமான் கோட்டம் மற்றும் 400 நபர்கள் அமரக்கூடிய பார்வையாளர்கள் மண்டபம் அமைக்கப்பட்டு ரூ.115/– இலட்சம் மதிப்பீட்டில் 28.2.2009 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

★ கௌதம புத்தரின் 2550 ஆம் மகா பரிநிர்வாண நிறைவு ஆண்டு விழாவினை நாடு முழுவதும் ஓராண்டுக் காலம் நடத்துவதற்காக மைய அரசினால் மாண்புமிகு இந்தியப் பிரதமர் தலைமையில் தேசிய அளவில் தேசியக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுபோன்று, தமிழகத்தில் ஆண்டு முழுவதும் விழா கொண்டாட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டது.

★ கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைந்து 31.10.2006 அன்று 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சார்பில் பொன்விழா கொண்டாடப்பட்டது.

★ சுதந்திரப்போராட்ட வீரர் பகத்சிங் 100 ஆவது பிறந்த நாள் விழா 28.9.2006 முதல் 27.9.2007 வரை ஓராண்டிற்கு சென்னை மற்றும் பிற மாவட்டங்களின் தலைநகரங்களில் கொண்டாடப்பட்டது.

★ பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் 100 ஆவது பிறந்த நாள் விழா 21.8.2007 அன்று சென்னை, கோவை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கொண்டாடப்பட்டது.

★ பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 100 ஆவது பிறந்த நாள் விழா 30.10.2007 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது.

★ அயோத்திதாச பண்டிதர் அவர்களால் தொடங்கப்பட்ட "ஒரு பைசா தமிழன் " வார இதழின் நூற்றாண்டு விழா 08.07.2008 அன்று சென்னை சர்.பிட்டி.தியாகராயர் அரங்கில் கொண்டாடப்பட்டது.

★ பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னை கலைவாணர் அரங்கில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

★ சர்.பிட்டி.தியாகராயர், டி.எம்.நாயர் மற்றும் டாக்டர் சி. நடசேன் ஆகியோரின் நினைவு அஞ்சல் தலைகள் 17.09.2008 அன்று சென்னை தியாகராயர் நகர், சர்.பிட்டி.தியாகராயர் அரங்கத்தில் வெளியிடப்பட்டது.

★ தமிழ்ப் புத்தாண்டையொட்டி புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 14.01.2009 அன்று பேரறிஞர் அண்ணா புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

★ பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளை சிறு நூலாக மாவட்டத்திற்கு 1,000 வீதம் 31,000 நூல்கள், சென்னை மாவட்டத்திற்கு 4,000 நூல்கள் ஆக மொத்தம் 35,000 நூல்கள் தயாரித்து இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ பேரறிஞர் அண்ணா உருவம் பதித்த நாணயங்கள் வெளியிடுவதற்கு மத்திய அரசிடம் இசைவு பெறப்பட்டுள்ளது. நாணயத் தயாரிப்புப் பணிகள் முடிவடைந்து நாணயம் வெளியிட தயார் நிலையில் உள்ளது.

★ 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் மற்றும் திரைப்படக் கல்லூரி மாணவர் விருதுகள் தேர்வு செய்யப்பட்டு 16.10.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டன.

★ 2007 மற்றும் 2008–ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள், 2006–2007, 2007–2008 ஆம் கல்வியாண்டுகளுக்கான எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன



மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள்,சென்னை, கலைவாணர் அரங்கில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாக் கண்காட்சியினை திறந்துவைத்து பார்வையிட்டார். உடன் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி உள்ளார். (15–9–2008)

மாணவர் விருதுகள் தேர்வு செய்யும் குழு நீதியரசர் திரு.ஏ.கே.ராஜன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டு, சிறந்த திரைப்படங்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கான விருதுகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன. 2008 ஆம் ஆண்டிற்கு திரைப்படங்களைத் தேர்வு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், 2005 மற்றும் 2006ம் ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 70 தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.7 இலட்சம் மானியம் 08.08.2008 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கு மானியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

★ சின்னத்திரை வரலாற்றில் முதல் முறையாக சிறந்த தமிழ் தொடர்களுக்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு 2006 ஆம் ஆண்டு முதல் விருதுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.08.2008 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் வழங்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டுக்கான சின்னத்திரை விருதுகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

★ சின்னத்திரையில் பணிபுரிவோருக்கு மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி கிடைக்கச் செய்ய அவர்களுக்கு நலநிதியம் ஒன்று 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என 2008–2009ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி இதற்கான விதிமுறைகளை வகுத்து அளிக்க குழு 20.08.2008 அன்று அமைக்கப்பட்டு இதன் முதல் கூட்டம் கூட்டப்பட்டது.

★ "இனமுரசு" சத்யராஜ் நடித்த 'பெரியார்' என்ற திரைப்படத்திற்கு ரூ.95/–இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

★ சென்னையில் இந்தோ சினி அப்ரிசியேசன் பவுண்டேசன் **(Indo-Cine Appreciation Foundation)** மூலம் நடத்தப்பட்ட சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டது.




தருமபுரியில் வள்ளல் அதியமான் கோட்டத்தை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்துவைத்தார். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (28–7–2009)




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் 50ஆவது ஆண்டு விழாவினை துவக்கிவைத்து, சிறந்த மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். திரையுலக பிரமுகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (11–6–2009)

★ கடந்த ஆட்சியில் இராஜாஜி மண்டபம் மற்றும் காந்தி மண்டபத்தில் படப்பிடிப்புக் கட்டணமாக ரூ.1 இலட்சமாக இருந்ததை ரூ.10 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசுக் கட்டடங்களுக்கான படப்பிடிப்புக் கட்டணம் ரூ.50,000 ஆக இருந்ததை ரூ.5,000 ஆக குறைத்தும், சாலை மற்றும் விளையாட்டுத் திடல் போன்றவற்றிற்கான கட்டணத் தொகை ரூ.30,000/–த்திலிருந்து ரூ.3,000/–ஆகக் குறைத்தும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதேபோல் சின்னத்திரைப் படப்பிடிப்புக் கட்டணம் திரைப்படப் படப்பிடிப்புக் கட்டணத்திலிருந்து 50 விழுக்காடு சலுகை அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

★ சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முன்பு சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி செண்பகராமன் அவர்களுக்கு ரூ.1.77 இலட்சம் செலவில் பீடத்துடன் கூடிய திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு 17.7.2008 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

★ சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க ரூ.21இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

★ காந்திமண்டப வளாகத்தை பொதுப்பணித்துறையின் மேற்பார்வையில் ஏர்செல் நிறுவனத்தின் உதவியுடன் சுமார் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துதல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) 7.7.2008 அன்று கையெழுத்தானது. மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் சாலையில் ஆவுடையான்குளம் என்ற இடத்தில் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களுக்கு ரூ.39 இலட்சம் செலவில் நினைவகம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சீர்காழியில் தமிழிசை மூவரான அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவர் ஆகியோருக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் சுதந்திரப்போராட்ட வீரர் தியாகி பி.சீனிவாசராவ் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னை, திருவல்லிக்கேணியில் பழுதடைந்த பாரதியார் இல்லம் ரூ.7 இலட்சம் செலவில் பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டது.

**எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை**

★ தனிநபர் பெயர் மாற்ற அறிவிக்கை இதுவரை ரூ.415/– கட்டணத்தில், ஆங்கிலத்தில் மட்டுமே அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு வந்தது. தற்போது பெயர் மாற்றம் தமிழிலும், அரசிதழில் பிரசுரம் செய்ய ஆணையிடப்பட்டு டிசம்பர் 2008 முதல் (தபால் செலவு நீங்கலாக) கட்டணம் ரூ. 50/– மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

★ அரசு மைய அச்சகத்திற்கு கூடுதல் இயந்திரங்கள் நிறுவவும் மற்றும் திருச்சி கிளை அச்சகத்தினை நவீனமயமாக்கும் பொருட்டும், ரூ.193.15 இலட்சம் 2006–2007ஆம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்விரு அச்சகங்களும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அரசு மைய அச்சகத்திற்கு கூடுதல் இயந்திரங்கள் நிறுவப்பட்டு, திருச்சி கிளை அச்சகம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளைக்கு ரூ.10 இலட்சம் செலவில் கூடுதல் நவீன இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

★ எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை சார்ந்த கிளை அச்சகங்கள் அனைத்திலும், 2007–2008ஆம் ஆண்டில் ரூ.79.60 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் மற்றும் கணினி, அதன் உபகரணங்களுடன் நிறுவப்பட்டுள்ளன.

★ ரூ.80 இலட்சம் செலவில் அரசு மைய அச்சகக் கழிவுத்தாள்களை அகற்ற மின்னணு எடை போடும் இயந்திரம், போட்டோகாப்பியர் இயந்திரம், இரண்டு கணினி மற்றும் உபகரணங்கள், நவீன மைக்ரோ பர்ப்பரேட்டிங் இயந்திரம் நிறுவப்பட்டன. திருச்சி அரசு கிளை அச்சகத்தில் பெர்பெக்ட் பைண்டிங் சிங்கில் கிளாம்ப் இயந்திரம், விருத்தாசலம் அரசு கிளை அச்சகத்தில் நவீன வெட்டு இயந்திரம் ஆகியவைகளும் நிறுவப்பட்டுள்ளன. மேலும், சென்னை உயர்நீதிமன்ற பெஞ்ச், மதுரை கிளை அச்சகத்திற்கு 125 கே.வி.ஏ.ஜெனரேட்டர் நிறுவப்பட்டுள்ளது.




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், எழுதுபொருள் அச்சுத்துறைக்கான இணையதளத்தினை தொடங்கிவைத்தார்கள். அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (20–11–2008)



# கட்டுமானப் பணிகளுக்கு உள்ளூரிலேயே அனுமதி

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்**
**திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்**

★ ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி உதவியுடன் மெட்ரோ இரயில் திட்டம் ரூ.14,600 கோடி செலவில் நிறைவேற்ற அனுமதிக்கப் பட்டுள்ளது.

★ தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III ரூ.188 கோடி செலவில் நிறைவேற்றப் படுகிறது.

★ சென்னைப் பெருநகர்ப் பகுதியின் இரண்டாம் முழுமைத் திட்டம் 2.9.2008 முதல் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

★ சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 2007–2008 வரை ரூ.4,875 கோடி செலவிடப் பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.2,328 கோடி செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், சென்னை பெருநகர்க்கான முழுமைத் திட்டம் 2026இன் முக்கிய அம்சங்கள் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கினார்கள். உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(2–9–2008)

★ திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை–II ரூ.877.59 கோடி மதிப்பீட்டில் முழுமையாக முடிக்கப்பெற்று, நவம்பர் 2007 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.544.37 கோடி விடுவித்துள்ளது. மேலும், ரூ.496 கோடி செலவில் 5 கி.மீ. தூரத்திற்கு புனித தோமையர் மலை வரை நீட்டிப்பு செய்ய மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் ஏப்ரல் 2008இல் தொடங்கப்பட்டு டிசம்பர் 2012இல் முடிக்கப்படவுள்ளது. நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அடித்தளம், மேல்தளம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2008–09 ஆம் நிதியாண்டில் தமிழக அரசு ரூ.66.67 கோடியை இத்திட்டத்திற்கு தன் பங்காக வழங்கியுள்ளது.

★ தென்சென்னையிலுள்ள வண்டலூரையும் வடசென்னையில் உள்ள மீஞ்சூரையும் இணைக்கும் வகையில், 62 கி.மீட்டர் தூரத்திற்கு வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, வண்டலூர் முதல் நெமிலிச்சேரி வரையிலான சுமார் 30 கி.மீ. நீளத்திற்கு, ரூ.864.22 கோடி திட்ட மதிப்பீட்டில் 6 வழித்தடம் கொண்ட சாலையினை அமைத்ததை, இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் அமைத்திட 2009–10இல் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்**

★ பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளியோர் (**Economically Weaker Section**) ரூ.25,000/–வரை கடன் பெற்று திருப்பிச் செலுத்த இயலாமல் நிலுவையில் உள்ள கடன் தொகை முழுவதும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ ரூ.25,000/– க்கு மேல் ரூ.1,00,000/– வரை கடன் பெற்றவர்கள் நிலுவையில் உள்ள கடனைத் திருப்பிச் செலுத்தும்போது அவர்களுக்கு அபராத வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டதோடு, வட்டியிலும் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

★ ரூ.1,00,000/–க்கு மேல் ரூ.2,00,000/– வரை கடன் பெற்றவர்கள் நிலுவையில் உள்ள கடனைத் திருப்பிச் செலுத்தும்போது அவர்களுக்கு அபராத வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டதோடு, வட்டியிலும் 25 விழுக்காடு தள்ளுபடி செய்யப்பட்டது.

★ ரூ.2,00,000/–லிருந்து ரூ.7,00,000/– வரை கடன் பெற்ற உயர் வருவாய்ப் பிரிவினர் கடனைச் செலுத்த முன்வந்தவர்களுக்கும் அபராத வட்டி முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டதோடு, வட்டியிலும் 10 விழுக்காடு தள்ளுபடி செய்யப்பட்டது.

★ இச்சலுகைத் திட்டத்தின் கீழ், 31.03.2009 தேதியில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் மொத்தம் 5,05,080 பேர் பயனடைந்துள்ளனர். அவர்களிடமிருந்து மொத்தம் ரூ.24,236 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

★ 2004 டிசம்பர் 26 ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்ட ஏதுவாக, மனைப்பிரிவுகளுக்குத் தடைகள் நேராவண்ணம் ஒட்டுமொத்த விதிவிலக்களித்து உத்தரவிடப்பட்டு பல்வேறு சுனாமி மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

★ தொன்மைச் சிறப்புமிகு பாரம்பரிய நகரங்களின் தொன்மைகளைப் பாதுகாக்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ், 2006–2007இல் நாகூர், கங்கைகொண்டசோழபுரம், பிச்சாவரம், பவானி ஆகிய நகரங்களுக்கு தலா ரூ.50 இலட்சமும், சித்தன்னவாசல் நகருக்கு ரூ.42.25 இலட்சமும், இடைக்காட்டூர் நகருக்கு இரண்டாம் தவணையாக ரூ.8 இலட்சமும், நவதிருப்பதி தலங்களுக்கு ரூ.50 இலட்சமும்; 2007–2008ஆம் ஆண்டில், திருவள்ளூர் நகருக்கு ரூ.50 இலட்சமும், மருதூர் நகருக்கு ரூ.2.325 இலட்சமும்; 2008–2009ஆம் ஆண்டில், விராலிமலைக்கு ரூ.50 இலட்சமும் மானியமாக இத்துறையால் வழங்கப்பட்டுள்ளது.

★ போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தை 21 நகரங்களில் செயல்படுத்த இதுவரை ரூ.1,34,44,300/– விடுவிக்கப்பட்டுள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் மேலூர் நகருக்கு முதல் தவணையாக ரூ.3.75 இலட்சமும், 2008–2009ஆம் ஆண்டில் தூத்துக்குடி நகருக்கு ரூ.5 இலட்சமும், தஞ்சாவூர் நகருக்கு ரூ.15 இலட்சமும், திருமங்கலத்திற்கு ரூ.8 இலட்சமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

★ உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், 2006–2007ஆம் ஆண்டில், ரூ.10.46 இலட்சம் காரைக்குடிக்கும், 2007–2008ஆம் ஆண்டில் ரூ.16.38 இலட்சம் போடிநாயக்கனூர் நகருக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ பூங்கா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ரூ.27.50 இலட்சம் செலவில் சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டு அதன்படி முதல் தவணையாக ரூ.15 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரம் சார்ந்த உள்ளாட்சிகளில் பூங்கா மற்றும் விளையாடுமிடங்களை மேம்படுத்த 32 உள்ளாட்சிகளுக்கு இதுவரை ரூ.38,82,453/– நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ திருச்சி மண்டல அலுவலகம் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, புதிதாக தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் மண்டல அலுவலகங்களும், வேலூர் மண்டல அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தருமபுரி மண்டல அலுவலகமும் 24.12.2007 அன்று புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

★ நிதி ஆதாரத்தைப் பெருக்கும் வகையில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணத்தை அபிவிருத்தி மேற்கொள்ளும் நிறுவனத்தினிடமிருந்து பெறும்வகையில், புதிய சட்டத்தினை ஜூலை 2007இல் ஏற்படுத்திச் செயல்படுத்தி வருகிறது. அதன்படி ஜனவரி 2009 வரை ரூ.91,55,43,619 கட்டணம் பெறப்பட்டுள்ளது.

★ பல்வேறு வகையான கட்டுமான அபிவிருத்திகளுக்கான ஒப்புதல் பெற பொதுமக்கள் பலரும் சென்னைக்கு வரவேண்டிய அவசியத்தைக் குறைத்து, பொதுமக்கள் உள்ளூர் அளவிலேயே ஒப்புதல் பெற்றிட ஏதுவாக அனைத்து மண்டல மற்றும் உள்ளூர் திட்டக் குழும அலுவலகங்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



# தை முதல் நாள் தமிழ்ப்புத்தாண்டைக் கொண்டாட இலவச பொங்கல் பொருட்கள்

**மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்**
**திரு. எ.வ.வேலு அவர்கள்**

★ 1 கிலோ அரிசி 1 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தில் 1,85,72,834 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

★ 11 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு ரூ. 220 கோடி செலவில், இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டு மேலும் 6 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

★ ஏழை எளிய மக்கள் விலைவாசிகளால் பாதிக்கப்படாமல் இருக்க ஏறத்தாழ 80 ரூபாய் மதிப்புடைய 10 சமையல் பொருள்கள் 50 ரூபாய் மானிய விலைக்கு மளிகைப் பொருள்கள் வழங்கும் திட்டம் 2.10.2008 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 86 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

★ தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக சிறப்பாகக் கொண்டாடிட தனிச் சட்டம் இயற்றியதையொட்டி அவர்கள் சர்க்கரைப் பொங்கல் தயார் செய்வதற்குத் தேவையான பொருட்களான பச்சரிசி ½ கிலோ, வெல்லம் ½ கிலோ, பாசிப்பருப்பு 100 கிராம், முந்திரி, திராட்சை மற்றும் ஏலக்காய் 20 கிராம் முதலிய பொருட்களை ஒரு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உத்தமர் காந்தியடிகள் பிறந்தநாளை முன்னிட்டு,
குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் மளிகைப்பொருட்கள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்கள்.
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள்,
தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி,இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (2–10–2008)

பையிலிட்டு இலவசமாக 01.01.2009 முதல் 14.01.2009 வரை வழங்க அரசு ஆணையிட்டது. 1,84,30,500 குடும்ப அட்டைதாரர்கள் இலவச பொங்கல் பொருட்கள் அடங்கிய பைகளைப் பெற்று பயன் அடைந்துள்ளனர்.

★ முக்கிய உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்திட சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா, செறிவூட்டப்பட்ட கோதுமை ஆகியவைகளை நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கும் திட்டம் 14.04.2007 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

★ 1.10.2008 முதல் காவலர் குடும்ப அட்டைகளுக்கும் அருகில் உள்ள நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

★ 31.03.2008 வரை புதிதாக 8,88,604 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 3,33,750 போலி குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ், தவறாகப் பயனடைந்து வந்த 57,624 பயனாளிகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

★ போலி குடும்ப அட்டைகள் குறித்த தகவல் அளிப்போருக்கு ரத்து செய்யப்பட்ட அட்டை ஒன்றுக்கு 200 ரூபாயும், உணவுப் பொருள்கள் கடத்துபவர்கள் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்குத் தற்சமயம் வழங்கப்படும் 100 ரூபாய் என்பதை உயர்த்தி 500 ரூபாயும் வழங்க 14.03.2007இல் ஆணையிடப்பட்டுள்ளது.

★ தனி நபராக இருந்தாலும் அரவாணிகளுக்கு பொது விநியோக குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. இதுவரை 613 அரவாணிகள் பயன்பெற்றுள்ளனர்.

★ கரீப் பருவம் 2006இல் மைய அரசு வழங்கிய ஊக்கத்தொகை ரூ.100 உடன், தமிழக அரசு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், கரீப் பருவம் 2007–08க்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் ஊக்கத்தொகை வழங்கியுள்ளது. இதன்படி சாதாரண ரக நெல்லுக்கு ரூ. 795 ம், சன்ன ரக நெல்லுக்கு ரூ.825ம் ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ 2008–09இல் மைய அரசு நெல் குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகத்திற்கு ரூ. 880ம், சாதாரண ரகத்திற்கு ரூ. 850 ஆக விலை நிர்ணயம் செய்து ரூ. 50 ஊக்கத்தொகையாகவும் அறிவித்தது. தமிழக அரசு, அதனை மேலும் உயர்த்தி சன்ன ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,050 என்றும், சாதாரண ரகத்திற்கு ரூ. 1,000 என்றும் அறிவித்து 28.2.2009 வரை 11.58 இலட்சம் டன் கொள்முதல்.

★ எல்லையோர மாவட்டங்களான கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, வேலூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகியவற்றில் சிறப்புக் காவல் ரோந்துப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ மே 2006 முதல் பிப்ரவரி 2009 முடிய கடத்தப்பட்ட 4,40,803 குவிண்டால் அரிசி, 16,09,817 லிட்டர் மண்ணெண்ணெய், 59,758 லிட்டர் பெட்ரோல், 2,22,374 லிட்டர் டீசல், 47,053 எரிவாயு சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டு குற்றவாளிகள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 53 மண்ணெண்ணெய் நிலையங்களும் கணினி மயமாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மின்னணுப் பட்டியல் இயந்திரம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



# நகர்ப்புரக் குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள்

மாண்புமிகு குடிசைமாற்று வாரியம் (ம)
இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர்
**திரு. சுப. தங்கவேலன்** அவர்கள்

★ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2006 முதல் 2011 வரையிலான காலத்தில் சுமார் 90,000 குடியிருப்புகள் ரூ.3,000 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதுவரை 10,823 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, 13,377 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 7,404 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சென்னை–நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை அகற்றி மறு குடிஅமர்வு செய்யும் திட்டத்தின் கீழ், உலக வங்கியின் உதவியுடன் 293 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 6,500 குடியிருப்புகளின் மாதிரி கட்டட வடிவமைப்புகளைப் பார்வையிட்டார்.
மாண்புமிகு குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (10–7–2008)

★ சுனாமி ஆழிப்பேரலைகள் மற்றும் எண்ணூர் விரைவு சாலை விரிவாக்கப்பணிகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக 1,824 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.35.03 கோடி செலவில் திருவொற்றியூர் பகுதியில் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

★ 13,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் ரூ.570.72 கோடி செலவில் அமைக்கும் திட்டத்தின் கீழ், 5,664 குடியிருப்புகள் ரூ.236.02 கோடி செலவில் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

★ சென்னையில் 4,020 குடியிருப்புகள் ரூ.53.71 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

★ தமிழகத்தின் 8 கடலோர மாவட்டங்களில் நகரப்பகுதிகளில் கடற்கரைக்கு அருகே சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்கு 7,572 வீடுகள் ரூ.246.19 கோடி செலவில் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு 1,204 வீடுகள் ரூ.58.03 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதுடன்; 3,190 வீடுகள் ரூ.103.68 கோடி செலவில் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

★ சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வியல் ஆதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு ஆசிய வங்கி உதவியுடன், 400 சுய உதவி குழுக்களும் அக்குழுவின் மூலம் அவர்களின் வாழ்வு ஆதாரங்களை மேம்படுத்த ரூ. 5.43 கோடி செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சிகள் மற்றும் சுய தொழில்கள் தொடங்குதல் போன்ற பணிகளும் நடைபெறுகின்றன.

★ 12வது நிதிக்குழு சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் இதர நகரங்களில் 6,847 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ ஜவஹர்லால் நேரு நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் 5,040 குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ நகரப்பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள், கான்கிரீட் நடைபாதைகள், தெரு மின்விளக்கு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.30 கோடி செலவில் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

★ சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் 10,248 குடும்பங்களுக்கு குடிசைப்பகுதி மேம்பாட்டு மற்றும் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



# மானியத்துடன் கூடிய புதிய கடன் வழங்கும் திட்டம்

**மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்**

- ★ 2006–07ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி, கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்ற 32,663 மாணவ, மாணவியருக்கும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயின்ற 27,656 மாணவ, மாணவியருக்கும் தலா ரூ. 100/– வீதம் 60 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டன.
- ★ 2006–07ஆம் ஆண்டில் 71 பிற்படுத்தப்பட்டோர்/25 மிகப்பிற்படுத்தப்பட்டார்/13 சீர்மரபினர் கல்லூரி விடுதி நூலகங்களுக்கு மொத்தம் 14,70,000 ரூபாய் செலவிலும், 2007–08ஆம் ஆண்டில் 118 பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு விடுதி ஒன்றுக்கு ரூ.10,000/– மதிப்பீட்டில் மொத்தம் ரூ. 11,80,000 செலவிலும் பாட குறிப்பேடுகள் வழங்கப்பட்டன.
- ★ 502 பிற்படுத்தப்பட்டோர் 287 மிகப்பிற்படுத்தப்பட்டார் 120 சீர்மரபினர் பள்ளி மற்றும் கல்லூரிகளின் 909 விடுதிகளுக்கு ரூபாய் 6,62,000 செலவில் 909 மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.
- ★ 79,11,000 ரூபாய் செலவில் 409 பிற்படுத்தப்பட்டோர் 307 மிகப்பிற்படுத்தப்பட்டோர் 102 சீர்மரபின மாணவ, மாணவியரின் 818 விடுதிகளுக்குக் குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் வழங்கப்பட்டன.
- ★ 2006–07 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டம் கோபாலபுரம், ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை, திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஆகிய இடங்களில் உள்ள விடுதிகளுக்கு ரூபாய் 12,48,000 செலவில் சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.
- ★ 6,58,07,000 ரூபாய் செலவில் 18 கல்லூரி விடுதிகள் மற்றும் 107 பள்ளி விடுதிகள் ஆக மொத்தம் 125 பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவ, மாணவியர் விடுதிகள் புதியதாகத் தொடங்கப்பட்டன.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சிறுபான்மைத் துறையின் மூலம் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையினை 50 மாணவ, மாணவியருக்கு வழங்கினார். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கைத்தறி துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் உடன் உள்ளார். (23–2–2009)

- ★ பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் 1.6.2007 முதல் பள்ளி விடுதிகளுக்கு ரூ. 300/– லிருந்து ரூ.450/– ஆகவும், கல்லூரி விடுதிகளுக்கு ரூ.400/– இல் இருந்து ரூ.550/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- ★ பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் விடுதிகளுக்கு வழங்கப்பட்ட பல்வகைக் கட்டணத் தொகையை 2007–08 ஆம் ஆண்டு முதல் பள்ளி விடுதிகளுக்கு ரூ.15/– லிருந்து ரூ.25/– ஆகவும், கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 15/– லிருந்து ரூ. 35/– ஆகவும், உயர்த்தி வழங்கப்படுகிறது.
- ★ தீபாவளி, பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, ஆங்கிலப்புத்தாண்டு, சுதந்திரதினம், பக்ரீத் ஆகிய திருநாள்களில் விடுதி மாணவ/மாணவியருக்கு சிறப்பு உணவு வழங்க நபர் ஒருவருக்கு கல்லூரி விடுதிக்கு ரூ.3/– வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.18/–ம் பள்ளி விடுதிக்கு ரூ.2/– வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.12/– ம் அனுமதிக்கப்படுகிறது
- ★ 45.84 கோடி ரூபாய் செலவில் 75 மாணவர் விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டன. 2,60,00,000 ரூபாய் செலவில் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நல விடுதிகளின் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ★ 1,121 பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.7. 28 இலட்சம் செலவில் முதலுதவிப் பெட்டிகளும், 125 விடுதிகளுக்கு ரூ.17,42,000 செலவில், இன்வர்ட்டர் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. 2008–2009–ஆம் ஆண்டுகளில் 2,000 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டனர்.
- ★ 2008–09 ஆம் ஆண்டில் ஊரக பகுதிகளில் கல்விஅறிவில் பின்தங்கியுள்ள இடங்களில் அமைந்துள்ள 25 பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு தலா 5 கணினிகள் வீதம் 125 கணினிகள் ரூ 63 இலட்சம் செலவில் பயிற்றுனருடன் வழங்கப்பட்டன.
- ★ 2007–08 ஆம் ஆண்டில் இருந்து பிவ/மிபிவ/சீம விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/மாணவியர்க்கு, ஆண்டிற்கு 3 முறை இலவசமாக மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- ★ பிவ,மிபிவ, (ம) சீம நல விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கைக்கும் உதவித்தொகை பெறுவதற்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/– என்பது ரூ.1,00,000/– ஆக உயர்த்தப்பட்டது.
- ★ 11, 12–ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சார்ந்த மாணவ, மாணவியர்க்கு 2006–07ஆம் ஆண்டில் 3,47,016 மிதிவண்டிகள் 74,41,06,000 ரூபாய் செலவிலும், 2007–08 ஆம் ஆண்டில் 3,78,582 மிதிவண்டிகள் ரூ.82,95,22,000 செலவிலும், 2008–09 ஆம் ஆண்டில் 4 இலட்சத்து 1,162 மிதிவண்டிகள் ரூ.98,01,00,000 ரூபாய் செலவிலும் வழங்கப்பட்டது.
- ★ 2007–2008 ஆம் ஆண்டு முதல் அரசு/ அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் மாலை நேர கல்லூரி மாணவ/மாணவியருக்கும் / உதவித்தொகை வழங்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ★ அரசுப் பள்ளிகளில் பயின்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் பிவ / மிபிவ / சீம மாணவ / மாணவியர் தலை சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து +1 பயில வாய்ப்பளிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 மாணவ, மாணவியர் வீதம் மொத்தம் 300 மாணவ / மாணவியருக்கு தலா ரூ.28,000/–த்துக்கு மிகாமல் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 2007–08–ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது.
- ★ 2008–09 ஆம் ஆண்டு முதல் மாணவ / மாணவியர்களுக்கு மாநில அளவிலான/மாவட்ட அளவிலான/தந்தை பெரியார் நினைவு விருது/பேரறிஞர் அண்ணா நினைவு விருதுகளுக்கான பரிசுத் தொகை உயர்த்தப்பட்டதுடன் இப்பரிசுகள் பிற்படுத்தப்பட்ட மாணவ / மாணவியருக்கு தனியாகவும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கு தனியாகவும் வழங்கப்படுகிறது.

★ 2006–07ஆம் ஆண்டில் 31 அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலை/உயர்நிலை பள்ளிகளுக்கு ரூ 58 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் கணினிகள் துணைச் சாதனங்களுடன் வழங்கப்பட்டுள்ளன. மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கிவரும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு 4 இருக்கைகள் கொண்ட இரும்பு மற்றும் மரத்தால் ஆன சாய்வு மேஜை இணைந்த பெஞ்சுகள் ரூபாய் 2 கோடியே 69 லட்சத்து 67 ஆயிரம் செலவில் வழங்கப்பட்டன. 3 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 6 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 2007–08ஆம் ஆண்டில் 14 அரசு கள்ளர் மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.73 இலட்சம் 58 ஆயிரம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளன. 2008–09ஆம் ஆண்டில் 19 அரசு கள்ளர் பள்ளிகளுக்கு கூடுதலாக 19 வகுப்பறைகள் ரூ.66 இலட்சத்து 50 ஆயிரம் செலவிலும், 4 அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.51,68,000 செலவில் ஆய்வுக்கூடங்களும் அனுமதிக்கப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன.

★ 40,340 படித்து வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள் பயன்பெறத்தக்க வகையில் ரூ.18,72,14,000 செலவில் வேலை வாய்ப்புக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

★ முதன் முதலாக இவ்வரசு பிவ/மிபிவ/சீம இனத்தை சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதிகள் அமைப்பதற்காக அதிகபட்சம் ரூ.1 லட்சம் வரை, மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் புதிய திட்டத்தினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்த 2007–08 ஆம் ஆண்டில் ரூ.25 கோடியும், 2008–09 ஆம் ஆண்டில் ரூ. 25 கோடியும் 10,000 பயனாளிகள் பயன்பெறத்தக்க வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

★ இடையில் நிறுத்தப்பட்டிருந்த ஏழை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கான இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தினை மீண்டும் இவ்வரசு 2006–07ஆ ம் நிதியாண்டு முதல் செயல்படுத்த 15 மாவட்டங்களில் தனி வட்டாட்சியர் உள்ளிட்ட 5 பணியிடங்கள் ரூ 91,43,280 செலவில் ஏற்படுத்தி ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ.5,90,34,000 செலவில் 11,321 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டன.

★ சீர்மரபினர் நல வாரியம் 20.4.2007இல் அமைக்கப்பட்டு ரூ 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு வகையான நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

★ நரிக்குறவர் நல வாரியம் 27.5.2008இல் அமைக்கப்பட்டு ரூ 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

★ பல ஆண்டு காலமாக விடுதிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 420 சமையல் உதவியாளர்கள் கால முறை ஊதியப் பணியிடத்தில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். 108 சமையலர், 108 காவல் மற்றும் ஏவலர் பணியிடங்கள் நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ 2007 செப்டம்பர் முதல் பிற்படுத்தப்பட்டோர்க்கான 30 சதவீத இட ஒதுக்கீட்டிலிருந்து இஸ்லாமியர்களுக்கு 3.5% தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

★ சிறுபான்மையின மக்களின் நலன்களைப் பேண சிறுபான்மையினர் இயக்குநரகம் 2007ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திலும் தலா 3 பணியிடங்கள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ உருது மொழியைப் பாடமாக பயின்று, 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 2007–08ஆம் ஆண்டில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற 12 மாணவ/மாணவியர்களுக்கு ரூ.21,000/–ம் 2008–09 ஆம் ஆண்டில் 13 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.22,500/– வழங்கப்பட்டுள்ளது.

★ அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.30 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அரசின் இணை மானியத் தொகை ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டில் ரூ.35,18,180/– செலவில் 5 இஸ்லாமிய பள்ளி / கல்லூரி மாணவியர் விடுதிகள் திருச்சிராப்பள்ளி, வேலூர், திருநெல்வேலி, திண்டுக்கல், கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில் புதிதாகத் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

★ 2007–2008ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் 1,311 மாணவ/மாணவியர்களுக்கு ரூ.3.35 கோடியும், நடப்பாண்டில் 1,659 மாணவ/மாணவியர்களுக்கு ரூ.4,33,73,208/–ம் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் 2,846 மாணவ/ மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ.94,24,486/– நிதி வழங்கப்பட்டுள்ளது. 2008–09ஆம் ஆண்டுக்கு புதியதாக 8,004 மாணவர்களுக்கு ரூ.2,41,23,335/– கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 162 மாணவ/ மாணவியருக்கு 2008–09ஆம் ஆண்டிற்கு புதுப்பித்தலுக்கான கல்வி உதவித்தொகை ரூ.6,42,782/–க்கு பிரேரணை மத்திய சிறுபான்மையின ஆணையகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில் பள்ளிப்படிப்புத் திட்டத்தின் கீழ் 22,950 மாணவ/ மாணவியருக்கு ரூ.2,90,74,228/– கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1,185 மாணவ, மாணவியருக்கு ரூ.15,92,242/–வழங்க மத்திய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

★ விடுதிகளில் பணியாற்றும் 563 சமையலர்கள் மற்றும் காவலர்களின் நீண்ட கால கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்பட்டு அவர்களின் பணி முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்பட்டுள்ளன. அதே போன்று மிக சொற்ப ஊதியத்தில் சில்லரைச் செலவின முறையில் பல ஆண்டுகள் பணிபுரிந்த 15 சமையலர்/காவலர்களின் பணிகள் வரன்முறை செய்யப்பட்டு சம்பள ஏற்றமுறை பணியிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

★ இத்துறையின் நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு 10 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு 2007–08ஆம் ஆண்டில் ஈப்புகள் புதியதாக வழங்கப்பட்டுள்ளன.

★ வக்ஃபு வாரியத்தின் நிருவாகச் செலவுகளுக்காக மூன்றாண்டுகளுக்கு ரூ.1.35 கோடி மானியமாக வழங்கப்பட்டதுடன், தமிழ்நாடு வக்ஃபு வாரிய புதிய அலுவலகத்திற்குத் தேவைப்படும் மரச்சாமான்கள் தளவாடப் பொருள்கள் வாங்குதல், மற்றும் பல்வேறு வக்ஃபு வாரியப் பணிகளுக்கு மூன்றாண்டுகளில் ரூ.1.58 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ 2007–2008 இல் உலமா ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 2,200 லிருந்து 2,400 ஆக உயர்த்தப்பட்டது.

★ நிருவாகச் செலவினங்களுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ்குழுவிற்கு மூன்றாண்டுகளில் ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டது.

★ புனித ஹஜ்பயணிகளின் சேவைக்காக சவூதி அரேபியா செல்லும் ஹஜ்தொண்டர்களின் செலவினங்களுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ்குழுவிற்கு மூன்றாண்டுகளில் ரூ.28.43 இலட்சமும் வழங்கப்பட்டது.

★ தமிழ்நாடு மாநில ஹஜ்குழுவிற்கு 3 கணினிகள் உட்பட பல்வேறு சாதனங்கள் வாங்கிட ரூ4.40 இலட்சம் வழங்கப்பட்டது.



# விசைத்தறி நெசவாளர்களுக்கு தனி நல வாரியம்

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

**திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்**

★ இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் ஆண்டுக்கு ரூ.256 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் ஏறத்தாழ 59 இலட்சம் பள்ளி மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ.45 கோடி செலவில் இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.



மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்
திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்,
மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையைத் துவக்கிவைத்து
கண்காட்சியினை பார்வையிட்டார். (5–2–2009)

- ★ நெசவாளர் நல்வாழ்வுக் காப்பீட்டுத் திட்டத்தை அரசு 2006–07 ஆம் ஆண்டு முதல் அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தி, 3 இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் இத்திட்டத்தால் பயன்பெறுகின்றனர். ஒரு குடும்பத்திலுள்ள 4 உறுப்பினர்கள் ஆண்டொன்றுக்கு ரூ.15,000/– வரை மருத்துவ சிகிச்சைப் பெறலாம். காப்பீட்டுக் கட்டணத் தொகையான ரூ.781.60யை அரசு ஏற்கிறது.
- ★ 60 வயதைக் கடந்த 14,644 கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 6.64 கோடி செலவில் முதியோர் ஒய்வூதியத் தொகை 1.6.2007 முதல் ரூ.200/–லிருந்து ரூ.400/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ★ கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஒய்வூதியத் தொகை 1.5.2007 முதல் ரூ.350/–லிருந்து ரூ.550/– ஆக உயர்த்தப்பட்டு 1,088 பேர் பயன்பெறுகின்றனர்.
- ★ இரு மாதத்திற்கு ஒருமுறை 1,42,369 கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட்டுகள் வரையிலும், 1,05,182விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட்டுகள் வரையிலும், 1.8.2006 முதல் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மூன்றாண்டுகளில் மொத்தம் ரூ.192.95 கோடி அரசு வழங்கியுள்ளது.
- ★ அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் மூலம் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் 1,602 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு, 2007–2008ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், ஏறத்தாழ 15,000 நெசவாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் அவர்களது வருவாய், நாள் ஒன்றுக்கு ரூ.75/– லிருந்து ரூ120/– ஆக உயர்ந்துள்ளது.
- ★ ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ், பல்லடத்தில் உள்ள பல்லடம் உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா நாட்டிலேயே முதலாவது பூங்காவாக 19.04.2008 அன்று தொடங்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (TCIDS) அங்கீகரிக்கப்பட்ட குமாரப்பாளையத்தில் உள்ள காவேரி உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்காவும் 19.04.2008 அன்று தொடங்கப்பட்டுள்ளது.
- ★ கைத்தறித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் சிட்டாநூலுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 2 விழுக்காடு விற்பனை வரி முழுவதுமாக விலக்களிக்கப்பட்டு, 6.08 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர். அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ.56 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது.
- ★ கைத்தறி, விசைத்தறி, துணித் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, மாநில மாவட்ட அளவிலான கைத்தறி, துணித் தொழில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ★ முந்தைய ஆட்சிக் காலமான 2004–05 மற்றும் 2005–06ஆம் ஆண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டிய 106 கோடி ரூபாயையும் சேர்த்து, 2006–07 ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 208 கோடி தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று, 2007–08 ஆம் ஆண்டில் ரூ.118 கோடியும், 2008–09ஆம் ஆண்டில் ரூ.118 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.
- ★ கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படை கூலியில் 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு 1.5.2007 முதலும், 1.6.2008 முதல் அடிப்படை ஊதியத்தில் 10 விழுக்காடு கூலி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது.
- ★ இதுவரை 724 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 1,324 தனியார் நெசவாளர்களும் கைத்தறி முத்திரைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- ★ கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 6 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு 1.4.2007 முதல் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, மேலும் 12 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு 01.04.2008 முதல் வழங்கப்பட்டுள்ளது.
- ★ ஏழு உலக அதிசயங்களை உள்ளடக்கி 1,64,492 வண்ணங்களில் நெய்யப்பட்ட புதிய ரக மயில் தோகை பட்டுச் சேலை கோ–ஆப்டெக்ஸ் மூலம் விற்பனைக்கு 22.11.2006 அன்றும், 1,330 திருக்குறளுடன் அய்யன் திருவள்ளுவர் திருவுருவம் நெய்யப்பட்ட 'திருக்குறள் பட்டுச் சேலை' 22.04.2008 அன்றும் வெளியிடப்பட்டன.

★ கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக, 550 கைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் ரூ.151.92 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நாகர்கோவில் பகுதியினை கைத்தறி ஏற்றுமதி மண்டலமாக மேம்படுத்துவதற்குச் சிறப்பு திட்டம் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

★ கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கு ஹட்கோ நிறுவனம் வழங்கி 31.03.2008 தேதியில் நிலுவையாக உள்ள கைத்தறி நெசவாளர்களின் வீடுகட்டும் கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

★ கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெறும் காசுக்கடனுக்கு செலுத்தப்படும் வட்டி விகிதத்தில் 3 விழுக்காடு வட்டி மானியம் வழங்கும் திட்டம் 2002–இல் முந்தைய அரசினால் திடீரென நிறுத்தப்பட்டது. இந்த அரசு 1.4.2008 முதல் மீண்டும் செயல்படுத்த ஆணையிட்டுள்ளதோடு, வட்டி மானிய விகிதத்தினை 3 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு உயர்த்தியுள்ளது.

★ "தமிழ்நாடு விசைத்தறித் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம்" துறையால் உருவாக்கப்பட்டு இதனைச் செயல்படுத்துவதற்காக "விசைத்தறி நெசவாளர்களுக்கான தனி நல வாரியம்" அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கென அரசு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

★ கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்த்தல் ஆலை 30 இலட்ச ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படுகிறது.

★ ஈரோடு மாவட்டத்தில் ஒரு "கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம்" ரூ.25.71 இலட்சம் செலவில் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ கைத்தறித் துணி இரகங்களின் விற்பனையினை மேம்படுத்த, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 100 வடிவமைப்பாளர்களுக்கு கணினி மூலம் துணிகளை வடிவமைப்பதற்கான (**CAD**) பயிற்சி ரூ.5 இலட்சம் செலவில் தேசிய ஆடை அலங்கார தொழில் நுட்ப நிலையத்தின் (**NIFT**) மூலம் வழங்கப்பட்டுள்ளது.

★ கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் 50 பகுதிகளில் பொது வசதி மையங்கள் ஒவ்வொன்றும் தலா ரூ.3 இலட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன.

★ கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 31.12.2007 அன்று பணியாளர்கள் பெற்று வந்த அடிப்படை ஊதியத்தில் 27 சதவீதம் உயர்த்தப்பட்டு 4,000 பணியாளர்கள் பயன்பெற்றனர்.

★ மல்பரி விரிவாக்கத்தில், இந்த மூன்று ஆண்டுகளில் (2006–07, 2007–08 மற்றும் 2008–09) 30,831 ஏக்கரில் புதிதாக நடவு செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் 25,279 ஏக்கர் அதிகமாகும்.

★ கடந்த ஆண்டு இறுதியில் (தற்போது) தமிழகத்தில் சுமார் 33,361 ஏக்கர் நிலம் மல்பரி சாகுபடியில் உள்ளது. இது முந்தைய ஆட்சி கால மல்பரி சாகுபடி பரப்பைக் காட்டிலும் ஏறத்தாழ 16,826 ஏக்கர் கூடுதலாகும். கூடுதல் மல்பரி பரப்பு உயர்வு ரூ. 102 ஆகும்.

★ கச்சா பட்டு நூல் உற்பத்தியில் இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 3,903.30 மெட்ரிக் டன் பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் சாதனையை காட்டிலும் சுமார் 2,436.30 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு ரூ.166 ஆகும். இதில் வெண்பட்டு நூல் உற்பத்தி இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 994.95 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் சாதனையைக் காட்டிலும் ஏறத்தாழ 738.25 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு ரூ. 288 ஆகும்.

★ கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,54,155 நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் சாதனையை விடவும் 1,26,395 நபர்கள் அதிகமாகும். சாதனை உயர்வு ரூ. 455 ஆகும்.

★ அரசு பட்டுக் கூடு அங்காடிகளின் வர்த்தகம் இந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 9,336.80 மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் சாதனையைக் காட்டிலும் 3,514.90 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 60.4 % ஆகும்.

★ காஞ்சிபுரம் அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் பட்டு நூல் வர்த்தகம், இந்த மூன்று ஆண்டுகளில் 464.50 மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் சாதனையைக் காட்டிலும் சுமார் 131.50 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 39.5% ஆகும்.

★ டான்சில்க் காஞ்சிபுரத்தின் பட்டு நூல் வர்த்தகம் இந்த மூன்று ஆண்டுகளில் 1,325.23 மெட்ரிக் டன் ஆக அதிகரித்துள்ளது. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் சாதனையை விடவும் 376.23 மெட்ரிக் டன் அதிகம் ஆகும். சாதனை உயர்வு 40% ஆகும்.

★ ஒரு ஏக்கருக்கு பட்டுக்கூடு அறுவடை அளவு, இந்த மூன்று ஆண்டுகளில் 1,317.138 கி.கி என கணிசமான அளவு உயர்ந்துள்ளது. அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் 777.635 கிலோ மட்டுமே. மூன்று ஆண்டுகளில் சாதனை உயர்வு 539.493 கிலோ (169% உயர்வு)

★ இந்த மூன்று ஆண்டுகளில் ரூ.3,860.06 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் 29,013 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் 12,349 பயனாளிகளுக்கு ரூ.779.108 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மட்டுமே வழங்கப்பட்டது. இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் கூடுதலாக ரூ.3,080.952 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 16,664 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

★ தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து சாதனை விற்பனையாக 2008–09ஆம் ஆண்டில் ரூ.2,493.00 இலட்சங்களை எட்டி மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது. 2006–2007ஆம் ஆண்டில் ரூ. 18.58 கோடியாக இருந்த விற்பனை மதிப்பு 2008–2009இல் ரூ. 24.93 கோடியாக உயர்ந்துள்ளது. அதேபோல, உற்பத்தியில் 2006க்குப்பின் 50.9 விழுக்காடு அதிகரித்து இந்நிறுவனத்தின் வருவாய் உயர்ந்ததுடன் கைவினைஞர்களின் வருவாயும் உயர்ந்துள்ளது.

★ சுவாமிமலையில் 50 இலட்ச ரூபாய் செலவில் உற்பத்தி, விற்பனை மற்றும் பயிற்சித் திட்டங்களுக்காகக் கட்டப்பட்ட பன்னோக்குக் கட்டடம் 13.9.2006 அன்று திறந்து வைக்கப்பட்டது.

★ தமிழக அரசு 2006–07ஆம் ஆண்டில் "கைத்திறன் ஆணையரகம்" ஒன்றினை ஏற்படுத்தி தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் அவர்களை பதவி வழி "கைத்திறன் ஆணையராக" நியமித்துள்ளது.

★ மாமல்லபுரம், கன்னியாகுமரியில் தலா 2 கோடி ரூபாய் செலவில் நிரந்தர கண்காட்சித்திடல்களும், 50 இலட்ச ரூபாய் செலவில் சென்னையில் கைத்திறன் அருங்காட்சியகமும் அமைக்கப்படுகின்றன.

★ ரூ.2 கோடி செலவில் 2009–10இல் ஒரு மூலப்பொருள் வங்கி சுவாமிமலையில் அமைக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான அனுமதி ஏற்கெனவே மார்ச் 2009இல் வழங்கப்பட்டுள்ளது.



# 1,13,554 தொழிலாளர்கள் பணி நிரந்தரம்

**மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**

**திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள்**

★ வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் குடும்ப வருமான வரம்பு ஆண்டுக்கு 24 ஆயிரம் ரூபாய் என்பது 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணையிடப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 156 கோடியே 15 இலட்சத்து 30 ஆயிரத்து 604 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ பிரிகால் லிமிடெட், கோவை நிருவாகம் அறிவித்த கதவடைப்பினை அரசு, 10.04.2007 அன்று, தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 10(3)ன் கீழ் உள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி தடை செய்து, 24.05.2007 அன்று தொழிலாளர்களுக்கு பணிவழங்க ஆணையிட்டது.

★ எம்.ஆர்.எப். லிமிடெட் நிருவாகம் அறிவித்த கதவடைப்பினை 20.12.2007இல் அரசு தடை செய்து, 5.02.2008 அன்று தொழிற்சாலை திறக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின்தலைமையில் அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத்தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (28-10-2008)

★ ஆர்கிட் கெமிக்கல்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பொது கோரிக்கைகளை வலியுறுத்தி செய்த வேலை நிறுத்தத்தைத் திரும்ப பெற்றுக் கொண்டு பணிக்குத் திரும்பிய சுமார் 260 தொழிலாளர்களுக்கு நிருவாகம் பணி வழங்க மறுத்தது. 5.12.2007 அன்று தொழிலாளர்களுக்கு பணி வழங்க அரசு ஆணையிட்டது. இந்த அரசாணையை ஆட்சேபித்து நிருவாகம் தாக்கல் செய்த உரிமை மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

★ 1947ஆம் வருட தொழிற்தகராறுகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்து, தொழிலாளர் நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தாத நிகழ்வுகளில் தொழிலாளர் நீதிமன்றங்களே தனது உத்தரவுகள் மற்றும் ஒப்பந்தங்களை சிவில் நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதுபோல் செயல்பட தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு கூடுதல் அதிகாரம் அளித்து சட்டத் திருத்தம் வழங்கப்பட்டுள்ளது.

★ “வேலை பழகுநர்கள்” **(Apprentice)** என நியமிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு விடிவுகாணும் வகையில், தமிழக அரசு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து ஆணையிட்டுள்ளது. வேலை பழகுநர்களாக **(Apprentice)** பணியமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு ரூ.142.20 (பஞ்சப்படி உட்பட) தினக்கூலியாக வழங்க 7.11.2008 அன்று அரசு ஆணையிட்டது.

★ தோட்ட நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூ.110.96 (பஞ்சப்படி உட்பட) வழங்க 2008ஆம் ஆண்டில் அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் மூன்று இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

★ தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களில், குடியிருப்பு ஒதுக்கீடு செய்யாத நிலையில், தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் வீட்டுவாடகைப் படியினை 1.4.2008 முதல் ரூ.50/– லிருந்து ரூ.75/– ஆக உயர்த்தி, 7.3.2008 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், ஒரு பணியாளரின் பணி நீக்கம் செல்லாது என மேல்முறையீட்டு அலுவலரால் பிறப்பிக்கப்படும் உத்தரவினை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யும் நேர்வில், தொழிலாளி இறுதியாகப் பெற்று வந்த சம்பளத்தினை உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கும் வரை நிருவாகம் வழங்க வேண்டும் என்ற புதிய சட்டப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

★ மோட்டார் போக்குவரத்துத் தொழில் நிறுவனங்களில் குறைந்தபட்சம் 5 தொழிலாளர்கள் என்ற வரைமுறையினை நீக்கி ஒரு தொழிலாளி பணிபுரிந்தாலும் மோட்டார் போக்குவரத்துச் சட்டம் பொருந்தும் வகையில் மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ 1986ஆம் வருட குழந்தைத் தொழிலாளர் சட்டம் மற்றும் அதனைச் சார்ந்த இதர தொழிலாளர் சட்டங்களின் கீழ் 5,57,109 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 1,533 வழக்குகள் தொடரப்பட்டன. 794 வழக்குகளில் தண்டனைகள் அறிவிக்கப்பட்டு, மொத்தம் ரூ. 54,28,950/– அபராதம் விதிக்கப்பட்டதோடு, 14 வழக்குகளில் தலா மூன்று மாத கால சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. 1,658 குழந்தைகள் பணியிலிருந்து மீட்கப்பட்டு, 768 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 900 குழந்தைத் தொழிலாளர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

★ குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கென மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட அளவிலான சிறப்புத் தடுப்புப் படைகள் 15.11.2007 அன்று உருவாக்கப்பட்டுள்ளன. இச்சிறப்புப் படைகளின் மூலம் 1,28,713 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 636 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. 679 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, அவர்களை வேலைக்கமர்த்திய நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் 17 மாவட்டங்களின் கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச பேருந்துப் பயண அட்டை

மற்றும் இலவச சீருடை வழங்கப்பட்டு வருகிறது.

★ எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகள் நடைமுறையின் கீழ், 13,26,452 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் 70,146 நிறுவனங்களில் முரண்பாடு காணப்பட்டு இணக்கக் கட்டணமாக ரூ.1,38,53,329/– வசூலிக்கப்பட்டது.

★ தொழில்நுட்பமற்ற பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் 17,54,058 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 1,30,356 முரண்பாடுகள் கண்டறியப்பட்டன. இதில் 1,27,138 முரண்பாடுகள் இசைவுத் தீர்வுகள் மூலமும், 4,844 வழக்குகள் நீதிமன்றங்கள் மூலமும் தீர்க்கப்பட்டுள்ளன.

★ திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, பெரம்பலூர், திண்டுக்கல், கரூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களை ஆட்சி எல்லைகளாகக் கொண்டு, திருச்சி, தொழிலாளர் இணை ஆணையர் பதவி புதிதாக உருவாக்கப்பட்டு, 13.07.2007 முதல் இயங்கி வருகிறது.

★ தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இளநிலைப் பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக் கல்வி **(B.Ed)** மற்றும் உடற்பயிற்சி பட்டப்படிப்பு **(B.P.Ed)** ஆகிய படிப்புகளுக்கு தலா 25 பேருக்கு ஆண்டுக்கு ரூ.2,400/–வீதமும், ஆசிரியர் பயிற்சி பட்டயக்கல்வி **(D.T.T.E)** மற்றும் உடற்பயிற்சி பட்டயப்படிப்பு **(C.P.Ed)** ஆகிய படிப்புகளுக்கு தலா 150 பேருக்கு ஆண்டுக்கு ரூ.1,440/– வீதமும் கல்வி உதவித்தொகை புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

★ வாரிய நலத்திட்டங்களின் மூலம் ரூ.1,83,35,579 அளவுக்குப் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 75,705 பேர்.

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன் பெறத்தக்க வகையில் தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 2,40,677 குடும்பங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 2,30,390 குடும்பங்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.

★ முதற்கட்டமாக தமிழக அரசு காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கான காப்பீட்டு பங்குத் தொகையில் 75% தொகையாக ரூ. 2,93,23,983/– வழங்கப்பட்டது.

★ தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 43,170 மின்னணு அடையாள அட்டைகளும், திருநெல்வேலி மாவட்டத்தில் 13,723 மின்னணு அடையாள அட்டைகளும் பயனாளிகளுக்கு காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

★ இதுவரை 29 புதிய தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

★ அரசினர் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் இளநிலைப் பயிற்சி அலுவலர்களுக்கு போதனா வழிமுறை இருவார காலப் பயிற்சி செங்கற்பட்டு, கோவை மற்றும் திருச்சி ஆகிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் 10 இலட்ச ரூபாய் செலவில் 203 போதகர்களுக்கு அளிக்கப்பட்டது.

★ வெளிநாடுகளில் வேலை பார்க்க விரும்பும் தொழிலாளர்களின் தொழில் திறமையை மேம்படுத்திட அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

★ அரசினர் தொழிற் பயிற்சி நிலைய ஆசிரியர், முதல்வர்களுக்கு வழங்கப்பட்டு வரும் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதிற்கான தொகை ரூ.500/–என்பது ரூ.1,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- ★ அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவர் ஒவ்வொரு ஆண்டும் செலுத்தும் சிறப்புக் கட்டணம் ரூ. 1,200 ரத்து செய்யப்பட்டது.
- ★ உமறுப்புலவர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் என்ற பேரில் தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரத்தில் ரூ.121.47 இலட்சத்தில் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.
- ★ சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகக் கிளை மதுரையில் தொடங்கப்பட்டு, மாநிலத்திலுள்ள 15 தென் மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தற்போது 42,185 ஆக உயர்ந்துள்ளது.
- ★ 2006ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை 1,13,554 தொழிலாளர்கள் 14,935 தொழிற்சாலைகளில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.
- ★ கடும் முரண்பாடுகள் காணப்பட்ட நிருவாகத்தினர் மீது 9,890 வழக்குகள் தொடரப்பட்டு ரூ. 3,61,48,719/– நீதிமன்ற அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.
- ★ அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை அறவே நீக்கிடும் வகையில் 25,536 சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ★ விபத்தில்லாமல் இயங்கும் பட்டாசுத் தொழிற்சாலைகளை ஊக்கப்படுத்திட பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன.
- ★ மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி) 13,700 தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் வசதிக்காக தொ.அ.ஈ திட்டத்தினை காஞ்சிபுரம், கேளம்பாக்கம், கருங்கல், கோபிசெட்டிபாளையம் ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்தி மருந்தகங்கள் திறக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.
- ★ ஒரு மருத்துவர்வகை மருந்தகமாக இயங்கி வந்த திருப்பெரும்புதூர் தொ.அ.ஈ மருந்தகம் 1.10.2008 முதல் 3 மருத்துவர்கள் வகை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.
- ★ தொ.அ.ஈ திட்டத்தினை புதிய இடங்களுக்கு விரிவுபடுத்திட மொத்தம் 19 தொ.அ.ஈ மருந்தகங்களுடன் இணைத்து மருத்துவ வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.
- ★ 6,299 தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்திக்கொடுப்பதற்கு 6 புதிய இடங்களுக்கு தொ.அ.ஈ திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.
- ★ சென்னை அயன்புரம், மதுரை, கோயம்புத்தூர் மருத்துவமனைகளில் யோகாசன பிரிவு துவக்கப்பட்டுள்ளது.
- ★ மதுரை, வேலூர், சேலம் மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவு துவக்கப்பட்டுள்ளது. காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு சிறந்த சிகிச்சை அளித்து வருகின்றது.
- ★ சென்னை அயன்புரம் மருத்துவமனையில் சிறுநீரகப் பிரிவு துவக்கப்பட்டுள்ளது.
- ★ சுழற்சி நிதியிலிருந்து காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் மருத்துவ சிகிச்சைக்காக சிறப்பு மற்றும் அதி சிறப்புப் பிரிவில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற பணம் 6.48 கோடி ரூபாய் திரும்ப வழங்கப்பட்டது.
- ★ தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையின் ஒப்புதலின்பேரில் பணம் செலுத்தப்படாமலேயே தனியார் மருத்துவமனைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, சிகிச்சைக்குப் பின்பு தனியார் மருத்துவமனையின் பட்டியல்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் நேரிடையாக செறிவுத் திட்டம் மூலம் சரி செய்யப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 6,89,89,481 ரூபாய் தனியார் மருத்துவமனைகளுக்குத் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.



# 3,206 திருக்கோயில்களில் திருப்பணிகள்

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்

**திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள்**

- ★ தமிழகம் முழுவதும் 3,206 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.
- ★ திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு மானியத் தொகை ரூ.75 இலட்சத்திலிருந்து, ரூ.3 கோடியாக 2007–08 நிதியாண்டில் உயர்த்தப்பட்டது.
- ★ ரூ.320.39 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில்களில் திருப்பணி உள்பட பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், கிராமக்கோயில்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள பூசாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளுக்கான குறிப்பேடுகளை வழங்கினார். (25–2–2009)

★ மிகவும் சிதிலமடைந்து, கவனிப்பாரின்றி உள்ள பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க 46 திருக்கோயில்களில் திருப்பணி செய்து பாதுகாப்பதற்காக, வரலாற்றுப் பெருமைமிக்க பழமை வாய்ந்த சின்னங்களைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ், 12ஆவது நிதி ஆணைய நல்கையிலிருந்து ரூ. 9.87 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தேவார திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தங்களிலும் பாடிப்பரவசப்பட்ட, ஆனால் நீண்டகாலமாக, குடமுழுக்கே கண்டிராத 30 புராதன திருக்கோயில்களை ரூ.3.29கோடி மதிப்பீட்டில் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 24 திருக்கோயில்களுக்கு ரூ. 2,60,23,000/– நிதி வழங்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ ஆதிதிராவிடர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 3,828 திருக்கோயில்கள் புதுப்பிக்கப்படுவதற்கு ரூ.957 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

★ 9 திருக்கோயில்களில் புதிதாகத் தங்கரதம் செய்து, தங்கரத உலா நடத்தப்பட்டுள்ளது.

★ திருத்தேர்கள் பழுதுபட்டு திருவிழா நடைபெறாமல் இருந்த திருக்கோயில்களில் தேரோட்டம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.118.90 இலட்சம் மதிப்பீட்டில் எட்டு திருக்கோயில்களில் புதிய தேர்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

★ திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில்,100 ஆண்டுகளுக்கு முன்பாக செய்யப்பட்டு பழுதடைந்திருந்த அம்பாள் தேருக்குப் பதிலாக, ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்பட்டு தேரோட்டம் நடத்தப்பட்டது.

★ ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் சார்பில் புதிய நவீன திருமண மண்டபம் கட்டித் திறக்கப்பட்டது.

★ சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.7.6 கோடி செலவில் அருள்மிகு மாரியம்மன் மூலவர் விமானம் தங்க விமானமாக அமைக்கப்பட்டது.

★ தகுதியும் திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதிவேறுபாடின்றி திருக்கோயில்களில் அர்ச்சகராக நியமிக்கப்படலாம் என்று 2.1.2007 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பழனி, திருச்செந்தூர், மதுரை, திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவற்றில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 55 பேர் உட்பட மொத்தம் 207 பேர் இலவசமாக பயிற்சி பெற்று தேர்ச்சி அடைந்துள்ளனர். இவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, உறைய இருப்பிடம் ஆகியன இலவசமாக அளிக்கப்பட்டதுடன் மாணவர் ஒருவருக்கு மாதம் 1க்கு ரூ.500/– ஊக்கத்தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையாக உள்ளதால் வழக்கு முடிந்ததும், வழக்கின் முடிவுக்கேற்ப, இவர்களுக்கு திருக்கோயில்களில் அர்ச்சகர்களாக பணிநியமனம் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

★ கிராமக்கோயில் பூசாரிகள் நலனுக்கென ஒரு நலவாரியம் 23.1.2007 அன்று அமைக்கப்பட்டது. இதில் 35,790 பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு கடந்த 29.2.2009 அன்று நடைபெற்ற விழாவில் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

★ ''தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்'' என்பதை மாற்றி ''தமிழில் அர்ச்சனை செய்யப்படும்'' என்று அறிவித்து தமிழ் அர்ச்சனை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. தமிழில் அர்ச்சனை நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

★ நீண்ட காலத்திற்குப் பின்பு, சிதம்பரம் தில்லை நடராஜர் திருக்கோயில் திருச்சிற்றம்பல மேடையில் தமிழ் தேவார திருமுறைகள் ஓதுவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ ''ஆண்டவன் முன் அனைவரும் சமம்'' என்ற கோட்பாட்டினை உறுதி செய்யும் வகையில், திருக்கோயில்களில் கடைபிடிக்கப்பட்டு வந்த, முக்கிய பிரமுகர்களுக்கு பரிவட்ட மரியாதை செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

★ திருக்கோயில்களை நிருவகிக்க ஏற்படுத்தப்படும் அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவரை அறங்காவலராக நியமிப்பது சட்டமாக்கப்பட்டுள்ளது.

★ திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வழங்கப்படும் பசுக்கள் இதர கால்நடைகள் ஏலம் விடப்படுவது நிறுத்தப்பட்டு, அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, ஒருங்கிணைந்த கோசாலைகள் அமைக்க ஆணையிடப்பட்டு முதல் கட்டமாக திருச்சியில் கம்பரசம்பேட்டை கிராமத்தில் 176 கால்நடைகளும் மற்றும் திருச்செந்தூரில், சுப்பிரமணியபுரம் கிராமத்தில் 463 கால்நடைகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

★ இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், மாவட்டந்தோறும் மக்கட் பணி செய்ய ஓர் அலுவலகம் என்ற நிலையை உருவாக்கிடவும், கரூர், திண்டுக்கல், திருவாரூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து வருவாய் மாவட்டங்களில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகம் புதிதாக ஏற்படுத்தப்பட ஆணையிடப்பட்டு, 15.4.2008 முதல் செயல்படத் தொடங்கியுள்ளன.

★ தஞ்சாவூரில் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகம், உதவி ஆணையர் அலுவலகம், பொறியியல் பிரிவு மற்றும் தணிக்கை அலுவலகம் ஆகியவை ஒரே இடத்தில் இயங்கும் வகையில், ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் ரூ.70.83 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு, 27.9.2007 அன்று திறக்கப்பட்டது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளில் குடியிருப்பவர்களுக்கான வாடகை விகிதம் பாதியாகக் குறைத்து வாடகை நிர்ணயம் சீரமைக்கப்பட்டது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம், மனை ஆகியவற்றில் குடியிருப்போர், வணிகம் செய்வோர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் செலுத்த வேண்டிய மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையான வாடகை உயர்வை 33.3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் நீண்ட காலமாக கூட்டாக ஆக்கிரமித்து குடியிருப்போர்களை, திருக்கோயிலுக்கு நன்மை பயக்கும் வகையில் வாடகைதாரர்களாக அங்கீகரிக்க முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் இவர்களுக்கு மின்சாரம், குடிநீர், சாலைப்போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

★ சென்னை, சென்னையைச் சுற்றியுள்ள நிலங்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களைப் பாதுகாக்கும் நோக்கோடும், திருக்கோயில் வருவாயைப் பெருக்கிடவும், ஒரு தற்காலிக ஏற்பாடாக திருக்கோயிலுக்குச் சொந்தமான ஏழு இடங்களில், வாகனப் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ போதிய பாதுகாப்பு வசதியற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட கும்பகோணம், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை,

திருநெல்வேலி ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிப் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

★ ஒரு காலபூஜைத் திட்டத்தின்கீழ் மேலும் 967 திருக்கோயில்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

★ இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்வதற்காக ரூ.5 இலட்சத்துக்கு குறையாமல் ஆணையர் பொது நலநிதிக்கு நன்கொடை அளிப்பவர்களுக்கும், ஏதேனும் ஒரு திருக்கோயிலில் ரூ.5 இலட்சத்துக்கு குறையாமல் திருப்பணி செய்பவர்களுக்கு அல்லது அத்தகைய நிறுவனத்துக்கு "திருக்கோயில் புரவலர்" என்று பொறிக்கப்பட்ட தங்க நிற அட்டை வழங்கிடவும், இந்த தங்க நிற அட்டை பெறும் குடும்பத்தினருக்கு அல்லது நிறுவனத்துக்கு (ஐந்து பேருக்கு மேற்படாமல்) தமிழகத்தில் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் தரிசனம் செய்ய சிறப்பு நுழைவு அனுமதி வழங்கிடவும் அனுமதித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ தமிழில் நல்ல ஆன்மீக நீதி நூல்கள் வெளியிடப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழில் வெளியிடப்படும் சிறந்த ஆன்மீக நீதிநூல்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் பொது நிதியிலிருந்து ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்குவதற்கும் மற்றும் தமிழில் உள்ள சிறந்த ஆன்மீக, நீதி நூல்களை வாங்கி வெளிநாட்டில் உள்ள இந்து திருக்கோயில்களுக்கு நன்கொடையாக அளிப்பதற்கும் அனுமதியளித்தும், இதற்கான கோரிக்கைகளைப் பரிசீலித்து முடிவெடுக்க அறநிலையத்துறை ஆணையரின் தலைமையில் 5 பேர்கள் கொண்ட ஒரு தேர்வுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி, 114 முக்கியத் திருக்கோயில்களில் புதிதாக நூலகங்கள் துவங்கவும், ஏற்கெனவே நூலகங்கள் உள்ள திருக்கோயில்களில், அவற்றினை மேம்படுத்திப் பராமரிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

★ திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் 52 முக்கிய திருக்கோயில்களில் யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகள் இலவசமாக நடத்தப்படுகிறது.

★ இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கி வரும் கல்லூரிகளில், குற்றாலம், குழித்துறை மற்றும் பூம்புகார் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கல்லூரிகளுக்கு கட்டட வசதி, ஆய்வகங்கள், கணினிகள், குடிதண்ணீர் வசதி மற்றும் அடிப்படை வசதிகளை செய்து தர, ரூ.5/– கோடிக்கு மையநிதி ஏற்படுத்தப்பட்டு, அதன் வட்டியிலிருந்து ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.15/– இலட்சம் வீதம் நிதி உதவி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ இது போல, இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், ஆய்வகங்கள், நூலகங்கள், கணினி வசதிகள் மற்றும் இதர அடிப்படை வசதிகளை செய்துதர, ரூ.5/– கோடிக்கு மையநிதி ஏற்படுத்தி அதன் வட்டியிலிருந்து மேற்படி கல்வி நிறுவனர்களுக்கு நிதி உதவி வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

★ இத்துறையின்கீழ் உள்ள 360 திருக்கோயில்களில் அன்னதானத்திட்டம் நடைபெற்று வருகிறது. இவ்வாறு அன்னதானத்திட்டம் நடைபெறும் 360 திருக்கோயில்கள் உட்பட மொத்தம் 485 திருக்கோயில்களில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலையில், சிறுவர் சிறுமியர்களுக்கு ஆன்மீக நெறி, நீதி மற்றும் ஒழுக்கத்தை கற்பிக்கும் ஆன்மீக வகுப்புகள் சான்றோர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வரசு பொறுப்பேற்ற பின் இந்த ஆன்மீக கல்வியை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், தற்போது பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் ஆன்மீக வகுப்பு நடைபெற்றுவரும் 485 திருக்கோயில்களிலும், பிரதி சனிக்கிழமைகளிலும் மாலையில் ஆன்மீக வகுப்புகளை நடத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★



# செயல்வழிக் கற்றல் திட்டம் நடைமுறை

**மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்**

**திரு. தங்கம் தென்னரசு அவர்கள்**

★ காமராசர் பிறந்த நாளாகிய ஜூலை 15ஆம் நாள், 'கல்வி வளர்ச்சி நாள்' என அறிவிக்கப்பட்டு 2.9.2006 அன்று இதற்கென்று தனிச் சட்டம் இயற்றப்பட்டது.

★ காமராசர் பிறந்த நாளான ஜூலை 15 முதல் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்க 13.5.2006 அன்று ஆணை வெளியிடப்பட்டது. 15.7.2007 முதல் வாரம் மூன்று முறை முட்டைகள் வழங்க ஆணையிடப்பட்டு 2 வயது முதல் 15 வயது வரையுள்ள 72 இலட்சம் குழந்தைகள், மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.

★ தமிழ்மொழிக் கல்வி 1 ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை கட்டாயம் என 31.5.2006 அன்று சட்டம் இயற்றப்பட்டது.

★ இரண்டாண்டுகளில் (2006–07 மற்றும் 2007–08) 30,916 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். 2008–09ஆம் ஆண்டில் காலியாக இருந்த 1,577 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2,444 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சென்னை–கோட்டூர்புரம், காந்தி மண்டபம் சாலையில் ரூ.120 கோடி செலவில் புதிதாகக் கட்டப்படவுள்ள அரசு நூலக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி விழா பேருரையாற்றினார்கள்.
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (16–8–2008)

- ★ 1,005 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 336 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் 1,577 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன.
- ★ ஆந்திரம், கேரளம், கருநாடகம், மகாராஸ்டிரம் போன்ற மாநிலங்களில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாநிலத்திலும் அதிக மதிப்பெண் பெற்று முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.10,000, இரண்டாம் பரிசாக ரூ.5,000, மூன்றாம் பரிசாக ரூ.3,000 வழங்கிட ஆணையிடப்பட்டது.
- ★ தமிழ் வழியில் பயிலும் 10, 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் அனைவருக்கும் அரசுப் பொதுத் தேர்வுக் கட்டணம் ரத்து செய்யப்பட்டு 11 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.
- ★ பெண்களின் சராசரி எழுத்தறிவு மற்றும் 10, 12 வகுப்புகளில் மாநிலத் தேர்ச்சி விழுக்காடு ஆகியவற்றில் பின்தங்கியுள்ள தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர், சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி நேரம் முடிந்ததும் சிறப்பு வகுப்புகள் நடத்தி தேர்ச்சி விழுக்காடுகளை உயர்த்திட புதிய திட்டம் உருவாக்கப்பட்டது.
- ★ மாணவர்களை உடல் ரீதியாகத் தண்டிக்க வகை செய்யும் கல்வி விதி 51 முற்றிலும் நீக்கப்பட்டு இதற்குப் பதிலாக சுய கட்டுப்பாடுகளுக்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டன.
- ★ மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வில் செயல்முறை கலந்த பாடங்களில் எழுத்துத் தேர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண் 40 லிருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டது.
- ★ இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்துள்ள 150 மாணவர்கள் உயர்கல்வி பயிலவும், வேலைவாய்ப்புப் பெறவும் **"O" level** தேர்வுகள் தமிழக அரசுத் தேர்வுத் துறையின் உதவியுடன் நடத்தப்பட்டன.
- ★ 11 மற்றும் 12ஆம் வகுப்புப் பாடத்திட்டத்தில் உள்ள கடினப்பகுதிகள் நீக்கப்பட்டு எளிதாக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் செய்யப்பட்டுள்ள இந்த மாற்றம் 2006–2007 முதலே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- ★ அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் 2008–2009 ஆம் ஆண்டு முதல் மின் செலவினத்தை அரசே ஏற்கும் என அறிவித்து ரூ. 2.972 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ★ செயல்வழிக் கற்றல் திட்டம் 37,486 தொடக்கப் பள்ளிகளிலும், படைப்பாற்றல் கல்வி அனைத்துப் பள்ளிகளிலுமுள்ள 6,7,8 ஆம் வகுப்புகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- ★ இலவச பாடப்புத்தகம் வழங்கும் திட்டங்களும், பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டமும், 10,12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சாதிச்சான்றிதழ், இருப்பிடச் சான்று, வருவாய்ச் சான்று ஆகியன பள்ளியிலேயே வழங்கும் திட்டமும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.
- ★ அரசு அனுமதி பெற்று மாநில அரசின் பாடத் திட்டத்தில் தமிழ் வழியில் கற்பிக்கும் அரசு நிதி உதவிபெறாத சுயநிதி பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவசமாகப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன.
- ★ 2008இல் பெய்த கன மழையால் பாதிக்கப்பட்ட 83,682 மாணவர்களுக்கு 3.34 இலட்சம் பாடப்புத்தகங்கள் கூடுதலாக வழங்கப்பட்டது.

★ நர்சரி, மெட்ரிக்குலேசன், ஆங்கிலோ இந்தியன், ஓரியண்டல், மாநில வாரியக் கல்வி ஆகிய பல்வேறு கல்வி முறைகளை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்து அறிக்கை வழங்கிட பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் முத்துக்குமரன் தலைமையில் 8.9.2006 அன்று குழு அமைக்கப்பட்டு, 4.7.2007 அன்று குழுவின் பரிந்துரைகள் அரசுக்கு அளிக்கப்பட்டது. குழு அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது; இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை தர திரு. எம்.பி. விஜயகுமார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

★ அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 2 வகுப்பறைகள் அல்லது 5 இலட்ச ரூபாய் நடுநிலைப் பள்ளிகளில் 3 வகுப்பறைகள் அல்லது 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்; உயர்நிலைப் பள்ளிகளில் 4 வகுப்பறைகள் அல்லது 15 இலட்ச ரூபாய்; மேல்நிலைப் பள்ளிகளில் 6 வகுப்பறைகள் அல்லது 20 இலட்ச ரூபாய்; அளவுக்கு தங்கள் சொந்தச் செலவில் நிதி வழங்கி கட்டடங்கள் கட்டிக் கொடுக்க முன்வரும் நன்கொடையாளர்கள் அவர்கள் விரும்பும் பெயரை அந்தக் கட்டடத்தில் பொறித்திட அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

★ 'அனைவருக்கும் கல்வி'த் திட்டத்தின் கீழ் ரூ.813.17 கோடி செலவில் 24,873 வகுப்பறைக் கட்டடங்களும் 1,075 பள்ளி தொகுப்பு வள மையக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

★ தேர்வுபெறும் தமிழ் நூல்களை, 600 படிகளிலிருந்து 1,000 படிகளாக நூலகங்களுக்கு வாங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

★ ரூ.166 கோடி செலவில் உலகத் தரநிலையில் சென்னை கோட்டூர்புரத்தில் நவீன மாநில நூலகம் அமைக்கப்படுகிறது.

★ பொது நூலகத் துறையில் பகுதி நேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாகத் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 207 பேர் மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

★ வேலைவாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருட பணி முடித்த 27 பகுதிநேர நூலகர்கள், ஊர்ப்புற நூலகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ 2007–2008 இல் 76 புதிய நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

★ 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 1 கோடியே 20 இலட்ச ரூபாய் செலவில் அறிவியல் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 25 இலட்ச ரூபாய் செலவில் பாடம் கற்பிப்பதற்கான கற்பிப்பு துணைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 150 மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 1 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் மொழிப் பயிற்று ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

★ 120 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 38 இலட்ச ரூபாய் செலவில் நூலக வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

★ தேர்வுகள் தொடர்பான பொருட்கள் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களை சேமித்து வைப்பதற்காக, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் 92 இலட்ச ரூபாய் செலவில் இரண்டு மாடிக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ 443 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிப்பறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் தளவாட சாமான்கள் பணிகளுக்காக நபார்டு வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டு முதல் தவணையாக ரூ.50 கோடி பெறப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

★ 1,583 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்கு மாணவர்கள் அமர இருக்கைகள், மேசைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு மேசை நாற்காலிகள் டான்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

★ டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுத் தொகை ரூ.2,000–த்திலிருந்து ரூ.5,000– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 8 மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

★ கூடுதலாக 5 மெட்ரிக் பள்ளி ஆய்வர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ மேல்நிலை / ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு / பத்தாம் வகுப்பு / மெட்ரிக்குலேஷன் / ஆங்கிலோ இந்தியன் கல்வி முறைத் தேர்வுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்களின் உழைப்பூதியங்கள் உயர்த்தப்பட்டன.

★ உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குப் புதிய பாடத் திட்டங்கள் அடிப்படையில் 50 இலட்ச ரூபாய் செலவில் பணியிடைப் பயிற்சிகள் அளிக்க ஆணையிடப்பட்டது.

★ ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு மூலமாக ஆசிரியர்கள் இடமாறுதல் செய்யப்படுகின்றனர்.

★ அரசு, நகராட்சி, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 1,880 கணினிப் பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ரூ.118 கோடி செலவில் 1,880 மேல்நிலை 1,525 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தமிழ்நாடு மின்னணுவியல் துறை மூலம் கணினி மற்றும் கணினி சார்ந்த பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ நபார்டு திட்டத்தின் நிலை 1 முதல் 7 வரை கட்டப்பட்ட பள்ளிகளுக்கு 1,90,140 பெஞ்ச் டெஸ்க்குகள் மற்றும் 15,845 மேசை, நாற்காலிகள் ரூ.69.08 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ 1 முதல் 7 வகுப்பு வரையில் 594 உயர்நிலை மற்றும் 518 மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் ஆய்வகக் கருவிகள் ரூ.8.31 கோடி செலவில் வாங்கப்பட்டுள்ளன. மேலும் 54 பள்ளிகளில் 8ஆம் வகுப்பிற்கு ரூ. 42.90 இலட்சம் செலவிலும், வகுப்பு 9–இல் 181 பள்ளிகளுக்கு ரூ.1.41 கோடி மதிப்பீட்டிலும் அறிவியல் ஆய்வுக் கருவிகள் வழங்கப்படுகின்றன.

★ 2008–2009இல் நபார்டு (**NABARD**) திட்டத்தின்கீழ், ரூ.481.67 கோடி செலவில் பள்ளிகளில் வகுப்பறை, ஆய்வகங்கள், கழிப்பறை, குடிநீர், சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

★ மாணவர், பெற்றோர், ஆசிரியர் மற்றும் நிருவாகம் ஆகியோரை ஒருங்கிணைக்கும் வகையில் பள்ளிக் கல்வித் துறைக்கென **www.pallikalvi.in** என்னும் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

★ அனைத்து மேல்நிலைப்பள்ளிகளிலும் கணினி, மடிக்கணினி, **LCD** படக்கருவி ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

★ 2008–09ஆம் ஆண்டில் தகவல் தொழில் நுட்பத் திட்டத்தின்கீழ் 400 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.26.80 கோடியில் கணினி மற்றும் சார்பொருள்கள் வாங்கவும், 206 அரசுப் பள்ளிகளுக்குக் கணினி வழங்குவதற்காகவும் ரூ.4.59 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில், 2008–09ஆம் ஆண்டில் 1,686 கணினி பயிற்றுநர்கள், உரிய கல்வித் தகுதிகளுடன், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ அரசு மேல்நிலைப் பள்ளிகளில் விவசாயம் கற்பிக்க 176 விவசாயப் பயிற்றுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ தமிழ் வழியில் பயின்று பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வில் முதலிடம் வகிக்கும் 1,000 மாணவர்களுக்கு ரூ.2.37 கோடி செலவில் மடிக் கணினிகள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

★ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டை நினைவு கூரும் வகையில் 2008–09ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட அனைத்துப் பள்ளிக் கட்டடங்களுக்கும் " பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவுக் கட்டடம்" எனப் பெயரிட அரசு ஆணை வழங்கியுள்ளது.

★ அனைத்துப் பள்ளிகளிலும் வகுப்பறைகளிலேயே நூலகப் புத்தகங்களைக் காட்சிக்கு வைத்து அவற்றை மாணவர்கள் அவ்வப்போது படிக்க வசதி செய்யும் புத்தகப் பூங்கொத்துத் திட்டத்தை பள்ளிக் கல்வித் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

★ பள்ளி மாணவர்களிடையே ஒழுக்கம் மற்றும் உடல் நலன் மேம்பாட்டினை வளர்ப்பதற்காக, ஒருபாட வேளையில் மனவளக்கலை (**Yoga**) பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ அனைத்து வகை ஆசிரியர்களுக்கும் பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டுள்ளது.

★ அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டு, 2,200 நடுநிலைப் பள்ளிகளுக்கு முதற்கட்டமாக ஒரு பள்ளிக்கு 5 மடிக் கணினி (**Lap-top**) வீதம் மொத்தம் 11,000 மடிக் கணினிகள் ரூ.47.36 கோடி மதிப்பீட்டில் மாணவர்கள் கணினிப் பயிற்சி பெறுவதற்காக அளிக்கப்பட்டுள்ளன. நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ 415 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கணினி, அச்சிடும் கருவி (**Computer with Printer**) மற்றும் உபகரணங்களுடன் அளிக்கப்பட்டுள்ளது.

★ 2008–09–ஆம் ஆண்டிலிருந்து அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கும் மின் செலவினத்தை அரசே செலுத்திட ஆணையிட்டு அதற்காக, ரூ 2.97 கோடியை ஒதுக்கீடாக அளித்துள்ளது.

★ தொடக்கக் கல்வி நிலையில் இடைநின்றோர் விழுக்காடு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2002–03ஆம் ஆண்டில் 12 விழுக்காடாக இருந்த இடைநின்றோர் 2008–2009இல் 1.23 விழுக்காடாகக் குறைந்துள்ளது. நடுநிலைக் கல்வி நிலையில் 2002–03ஆம் ஆண்டில் 13 விழுக்காடாக இருந்த இடைநின்றோர் 2008–2009இல் 1.90 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

★ மூன்றாண்டுகளில் 24,873 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன;

★ 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 39 வட்டாரங்களில் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா எனும் சிறப்புத் திட்டத்தின் மூலம் 11–14 வயது பெண்களுக்காக 54 உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 2,918 பெண்குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ செயல்வழிக்கற்றல் திட்டம் 37,486 தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. படைப்பாற்றல் கல்வி அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள 6,7, மற்றும் 8ஆம் வகுப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள்,
சென்னை கோட்டூர்புரத்தில் புதியதாக கட்டப்பட்டுவரும்
டிஜிடல் நூலகத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டார் (11–2–2009)

★ 2008–2009–இல் நியமனம் செய்யப்பட்ட 269 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 3 நாள் நுழைநிலைப் பயிற்சி வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு புதிதாக நியமனம் செய்யப்பட்ட 1,849 நடுநிலைப் பள்ளிகளுக்கான பட்டதாரி ஆசிரியர்களுக்கு 6 நாள் நுழைநிலைப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

★ 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட தொடக்கக் கல்வி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பாடப்பொருள் மற்றும் கற்பித்தல் முறைகளில் பணியிடைப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு 9,902 ஆசிரியர்கள் இதன்மூலம் பயனடைந்தனர்.

★ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களுக்கு 2007–2008 ஆண்டு முதல் இலவச தமிழ்ப் பாட நூல்கள் ரூ..2,03,00,000/– மதிப்பீட்டில் வழங்கப்பட்டன. தற்போது 2008–2009ஆம் ஆண்டிற்கும் ரூ.2,25,00,000/– மதிப்பீட்டில் 21,01,909 மாணவர்களுக்கு இலவச தமிழ் பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டம் 2009–2010ஆம் ஆண்டிற்கும் தற்போதைய நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகத்தை வலுப்படுத்தும் விதமாக தற்போது அனுமதிக்கப்பட்ட 2 உதவி இயக்குநர் பணியிடங்களை அரசுக்கு ஒப்புவித்து அதற்குப் பதிலாக ஒரு இணை இயக்குநர் பணியிடம் அனுமதித்து அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இணை இயக்குநர் பணியிடத்திற்கு அலுவலர் நியமிக்கப்பட்டு அப்பணியிடத்திற்கு உரிய அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது.

★ மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் **L.K.G. U.K.G.** வகுப்புகள் தொடங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

★ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் குறைந்தபட்ச இட வசதி ஏற்படுத்திட மேலும் 3 ஆண்டுகள் கால அவகாசம் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு இயல்பாகவே எழும் அச்சத்தினையும், மன இறுக்கத்தினையும் குறைக்கும் வகையில் தேர்வு எழுதுவதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரத்துடன் கூடுதலாக பத்து நிமிடங்கள் கால அவகாசமளித்து இதனை "ஒருமுகப்படுத்தும் நேரமாக" அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.



# வரி நிலுவைகள் தள்ளுபடி

**மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்**

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்கள்**

★ 1.1.2007இல் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006இல் நடைமுறைப்படுத்தப்பட்டு உபரி வரி, கூடுதல் விற்பனை வரி, மறு விற்பனை வரி போன்றவை நீக்கம் செய்யப்பட்டது.

★ வணிகர் நட்புறவான சமாதான திட்டம் 1.10.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 1,036 பேரிடம் ரூ.6.98 கோடி நிலுவை வரிவசூல் செய்யப்பட்டது.

★ ஒருமுறை தீர்வுத் திட்டம் (2008)ன் கீழ் வணிகர்களிடமிருந்து 9,656 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 31.3.2009 வரை ரூ.72.90 கோடி வசூலிக்கப்பட்டது.

★ வரி நிலுவைகள் தள்ளுபடி திட்டம் (2008)ன் கீழ் 31.3.2009 வரை ரூ.144.31 இலட்சங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.



மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள்
நவீனமயமாக்கப்பட்டுள்ள புழல் தணிக்கைச் சாவடியைப் பார்வையிட்டு,
புதிதாக நிறுவப்பட்டுள்ள கண்காணிப்புக் கேமராவை இயக்கி வைத்தார். (24–9–2008)

★ வரித்தள்ளுபடி ஆய்வுக்குழு துவக்கப்பட்டதிலிருந்து இது வரை மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டு, 50 இனங்களில் ரூ.129.31 கோடி வரி தள்ளுபடி செய்யப்பட்டது.

★ புதிய அரசு பதவியேற்ற 2 ஆண்டுகளில் வரியில்லாத நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்து வருகிறது. 2006–07ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பருப்பு மற்றும் பயறு வகைகள் மாவு, வறுகடலை, சமையல் எண்ணெய், தமிழ் மென்பொருட்கள், சாம்பிராணி, எரிசாம்பல், சிட்டா நூல், வெல்லம், தேங்காய், பட்டாணி, புண்ணாக்கு ஆகிய பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

★ 2007 – 08ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வரி விலக்குகள்:– மண்ணெண்ணெய் பிரஷர் ஸ்டவ், 'உள்ளூர் வரி' செலுத்தப்பட்ட இரசாயன உரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கலப்பு உரக் கலவைகள், விதைப்பதற்காக மட்டும் உபயோகப்படுத்தப்படும் அனைத்து விதைகள், முத்திரையிடப்பட்ட **(sealed)** கேன்கள் மற்றும் பாக்கெட்டுகளில் விற்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கொப்பரை நீங்கலாக மாநிலத்தின் உள்ளும் வெளியிலும் விற்கப்படும் தேங்காய், பட்டாணி மாவு, வறுத்த பட்டாணி, தேங்காய் சிரட்டைத் தூள், பஞ்சாமிர்தம், நாமக்கட்டி, விபூதி மற்றும் பிரசாதம் போன்ற குறிப்பிட்ட 38 வகை நாட்டு மருந்துகள், கடல் சிப்பி மற்றும் கடல் பாசி, செயற்கை வைரங்கள், தஞ்சாவூர் தட்டு, துணிப் பை, பகுப்பாய்வு உபகரணங்கள், பயிற்சி நோட்டுப் புத்தகம் மற்றும் வரைபடிப் புத்தகம், கணக்குப் பயிற்சி உபகரணங்கள், மரத்திலான பென்சில், பென்சில்கள், அழிப்பான்கள், எபோனைட் பேனாக்கள், எபோனைட் பந்து முனைப் பேனாக்கள் **(Ball point pens)**, மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை, கைத்தறி மற்றும் விசைத் தறிகள் மூலம் தயாரிக்கப்பட்ட ஆனால் ஆலையில் தயாரிக்கப்படாத துணியால் ஆன தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள், அனைத்து வகை கற்பூரம், முந்திரித் தோல், மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சமையல் எண்ணெய்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்களுக்கும் விரிவாக்கப்பட்டது. சமையல் எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், புண்ணாக்கு மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட புண்ணாக்கு உள்ளிட்ட வகைகளுக்கு விற்பனை வரி விலக்குக்கான ஆண்டு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்பட்டது. ஏற்கெனவே பருப்பு மற்றும் பயறு வகைகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், மொச்சை, காராமணி, தட்டைப் பயறு, கொள்ளு மற்றும் அவரை ஆகியவற்றிற்கும் விரிவாக்கப்பட்டது. பருப்பு மற்றும் பயறு வகைகளுக்கு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்பட்டது.

★ கோதுமை மீதான 4 சதவீத வரி 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

★ நட்சத்திரத் தகுதி பெறாத உணவகங்கள் மற்றும் இனிப்பகங்களால், வரி செலுத்தி கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட பாட்டில் குடிநீருக்கான **(Bottled Mineral Water)** வரிவிகிதம், ஏற்கெனவே வரி செலுத்தியிருந்தால் மறு விற்பனையின்போது 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

★ அதேபோல் 2007–2008–ஆம் ஆண்டு அறிவித்தவாறு சாதாரண மக்களால் உபயோகப்படுத்தப்படும் பின்வரும் பொருட்களுக்கான வரிவீதம் 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அவை:– உடனடி காஃபி நீங்கலாக சிக்கரி மற்றும் வணிகச் சின்னமிடாத காஃபி தூள், வணிகச் சின்னமிட்ட மசாலா பவுடர், மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ், மாவு, மரவள்ளிக் கிழங்கு திப்பி, பஜ்ஜி மாவு, சத்து மாவு, வணிகச் சின்னமிடாத நெய், பேரீச்சம்பழப் பாகு **(syrup)**, **Interesterified** தாவர எண்ணெய் (வனஸ்பதி), வணிகச் சின்னமிடாத பன், ரஸ்க், பிஸ்கட், கேக் போன்ற பேக்கரி பொருட்கள், நோய் அறிதற்கான சோதனைக் கருவிகள் மற்றும் சோதனைக்கான வேதிப் பொருள்கள் **(reagents)**, துணைப் பொருள்கள், இரத்தம் சேமிக்கும் பைகள் மற்றும் ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தற்குரிய சிகிச்சைப் பொருள்கள் **(disposables)**, மாவு அரவை இயந்திரங்கள் **(wet grinders)**, **RCC** பைப்புகள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி),

RCC மூலம் தயாரிக்கப்படும் கிராதிகள், கதவு மற்றும் ஜன்னல் பிரேம்கள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி), வணிகச் சின்னமிடாத ஸ்டீல் பர்னிச்சர் (**unbranded steel furniture**), கதவுகள், ஜன்னல்கள், சட்டங்கள், புரோபைல்கள், மோட்டார் வாகன தொழில் மற்றும் கழிவுநீக்க உபகரணங்கள் நீங்கலான பிளாஸ்டிக் பொருட்கள், குத்துவிளக்கு, அகல்விளக்கு, பாவை விளக்கு, யானை விளக்கு, கார்த்திகை விளக்கு, கோவில் மணி, கற்பூரத் தட்டு, தூபக்கால், வார்ப்படச் சிலைகள், பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஒலி நாடாக்கள், கணக்குப் பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புகள், பள்ளிக்கூடப் பைகள் மற்றும் பயணத்திற்குப் பயன்படும் வணிகச் சின்னமிடாத பைகள் (**travel bags**), கேடயங்கள், முள்வேலி கம்பி, கம்பி வடம் மற்றும் கம்பி இணைப்புகள், பருத்தி நூலினாலான தரைத் துடைப்பான்கள், உபயோகப்படுத்தப்பட்ட சீருந்துகள் / மோட்டார் வாகனங்கள் (உள்ளீட்டு வரிவரவு வசதியின்றிக் கூட்டிய மதிப்பிற்கு மட்டும்), நெசவு எந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்கள், ஆணிகள், புஷ்கள், வாஷர்கள், ரிவிட் போன்ற இணைப்பான்கள், எலக்ட்ரோப்ளக்ஸ் (**Electroflux**).

★ தொழிற்சாலைகளுக்கான இடுபொருட்களாகப் பயன்படுத்தப்படும் பின்வரும் பொருட்கள் 4 சதவிகித வரிவீதத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன:– தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உயர்ரக மண்ணெண்ணெய் (**Superior kersene oil**) (இது உள்ளீட்டு வரி வரவுக்கு உரியதல்ல), ஏற்கெனவே 20 சதவீதத்தில் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள, குறிப்பிட்ட இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதற்காகக் கொள்முதல் செய்யப்படும் கரும்புச் சாற்றின் கழிவு (**molasses**) (இது உள்ளீட்டு வரி வரவிற்கு உரியதல்ல), தொழிற்சாலைக்கான உள்ளீட்டுப் பொருட்களாக தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் இடுபொருட்களை தயாரிப்பாளர் அல்லது வணிகர் விற்றாலும் 1.1.2007 முதல் அதாவது நமது மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்த 4 சதவிகித வரிக்குட்பட்டது என்று ஆணையிடப்பட்டது. ஆண்டு விற்பனைத் தொகை 50 இலட்சத்திற்கு உட்பட்ட வணிகர்கள் இணக்க வரி முறையில் 0.5 சதவிகித வரி செலுத்த விருப்பம் தெரிவித்த வணிகர்கள் வரிவிலக்கிற்குட்பட்ட பொருட்களில் விற்பனைத் தொகையுடனான மொத்த விற்பனைத் தொகைக்கு வரி செலுத்தாமல் வரிக்குட்பட்ட பொருட்களின் விற்பனைத் தொகைக்கு மட்டுமே வரி செலுத்த வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. வணிகர்கள் கோரிக்கையை ஏற்று 12.5 சதவிகித வரிவிதிப்பிற்கு உள்ளாகும் பொருட்களை தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில், பிரிவு ‘C’ல் பட்டியலிடப்பட்டது.

★ மதிப்புக் கூட்டு வரி விதிப்பிலிருந்து கீழ்க்கண்ட பொருள்களுக்கு 23.5.2007 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டது:– செங்கல் தயாரிப்புக்கான களிமண், கடலை மிட்டாய், எள்ளு மிட்டாய், பொரி உருண்டை மற்றும் கையினால் தயாரிக்கப்பட்ட மிட்டாய், உப்பு உற்பத்தியாளர்களால் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உப்பு விற்பனை, எலும்புத்தூள், அகர்பத்தி.

★ 23.5.2007 முதல் கீழ்க்கண்ட பொருட்களுக்கு 12.5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக மதிப்புக் கூட்டு வரி குறைக்கப்பட்டது:– டயர்களை புதுப்பிக்கப் பயன்படுத்தும் அடிப்புற ரப்பர், புதுப்பிக்கப் பயன்படுத்தும் குஷன், ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும் ரப்பர் மற்றும் கரைசல் மற்றும் பிற பொருட்கள், 200 ரூபாய்க்கு மேல் விற்கப்படும் வணிகச் சின்னமிடாத காலணிகள், காலணிகள் தயாரிக்கப் பயன்படுத்தும் பொருட்கள், நெய்யப்படாத துணி மற்றும் அதன் பொருட்கள் இன்கோசர்வ், குன்னூர் மற்றும் கோவையில் நடைபெறும் ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை அல்லது இணையத்தால் நேரடியாக விற்கப்படும் தேயிலையின் முதல் விற்பனை ஆகியவற்றிற்கான மதிப்புக் கூட்டு வரி 24.5.2007 முதல் 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாக குறைக்கப்பட்டது.

★ 1.4.2007 முதல் பீடி, பீடி புகையிலைத்தூள், மூக்குப்பொடி மற்றும் சுருட்டு ஆகியவற்றின் விற்பனை மீதான மதிப்புக் கூட்டு வரிக்கு விலக்களிக்கப்பட்டது.

★ 2008–09ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வரிவிலக்குகள் :– பன் மற்றும் ரஸ்க், காட்டாமணக்கு விதை மற்றும் காட்டாமணக்கு எண்ணை, தங்கத்தினால் செய்யப்பட்ட சங்கிலியல்லாத தாலி, கருமணி மற்றும் சிலுவை, துணி உள்ளொட்டிய காகித உறைகள், இரப்பர் பூச்சுள்ள நெசவுத் துணிகள், சித்த மருந்துகள், பாக்கெட்டில் விற்பனை செய்யப்படும் இளநீர், கடுகு, சோம்பு, மற்றும் வெந்தயம் (மொத்த விற்பனைத் தொகை ரூபாய் 300 கோடிக்கும் குறைவாக உள்ள இனங்கள்), மஞ்சள்தூள், மிளகாய் வத்தல்தூள் மற்றும் மல்லிதூள் (மொத்த விற்பனைத் தொகை ரூபாய் 300 கோடிக்கும் குறைவாக உள்ள இனங்கள்), சோயா எண்ணெய் (மொத்த விற்பனைத் தொகை ரூபாய் 500 கோடிக்கும் குறைவாக உள்ள இனங்கள்), வெல்லம், வெல்லப்பாகு, வெல்லத்தூள் மற்றும் நாட்டு சர்க்கரை.

★ 2008–09–ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வரி குறைப்பு அறிவிப்புகள்:–

★ வறுக்காத பாக்கு சீவல், மொசைக் சிப்புகள், காகித அட்டையினாலான கோப்பு அட்டைகள், பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட படச் சட்டங்கள், மின்சாரத்திற்காகப் பயன்படும் ஜெனரேட்டர்கள்.

★ கட்டுமானப் பணிகளுக்கு வாடகைக்கு விடப்படும் பொருட்களுக்கான வாடகை மீது விதிக்கப்படும் 12.5 விழுக்காடு வரி விகிதத்தைக் குறைத்து உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

★ ஏற்கெனவே பொது விற்பனை வரி அல்லது மதிப்புக் கூட்டு வரி செலுத்தி வாங்கி, தமிழ்நாட்டில் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட வாகனங்களை மீண்டும் விற்பனை செய்யும்போது விதிக்கப்படும் வரி 12.5 விழுக்காட்டிலிருந்து, உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது

★ நட்சத்திரத் தகுதி பெறாத உணவகங்கள் **(Hotels)** விற்பனை செய்யும் வணிகச் சின்னமிடப்படாத பொருட்களுக்கு 2 விழுக்காடு வரி விதிக்கப்படுவதைப் போல வணிகச் சின்னமிட்ட பொருட்களான மென்பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம்கள் மீதான வரியும் 12.5 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

★ மக்களுக்குப் பயன்படும் வகையில் கேபிள் டி.வி உரிமையாளர்களால் செலுத்தப்பட வேண்டிய கேளிக்கை வரிக்கு 1.4.2008 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. கேபிள் டிவி நடத்துவோர் செலுத்த வேண்டிய கேபிள் டிவி மீதான கேளிக்கை வரி நிலுவை 31.3.2008 முடிய ரூ.20.14 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

★ 2009–2010ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வெளியான அறிவிப்புகள் :– மிளகு மற்றும் சீரகத்திற்கு குறிப்பிட்ட விற்பனைத் தொகை வரை வரிவிலக்கு, பருப்பு, பயிறு மற்றும் பட்டாணி ஆகிய பொருட்களை உபயோகித்து மாவு தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய கொள்முதல் வரியிலிருந்து வரிவிலக்கு, கையினால் தயாரிக்கப்படும் இரும்புப் பெட்டி **(trunk box)**க்கு வரிவிலக்கு, கையினால் தயாரிக்கப்படும் தகர டின்களுக்கு வரிவிலக்கு.

★ தற்போது விதிக்கப்படும் 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்பட்டவை:– வணிகச் சின்னமிடப்பட்ட நெய், வணிகச் சின்னமிடப்பட்ட ஊறுகாய், கையினால் தயாரிக்கப்படும் இரும்பு பெட்டகம் **(iron safe)**, உலர்ந்த திராட்சை, இணைப்பான்களாகப் பயன்படுத்தப்படும் குண்டூசி, ஊக்கு, ஜெம் கிளிப்புகள், அடையாள அட்டை கிளிப்புகள், தேர்வு அட்டை கிளிப்புகள், இரப்பர் பேண்ட், ஸ்டேப்ளர் பின் தகவல் தொழில்நுட்ப பொருளான ஐ–பாட் **(i-pod)**, MP3 மற்றும் MP4 பிளேயர்கள்.

★ சேலம் சேகோசர்வ் மூலம் விற்கப்படும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மீதான வரி 2 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாகக் குறைப்பு, செங்கல் உற்பத்தியாளர்கள் அடுப்பு எண்ணிக்கையின் பேரில் இணக்க முறையில் வரி விதிப்பு.

★ திரைப்படத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழ் மொழியை மேம்படுத்துவதற்காகவும் 22.7.2006 முதல் தமிழில் பெயரிடப்பட்ட புதிய படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது. பின்னர், திரைப்படத்துறையினரின் வேண்டுகோளின்படி 22.7.2006க்கு முன் தயாரிக்கப்பட்டு 22.7.2006க்கு பின் திரையிடப்பட்ட தமிழில் பெயர் வைத்த பழைய திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டது. மேலும், பழைய மற்றும் புதிய திரைப்படங்களின் தமிழ் பெயர் தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாகவும் கண்ணியமானதாகவும் உள்ளதா என ஆய்வு செய்து பரிந்துரை செய்ய அரசு ஒரு குழு அமைத்துள்ளது.

★ 2007– 08ஆம் ஆண்டின் அனைத்து சட்டங்களின் கீழ் மொத்த வரி வசூல் தொகையான ரூ.19.953 கோடியை ஒப்பு நோக்குகையில் 2008–09 ஆம் ஆண்டில் அனைத்து வணிகவரிச்சட்டங்களின் கீழ் மொத்த வரி வசூல் ரூ.22,570 கோடியாகும். இதன் வளர்ச்சி விகிதம் 13.12 விழுக்காடாக உயர்ந்துள்ளது. மேலும் 1.1.2007 முதல் மதிப்பு கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்பட்டு, உபரிவரி, கூடுதல் வரி, மறுவிற்பனை வரி நீக்கப்பட்டும், பல வரிச்சலுகைகள் வழங்கப்பட்டும் மார்ச்'09 முடிய உள்ள வருவாயினை மார்ச்'08 முடிய உள்ள வருவாயினை ஒப்பிடுகையில் ரூ.2,617.53 கோடி கூடுதலாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இவ்வசூலில் 2008–09 நிதியாண்டில் மட்டும் நிலுவை வசூல் ரூ.361.54 கோடி ஆகும்.

★ வணிகர் நல வாரியத்தின் கீழ், ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த குடும்பநல உதவித் தொகை ரூ.20,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 36 உறுப்பினர்களுக்கு ரூ. 7.80 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்று நோய் அறுவை சிகிச்சைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ. 25,000/– உதவித் தொகை ரூ. 50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வணிகர் நல வாரிய பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/– உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 5 உறுப்பினர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் 1.15 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ உறுப்பினர்களின் வாரிசுகள் கல்லூரிப் படிப்பிற்கு முன்னர் வழங்கப்பட்டுவந்த ரூ.3,000/–கல்வி உதவித் தொகை ரூ.5,000/–ஆக வழங்கப்படுகிறது. தொழிற் கல்விற்கு ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் ரூ.10,000/– வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 7 உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு ரூ.0.23 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

★ நலிவுற்ற உறுப்பினர்களுக்கு உதவித் தொகையாக ரூ.10,000/– வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

★ 1.1.2007 முதல் 31.12.2007 வரை உள்ள காலத்தில், 843 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் 31 பணியிடங்கள் கருணை அடிப்படை நியமனம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. 1.8.2008 முதல் 13.3.2009 வரை உள்ள காலத்தில் 201 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.



# சுற்றுச்சூழல் கண்காணிப்புக்கு விரைந்த நடவடிக்கைகள்

மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்

**திரு. டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள்**

★ அதிகளவில் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஏற்படும் விபத்து மற்றும் அதனால் ஏற்படும் மாசு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, மணலி, கடலூர், தூத்துக்குடி, மேட்டூர், இராணிப்பேட்டை, திருப்பெரும்புதூர், பெருங்குடி தகவல் தொழில்நுட்பப் பூங்கா பகுதி, பெருந்துறை, கும்மிடிப்பூண்டி, திருப்பூர் (பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்) ஆகிய 10 இடங்களை முக்கிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளாகத் வாரியம் தேர்வு செய்துள்ளது. இந்தப் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களை நேரடியாகத் தொடர்புகொள்ளவும் தனித்தனியாக ஒரு உதவி சுற்றுச்சூழல் பொறியாளரை வாரியம் நியமித்துள்ளது.

★ காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அதிக அளவில் தொழிற்சாலைகள் இருப்பதால் அனைத்துத் தொழிற்சாலைகளையும் சீரிய முறையில் கண்காணிக்கும் பொருட்டு, இம்மூன்று மாவட்டங் களையும் இரண்டாகப் பிரித்து மூன்று புதிய மாவட்ட அலுவலகங்கள் முறையே திருப்பெரும்புதூர், திருவள்ளூர் மற்றும் பெருந்துறையினை தலைமையிடமாகக் கொண்டு ஆகஸ்டு 2008ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது.

★ பெரிய மற்றும் நடுத்தர பிரிவில் உள்ள ஆரஞ்சு வகைத் தொழிற்சாலைகளுக்கான இசைவாணை வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு, தமிழகத்தை 6 மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் மண்டல அளவிலான இசைவாணை வழங்கும் குழு 2009ஆம் ஆண்டு மார்ச் முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

★ விஞ்ஞான ரீதியாக திடக்கழிவு மேலாண்மை செய்வதற்கு காஞ்சிபுரம், ஓசூர், நாகப்பட்டினம், திருச்செங்கோடு, ஆலந்தூர், அம்பாசமுத்திரம், தென்காசி, கடையநல்லூர் நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு நகராட்சிக்கும் ரூ.12.50 இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூ.1 கோடியினை வாரியம் வழங்கியுள்ளது.

★ சுற்றுச்சூழல் காற்றின் தன்மையை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம், கிண்டியில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மின்னணு தகவல் பலகை அமைக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை மாநகரின் சுற்றுச்சூழல் காற்றின் தன்மையின் அளவீடுகள் வெளியிடப்படுகின்றன. இதனைத் தவிர சென்னையில் உள்ள மணலி, கத்திவாக்கம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மின்னணு தகவல் பலகைகளை ரூ.85 இலட்சம் செலவில் அமைத்து தொழிற்சாலைகளில் இருந்து ஆவியாகக்கூடிய கரிம கூட்டுப்பொருட்கள் வெளியேறுவதைக் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

★ தொழிற்சாலைகளுக்கு துரிதமாகச் சென்று திறம்பட கண்காணிக்கும் பணியை மேம்படுத்துவதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் வாரியம் 19 நான்கு சக்கர (இலகு) வாகனங்களும் ஒரு கனரக வாகனமும், 5 இரு சக்கர வாகனங்களும் ரூ.104.43 இலட்சம் செலவில் வாங்கியுள்ளது.

★ தமிழ்நாடு வனத்தோட்டக்கழகத்தின் கீழ் விருத்தாசலம் மண்டலம், ஜெயங்கொண்டம் சரகத்தில் வன ஓய்வு விடுதி ஒன்று ரூ.15 இலட்சங்கள் செலவில் கட்டப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் துறையின் மூன்றாண்டு சாதனைகள்**

★ தேசிய பசுமைப் படை 7,500 பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டு 3 இலட்சம் மாணாக்கர்கள் பங்கேற்று வருகின்றனர். அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்ட முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

★ மூன்று ஆண்டுகளில் 10,974 ஹெக்டர் பரப்பளவில் ரூ.1,653.18 இலட்சம் செலவில் தைலமரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன.

★ 3,187 ஹெக்டர் பரப்பளவில் ரூ.599.79 இலட்சம் மதிப்பில் முந்திரி தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. 32.50 ஹெக்டர் பரப்பளவில் ரூ.4.14 இலட்சம் செலவில் சவுக்கு மரத்தோட்டங்கள் வளர்க்கப்பட்டன.



# விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப் பரிசுகள்

**மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்**

**திரு. டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள்**

★ கத்தார் நாட்டின் தோகா நகரில் நடைபெற்ற 15–ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் சதுரங்கப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற சென்னை சசிகிரணுக்கு ரூ.20 இலட்சம், தடகளப் பிரிவில் மகளிருக்கான 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் பெற்ற புதுக்கோட்டை மாவட்டம் கட்டக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த சாந்திக்கு 15 இலட்சம் ரூபாய், நீளம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற அஞ்சு பி.ஜார்ஜ் என்பவருக்கு ரூ.1 5 இலட்சம், ஸ்குவாஷ் ஒற்றையர் போட்டியில் வெண்கலம் வென்ற சௌரவ் கோசலுக்கு ரூ.10 இலட்சமும் ஆக நான்கு வீரர்களுக்கு ரூ.60 இலட்சம் ரொக்கப் பரிசுகளை 18.12.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார். சாந்தியின் இல்லத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாததால் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றும் அவருக்கு பரிசாக வழங்கப்பட்டது.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசுவிழாவில், ரூ.10 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடத்தினைத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. டி.பி.எம்.மைதீன்கான் உடன் உள்ளார். (10.09.2008)

- ★ வாள் வீச்சுப் போட்டியில் பங்குபெற துருக்கி செல்லும் வீராங்கனை பவானி தேவிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி;
- ★ கின்னஸ் சாதனை படைக்க விரும்பும் மதுரையை அடுத்த வில்லாபுரத்தைச் சேர்ந்த திரு எல்.கே.சுந்தரமூர்த்தி மகள் ஐந்தரை வயது சிறுமி எல்.எஸ்.சிவஸ்ரீக்கு ஒரு இலட்சம் ரூபாயை நிதி உதவி வழங்கி அதனைத் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்து, அதிலிருந்து வரும் வட்டித் தொகையைச் சிறுமி சிவஸ்ரீயின் கல்வி மற்றும் பயிற்சிக்கான செலவினத்தை பெற்றோர் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்ய அனுமதிக்கப்பட்டது.
- ★ தேசிய அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் 71 மாணவ, மாணவியர் பங்கேற்று 30 பேர் பதக்கம் வென்றனர்.
- ★ இந்திய விளையாட்டுக் குழுமத்தால் நடத்தப்பட்ட 2006–2007–ஆம் ஆண்டிற்கான முதலாவது தேசிய அளவிலான பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் 99 பேர் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர்.
- ★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சென்னையில் நடத்திய தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் 675 வீராங்கனைகள் பங்கு பெற்றனர். தமிழக கூடைப்பந்து அணி முதலிடம் பெற்றதுடன் தமிழ் வீராங்கனைகள் ஜிம்னாஸ்டிக்ஸ், நீச்சல் போட்டிகளில் அதிக அளவில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பெற்றனர்.
- ★ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரி மாணவ, மாணவியர் 83 பேருக்கு ரூபாய் 5.32 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.
- ★ ஒரு கால் ஊனமுற்ற நிலையில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் சாதனைகள் படைத்து பதக்கங்கள் பல பெற்ற விளையாட்டு வீரர் திரு எம்.ஆர்.சௌந்தரராஜனுக்கு உயர்வருவாய் குடியிருப்பினை சிறப்பினமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ★ கபடி விளையாட்டு வீரர் திரு ராஜரத்தினத்துக்கு ரூ. 2,13,730 மதிப்பீட்டில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ★ முதல் காமன்வெல்த் பென்சிங் போட்டி நடத்துவதற்கு தமிழ்நாடு பென்சிங் சங்கத்திற்கு 4 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டது.
- ★ 10 மையங்களில் உள்ள சிறப்பு விளையாட்டு அகாடமிகளுக்கு 50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.
- ★ சிறப்புப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் முன்னணி விளையாட்டு வீரர்களுக்கு 24,93,597 ரூபாய் வழங்கப்பட்டது.
- ★ தமிழ்நாட்டில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டிகளில் மாநில விளையாட்டுச் சங்கங்கள் பங்குபெற, 13 இலட்சத்து 26 ஆயிரத்து 389 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.
- ★ தேசிய சாம்பியன் போட்டிகளில் பங்குபெற மாநில விளையாட்டுச் சங்கத்திற்கு 21 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.
- ★ நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு மாநில அரசின் விளையாட்டு நிதி உதவியாக 5,53,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.
- ★ உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்திற்கு 10 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.
- ★ பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட 4,89,447ரூபாய் வழங்கப்பட்டது.
- ★ 2 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் நேரு விளையாட்டரங்கத்தில் சிந்தெடிக் தடகளப் பாதை அமைக்கப்பட்டது.
- ★ 30 இலட்ச ரூபாய் செலவில் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்கப்பட்டது.
- ★ 28 இலட்ச ரூபாய் செலவில் நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

★ 80 இலட்சம் ரூபாய் செலவில் மாநில விளையாட்டுகளை ஊராட்சி ஒன்றிய, மாவட்ட, மாநில அளவில் நடத்திட அனுமதிக்கப்பட்டது.

★ 28 இலட்சம் ரூபாய் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்திட ஆணையிடப்பட்டது.

★ 25 இலட்ச ரூபாய் செலவில் தேனியில் நீச்சல் குளம் அமைத்திட 5.9.2006–இல் ஆணையிடப்பட்டது.

★ 75 இலட்ச ரூபாய் செலவில் 5 வட்டாரத் தலைமையிடங்களில் சிறிய விளையாட்டரங்கம் கட்ட ஆணையிடப்பட்டது.

★ தலா ரூ.45 இலட்சம் செலவில் சென்னை முகப்பேரிலும், தருமபுரியிலும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் கட்ட ஆணையிடப்பட்டது.

★ 30 இலட்ச ரூபாய் செலவில் கிருஷ்ணகிரியில் நீச்சல் குளம் அமைத்திட ஆணை.

★ 55 இலட்ச ரூபாய் செலவில் காஞ்சிபுரத்தில் உள் விளையாட்டு பூப்பந்துக் கூடம் கட்ட ஆணையிடப்பட்டது.

★ மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள சிந்தெடிக் தடகள ஓட்டப் பாதைகளுக்கு உலகத் தரம் வாய்ந்த சாதனங்கள் 30 இலட்ச ரூபாய் செலவில் பொருத்தப்பட்டுள்ளன.

★ 14 இலட்ச ரூபாய் செலவில் திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் இரண்டு சிந்தெடிக் டென்னிஸ் கோர்ட் தோற்றுவிக்க ஆணையிடப்பட்டது.

★ ரூபாய் 7.50 இலட்சம் செலவில் நீச்சல் குளங்களுக்கு பாதுகாப்பு மற்றும் கழிப்பிட வசதிகள் அமைக்க ஆணையிடப்பட்டது.

★ மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ரூ.66.50 இலட்சம் செலவில் விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதிகளை மேம்படுத்த ஆணை.

★ எட்டிமடை கிராமத்தில் மாதா அமிர்தானந்தமாயி மடத்தினால் கட்டப்படும் நீச்சல் குளத்திற்கு 45 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ மாநில அளவில் உலகத் திறனாளர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்திட 30 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ அனைத்து மாவட்டங்களில் உள்ள நவீன விளையாட்டு அரங்கங்களுக்கு உணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட 60 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளின்போது கட்டப்பட்ட நவீன விளையாட்டரங்கங்களைச் சிறப்புப் பழுதுகள் பார்ப்பதற்கு இரண்டாவது தவணையாக ரூ. 21,05,000 நிதி அனுமதிக்கப்பட்டது.

★ மாதாந்திரப் போட்டிகள் நடத்திட 23,25,976 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ அனைத்திந்திய சிவில் சர்வீஸ் விளையாட்டுப் போட்டிகள் நடத்த 75,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ திறந்தவெளி டென்னிஸ் போட்டிகள் நடத்திட அரசுப் பங்காக ஒரு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ குறிப்பிட்ட திட்டங்களுக்கு இரண்டாவது தவணையாக 33,58,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ மதுரை குறுந்தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமிக்கு 2,50,000 ரூபாய் வழங்கிட ஆணையிடப்பட்டது.

★ மூன்றாவது தவணையாக பராமரிப்பு நிதி உதவியாக 1,56,41,500 ரூபாய் வழங்கி ஆணையிடப்பட்டது.

★ Volleyball விளையாட்டு வீரர் திரு ஜி.இ .ஸ்ரீதரனுக்கு உயர் வருவாய் பிரிவு வீடு ஒதுக்கீடு செய்தமைக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு வழங்கிட 15,00,700 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ 2007 சென்னையில் திறந்தவெளி டென்னிஸ் போட்டிகள் நடத்திட 2,50,00,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ பயிற்சிகள் / திட்டங்களுக்கு புத்துயிர் ஊட்டிட ரூ. 19,80,000 நிதி உதவி அனுமதிக்கப்பட்டது.

★ திறமையான விளையாட்டு ஆசிரியர், விளையாட்டு நிருவாகிகள், பயிற்சியாளர்களின் அறிவையும், திறமைகளையும் மேம்படுத்திட 2,78,582 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ நவீன விளையாட்டு அரங்கங்களுக்கு மூன்றாவது தவணை பராமரிப்பு நிதி உதவியாக ரூ. 21,50,000 அனுமதிக்கப்பட்டது.

★ சென்னையில் உலகக் கோப்பை டென்னிஸ் விளையாட்டுப் போட்டி நடத்திட 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ மெல்போர்னில் நடைபெற்ற 18–ஆவது காமன்வெல்த் விளையாட்டில் பதக்கம் வென்றவர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் பணமுடிப்பு ( ஊக்கத் தொகை) வழங்கிட ஒரு கோடியே 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ 5 கூடுதல் சிறப்பு அகாடமி உருவாக்கிட ரூ 25 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

★ பயிற்சி இயக்குநர்கள், விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர் சிறந்த பயிற்சியாளர்களுக்கு முதலமைச்சரின் விருது வழங்கிட 4 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளித்திட 13,25,214 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதுகள் வழங்கிட 4 ,40,000 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ சிறப்புத் திட்டங்களுக்கு மூன்றாவது தவணை 33,58,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கிட 22 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ சிறந்த விளையாட்டு வீரர்களை மேம்படுத்தும் மையங்களுக்கு 15 இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

★ தோகாவில் உள்ள கத்தாரில் நடைபெற்ற 15–ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 2006–இல் பதக்கம் வென்றவர்களுக்கு ஊக்கப் பணம் வழங்கிட 75 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. சிறப்புத் திட்டங்களுக்காக 4–ஆவது இறுதித் தவணை 29 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ சிறப்புத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி 4 இலட்சம் ரூபாய் அனுமதித்து 30.3.2007–இல் ஆணையிடப்பட்டது.

★ கோவா மற்றும் ஃபரிதாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 36 பதக்கங்கள் வென்றனர்.

★ தானே மற்றும் மதுரையில் நடைபெற்ற தேசிய பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 49 பதக்கங்கள் வென்றனர்.

★ ரூர்கேலா மற்றும் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய பள்ளிகளுக்கிடையேயான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக கலந்து கொண்டு 106 பதக்கங்கள் வென்றனர்.

★ குண்டூரில் நடைபெற்ற சர்வதேச தேசிய தடகளப் போட்டிகளில் தமிழக வீரர்கள் பங்கேற்று 9 பதக்கங்கள் வென்றனர்.

★ சென்னையில் செயல்படும் சிறப்பு விளையாட்டு விடுதி மாணவர்கள் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு 2 வெள்ளிப் பதக்கங்களும், நாக்பூர், குண்டூர், விஜயவாடா, போபால், மதுரை மற்றும் பாண்டிச்சேரியில் நடைபெற்ற தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று 11 பதக்கங்களும் வென்றனர்.

★ தமிழ்நாட்டில் திருநெல்வேலி, ஈரோடு (மகளிர்), கோவையைச் சார்ந்த விளையாட்டு விடுதி வீரர்கள் சர்வதேச அளவில் பங்கேற்று 6 பதக்கங்கள் வென்றனர்.

★ இந்திய விளையாட்டு சம்மேளனம் நடத்திய பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழக விளையாட்டு வீரர்கள் பங்கேற்று 54 பதக்கங்கள் வென்றனர்.

★ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் 125 பேருக்கு ரூ.6.80 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

★ செல்வி சி.ஏ. பவானிதேவி, உலக இளநிலை வாள்சண்டை போட்டிகளில் கலந்து கொண்டமைக்கு நிதி உதவியாக ஒரு இலட்சம் ரூபாய், திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டுவதற்கு கடைசி தவணை மானியமாக மத்திய அரசின் பங்கு பதிமூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய், ஸ்ரீலங்காவில் நடைபெற்ற பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக பன்னிரெண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரம், சென்னை மேற்கு முகப்பேரில் டால்பின் கிளப் மூலமாக நீச்சல் குளம் கட்டுவதற்கு (இனம்–2) மத்திய அரசின் கடைசி தவணை மானியம் இருபத்திரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய், தேசிய கடலோர படகுப் போட்டிகள் நடத்தியமைக்கு இரண்டு இலட்சம் ரூபாய், குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்த முதல் தவணையாக முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் ரூபாய், விளையாட்டுப் பள்ளி / விளையாட்டு விடுதிகளுக்கு சத்துணவு மற்றும் உபகரணங்களுக்காக நாற்பது இலட்சம் ரூபாய், மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் நடத்த இருபத்தைந்து இலட்சம் ரூபாய், புத்தாக்கப் பயிற்சி முகாம் திட்டத்திற்காக இருபது இலட்சம் ரூபாய், உலகத் திறனாளர்களை கண்டறியும் திட்டத்திற்கு பத்து இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ஐந்து இலட்சம் ரூபாய், அகில இந்திய குடியுரிமை விளையாட்டுப் போட்டிகள் நடத்திட எழுபத்தைந்தாயிரம் ரூபாய், பராமரிப்பு செலவாக நவீன விளையாட்டு அரங்கங்களுக்கு முதல் தவணையாக இருபத்தோரு இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாய், சிறப்பு எறிதல் அகாடமிக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், சிறப்பு குறுந்தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமிக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் அனுமதிக்கப்பட்டது.

★ ஊராட்சி ஒன்றிய, மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்துவதற்கு எழுபத்தாறு இலட்சத்து தொன்னூறு ஆயிரம், தமிழ்நாட்டில் உள்ள நீச்சல் குளங்களில் சுகாதார பராமரிப்புக்கு ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம், கஜகஸ்தான் நாட்டில் நடைபெற்ற ஆசிய இளநிலை மற்றும் கேடட் வாள்சண்டை போட்டிகளில் செல்வி சி.ஏ. பவானிதேனி மற்றும் மாஸ்டர் வி.நிதின் பங்கு பெற்றமைக்கு நிதி உதவியாக எண்பதாயிரம் ரூபாய், விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டியமைக்கு ஒன்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய், சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடத்தியமைக்கு ஒரு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய செயலாண்மை குழுவின் துணைத் தலைவருக்கு அலுவலக வசதி ஏற்படுத்தியமைக்கு நான்கு இலட்சத்து எண்பத்தெட்டாயிரம் ரூபாய், திருவண்ணாமலை மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்தமைக்கு மத்திய அரசின் முதல் மற்றும் கடைசித் தவணையாக பத்தொன்பது இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டியமைக்கு மத்திய அரசின் முதல் மற்றும் கடைசித் தவணையாக இருபத்து மூன்று இலட்சம் ரூபாய், மயிலாடுதுறை, இராஜன்தோட்டம் என்ற இடத்தில் உள் விளையாட்டரங்கம் கட்டியமைக்கு மத்திய அரசின் முதல் மற்றும் கடைசித் தவணையாக பதினெட்டு இலட்சம் ரூபாய், 10 சிறப்பு விளையாட்டு அகாடமிகளுக்கு ஐம்பது இலட்சம் ரூபாய், 5 கூடுதல் சிறப்பு அகாடமிகள் நிறுவியதற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ தேசிய சேம்பியன் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு இருபத்தேழு இலட்சத்து எழுபத்து நான்காயிரம் ரூபாய், பிரத்யேகப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் முன்னணி விளையாட்டு வீரர்களுக்கு இருபத்தேழு இலட்சத்து தொன்னூறு ஆயிரம் ரூபாய், உடற்கல்வி ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி முகாம் நடத்தியமைக்கு பதினான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ தமிழ்நாட்டில் நடைபெறும் தேசிய அளவில் போட்டிகளில் மாநில விளையாட்டுச் சங்கங்கள் பங்குபெற முப்பது இலட்சம், சென்னையில் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடத்தியமைக்கு அரசின் கடன் தொகையாக இரண்டரை கோடி ரூபாய், பராமரிப்பு செலவாக இரண்டாம் தவணை ஒரு கோடியே தொன்னூற்று நான்கு இலட்சத்து அறுபத்திரண்டாயிரம் ரூபாய், குறிப்பிட்ட திட்டங்கள் செயல்படுத்தியமைக்கு இரண்டாவது தவணையாக முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ பராமரிப்புச் செலவாக நவீன விளையாட்டரங்கங்களுக்கு இருபத்தோரு இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாய், ஆசிய கப் வளைகோல்பந்து நடத்தியமைக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய், டேலண்ட் டெவலப்மண்ட் மையங்களுக்கு பதினைந்து இலட்சம் ரூபாய், 15–ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் பெற்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கியமைக்கு பதினோரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்க ஐந்து கோடி ரூபாய், ஏசியன் கபடி சாம்பியன்ஷிப் 2007–இல் செல்வி எஸ்.கவிதா பங்கேற்று சாதனை புரிந்தமைக்கு ஐந்து இலட்சம் ரூபாய், திருச்சியில் உள் விளையாட்டரங்கம் கட்ட மத்திய அரசு மானியம் அறுபத்தேழு இலட்சத்து அறுபத்தாராயிரம் ரூபாய், திருச்சியில் உள் விளையாட்டரங்கம் கட்ட மாநில அரசின் பங்குத் தொகையாக முப்பது இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ பராமரிப்பு செலவாக மூன்றாம் தவணையாக ஒரு கோடியே தொன்னூற்று நான்கு இலட்சத்து அறுபத்திரண்டாயிரம் ரூபாய், குறிப்பிட்ட திட்டங்களுக்கு மூன்றாம் தவணையாக முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் ரூபாய், மாவட்ட அளவில் இருப்பிட உலக திறனாளர்களை கண்டறிந்து பயிற்சி முகாம் நடத்தியதற்கு முப்பது இலட்சம் ரூபாய், பயிற்சிகள் / திட்டங்களுக்கு புத்துயிர் ஊட்டிட நிதியுதவி முப்பது இலட்சம் ரூபாய், 2008ஆம் ஆண்டு பராமரிப்பு செலவாக நவீன விளையாட்டரங்கங்களுக்கு மூன்றாம் தவணையாக இருபத்தோரு இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமைக்கு இருபத்தோரு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் ரூபாய், தேசிய அளவிலான 13–ஆவது இளைஞர் விளையாட்டு விழா நடத்தியமைக்கு ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சம் ரூபாய், சென்னையில் நடைபெற்ற 20–20 வரிசை உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்ற தமிழக கிரிக்கெட் வீரர் திரு. தினேஷ் கார்த்திக் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கியமைக்கு ஐந்து இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ அசாம், கௌகாத்தியில் நடைபெற்ற 33–ஆவது தேசிய போட்டிகளில் தமிழக அணி பங்கேற்றமைக்கு ஒன்பது இலட்சத்து அறுபத்து ஓராயிரம் ரூபாய், 2007 உலக சதுரங்க போட்டியில் திரு விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் கலந்து கொண்டு சாதனை படைத்தமைக்கு உயரிய ஊக்கத் தொகையாக இருபத்தைந்து இலட்சம் ரூபாய், அனைத்து மாவட்டங்களுக்கும், நவீன விளையாட்டரங்கங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்க அறுபது இலட்சம் ரூபாய், சதுரங்க கழகத்தின் மூலம் தேசிய சதுரங்கப் போட்டிகள் நடத்தியமைக்கு ஐந்து இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ குறிப்பிட்ட திட்டங்கள் நிறைவேற்றியமைக்கு நான்காவது மற்றும் கடைசித் தவணையாக முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் ரூபாய், பராமரிப்பு செலவாக நவீன விளையாட்டரங்கங்களுக்கு நான்காவது

மற்றும் கடைசித் தவணையாக இருபத்தொரு இலட்சத்து ஐந்தாயிரம், திருவண்ணாமலை மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்தமைக்கு நான்கு இலட்சம் ரூபாய், உலக சதுரங்க போட்டியில் செல்வி இளவழகி கலந்து கொண்டு சாதனை படைத்தமைக்கு பத்து இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ பராமரிப்புச் செலவாக நான்காவது மற்றும் கடைசி தவணையாக மூன்று கோடியே பதினாறு இலட்சத்து முப்பத்து நான்காயிரம் ரூபாய், சென்னை பெரியமேட்டில் உள்ள பல்நோக்கு உள் விளையாட்டரங்க கூரையை சீரமைக்க இரண்டு கோடி ரூபாய், திருநெல்வேலி மற்றும் ஈரோட்டில் விளையாட்டு விடுதிகள் கட்டுவதற்கு ஐம்பத்தாறு இலட்சம் ரூபாய், மதுரை பந்தயத் திடலில் ஏற்கெனவே உள்ள மின்னொளி கூடைப்பந்து தளத்தை புதுப்பித்தமைக்கு ஐம்பது இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் நீச்சல் குளம் கட்டுவதற்காக அறுபத்து ஆறு இலட்சம் ரூபாய், புதிய அறிவிப்புகள் தலைப்பின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தியமைக்கு ஐம்பத்தெட்டு இலட்சம் ரூபாய், புதிய அறிவிப்புகள் தலைப்பின்கீழ் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை டென்னிஸ் சிறப்பு மையம் ஏற்படுத்த மூன்று இலட்சம், புதிய அறிவிப்புகள் தலைப்பின்கீழ் கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களுக்கிடையே விளையாட்டுக்களை மேம்படுத்த எட்டு இலட்சத்து அறுபதாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ புதிய அறிவிப்புகள் தலைப்பின் கீழ் மதுரை பந்தயத் திடலில் செயற்கை இழை கூடைப்பந்து தளம் ஏற்படுத்தி பயன்படுத்தப்பட்டமைக்கு பதிமூன்று இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் ரூபாய், புதிய அறிவிப்புகள் தலைப்பின்கீழ் பகுதிநேர நீச்சல், ஸ்குவாஷ் மற்றும் சிறகுப்பந்து பயிற்றுநர்களை நியமனம் செய்தமைக்கு முப்பதாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மதுரை பந்தயத் திடலில் இரண்டு செயற்கை இழை கூடைப்பந்து தளம் அமைத்திட ரூ.13.56 இலட்சம் வழங்கப்பட்டது. இத்தொகையில் இரண்டு கூடைப்பந்து மைதானங்களை அமைத்து 11–10–2007 முதல் பொதுமக்கள் மற்றும் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் உலகத்தரம் வாய்ந்த பயிற்சியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு, சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

★ 13.5.2006 முதல் 28.2.2009 முடியவுள்ள காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் 9 பயிற்றுநர்கள், தொகுப்பு ஊதியம் மற்றும் சில்லரை செலவினத்தின் கீழ் பணிப்புரிந்தவர்கள் காலமுறை ஊதியத்தில் மின் பணியாளர் 1, துப்புரவாளர் 1, மற்றும் கருணை அடிப்படையில் –2 என மொத்தம் 13 நபர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ 1.8.2008 முதல் 31.3.2009 வரை உள்ள காலத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் ஒருவர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.97.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ 2006–07இல் நாட்டு நலப்பணித்திட்டத்தின் கீழ் 3,05,800 மாணவ தன்னார்வத் தொண்டர்கள் இருந்தனர். 2007–08 இல் இத்திட்டம் 3,36,380 தன்னார்வத் தொண்டர்களுடன் செயலாற்றி வந்தது. 2008 –09 ஆம் வருடத்தில் 3,70,018 தொண்டர்களுடன் செயலாற்றி வருகின்றது.

★ 2007–08 ஆம் வருடத்தில் நாட்டு நலப்பணித்திட்டத்தினை பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகள் / தொழிற்சாலை பயிற்சி நிறுவனங்கள் / ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பள்ளிக் கல்வி நிறுவனங்களில் செயல்படுத்திட தமிழக அரசு ரூ.7,09,81,969 வழங்கியுள்ளது.



# வனவளம் பெருக்கும் வன உயிரினத் திட்டங்கள்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

திரு. என்.செல்வராஜ் அவர்கள்

★ 2007–2008, 2008–2009ஆம் ஆண்டுகளில் 19.42 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தனியார் விவசாயிகளின் நிலங்களில் இலாபம் தரக்கூடிய மரங்களான தேக்கு, சவுக்கு பெருமர வகைகள், புங்கன், மலைவேம்பு போன்ற இதர மரவகைகள் 2 கோடி அளவில் உற்பத்தி செய்யப்பட்டு 54,560 ஏக்கர் பரப்பளவில் நடவு செய்து கொடுக்கப்பட்டது. இதன் மூலம் 41,280 வேளாண் பெருமக்கள் பயன் பெற்றனர். நடப்பட்ட மரக்கன்றுகளை நன்கு பாதுகாத்து பராமரிக்க வேளாண் பெரு மக்களுக்கு ரூ.5.58 கோடியளவில் ஊக்கத் தொகையாக மானியம் வழங்கப்பட்டது.

★ நகர்ப்புர வனவியல் திட்டத்தின் கீழ் சாலை ஓரங்களிலும், முக்கிய சாலை வளைவுகளிலும் வேம்பு, புங்கன், மகிழம், மஞ்சக்கொன்னை, சரக்கொன்னை போன்ற மர வகைகள் நடப்பட்டுள்ளன. 2007–2008 மற்றும் 2008–2009ஆம் ஆண்டில் 1,33,446 மரக்கன்றுகள் ரூ.316.65 இலட்சம் செலவில் நடப்பட்டுள்ளன.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்,
வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், மான்கள் உலாவிடம், யானை சவாரி மற்றும் மின்கல ஊர்திகள் ஆகியவற்றை துவக்கிவைத்து, தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்ட மகளிர் குழு உறுப்பினர்களுக்கு, சிறுகடன்களை வழங்கினார்கள். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.என்.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(31–8–2008)

★ தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம், விழுப்புரம் மாவட்டங்களில் கால்வாய் ஓரங்களில் 6,440 எக்டேர் பரப்பில் 10 கோடியே 16 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் தேக்கு மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

★ நடப்பாண்டில் (2008–2009) ரூ.123 இலட்சம் செலவில் 2005–2006 முதல் 2007–2008 வரை உற்பத்தி செய்யப்பட்ட தேக்கு மரங்களின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ காவேரி படுகை நிலங்களில் 20,700 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரத்தோட்டங்கள் எழுப்ப அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு 2008–2009ஆம் ஆண்டில் ரூ.482.82 இலட்சம் செலவில் 6,186 எக்டேர் படுகை நிலங்களில் 12 இலட்சத்து 37 ஆயிரத்து இருநூறு தேக்கு மரங்கள் நடப்பட்டுள்ளன.

★ தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் 2006–2007ஆம் ஆண்டில் 2,778 எக்டேர் பரப்பில் கடலோரத் தடுப்புக் காடுகளும், 1,462 எக்டேர் நிலப்பகுதியில் சதுப்பு நிலக்காடுகளும் ரூ.1,355.55 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டன. 2007–2008ஆம் ஆண்டில் இக்கடலோரத் தொடர் தடுப்பு சதுப்பு நிலத் தோட்டங்களுக்கான பராமரிப்புப் பணிகள் ரூ.214.16 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2008–2009ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட கடலோரத் தடுப்புக் காடுகள் மற்றும் சதுப்பு நிலக் காடுகளின் பராமரிப்புப் பணிகள் ரூ.141.96 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் கடலோரப்பகுதியிலுள்ள மக்களின் உடைமைகளையும், உயிர்ச் சேதங்களையும் தடுக்கும் நோக்கத்துடன் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள தனியார் நிலங்களில் 900 எக்டேர் பரப்பளவில் கடலோரத் தடுப்புக் காடுகள் ரூ.252 இலட்சம் செலவில் நடப்பட்டுள்ளன.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.789.79 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்பிடிப்புப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.815.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**வன உயிரினத் திட்டங்கள்**

புலிகள் வாழுமிடங்களைப் பாதுகாத்திட களக்காடு முண்டந்துறை சரணாலயம் மட்டுமே இருந்த நிலையில் முதுமலை புலிகள் சரணாலயமாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்டது. இதன் மூலம் 2008–2009 நிதியாண்டிற்கு மூன்று புலிகள் காப்பகத்திற்கும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு மத்திய அரசின் பங்களிப்புடன் ரூ.575.126 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ வன விலங்குகளால் உயிர்ச்சேதம் மற்றும் பயிர் பொருட்சேதங்களை தவிர்க்கும் பொருட்டு, 909.50 கி.மீ நீளத்திற்கு ரூ.14.58 கோடி செலவில் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

★ தமிழகத்தில் முதல் முறையாக இழப்பீட்டுத் தொகை வழங்குவது அங்கீகரிக்கப்பட்டு பயிர், கால்நடை மற்றும் பொருட் சேதங்களுக்கு 2006–2007 மற்றும் 2007–2008ஆம் ஆண்டுகளில் ரூ.157.87 இலட்சமும் 2008–2009ஆம் நிதியாண்டில் ரூ.115.50 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

★ வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவுக் கானக உலா அமைப்பை ரூ.256 கோடி திட்ட செலவில் ஏற்படுத்த முடிவு மேற்கொள்ளப்பட்டு, 2007–2009இல் ரூ.611.98 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ சிறுவர்களிடையே வன உயிரினப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்துடன், கிண்டி சிறுவர் பூங்காவிற்கு வருகை தரும் அனைத்துச் சிறுவர்களுக்கும், நுழைவுக் கட்டணமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

★ மூன்று ஆண்டுகளில் 3,75,330 உயரமான மரக்கன்றுகள் ரூ.112.50 இலட்சம் மதிப்பீட்டில் வளர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், பொது சுகாதார நிலைய வளாகங்களில் நடுவதற்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- ★ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தரங்குன்றிய காடுகளை மேம்படுத்திட ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் கடனுதவியுடன் தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ரூ.567.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டக் காலத்தில் 150 பழங்குடியினர் கிராமங்கள் உட்பட 800 கிராமங்களில் 1,77,500 எக்டேர் காடுகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ★ 1,48,250 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 665 கிராம வனக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 2,446 மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிறுவப்பட்டு 33,657 மகளிர் பயனடைந்துள்ளனர்.
- ★ ரூ.66.57 கோடி செலவில் 643 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட 2,971 தடுப்பணைகள் மற்றும் 943 கசிவுநீர்க்குட்டைகள் கட்டப்பட்டுள்ளன.
- ★ கதிரடிக்கும் களம், ஆழ்துளைக்கிணறு, மேல்நிலைத் தொட்டிகள், கிராம வனக்குழுக் கட்டடம், பள்ளிகளில் சுற்றுச்சுவர் போன்ற 1,349 கிராம வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ★ களப்பணியாளர்கள் நலத்தினைக் கருத்தில் கொண்டு 463 குடியிருப்புக் கட்டடங்கள் உட்பட 512 கட்டடப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ★ காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 127.11 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ★ 12ஆவது நிதிக் குழு பரிந்துரையின் கீழ், 2006–2007ஆம் ஆண்டு முதல் 2008–2009ஆம் ஆண்டு வரை ரூ.2,269.14 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மற்றும் பழனி மலைகளில் 450 எக்டேர் தரம் குன்றிய காடுகளில் சுற்றுச் சூழல் மீட்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள், தமிழ்நாடு வனப்பகுதிகளில் உள்ள சாலைகளின் மேம்பாடு, பல்லுயிர் பரவல் தன்மை பாதுகாப்பு, வனத்துறைக் கட்டடங்கள் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ★ பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2006–2007இல் ரூ.160 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகத் (TAHDCO) திடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு 2007–2008ஆம் ஆண்டில் ரூ.151.65 இலட்சம் செலவில் பழங்குடியினருக்கு பவர் டில்லர், டீசல் இன்ஜின் மற்றும் மின் மோட்டார்கள் ஆகியவை வாங்க நிதியுதவி வழங்கப்பட்டு திட்டம் முழுமையாகச் செயலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 3,342 நபர்கள் மற்றும் 2 பழங்குடியினர் குடியிருப்புகள் (Tribal Settlements) ஆகியோர் பயனடைந்துள்ளனர்.
- ★ 2007–2008இல் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் ரூ.139 இலட்சம் செலவில் பழங்குடியினர் பகுதிகளில் கசிவுநீர்க்குட்டைகள் அமைத்தல் மற்றும் தடுப்பணைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு, 2008–2009ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.139 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 4,742 பழங்குடியினர் பயனடைந்துள்ளனர்.
- ★ 2008–2009இல் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் வனப்பகுதியினுள் அமைந்துள்ள குடிநீர் வசதி இல்லாத எட்டு பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.25 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு 8 பழங்குடியினர் குடியிருப்புகள் பயனடைந்துள்ளன.
- ★ மத்திய அரசியல் அமைப்புச்சட்டப் பிரிவுக்கூறு உதவி மானிய திட்டத்தின் கீழ் வேலூர் மண்டலத்தில் நெல்லிசாகல் கிராமத்தில் உள்ள வனத்துறை நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் மேம்படுத்தும் பணிக்காக ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயலாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 336 பழங்குடியின மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
- ★ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.201 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி கழகத் (TAHDCO) திடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு பழங்குடியினர் பகுதிகளில் கசிவுநீர்க் குட்டைகள், மரங்களல்லாத வனப்பொருட்கள் உற்பத்திக் கிடங்கு கட்டுதல், தேன் சேகரிப்புப் பெட்டிகள் வழங்குதல், பழங்குடியினர்கள் திறன் மேம்படுத்தும் பயிற்சி ஆகிய பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ★ பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளுக்கு 2007–2008ஆம் ஆண்டுகளில் நபார்டு வங்கி நிதி உதவி மூலம் 19 பள்ளிக்கூடங்களுக்கு ரூ.507.05 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.507.03 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

- ★ பல்லுயிரினப் பரவல் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

- ★ கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,388.438 ஹெக்டர் வனப்பரப்பு ஆக்கிரமிப்பாளர் பிடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளது. (31.12.2008 வரை) வன நிலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் வன எல்லைகளை சரியாக நிர்ணயித்து இரண்டு ஆண்டுகளில் 31,998 நிலையாக எல்லைக் கற்கள் கட்டப்பட்டுள்ளன.

- ★ கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் ரூ.2,159.64 இலட்சம் செலவில் 322.51 கி.மீ தூரம் வனச்சாலைகள் மேம்பாடு / பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டன.

- ★ கடந்த மூன்றாண்டுகளில், 12ஆவது நிதிக்குழுத் திட்டம் 2006–2007இல், 224 கட்டடங்களில் ரூ.135 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2007–2008 மற்றும் 2008–2009ஆம் ஆண்டுகளில் புதியதாக மூன்று வன ஒய்வு விடுதிகள் முசிறி, துவரங்குறிச்சி மற்றும் பெரம்பலூரில் கட்டுவதற்கு ரூ.60 இலட்சம் அரசாணை அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ★ மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வனவியல் மேம்பாட்டுப் பணிகளைத் திறம்படக் கண்காணிக்கவும், பாதுகாப்புப் பணிகளை பலப்படுத்தவும் பெரம்பலூர், திருவாரூர் மற்றும் கடலூர் ஆகிய மூன்று வன நிருவாகக் கோட்டங்களும், களக்காட்டினை தலைமையிடமாகக் கொண்ட வன உயிரினக் கோட்டமும், சென்னையில் நகர்புர வனவியல் கோட்டமும் (Urban Forestry Division) உருவாக்கப்பட்டுள்ளன.

- ★ கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை தாலுகாவில் சிறு விவசாயிகள் தனியார் நிலங்களில் தேக்கு போன்ற மரங்களை வளர்க்க ஊக்குவிக்கவும், அதன் மூலம் அவர்தம் நிதிநிலைமையை மேம்படுத்தும் நோக்கிலும் மரம் வளர்ப்போர் எதிர் கொண்டு வரும் தடைகளைக் களையும் விதத்தில் உரிமைக் கட்டணம் வசூல் செய்வதிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- ★ 2000–2001, 2001–2002, 2002–2003 மற்றும் 2003–2004–ஆம் ஆண்டுகளில் சமூகவனத் தோட்டங்கள் விற்பனை மூலமாகக் கிடைக்கப்பெற்ற வருவாயில் ஊராட்சிகளுக்கு பங்குத்தொகையானது வெகுகாலமாக வழங்காமல் இருந்து வந்த நிலையில், அரசின் சிறப்பு நடவடிக்கை மூலம் மேற்காண் ஆண்டுகளுக்குரிய பங்குத்தொகையான ரூ.15.16 கோடியினை 2,508 ஊராட்சிமன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுப் பயன்பெற்றுள்ளது.

- ★ சமூக வன ஊழியர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் ஊதியம் ரூ.817.50லிருந்து ரூ.2,126 மாத ஊதியமாக செப்டம்பர் 2008 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- ★ வனத்துறையில் களப் பணியாளர்களுக்கு மாதமென்றுக்கு வழங்கப்பட்டு வந்த சலவைப்படி ரூ.30/–லிருந்து ரூ.100/– ஆக வழங்கப்பட்டுள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் களப்பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.



# புதிய சாலைகள் - பாலங்கள் அமைப்பு

மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
**திரு. வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன் அவர்கள்**

- ★ 7,673 கோடி ரூபாய் செலவில் 45,651 கி.மீ. நீள சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளும் பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- ★ ஆதிதிராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் புதிய திட்டம் 2006–07 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, மூன்றாண்டுகளில் ரூ.257 கோடி மதிப்பில் 2,028 கி.மீ. நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.54.17 கோடி மதிப்பில் 256 கி.மீ நீள தார்ச் சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 311 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் தார்ச் சாலை வசதி பெற்றுள்ளன.
- ★ இதுவரை இல்லா வகையில் 8,800 கி.மீ நீள மாநில நெடுஞ்சாலைகள் இருவழித்தடமாகவும், இடைவழித்தடமாகவும் அகலப்படுத்தப்பட்டுள்ளன.
- ★ ரூ. 2,480.02 கோடி ஒதுக்கப்பட்டு, 17,749 கி.மீநீள அரசுச் சாலைகளும், பராமரிப்பு ஏதுமின்றி இருந்த 4,046 கி.மீநீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் வேளாண் அபிவிருத்தித் திட்டச் சாலைகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- ★ ஈரோடு மாவட்டத்தில் கொக்கராயன்பேட்டை முதல் திண்டல் வரை 14 கி.மீ நீளத்திற்கு ரூ.22 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள் மற்றும் தென்னக இரயில்வே கட்டுமானப் பிரிவு மூலம் இரயில்வே கடவு எண்.10இல் ரூ.23 கோடி மதிப்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள கத்திவாக்கம் சாலை மேம்பாலத்தை திறந்துவைத்தார். (30–7–2008)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை–சோழிங்கநல்லூரில் நடைபெற்ற விழாவில், ராஜீவ்காந்தி சாலையைத் திறந்துவைத்து, ஒரகடம் தொழிற்பூங்கா சாலை மேம்பாட்டுப் பணிகளை தொடங்கிவைத்தார். மாண்புமிகு மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (29–10–2008)

★ 1.50கி.மீ. நீள எட்டுக்குடி புறவழிச்சாலைக்கு ரூ.1.55 கோடி; 3 கி.மீ. நீள திருத்துறைப்பூண்டி புறவழிச்சாலைக்கு ரூ.45.35 இலட்சம் ; 3.80 கி.மீ. நீள துறையூர் புறவழிச்சாலைக்கு ரூ.4.73கோடி; 8.50 கி.மீ. நீள காஞ்சிபுரம் புறவழிச்சாலைக்கு ரூ.2.87 கோடி; 9 கி.மீ. நீள பெரம்பலூர் புறவழிச்சாலைக்கு ரூ.5.36 கோடி; 7.50 கி.மீ. நீள பட்டுக்கோட்டை புறவழிச்சாலைக்கு ரூ.2.79 கோடி; 13 கி.மீ. நீள தஞ்சாவூர் இரண்டாம் கட்டம் புறவழிச்சாலைக்கு ரூ.5 கோடி; 4.90 கி.மீ. நீள தாராபுரம் புறவழிச்சாலைக்கு ரூ. 63 லட்சம் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

★ இவை தவிர, திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி நகருக்கு புறவழிச்சாலை அமைக்க ரூ.3.50 கோடியும், சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி நகருக்குப் புறவழிச்சாலை அமைக்க ரூ.3.50 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ 495 பாலப்பணிகள் ரூ.504 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பேரணைப் பாலம் ரூ.5 கோடி மதிப்பிலும், புளியூர்நத்தம் – கரட்டூர் சாலையில் கி.மீ.0/2இல் ரூ.1.13 கோடி மதிப்பிலும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலுவையிலிருந்த திருமுக்கூடல் பாலம் ரூ.7.70 கோடி மதிப்பிலும். கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம் நகரில் மணிமுத்தாறு நதி பாலம் ரூ.5.50 கோடி மதிப்பிலும். திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம்பட்டு அருகில் ராயண்டபுரத்தில் பாலம் ரூ.3.65 கோடி மதிப்பிலும். புதுக்கோட்டை மாவட்டம் கோங்குடி பாலம் ரூ.1.50 கோடி மதிப்பிலும், தென்னம்பாடி செல்லும் சாலையில் கி.மீ.3/6இல் ரூ.1.08 கோடி மதிப்பிலும். தேனி மாவட்டம் மேல்மங்கலம் பாலம் ரூ.1.10 கோடி மதிப்பிலும், தேனி மாவட்டம் பங்களாபட்டி சாலையில் கி.மீ.0/4இல் ரூ.1.32 கோடி மதிப்பிலும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மங்காடு பாலம் ரூ. 2 கோடி மதிப்பிலும், ஆரல்வாய்மொழி–நெடுமாங்காடு சாலையில் கி.மீ.4/10இல் ரூ.1.10 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன.

★ நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாணிக்கப்பங்கு அருகே பாலம் ரூ. 1.30 கோடி மதிப்பிலும் மடவாமேடு அருகில் பாலம் ரூ. 1.30 கோடி மதிப்பிலும், ஒரடியம்புலம் – கொற்கை சாலையில் கி.மீ.1/4இல் ரூ.2.28 கோடி மதிப்பிலும், வேலூர்

மாவட்டத்தில் கோமேஸ்வரம் பாலம் ரூ. 1.70 கோடி மதிப்பிலும் , திருநெல்வேலி மாவட்டத்தில் இட்டாமொழி பாலம் ரூ. 1.30 கோடி மதிப்பிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலியமங்கலம் பாலம் ரூ. 2.10 கோடி மதிப்பிலும், மணிக்குடி–திருலோகி சாலையில் கி.மீ.2/2இல் ரூ.1.18 கோடி மதிப்பிலும், கும்பகோணம் மன்னார்குடி சாலையில் கி.மீ 3/2இல் ரூ.2.75 கோடி மதிப்பிலும், பட்டுக்கோட்டை – முத்துப்பேட்டை சாலையில் கி.மீ 52/4இல் ரூ. 0.64 கோடி மதிப்பிலும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் குமாரலிங்கம் பாலம் ரூ. 1.25 கோடி மதிப்பிலும், ஆழியாற்றின் குறுக்கே ஆத்துபொள்ளாச்சி அருகில் ரூ.3.53 கோடி மதிப்பிலும் மற்றும் பருத்தியூர் – நல்லூர் சாலையில் கி.மீ.0/8இல் ரூ.1.70 கோடி மதிப்பிலும், விழுப்புரம் மாவட்டத்தில் சங்கராபுரம் – புதிராம்பட்டு சாலையில் கி.மீ.3/6இல் ரூ.1.25 கோடி மதிப்பிலும், தருமபுரி மாவட்டம் கோட்டப்பட்டி ஆவலூர் சாலையில் கி.மீ.0/2இல் ரூ.1.25 கோடி மதிப்பிலும், திருச்சி மாவட்டம் கானக்கிளையநல்லூர்–பெருவளப்பூர் சாலையில் கி.மீ.2/4இல் ரூ.1.30 கோடி மதிப்பிலும், விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் – சிவகாசி – விருதுநகர் – அருப்புக்கோட்டை – திருச்சுழி – நரிக்குடி – பார்த்திபனூர் சாலையில் கி.மீ.30/2–4இல் ரூ.2.30 கோடி மதிப்பிலும், 1,847.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலம் / கீழ் பாலம் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவைகளில் இதுவரை 19 இரயில்வே கடவுகளுக்கு பதிலாக சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் ரூ. 237.35 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

★ நபார்டு வங்கியின் உதவியுடன் மோகனூர் வாங்கல் பகுதிகளை இணைக்கும் பாலம் துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

★ திருநெல்வேலி புறவழிச்சாலையில் செல்லபாண்டியன் சிலை அருகில் ரூ. 16.40 கோடி செலவில் மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ கரும்பு ஆயத் தீர்வை நிதியிலிருந்து ரூ. 27.14 கோடிக்கு 78 சாலைப்பணிகள் 156.85 கி.மீ நீளத்திற்கு எடுத்து கொள்ள ஒப்புதல் பெறப்பட்டு 67 பணிகள் 131 கி.மீ நீளத்திற்கு முடிக்கப்பட்டுள்ளன.

★ ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.9.38 கோடி செலவில் 21 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் அரசுச் சாலைகளில் 398 கி.மீ. நீள சாலை பணிகள், 29 பாலப் பணிகள் ரூ.115 கோடி செலவில் முடிக்கப்பட்டன. மேலும், ஊரகச் சாலைகளில் 37 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 2 பாலப் பணிகள் ரூ.15 கோடி செலவில் முடிக்கப்பட்டன.

★ சென்னை இராஜீவ் காந்தி சாலையில் முதற்கட்டமாக மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான தகவல் தொழில்நுட்ப 6 வழி விரைவுச் சாலையின் முதற்கட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

★ திருப்பூர் நகர சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 98.50 கி.மீ நீள சாலைப் பணிகளையும் 8 பாலப் பணிகளையும் ரூ.70 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்து, சாலைப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன.

★ கோயமுத்தூர் நகரில் தண்டு மாரியம்மன் கோவில் முதல் நீலாம்பூர் வரையுள்ள சேலம் – கொச்சின் சாலையில் (அவினாசி சாலை) போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க ரூ.27 கோடி மதிப்பில் கி.மீ 141/6 முதல் 157/6 வரையுள்ள, 16 கி.மீ நீள சாலையை ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த குறுகிய 13 சிறுபாலங்களை அகலப்படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றுள்ளன.

★ மதுரையைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளை மதுரை மாநகருடன் இணைக்கும் சாலைகளை மேம்படுத்திட 122.3 கி.மீ நீளமுள்ள 14 பணிகள் ரூ.70.60 கோடி மதிப்பில் முடிவுற்றுள்ளன.

★ ரூ.2,442 கோடி மதிப்பீட்டிலான உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பொறுப்பேற்றபோது மொத்தம் 724 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளில் எந்தப் பணியும் முடிக்கப்படவில்லை. ஆனால், கடந்த 3 ஆண்டுகளில் நில எடுப்புப் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, 31.03.09 வரை சுமார் 603 கி.மீ. சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2006–08 வரை 168 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ. 197 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டன. 2008–09 ஆம் ஆண்டில் 273 கி.மீ. நீள 79 சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்தும் பணிகள் ரூ. 280 கோடி மதிப்பிலும், மேலும், 6 சாலை மேம்பாலப் பணிகள் ஒரு இரயில்வே மேம்பாலம் மற்றும் 7 ஆற்றுப் பாலங்கள் ஆகிய பணிகள் ரூ. 222 கோடி மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 793 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் ரூ.299.30 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகளும், 212 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் ரூ.68.18 கோடி மதிப்பில் பராமரிப்பு பணிகளும் முடிக்கப்பட்டன.

★ தேசிய நெடுஞ்சாலை 4இல் திருவலம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை 47இல் குழித்துறை ஆகிய இடங்களில் பெரிய பாலங்கள் ரூ.34.06 கோடி மதிப்பில் 2007–08ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. இது தவிர, 8 பாலப்பணிகள் ரூ.7.63 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நில எடுப்புப் பணிகளைத் துரிதப்படுத்தியதன் காரணமாக 810 கி.மீ நீள தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2,387 ஹெக்டேர் நிலம் ஆணையத்திற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15 விபத்துப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டன. 2008–09ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 33 விபத்துப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ நெடுஞ்சாலைத் துறையை சேர்ந்த 624 இடங்களில் ரூ. 4.85 கோடி மதிப்பில் சாலை சந்திப்புகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2007ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின் ஓரங்களில் 3,00,000 மரக்கன்றுகளை நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி, 2007–08இல் நடப்பட்ட 3,93,000 மரக்கன்றுகள் அனைத்தும் செம்மையான முறையில் பராமரிக்கப்பட்டு ஆரோக்கியமாக வளர்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2008–09ஆம் ஆண்டில் 2,80,000 மரக்கன்றுகள் நடப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன.

★ சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக கன்னியாகுமரி படகுத்துறைக்கு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ரூபாய் 2.10 கோடி மதிப்பில் சுமார் 150 பயணிகள் பயணம் செய்யத்தக்க இரண்டு புதிய படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.



# புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை

**மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்**

**டாக்டர் திருமதி. பூங்கோதை அவர்கள்**

- ★ தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி 2005–2006இல் ரூ.13,615.10 கோடி, 2006–2007இல் ரூ.20,701.72 கோடி, 2007–2008இல் ரூ. 28,200 கோடி; 2008–2009இல் ரூ. 28,490 கோடியாக உயர்வு.
- ★ மத்திய அரசு அனுமதியளித்துள்ள 1,249.61 ஹெக்டேர் பரப்பளவில், 38 தொழில்நுட்பவியல் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் (சி.பொ.ம–**SEZ**), 26 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், அவற்றின் செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளன.
- ★ 121.41 ஹெக்டேரில் ஒரு பன்முகச் சேவை சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கும், 3,246.29 ஹெக்டேரில், மூன்று பன்முக உற்பத்திப் பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும், முறையான அங்கீகாரம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் முன்னிலையில்
இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ்,
நான்காவது கட்டமாக 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காக பெறப்பட்ட
உலகளாவிய ஒப்பந்த விலைப்புள்ளிகள் திறக்கும் நிகழ்வுக்கான கூட்டம் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மற்றும்
அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (15–10–2008)

வழங்கப்பட்டுள்ளது. மேலும், 486.96 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள மின்னணு , மென்பொருள் மற்றும் அதுசம்பந்தப்பட்ட சேவைகளுக்கான 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் முறையான அங்கீகாரம் பெற்றுள்ளன.

★ புதிய, தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கை 29.7.2008 அன்று வெளியிடப்பட்டது.

★ தரமணியில் 26.64 ஏக்கர் நிலப்பரப்பில், 4.5 மில்லியன் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்துடன் உலகத்தரத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு, தமிழக அரசின் நிறுவனமான டிட்கோ (TIDCO) நிறுவனம், டி.எல்.எப். (DLF) நிறுவனத்துடன் கூட்டு முயற்சி மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்ட கட்டுமானப் பணிகள், 2.5 மில்லியன் சதுர அடி பரப்பில் 2009–ஆம் ஆண்டில் முடிவடையும்.

★ சென்னை, தரமணியில் உள்ள 25.27 ஏக்கர் நிலப்பரப்பில், டிட்கோ நிறுவனம் டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃப்ராஸ்டிரக்சர் லிமிடெட் (Tata Reality and Infrastructure Limited) நிறுவனத்துடன் இணைந்து தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா மற்றும் ஒருங்கிணைந்த சர்வதேச கன்வென்ஷன் மையம் அமைத்து வருகிறது. மொத்தம் 40 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அமையும் இத்திட்டத்தின் முதல் கட்ட கட்டுமானப் பணிகள், 20 இலட்சத்து 30 ஆயிரம் சதுர அடி பரப்பில் நிறைவேற்றப்பட்டு, 2009–ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.

★ சிறுசேரி, சிப்காட் வளாகத்தில், வேகமாக அமைக்கப்பட்டுவரும் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில் டி.சி.எஸ். (TCS), சி.டி.எஸ். (CTS) மற்றும் ஹெக்ஸாவேர் (Hexaware) நிறுவனங்கள், தங்கள் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்து வருகின்றன. இங்கு, மேலும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளுக்கான 58 நிறுவனங்கள் தங்கள் பணிகளைத் தொடங்கவிருக்கின்றன.

★ சென்னையை அடுத்த சோழிங்கநல்லூர் பெரும்பாக்கம் கிராமத்தில் 377.08 ஏக்கர் பரப்பில் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ கோவை மாவட்டம் விளாங்குறிச்சியில் 61.59 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் ( TIDCO), டைடல் பார்க் லிமிடெட் மற்றும் இந்திய மென்பொருள் தொழில்நுட்பவியல் பூங்கா (STPI) ஆகியவை கூட்டாகச் சேர்ந்து நிறுவவுள்ள கோவை டைடல் பூங்காவிற்கு 24.2.2007 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. விரைவில் திறக்கப்பட உள்ளது.

★ திருச்சிராப்பள்ளியில், 147.61 ஏக்கர் நிலப்பரப்பில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவியுள்ளது.

★ மதுரை மாவட்டம், இலந்தைக்குளத்தில் 28.91 ஏக்கரிலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு அருகில், வடபழஞ்சி கின்னிமங்கலம் கிராமத்தில் 245.17 ஏக்கரிலும், சிறப்புப் பொருளாதார மண்டல தகுதியுடைய, தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைக்கிறது. 26.4.2008 அன்று இவ்விரு திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் நடைபெறுகிறது.

★ சேலம் மாவட்டம், சேலம் வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் 164.26 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் தகவல் தொழில் நுட்பவியல் பூங்காவுக்கு 14.09.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த பூங்காவில் 100 ஏக்கர் பரப்பில் தகவல் தொழில் நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில் வளாகம் அமைப்பதற்கும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ திருநெல்வேலி– கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் அமையும் 500 ஏக்கர் பரப்பில் அமையும் தகவல் தொழில் நுட்பவியல் பூங்காவுக்கு 17.6.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் விசுவநாதபுரம் கிராமத்தில் 174.47 ஏக்கர் பரப்பில் அமையும் தகவல் தொழில் நுட்பவியல் பூங்காவுக்கு 26.2.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெறுகின்றன.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தனியார் கூட்டு முயற்சியில் இணைந்து வேலூரிலும், ஒரு புதிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை அமைத்திடவுள்ளது.

★ உயர் தரத்திலான கம்பிவட தொலைக்காட்சி சேவையை நியாயமான கட்டணத்தில் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் 13.08.2007 அன்று அரசு கம்பிவட தொலைக்காட்சி நிறுவனம் தொடங்கப்பட்டு தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இலக்கமுறை தலைமுனைகள் நிறுவப்பட்டு சேவைகள் அளிக்கப் பட்டு வருகின்றன.

★ தமிழ்நாட்டின் மனிதவளத்தை மேம்படுத்தும் நோக்கில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் மையம் (**ICT Academy**) 8.4.2008 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

★ மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் தகவல் தொழில் நுட்பவியல் வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய உயர் கல்வி மையம் (ஆங்கிலம்) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. (**National Centre of Excellence – Indian Institute of Information Technology Design and Manufacturing**)

★ வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டியில்லாத வீடுகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் தன்னிகரில்லா திட்டம் ஒன்று 15.9.2006அன்று துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களில் 25,30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் மூன்றாம் கட்டத்தில் 37,50,500 வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகளும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. நான்காம் கட்டமாக 41,62,500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இந்த நான்காம் கட்ட விநியோகப் பணிகள் 24.2.2009அன்று தொடங்கப்பட்டுள்ளது.

★ தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் சொந்தமாக நிருவாகக் கட்டடம் கட்ட சென்னை, கோட்டூர் கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் அரசால் வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ இந்தியாவில், பெரும்பரப்பு வலையமைப்புத் திட்டத்தை செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 8.4.2008 அன்று தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம், 708 இணைப்பு முனைகள் (**Point of Presence**) ஏற்படுத்தப்பட்டு, மாநிலத் தலைநகர் சென்னையை, மாவட்டத் தலைமையிடங்கள் (31), வட்டத் தலைமையிடங்கள் (395), வட்டாரத் தலைமையிடங்கள் (282) ஆகியவற்றுடன் இணைக்க, வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ மின் ஆளுகை நடவடிக்கைகளில், தனிக் கவனம் செலுத்த ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுகை முகமை என்ற தன்னாட்சி பெற்ற சங்கம் 25.1.2007 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

★ அரசு வழங்கும் பல்வேறு சலுகைகளைக் குடிமக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக மாநில தரவு மையம் 8.4.2008 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, இத்தகைய அதிநவீன வசதி கொண்டுள்ள முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

★ கிராமப்புற மக்களுக்கு வலிமை சேர்க்கவும் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே உள்ள மின்னணுவியல் இடைவெளியைக் குறைக்க பொதுச் சேவை மையங்கள் மூலமாக ஊரக சேவைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசும் தனியாரும் பங்கேற்று நடத்தும் வகையில் தமிழகம் முழுவதும் 5,440 பொதுச் சேவை மையங்கள், 3 கிராமங்களுக்கு என்ற விகிதத்தில் அமைக்கப்படும். இம்மையங்களை அமைப்பதற்கான இசைவுக் கடிதங்கள், திருவாளர்கள் 3ஐ இன்போடெக் (**3i Infotech**) மற்றும் எஸ்.ஆர்.இ.ஐ. (**SREI**) ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மையங்களில் மூன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 8.4.2008 அன்று தொடங்கி வைத்தார். இதர மையங்களில் 748 மையங்கள் சான்றிதழ் பெற்று செயல்படும் நிலையில் உள்ளன.

★ திருவாரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் மின்னணு மாவட்டங்களாக மத்திய அரசினால் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



# ஊனமுற்றோருக்கு அரசுப் பேருந்துகளில் பயணச் சலுகை

**மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்**

**திருமதி. பி. கீதா ஜீவன் அவர்கள்**

- ★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி ரூ. 10 ஆயிரம் என்பது ரூ. 20 ஆயிரமாக உயர்த்தப்பட்டு ரூ. 374 கோடியில் 2,29,436 பேர் பயனடைந்துள்ளனர். ஏனைய திருமணத் திட்டங்களின் நிதியுதவிகளும் 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளன.
- ★ டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தில் 568 ஏழைப் பெண்களுக்கு ரூ.65.70 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் மற்றும் கல்வி வளர்ச்சி நாள் விழாவில் முட்டை உட்கொள்ளாத மாணவ, மாணவியருக்கு சத்துணவுடன் வாழைப்பழம் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர். (15.7.2008)

★ அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி, மணம்புரியும் தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராகவும் மற்றொருவர் வேறு இனத்தைச் சார்ந்தவராகவும் இருந்தால் ரூ.20,000/– எனவும், மணம்புரியும் தம்பதியரில் ஒருவர் பிற்படுத்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தை சார்ந்தவராகவும் மற்றொருவர் முற்பட்ட இனத்தைச் சார்ந்தவராகவும் இருந்தால் ரூ.15,000/– எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 6,582 தம்பதியருக்கு ரூ.1,322.95 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவைத் தாய்மார்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 6,908 பேருக்கு ரூ.819.55 இலட்சம் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

★ அன்னை தெரசா நினைவு ஆதரவற்றப் பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் மூன்றாண்டுகளில் 829 பேருக்கு ரூ.103.40 இலட்சம் செலவில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ தாம்பரம் சானடோரியத்தில் உள்ள அரசு சேவை இல்லத்தில் 40 மாணவிகள் பயன்பெறும் வகையில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

★ முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓய்வூதிய உதவித் தொகை 1.8.2006 முதல் ரூ.400/– ஆக உயர்த்தப்பட்டு மூன்றாண்டுகளில் 44.32 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

★ தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் 16 முதியோர் இல்லங்களுக்கு தலா ரூபாய் 2 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்தது. 2007–2008இல் மேலும் 15 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு ஒரு இல்லத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 2 இலட்சம் வீதம் மானியம் வழங்க ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ 50 வயது கடந்தும் திருமணம் ஆகாமல் வாழும் ஏழை மகளிருக்கு மாதம் 400 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 8 ஆயிரத்து 967 மகளிர் பயன்பெறுகின்றனர்.

★ சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்கும் திட்டம் 15.7.2006இல் தொடங்கப்பட்டது. 15.7.2007 முதல் வாரம் மூன்று முட்டை வழங்குவதின் மூலம் 74.71 இலட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர். முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

★ 15.7.2007லிருந்து ஒன்று முதல் 2 வயது வரையுள்ள, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயனடையும் குழந்தைகளுக்கு, வாரம் ஒரு முறை முட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் 2.40 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

★ அரசு திருமண நிதியுதவித் திட்டத்திற்கும், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்திற்கும் பயனடைய விதிக்கப்பட்டிருந்த ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000/– லிருந்து ரூ.24,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மறைந்த திருமதி.இந்திரா காந்தி அவர்கள் இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற ஜனவரி 24 ஆம் தேதியை "தேசிய பெண் குழந்தைகள் தினம்" ஆகக் கொண்டாடவும், ஜனவரி 24 ஆம் தேதியிலிருந்து உலக மகளிர் தினமான மார்ச் 8ஆம் தேதி வரை பெண்களின் மேன்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் 22.1.2009அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு முதன் முறையாக இலவசப் பேருந்துப் பயண அட்டைகளை வழங்கினார்கள். (21.11.2008)

★ பெண் சிசுக் கொலையினை ஒழித்திடவும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊக்குவிக்கவும், பெண் கல்வியை மேம்படுத்தவும் 1,47,800 ஏழைப்பெண் குழந்தைகள் பயனடையும் வகையில், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.225 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ ஆதரவற்ற குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஈரோடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு தலா ரூ.65 இலட்சம் செலவில் சொந்த கட்டடம் கட்டப்படுகிறது.

★ சேவை இல்ல உள்ளுறைவோர்கள் விரைவில் வேலைவாய்ப்புப் பெறும் வகையில், கணினிப் பயிற்சியுடன் ஆங்கிலத் திறன் வளர்ப்பு மற்றும் அலுவலக நிருவாகப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

★ தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம் 10.4.2008 அன்று சமூக நலத் துறை அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அரவாணிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அவர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அவர்களுக்காக இடைக்காலத் தங்கும் விடுதி தாம்பரத்தில் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. அரவாணிகளை உறுப்பினர்களாகக் கொண்ட 61 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ.200/– என்பது 1.9.2006 முதல் ரூ.500/– என உயர்த்தப்பட்டு, 2006 – 2007 முதல் பயனாளிகளின் எண்ணிக்கையும் 10,000 ஆக உயர்த்தப்பட்டது. இதன் மூலம் ரூபாய் 16,82,34,000 செலவிடப்பட்டு 30 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர்.

★ தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத மனவளர்ச்சி குன்றியோருக்கு வயதுவரம்பின்றி, எண்ணிக்கை வரையறை இன்றி பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் ரூ.500/– வழங்கப்படுகிறது. 19 கோடியே 95 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் 40,000 பேர் பயனடைந்துள்ளனர்.

★ அரசுத் தேர்வுகளில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெற்று சாதனை படைக்கும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசுகள்

வழங்கப்பட்டு, அவர்களின் உயர் கல்விக்கான செலவினங்களும் அரசினால் ஏற்கப்படுகிறது. இதன்மூலம் 2006–2007இல் 106 மாணவ, மாணவிகளும், 2007–2008இல் 123 மாணவ, மாணவிகளும் பயனடைந்துள்ளனர்.

★ 2006–2007 முதல் ஊனமுற்றவரை ஊனமில்லாதவர் மணந்துகொண்டால் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை ரூ.20,000/– ஆக உயர்த்தப்பட்டு, 1,170 தம்பதியருக்கு 2 கோடியே 34 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

★ ஊனமுற்றோருக்கான நல வாரியம் 24.4.2007 அன்று ஏற்படுத்தப்பட்டது.

★ ரூ.304.11 இலட்சம் செலவில் 9,299 கடும் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கடும் ஊனமுற்றோர் சிரமமின்றி நீண்ட தூரம் சென்று வரும் வகையில், 60 மாணவ – மாணவிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 290 பணிபுரியும் ஊனமுற்ற நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வாங்க தலா ரூ.10,000/– மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ கிண்டியிலுள்ள அரசுத் தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாத நபர்களுக்கு பொருத்துநர் (**Fitter**) பிரிவில் இரண்டாண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவில் பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.100/– லிருந்து ரூ.300/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ இந்தியாவிலேயே முதன் முறையாக தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு மாதந்தோறும் உதவித் தொகை ரூ.500/– வீதம், தமிழக அரசு 2008–2009 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. 2008–2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,000 நபர்கள் பயனடையும் வண்ணம் ரூ.63,09,303/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ அனைத்து வகை ஊனமுற்றோரும் பாகுபாடின்றி மாநிலம் முழுவதும் பயணிக்க ஏதுவாக இரயில் கட்டணச் சலுகை அளித்துள்ளது போல், நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி, பயணம் செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ மறுவாழ்வு இல்லங்களில் உள்ள உள்ளுறைவோர்கள் பயனடையும் வண்ணம் 525 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஆசிரியர் பட்டயப் படிப்பு பயிற்சி (**Diploma in Teacher Education**) முடித்த சத்துணவு மற்றும் குழந்தைகள் மையப் பணியாளர்கள் இடைநிலை ஆசிரியர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ அனைத்து சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஏற்கெனவே இருந்த ஊதிய விகிதமான ரூ.600–10–700–20–1100 என்ற வரையறுக்கப்படாத ஊதிய விகிதத்தினை மாற்றி ரூ.1300–20–1500–25–2000 என்ற ஊதிய விகிதத்தினை 1–9–2006 முதல் நடைமுறைப்படுத்தி வழங்கி வருகிறது. மேலும் 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு வீதம் ஊதிய உயர்வு அனுமதித்து வழங்கி வருகிறது.

★ தொகுப்பூதியம் பெற்று வந்த சமையலர், சமையல் உதவியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 15–9–2008 முதல் நிர்ணயம் செய்யப்பட்டு ஊதியம் வழங்கப்படுகிறது.

★ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் பணிபுரியும் சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் 15–9–2008–லிருந்து மாதாந்திர ஓய்வூதியம் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் 2,12,981 பணியாளர்கள் பயனடைகின்றனர்.

★ சத்துணவுப் பணியாளர்கள் இறந்தால் அவர்களது வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றி அவர்களுக்குப் பணிநியமனம் செய்ய ஆணைவெளியிடப்பட்டது.



# பொருளாதார மேம்பாட்டுக்காக சிறப்பு மாநில நிதிஉதவித் திட்டம்

**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**

**திருமதி. ஆ.தமிழரசி அவர்கள்**

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு 3.8.2006 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் 20.04.2007 அன்று அமைக்கப்பட்டு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு பழங்குடியினர் நல வாரியத்திற்கு ரூ.1கோடி விடுவிக்கப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற 10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்குப் பரிசுத் தொகைகளை வழங்கினார். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(25–7–2008)

★ 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் 5ஆம் வகுப்புப் படித்துத் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிட, பழங்குடியின, கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட குழந்தைகளில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி வீதம், 385 ஊராட்சி ஒன்றியங்களில் நுழைவுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 385 மாணவ, மாணவிகளையும், சிறந்த உண்டு உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் 12ஆம் வகுப்பு வரை பயில்வதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் நிதியுதவி வழங்கும் ஆண்டுக்கு ஏறத்தாழ 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசின் புதிய திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ கடந்த மூன்றாண்டுகளில் ரூ.90,56,18,000 செலவில் 2,00,781 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவிகளுக்கும், 2,05,271 மாணவர்களுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

★ இந்திய ஆட்சிப்பணி மற்றும் அரசு உயர் பணிகளுக்கான தேர்வுகளுக்குத் தயார் செய்ய உதவும் பொருட்டு, மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் நோக்கத்தை கருத்தில் கொண்டு "Competitive Success Review" போன்ற பத்திரிகைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் 2006–2007ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு ரூ.5.50 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

★ 10ஆம் வகுப்பு வரை சிறப்புக் கட்டணம் (Special Fees) ரத்து செய்யப்பட்டது. 2006–2007இல் 10,73,199 மாணவ– மாணவியரும், 2007–2008 இல் 12,15,200 மாணவ, மாணவியரும் பயன்பெற்றனர்.

★ 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கு மாநில சிறப்பு உதவித்தொகையாக 1,23,489 மாணவ, மாணவியருக்கு 11.52 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

★ துப்புரவுத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு 10ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (**Pre-matric**) உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் துப்புரவுத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு அவர்களது சாதி, மதம் மற்றும் வருமான வரம்பினை கணக்கில் கொள்ளாமல் வழங்கப்படுகிறது. விடுதியில் தங்காது பயிலும் மாணவ / மாணவியருக்கு மாதம் ஒன்றிற்கு 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ரூ.110/– உதவித்தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயில்வோரில் 3ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயில்வோருக்கு மாதம் ரூ. 700/– வழங்கப்படுகிறது. இதுவன்றி தனி மானியமாக விடுதியில் தங்காது பயிலும் மாணவ/மாணவியருக்கு ஆண்டுக்கு ரூ.750/–ம், விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு ரூ.1,000மும் வழங்கப்படுகிறது. 2006–07ஆம் ஆண்டில் ரூ.598.82 இலட்சம் செலவில் 54,235 மாணவ/மாணவியரும், 2007–08ஆம் ஆண்டில் ரூ.627.87 இலட்சம் செலவில் 54,597 மாணவ/மாணவியரும், 2008–09ஆம் ஆண்டில் ரூ.724.03 இலட்சம் செலவில் 68,955 மாணவ/மாணவியரும், பயனடைந்தனர்.

★ 2006–2007இல் பள்ளிச் சேர்க்கையை 100 விழுக்காடாக உறுதிப்படுத்திடும் வகையில் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500 வீதம் மொத்தம் ரூ.3 கோடி செலவில் உதவித் தொகை வழங்கவும், இதேபோன்று 6ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/– என 10 மாதங்களுக்கு ரூ.1,000 வீதம் மொத்தம் ரூ.3.00 கோடி செலவில் உதவித்தொகை வழங்கவும் அரசு ஆணை.

★ 2006–2007ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிலும் ஆதிதிராவிடர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு ஆண்டுக்கு ரூ.50 இலட்சம் செலவில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

★ 2006–07ஆம் கல்வி ஆண்டு முதல் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பள்ளி மற்றும் உண்டு உறைவிடப் பள்ளி, ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் சீருடைகளின் வடிவமைப்பில் மாறுதல் செய்து 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு சுடிதாரும், 8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முழுக் கால் சட்டையும் வழங்கப்படுகின்றன. 2007–2008இல் ஒவ்வொருவருக்கும் 2 இலவச சீருடைகள் வழங்க ஆணை.

★ மாணவ, மாணவியர்களின் சீருடைகளைத் தைத்திட அவர்களுக்குத் தையல் கூலிகள் வழங்கப்பட்டதற்கு மாறாக 2007–2008ஆம் ஆண்டில், சமூகநலத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தைத்து 1,58,555 மாணவர்களுக்கும் 13,29,987 மாணவியருக்கும் 15 கோடியே 96 ஆயிரம் ரூபாய் செலவில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. 2008–2009ஆம் ஆண்டில் 2,91,542 மாணவ / மாணவியருக்கு ரூ 15,00,75,000 செலவில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ★ ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு சோப்பு, எண்ணெய் முதலியவை வாங்கவும், மாணவர்களின் முடிவெட்டும் செலவுகளுக்காகவும், மாதந்தோறும் வழங்கப்படும் சில்லரைச் செலவினம் பள்ளி மாணவர்களுக்கு 15 ரூபாய் என்பது 25 ரூபாய் எனவும், கல்லூரி மாணவர்களுக்கு 25 ரூபாய் என்பது 35 ரூபாய் எனவும் உயர்வு. ஆண்டுக்கு ரூ. 129.73 இலட்சம் செலவில் 1,18,768 மாணவ / மாணவியர் பயனடைந்துள்ளனர்.
- ★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியருக்கான 706 விடுதிகளில் ரூபாய் 10 கோடி செலவில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன.
- ★ 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர் விடுதிகளுக்கு ஈர அரவை இயந்திரம் ஒன்று ரூ.10,000/– வீதம் ரூ.10 இலட்சம் செலவினத்தில் 100 ஈர அரவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ★ ஆதிதிராவிடர் நல விடுதிகளில் ஒரு விடுதிக்கு 15 மின்விசிறிகள் வீதம் 585 விடுதிகளில் மொத்தம் 8,775 மின்விசிறிகள் ரூ.99.45 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன.
- ★ முதுகலைப் பட்டதாரி மாணவர் விடுதிகளில் தங்கிப்படிக்கும் ஆதிதிராவிட மாணவ / மாணவியர் பயனடையும் வகையில் ரூ.94.71 இலட்சம் செலவில் அறைகலன்கள் வழங்கப்பட்டு, 2,706 மாணவ / மாணவியர் பயனடைந்துள்ளனர்.
- ★ 14 அரசு ஆதிதிராவிடர் நலப் பெண்கள் விடுதிகளுக்கு ரூ. 34.06 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது.
- ★ 1,06,055 மாணவ/மாணவியருக்கும் ரூ.1,10,30,000 செலவில் போர்வைகள் வழங்கப்பட்டுள்ளன.
- ★ 2007–2008இல் 25 விடுதிகளுக்கு ரூ..875 இலட்சம் செலவில் புதியதாகக் கட்டடங்கள் கட்ட 25.09.07 அன்று ஆணையிடப்பட்டு கட்டப்படுகின்றன.
- ★ 2007–2008 ஆம் நிதியாண்டில் ரு.187.50 இலட்சம் செலவில் 25 புதிய விடுதிகள் தொடங்கப்பட்டன.
- ★ 2007–2008 ஆம் நிதியாண்டில் விடுதி மாணவர்களுக்கு 10 கோடியே 61 ஆயிரம் ரூபாய் செலவில் உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- ★ 2006–2007, 2007–2008 ஆகிய ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில் ரூ.85.22 இலட்சம் செலவில் கூடுதலாக 2,000 இடங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- ★ 2007–08 ஆம் ஆண்டில் திருவாரூர் நகரில் 50 மாணவியர் தங்கிப் பயில கல்லூரி மாணவியர் விடுதி;
- ★ பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்கென ஒரு விடுதி, மாணவிகளுக்கென ஒரு விடுதி.
- ★ தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்கென ஒரு விடுதியும், மாணவிகளுக்கென ஒரு விடுதியும் கட்ட மாநில அரசின் பங்காக ரூ. 146.70 இலட்சம் வழங்கப்பட்டது.
- ★ 16 அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளிகள் ரூ.35.65 கோடி செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன.
- ★ 2006–2007இல் 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் ரூ.1.77 கோடி செலவில் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன.
- ★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 3.49 கோடி ரூபாய் செலவில் 79 வகுப்பறைகள்; 7 ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. நபார்டு வங்கி உதவியுடன் ரூ. 45.80 கோடி மதிப்பில் உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ★ மூன்றாண்டுகளில் மைய சிறப்பு நிதியாக தாட்கோவிற்கு 3,749.07 கோடி ரூபாய் மற்றும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள்/விடுதிகள் மற்றும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஆதிதிராவிடர் நலத்துறை 407.14 கோடி ரூபாய் வழங்கி மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.
- ★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சட்டப் பட்டதாரிகள் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக சட்டத்தொழில் தொடங்க வழங்கப்படும் ஊக்குதவித் தொகை 2006–2007 முதல் ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 2002–03ஆம் ஆண்டு முதல் 2006–07ஆம் ஆண்டுவரை விண்ணப்பித்தும் நிலுவையிலிருந்த

500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சட்டப் பட்டதாரிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

★ 2007–2008ஆம் ஆண்டிற்கு ரூ.10,000/– வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் நிதி உதவி சிறப்பு மைய நிதியிலிருந்து வழங்க 30.08.2007 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டதுடன், 2008–2009ஆம் ஆண்டிலும் இதே அளவு தொகை வழங்கப்பட்டது.

★ நாட்டிலேயே முதன்முறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்த மைய அரசு வழங்கி வரும் சிறப்பு நிதி உதவியைப் போன்று, ஆண்டுக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் ஒரு சிறப்பு மாநில நிதி உதவித் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துகிறது. மூன்று ஆண்டுகளில் இதுவரை ரூ.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ விமான பணிப்பெண் பயிற்சி, இளைஞர்களுக்கு விமானத்திற்குள் (**Cabin Crew**) பணி செய்யும் பயிற்சி, கட்டுமானத் தொழில் சார்ந்த பயிற்சி, ஆடை வடிவமைப்புப் பயிற்சி, பிளாஸ்டிக் பொருட்கள் பயிற்சி, கணினி மூலம் வடிவமைப்புப் பயிற்சி, காலணி வடிவமைப்புப் பயிற்சி, உணவு தயாரித்தல், உணவு பதப்படுத்துதல், உணவு பரிமாறல், வீடு பராமரித்தல் பயிற்சி, செவிலியர் பயிற்சி, கணினி வன்பொருள் பயிற்சி, சில்லறை விற்பனை மேலாண்மைப் பயிற்சி, இளங்கலைப் பட்டம் பயிற்சி, **BPO Call Centre** பயிற்சி மற்றும் **Medical Transcription** பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன.

★ கொத்தடிமைத் தொழிலாளர் குறித்து மைய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.60 இலட்சம் செலவில் மறு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பகு (**Divisible**) மற்றும் பகா (**indivisible**) இனங்களை அடையாளம் கண்டு, குறைந்தபட்சம் 19% நிதி ஆதிதிராவிடர் நலன்களுக்கும், 1.04% நிதி பழங்குடியினர் நலன்களுக்கும் செலவிடுவதை உறுதி செய்யும் விதமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கண்காணிக்கும் துறையாக (**Nodal Department**) நியமனம் செய்யப்பட்டுள்ளது.

★ மூன்றாண்டுகளில் 2 கோடியே 54 இலட்ச ரூபாய் செலவில் 30 சமுதாயக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ 1,06,230 ஆதிதிராவிட மக்களுக்கு ரூ.10.31 கோடி மதிப்புள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ இ.ஆ.ப., இ.கா.ப. முதல் நிலைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வுக்குச் செல்லும் 100 ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்குத் தலா 25,000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்க ரூ.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் நல விடுதிகளில் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– தொகுப்பூதியம் பெற்று வந்த 112 சமையலர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கியதுடன், மாதமொன்றுக்கு ரூ.70/, ரூ.90/–, ரூ. 100/– மற்றும் ரூ.250/– என வெவ்வேறு தொகுப்பூதியம் பெற்றுக் கொண்டிருந்த 102 சமையல் உதவியாளர்களின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– ஆக உயர்த்தப்பட்டது.

★ 2008–09இல் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு ஆதிதிராவிட/பழங்குடியின மாணவர் 90 விழுக்காடு மதிப்பெண் பெற்றிருந்தால் கூட மருத்துவப் படிப்பிற்கு சேர வாய்ப்பில்லாமல் போகிறது. தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிட / பழங்குடியின மாணவர்கள் அகில இந்திய அளவில் நடத்தப்படும், மருத்துவப் படிப்பு மற்றும் மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான நுழைவுத் தேர்வுகளில் (**All India Entrance Test for MBBS/PG/Diploma Course**) கலந்து கொண்டு தேர்ச்சி பெற்று இந்தியாவில் உள்ள எந்த ஒரு மாநிலத்திலும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் மேற்கண்ட படிப்பைத் (**U.G./P.G.**) தொடர விரும்பினால் இதற்கான செலவினங்கள் அனைத்தையும் அரசே ஏற்கும் திட்டம் 2008–2009இல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ தீண்டாமையை ஒழிப்பதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் 1995ஆம் ஆண்டின் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டின் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை முனைப்புடன் செயல்படுத்தவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவும், "மக்கள் விழிப்புணர்ச்சித் திட்டம்" ஒன்றை 2008–09இல் மத்திய/மாநில அரசுகள் பங்கேற்கும் 50:50 திட்டத்தின் கீழ் ரூ.70 இலட்சம் செலவில், காவல்துறைத் தலைவர் (சமூகநீதி மற்றும் மனித உரிமை) மூலமாக மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுத்தப்பட்டது.

★ 2008–09இல் ஆதிதிராவிட/பழங்குடியினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியருக்கு யோகா (**yoga**) மற்றும் ஆழ்நிலை தியானம் (**Meditation**) போன்ற பயிற்சிகள் "வாழ்க வளமுடன்" மற்றும் "ஈஷா யோகா" போன்ற நிறுவனங்கள் மூலமாக முதற்கட்டமாக 100 விடுதிகளில் செயல்படுத்தப்பட்டது.

## பழங்குடியினர் நலன்

★ அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு மூன்று ஆண்டுகளில் 79 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

★ திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை, குனிகாந்தூர் கிராமம் ஊரக வளர்ச்சி தொண்டு நிறுவனம் நடத்தும் விடுதியில் பயிலும் 200 மாணவ/மாணவியருக்கு உணவு மானியமாக ரூ.4.68 இலட்சமும், விருதுநகர் மாவட்டத்தில் ராம்கோ குரூப் டிரஸ்ட் நடத்தும் உண்டு உறைவிடப் பள்ளியில் பயிலும் 69 விடுதி மாணவர்களுக்கு உணவு மானியமாக ரூ.1.52 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.6.20 இலட்சம் வழங்கப்பட்டது.

★ சேலம் அறுநூத்துமலை, எஸ்.தாதம்பட்டி, கரியகோவில்வளவு, தருமபுரி வாச்சாத்தி, நீலகிரி–கரிக்யூர், திருவண்ணாமலை சு.கீழ்நாச்சிப்பட்டு, ஈரோடு–பர்கூர், திருச்சி–சின்ன இலுப்பூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளிகள் 2,45,30,000 ரூபாய் செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன.

★ ஈரோடு மாவட்டம் ஆசனூர், சேலம் மாவட்டம் கருமாந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம் ஆணைக்கட்டி ஆகிய இடங்களில் இயங்கி வரும் மூன்று அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு 30 இலட்ச ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

★ வாடகைக் கட்டடங்களில் இயங்கும் ஐந்து பழங்குடியின மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் புதிய கட்டடம் ரூ. 2 கோடி செலவில் கட்டுவதற்கு 7.9.2007 அன்று ஆணையிடப்பட்டது.

★ அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 50 ஆசிரியர்கள்/ 50 சமையலர்கள் தங்குவதற்கு வாடகையற்ற தனித் தனி குடியிருப்பு இல்லம் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ 95 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் ரூ.8.55 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

★ திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலைப் பகுதியில் குனிகாந்தூர் கிராமத்தில் பழங்குடியினருக்காக எஸ்.எப்.ஆர்.டி. தொண்டு நிறுவனம் நடத்தி வரும் பள்ளிக்கு கல்வி மானியம் ரூ.57.87 இலட்சம் 2007–08ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்து விடுவிக்கப்பட்டது.

★ 96 இலட்சம் செலவில் ஆசனூர் (ஈரோடு), சித்தேரி (தருமபுரி), முள்ளுக்குறிச்சி, வாழவந்தி நாடு (நாமக்கல்), குஞ்சப்பனை (நீலகிரி) மற்றும் டாப் செங்காட்டுப்பட்டி (திருச்சி) ஆகிய இடங்களில் உள்ள பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்ட ஆணையிடப்பட்டது.

★ 290 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் 37 பழங்குடியினர் நல விடுதிகளுக்கு ரூ.650 வீதத்தில் முதல் உதவிப் பெட்டிகள் வாங்கி வழங்க ரூ.2.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து விடுவிக்கப்பட்டது.

★ 100 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட துவக்கப்பள்ளி மாணவ, மாணவியருக்கு அமரும் பலகைகள் வசதி செய்து கொடுப்பதற்கு ரூ.30.00 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ ரூ.18.66 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி மாணவர் விடுதி, நாமக்கல் மாவட்டம், செங்கரை மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதி ஆகிய இடங்களில் புதிய விடுதிகள் துவக்க ஆணை இடப்பட்டுள்ளது.

★ திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில் குனிகாந்தூர் கிராமத்தில் பழங்குடியினருக்காக எஸ்.எப்.ஆர்.டி. தொண்டு நிறுவனம் நடத்தி வரும் பள்ளிகளுக்கு கல்வி மானியம் ரூ.63.72 இலட்சம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு உணவு மானியம் ரூ.19.80 இலட்சம் 2008–09ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்து விடுவிக்கப்பட்டது.

★ விருதுநகர் மாவட்டத்தில் ராம்கோ குரூப் டிரஸ்ட் நடத்தும் உண்டு உறைவிடப் பள்ளியில் கூடுதலாக சேர்க்கப்பட்ட 36 விடுதி மாணவ, மாணவியருக்கு உணவு மானியத்திற்காக ரூ.3.57 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் ரூ. 50.38 இலட்சம் செலவில் 120 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

★ பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டிற்காக ரூ.30.39 இலட்சம் செலவில் 201 ஆடு அலகுகள் மற்றும் 92 கறவை மாடுகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

★ சேலம் மாவட்டம், ஜருகுமலை பகுதியில் அமைந்துள்ள மேலூர் மற்றும் கீழூர் பழங்குடியின கிராமங்களில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் மின் வசதி அளிப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.27.57 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ திருச்சி, திருவண்ணாமலை, நாமக்கல், வேலூர், விழுப்புரம், தருமபுரி மாவட்டங்களில் 8 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.96 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

★ ஜனஸ்ரீ பீம யோஜனா ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு 80 இலட்ச ரூபாய் விடுவிக்கப்பட்டு, 16,000 பழங்குடியினர் பயன்பெற்றனர்.

★ ரூ.44.57 இலட்சம் செலவில் திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பழங்குடியினருக்கு மொத்தம் 123 தொகுப்பு வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டது. பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் வசதி அளித்தல், தெரு விளக்கு அமைத்தல், சாலைவசதி செய்தல், சிறு பாலங்கள் கட்டுதல், வீடுகள் கட்டுதல், கதிரடிக்கும் தளம் அமைத்தல் மற்றும் சிறு பாசன வசதி செய்தல் ஆகியவற்றிற்காக 2006–2007ஆம் ஆண்டில் திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களுக்கு முதல் தவணையாக மொத்தம் ரூ.144.595 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

★ பழங்குடியினர் பகுதிகளில் தெரு விளக்கு அமைத்தல், சாலை வசதி செய்தல், சிறு பாலங்கள் கட்டுதல், வீடுகள் கட்டுதல் மற்றும் சிறு பாசன வசதி செய்தல் ஆகியவற்றிற்காக 2006–07ஆம் ஆண்டில் திருவண்ணாமலை, சேலம், திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களுக்கு இரண்டாவது தவணையாக மொத்தம் ரூ.106.405 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

★ 2006–2007ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் மற்றும் இதரப் பகுதிகளில் வருவாய் ஈட்டித்தரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.326.97 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ பண்டைய பழங்குடியினருக்கான மைய அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2007–08 ஆம் ஆண்டில் திருவள்ளூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் குடிநீர் வசதி, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வீடுகள் கட்டும் திட்டம், மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் தெருவிளக்கு அமைத்தல் ஆகிய பணிகளுக்காக ரூ. 29.50 இலட்சம் விடுவிக்கப்பட்து.

★ ஈரோடு, வேலூர், தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் சிறுபாசனவசதிக்காக ரூ.139 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், உப்பிலியாபுரம் பஞ்சாயத்து யூனியன் மேல்செங்காட்டுப்பட்டி மற்றும் தென்பரநாடு கிராமத்தில் அருகே உள்ள பச்சமலை ஓடையின் குறுக்கே தடுப்பணை ரூ.4.95 இலட்சம் செலவில் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் 7 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வருவாய் ஈட்டித்தரும் திட்டங்கள் கறவை மாடுகள் மற்றும் ஆடு அலகுகள் வழங்குவதற்காக ரூ.86.55 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ 2006–07ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் ஊக்கத் தொகையாக திருவண்ணாமலை, விழுப்புரம், திருச்சி, வேலூர், நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் செங்கற் சூளை அமைத்தல் மற்றும் கறவை மாடுகள் வழங்குதல் ஆகிய வருவாய் ஈட்டித்தரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.48.55 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ 2005–06ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் ஊக்கத்தொகையாக ரூ.32.71 இலட்சம் தருமபுரி மாவட்டம், அரூர் வனக் கோட்டத்திற்கு பழங்குடியினர் நல திட்டங்களை செயல்படுத்துவதற்கு விடுவிக்கப்பட்டது.

★ பண்டைய பழங்குடியினருக்கான மைய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2007–08, மற்றும் 2008–09 ஆம் ஆண்டுகளில் வீடுகள் கட்டும் திட்டம், ஆடு அலகுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்குதல் மினி பவர் பம்ப், ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.673..074 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ இரண்டு ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கான தொடர் செலவினங்களுக்காகவும், மதுரை, கோவை, திண்டுக்கல், நாமக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களில் வீடுகள் கட்டுவதற்காகவும், சிறு பாலங்கள் அமைத்தல், தெருவிளக்கு வசதி மற்றும் ஏற்கெனவே உள்ள பழங்குடியின உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடங்களை மேம்படுத்துவதற்காகவும் ரூ.143 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ புதுமையான திட்டங்களுக்காக (Innovative Projects) ரூ.46.62 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

- ★ வன உரிமைச் சட்டத்தை செயல்படுத்துவதற்கான செலவினத்திற்காக ரூ28.12 இலட்சம் விடுவிக்கப்பட்டது.
- ★ சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், பச்சைமலையில் சின்னபாக்களம் கிராமத்தில் உள்ள ஓடையின் குறுக்கே ரூ.4.70 இலட்சம் செலவில் சிறு பாலம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.
- ★ 2008–09ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வருவாய் ஈட்டித்தரும் திட்டங்களின்கீழ், கறவை மாடுகள் மற்றும் ஆடு அலகுகள் வழங்குவதற்காக ரூ.325 இலட்சம் விடுவிக்கப்பட்டது.
- ★ நீலகிரியில் வாழும் பழங்குடியினர்களின் நலனுக்காக மலைவாழ் மேம்பாட்டுத் திட்டத்தினை (HADP) செயல்படுத்த 2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.566.84 இலட்சமும் 2007–2008ஆம் ஆண்டிற்கு ரூ.659.55 இலட்சமும் 2008–2009ஆம் ஆண்டிற்கு ரூ.267.50 இலட்சமும் விடுவிக்கப்பட்டுள்ளது.
- ★ பழங்குடியினர் நலப் பகுதிப் பணிகளுக்காக கோவை, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்கொள்வதற்கு ரூ.126.80 இலட்சம் விடுவிக்கப்பட்டது.
- ★ தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் அமைக்கப்பட்டு பழங்குடியினர் மற்றும் அவரது குடும்பத்தை சார்ந்தவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு இரண்டு கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டது.
- ★ தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.
- ★ ஆதிதிராவிடர்களுக்கு இணையாக பழங்குடியினரும், மதம் மாறிய கிருத்தவர்களும் பயனடையும் வகையில் தமிழகத்தில் முதன் முறையாக அரசு 2006–07 ஆம் ஆண்டில் இருந்து ஆண்டொன்றிற்கு ரூ.25 கோடி சிறப்பு மாநில உதவியாக அளித்து வருகிறது. 2006–07 ஆம் ஆண்டில் விமான பணிப்பெண் பயிற்சி, செவிலியர் பட்டயப் படிப்பு, கணினிப் பயிற்சி, உணவுத் தயாரித்தல் பயிற்சி போன்றவை 11,032 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு ரூ. 10 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 8 கோடி மகளிர் குழுத் திட்டங்களுக்காக 13,124 பயனாளிகளுக்காகவும், ரூ. 7 கோடி தனி நபர் கடன் திட்டத்திற்காக 6,183 பயனாளிகளுக்காகவும் செலவிடப் பட்டுள்ளது. 2007–08 ஆம் ஆண்டில் ரூ.25 கோடியில் 20,199 பயனாளிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.
- ★ 2008–09 ஆம் ஆண்டில் ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டு 11,869 பயனாளிகளுக்கு பயிற்சிகளுக்காக 31.03.09 வரையில் ரூ. 13.61 கோடி செலவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து பயிற்சிகள் நடைபெற்று வருகிறது.
- ★ நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் 4,575 பயனாளிகளுக்கு ரூ.15,20,13,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ தனி நபர் கடன் திட்டத்தின் கீழ் 28,946 பயனாளிகளுக்கு ரூ.29,69,50,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார நிதி உதவித் திட்டத்தின் கீழ் 82,472 பயனாளிகளுக்கு ரூ.51,41,13,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ சுயு உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதித் திட்டத்தின் கீழ் 1,43, 440 பயனாளிகளுக்கு ரூ.7,99,39,000 மானியம் வழீங்கப்பட்டுள்ளது.
- ★ மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமைத் திட்டத்தின்கீழ் 10,834 பயனாளிகளுக்கு ரூ.8,24,98,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் (SEPY) 3,465 பயனாளிகளுக்கு ரூ.7,72,56,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ சுய உதவிக் குழுக்களுக்கு செயல் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் 25,436 பயனாளிகளுக்கு ரூ. 46,78,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ இலவச தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் 23,582 இளைஞர்களுக்கு ரூ. 19,24,24,000 மானியம் வழங்கப் பட்டுள்ளது.
- ★ இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1,000 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ இந்தியக் குடிமைப்பணி முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 290 இளைஞர்களுக்கு ரூ. 72,50,000 மானியம் வழங்கப்பட்டது.

- ★ சட்டப் பட்டதாரிகளுக்கு சொந்தமாக சட்டத் தொழில் தொடங்க நிதியுதவித் திட்டத்தின் கீழ் 571 சட்டப் பட்டதாரி களுக்கு ரூ. 57.10 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ என்.எஸ்.எப்.டி.சி திட்டத்தின் கீழ் வாகனம் மற்றும் பிற திட்டங்களுக்கு 2,447 பயனாளிகளுக்கு ரூ. 2.61 கோடியும் 6,302 துப்புரவுப் பணியைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ. 8.68 கோடியும் மற்றும் 4,009 துப்புரவுப் பணியாளர் மற்றும் அவர்களைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ. 3.28 கோடியும் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வகையில் மொத்தம் 3,99,776 பயனாளிகளுக்கு கடந்த 3 ஆண்டுகளில் தாட்கோ நிறுவனத்தின் மூலம் மொத்தம் ரூ.220.47 கோடி மானியம் உதவியாக வழங்கப்பட்டுள்ளது.
- ★ தூய்மைப் பணிபுரிவோர்களுக்காக தனி நலவாரியம் அமைக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ★ தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் 8,160 குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதில் 28,632 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- ★ 2008–09 நிதியாண்டில் 324 நபர்களுக்கு ரூ 5.7 5 இலட்சத்தில் நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ★ 52 ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிக் கட்டடங்கள் ரூ.2,392.78 இலட்சம் செலவில் கட்டப் பட்டுள்ளது.
- ★ 5 பழங்குடியினர் மாணவ/மாணவியர் விடுதிக் கட்டடங்கள் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன.
- ★ ஆதிதிராவிடர் நல உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு 104 கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 379.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ அரசு உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு 11 கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 72.30 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.
- ★ ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 39 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ. 474 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 14 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக் கட்டடங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ. 34.06 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.
- ★ ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ. 102 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 30 சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ. 252 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- ★ மத்திய சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நல குடியிருப்புகளுக்கு கழிவு நீர் வாய்க்கால் மற்றும் கான்கிரீட் சாலை அமைத்தல், ஆதிதிராவிடர் நல விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்தல் போன்ற பணிகளுக்கு ரூ. 108.06 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 585 ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல விடுதி சொந்தக் கட்டடங்களுக்கு மின் விசிறிகள் வாங்கிப் பொருத்தும் பணிக்கு ரூ. 99.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்குப் பராமரிப்புப் பணிகளுக்கு ரூ. 504.06 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 121 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு நபார்டு வங்கிக் கடனுதவியுடன் ரூ. 5,158.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 50 பழங்குடியினர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் மற்றும் சமையலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ. 100 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 249 ஆதிதிராவிடர் நல குடியிருப்புகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு நபார்டு வங்கி கடனுதவியுடன் ரூ. 110.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



# மீன்பிடித் துறைமுகங்கள் மேம்பாடு

**மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்**

**திரு. கே.பி.பி. சாமி அவர்கள்**

★ தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தின் கீழ் 2006–07–ஆம் ஆண்டில் ரூ.2,120.11 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு 1,79,853 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். 2007–2008–ஆம் ஆண்டில் 1,76,017 உறுப்பினர்களுக்கு ரூ.2,083.00 இலட்சமும், 2008–09–ஆம் ஆண்டில் 1,52,280 உறுப்பினர்களுக்கு ரூ1,812.65 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

★ கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 2006–07ஆம் ஆண்டில் 1,02,131 உறுப்பினர்களுக்கு ரூ.1,220.19 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 2007–2008–ஆம் ஆண்டில் 1,05,534 உறுப்பினர்களுக்கு ரூ.1,258.62 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 2008–09 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 11 கடலோர மாவட்டங்களிலுள்ள 1,05,755 உறுப்பினர்களுக்கு ரூ.1,262.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம் – முட்டுக்காடு கிராமத்தில் “தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்” நிறுவுவதற்கான ஆரம்பகட்ட வளர்ச்சிப் பணிக்குரிய செலவினங்களை மேற்கொள்வதற்காக முதற்கட்ட உதவி நிதியாக ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையினை மீன்வளத்துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களிடம் வழங்கினார். மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி, கவிஞர் கனிமொழி,எம்.பி., முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(2–9–2008)

★ 2006–2007–ஆம் ஆண்டில் 5,67,716 மீனவர்களுக்கு மாநில அரசுப் பங்குத் தொகையாக ரூ.39.74 இலட்சம் 10.12.2006 முதல் 09.12.07 வரை காப்பீட்டுக் காலத்திற்கு புதுடெல்லி, தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 62 உறுப்பினர்களுக்கு ரூ.30.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ 2007–2008–ஆம் ஆண்டில் 5,55,744 மீனவர்களுக்கு மாநில அரசுப் பங்குத் தொகையாக ரூ.38.90 இலட்சம் 10.12.2007 முதல் 09.12.08 வரையுள்ள காப்பீட்டுக் காலத்திற்கு புதுடெல்லி, தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 19 உறுப்பினர்களுக்கு ரூ.9.50 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–2009–ஆம் ஆண்டில் 5,54,145 மீனவர்களுக்கு மாநில அரசுப் பங்குத் தொகையாக ரூ.38.79 இலட்சம், 10.12.2008 முதல் 9.12.09 வரையுள்ள காப்பீட்டுக் காலத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

★ 2008–2009–ஆம் ஆண்டு காணாமல் போகும் மீனவர் குடும்பங்களுக்கு நாளொன்றுக்கு ரூ 50/– வீதம் ஒரு மாதத்துக்கு ரூ. 1,500/– வீதம் ரூ. 12 இலட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ. 1.71 இலட்சம் தின உதவித் தொகை மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

★ இலங்கைக் கடற்படையினரால் துப்பாக்கிச் சூட்டில் இறக்க நேரிடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூபாய் ஒரு இலட்சம் நிவாரணத்தொகை ரூ. 3 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஆதரவற்ற நிலையிலிருக்கும் குடும்பங்களுக்கு இத்தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டின்போது சிறு காயமடையும் மீனவர்களுக்கு ரூ.25,000/–மும் படுகாயமடையும் மீனவருக்கு ரூ.50,000/–மும் வழங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டு மரணமடைந்த நிகழ்வில் அம்மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 5 இலட்சமும், வாரிசுகளுக்கு அரசுப் பணியும் வழங்கப்பட்டுள்ளது.

★ மீனவர்களுக்கு 100% வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்கும் திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் 20,200 மீனவர்கள் பயன் பெறுகின்றனர். 25.07.2006 முதல் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மாதம் ஒன்றிற்கு வழங்கப்பட்டுவந்த 1,000 லிட்டர் டீசல் 1,500 லிட்டராக உயர்த்தப்பட்டது. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 250 லிட்டர் வீதம் 12 மாதங்களுக்கு 3,000 லிட்டர் வழங்கப்படுகிறது. உத்தேசமாக ஒரு லிட்டர் டீசலுக்கு ரூ.6.00 குறைவாக மீனவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

★ மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மானியத்திட்டத்தின் கீழ் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.50 வீதம் டீசல் மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகை முழுவதும் மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. 2006–07 ஆம் ஆண்டில் 5,000 மீனவர்களுக்கு அரசு 100% உதவித் தொகையாக ரூ.259 இலட்சமும், 2007–08–ஆம் ஆண்டில் நிதி 1,537 மீனவர்களுக்கு ரூ. 3 கோடியும், 2008–09–ஆம் ஆண்டில் 1,761 மீனவர்களுக்கு ரூ 3 கோடியும் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ மாநில அளவில் 10 ஆம் வகுப்பில் முதல் மதிப்பெண்கள் பெறும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர் மற்றும் மாணவியர்க்கு தலா ரூ. 3,000/–மும், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மீனவ சமுதாயத்தைச்

சேர்ந்த மாணவர் மற்றும் மாணவியர்க்கு ரூ.1,000/–, ரூ. 500/– மற்றும் ரூ. 300/– வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 347 மாணவ, மாணவியருக்கு ரூ. 6,35,400/– ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

★ 2006–2007–ஆம் ஆண்டில் 2,000 வீடுகள் கட்டுவதற்கு ரூ.740 இலட்சம் அரசு ஒப்பளித்துள்ளது.

★ குளச்சலில் மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, இத்திட்டத்திற்கு ரூ.27.10 கோடிக்கு (மாநில அரசு நிதி – ரூ 13.55 கோடி + மத்திய அரசு நிதி – ரூ 13.55 கோடி) ஒப்புதல் வழங்கப்பட்டு, முதற்கட்டமாக அலை தடுப்புச்சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காப்பட்டணம் மீனவ கிராமத்தில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட மத்திய அரசால் திருத்திய நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் மத்திய அரசு இத்திட்டத்திற்கான பங்குத் தொகையாக ரூ. 200 இலட்சம் விடுவித்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழக அரசு திட்டத்திற்காக திருத்திய நிருவாக ஒப்பளிப்பும் மற்றும் முதல் தவணையாக மாநில அரசின் பங்குத்தொகையான ரூ.200 இலட்சத்தையும் சேர்த்து 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது. மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கை மீன்வளத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மாதிரி ஆய்வு, சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீடு (EIA) / சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட (EMP) அறிக்கை ஆகியவைகளை தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையம் (NIOT) சமர்ப்பித்துள்ளது.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் “பூட்“ (BOOT – அதாவது கட்டுமானம், சொந்தமாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல்) முறையின்படி முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம்துறையில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்திட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. முட்டம் துறைமுகத்திற்கு ஒப்பந்தம் இயற்றப்பட்டு துறைமுகத்தில் அலை தடுப்பு சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ ரூ.638 இலட்சத்தில் சென்னை மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்துதல், ரூ.504 இலட்சத்தில் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்துதல், ரூ.100 இலட்சத்தில் நான்கு மாவட்டங்களில் குளிர்தொடர் வசதிகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ சென்னைத் துறைமுக மேலாண்மைக் குழு ரூ.121.60 இலட்சத்தில் கூடுதல் பணிகளான சுற்றுச்சுவர் கட்டுதல், கூடுதல் கழிப்பிட வசதிகள் அமைத்தல், மீன்பிடி உபகரணங்கள் விற்பனை செய்யும் அங்காடிகள் கட்டுதல், மின்சார பணிகள் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது.

★ தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட தூர்வாரும் பணியும், கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் செயற்கைப் பாறை/மீன் உறைவிடம் அமைக்க தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய இரு இடங்களில் ஒவ்வொரு இடத்திற்கும் ரூ.10 இலட்சம் வீதம் ரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2008–09ஆம் ஆண்டில் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் செயற்கை உறைவிடங்கள் அமைக்க ரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ உவர்நீர் வாழ் உயிரின வளர்ப்புத் திட்டத்தின் கீழ், இறால் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக ரூ 88.07 இலட்சம் மானியமாக 236 இறால் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் 1,069 உவர்நீர் இறால்

பண்ணைகளுக்கு, நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்திடமிருந்து பதிவுச் சான்றிதழ் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 2 சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

★ சுனாமி இயற்கைப் பேரிடர் காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களது திறனை உயர்த்திட தீவிரப் பயிற்சி அளித்தல் திட்டத்தில் இதுவரை 13,274 பயனாளிகளுக்கு ரூ.141.35 இலட்சம் பயிற்சிக்காக செலவிடப்பட்டுள்ளது.

★ மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கென தீவிரப் பயிற்சி அளித்தல் திட்டத்தின் கீழ் இதுவரை 4,835 பயனாளிகளுக்கு ரூ.363.16 இலட்சம் பயிற்சிக்காக செலவிடப்பட்டுள்ளது.

★ மேற்கண்ட பயிற்சிகளினால் தற்போது 55 மீனவ சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.42.70 இலட்சம் கடற்பாசி வளர்ப்பு செய்வதற்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் மீன் வளர்ப்போருக்கு ரூ 66.25 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ நீர்வள நிலவளத் திட்டத்தில் 2007–08–ஆம் ஆண்டிற்கு ரூ.313.67 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.143.55 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2008–09 ஆம் ஆண்டிற்கு ரூ.441.66 இலட்சம் ஒதுக்கப்பட்டு ரூ.321.19 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ 2006–2007–ஆம் ஆண்டில் சோலையாறில் பொம்மீன் மீன்பண்ணை அமைக்க ரூ.10 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ 2007–2008ஆம் ஆண்டிற்கு ரூ.20 இலட்சம் செலவில் கடானாவிலுள்ள அரசு மீன்பண்ணையை மேம்படுத்தி நன்னீர் இறால் / அலங்கார மீன் வளர்ப்புத் திட்டமும், விருதுநகர் மாவட்டத்தில் ரூ.2.50 இலட்சத்தில் அலங்கார மீன்வளர்ப்புப் பயிற்சி மற்றும் அலங்கார மீன்வளர்ப்புப் பண்ணை அமைக்க மானியமும் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. வைகை அணையிலுள்ள மீன்பண்ணை பழுது நிவர்த்தி செய்ய ரூ.22.50 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில் வைகை அணையிலுள்ள மீன்பண்ணை பழுது நிவர்த்தி செய்ய ரூ.22.50 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில், தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 7 கோடியே 63 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ 2007–08ஆம் ஆண்டிற்கு கடல்சார் கல்வி பயிலும் 100 மீனவ இளைஞர்களுக்கு உதவும்பொருட்டு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8 கடல்சார் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் இதுவரை 1,66,834 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு 700 குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணத் தொகையாக ரூ.21.44 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ ரூ.110.36 கோடி செலவில் 42,000 மீனவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணி நிறைவடைந்துள்ளது. விளையாட்டு சாதனப் பொருட்கள் ரூ.59.10 இலட்சம் செலவிலும் 47,000 எண்ணிக்கையிலான முதலுதவிப் பெட்டிகள் ரூ. 8.09 கோடி செலவிலும் வழங்கப்பட்டுள்ளன.

★ சுனாமியால் சேதமடைந்த சென்னை மீன்பிடித் துறைமுகத்தினை சீரமைத்து உலகத் தரத்திற்கு இணையாக உயர்த்தும்பொருட்டு சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் ரூ. 19.57 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.



மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி. சாமி அவர்கள் தலைமையில், கடல்சார் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மீனவ இளைஞர்களுக்கு கல்வி உதவித்தொகைகளை வழங்கினார். (19–8–2008)

- ★ சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தினை சீரமைத்தல், கோவளம் கிராமத்தில் குளிர்ப்பதன நிலையம், ஆரோக்கியபுரத்தில் படகு அணையும் (Boat Jetty) மேடை மற்றும் இணையம்புத்தன்துறையில் மீன்பிடி இறங்குதளம் மற்றும் பரங்கிப்பேட்டை கிராமத்தில் மீனவப் பயிற்சி நிலையம் மற்றும் ஆய்வு மையம் ஆகிய பணிகள் மொத்தம் ரூ. 4.525 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ★ சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் திரேசபுரம், பெரியதாழை, இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை, திருநெல்வேலி மாவட்டம் உவரி, விழுப்புரம் மாவட்டம் எக்கியார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம் அண்ணாமலைச்சேரி, எண்ணூர் முகத்துவாரகுப்பம் பெரிய மாங்கோடு, புதுக்கோட்டை மாவட்டம் ஆர். புதுப்பட்டினம், காஞ்சிபுரம் மாவட்டம் கடலூர் பெரியகுப்பம் ஆகிய 10 இடங்களில் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் (தலா ரூ. 5 கோடி) மீன் இறங்கு தளங்கள் அமைப்பதற்கு மத்தியத் திட்டக்குழு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

- ★ 147 முதன்மை மீனவ கூட்டுறவு சங்கங்களின் மூலம் 5,635 மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி மற்றும் வட்டித்தொகையும் சேர்த்து மொத்தம் ரூ.19.56 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

- ★ 2006–2007இல் ரூ. 210 இலட்சம் வழங்கப்பட்டு 1,050 மீனவர்களுக்கும்; 2008–09இல் ரூ. 100 இலட்சம் வழங்கப்பட்டு 500 மீனவர்களுக்கு மானிய விலையில் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ★ தமிழகத்தில் கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 2 இலட்சம் மீனவக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.500 வீதம் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலத்திற்கு நிவாரணம் வழங்கிட 30.05.2008 அன்று ரூ.10.08 கோடி விடுவிக்கப்பட்டு இதுவரையிலும் 1,43,994 மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 719.97 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- ★ தமிழக அரசு உலகத் தரம் வாய்ந்த மீனவர் பயிற்சி நிலையத்தை (Fisheries Institute of Technology and Training) டாட்டா குழுமத்தின் தொழில்நுட்ப உதவியுடன் சென்னைக்கு அருகில் முட்டுக்காட்டில் ரூபாய் ஒரு கோடி நிதியில் ஏற்படுத்தி இதுவரை 1,400 மீனவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- ★ மீன்துறை தலைமை அலுவலகத்தில் இடர்ப்பாடுகள் களையும் மேலாண்மைப் பிரிவு ரூ.6 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



# பால் உற்பத்தி அதிகரிப்பு

**மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்**

**திரு. உ.மதிவாணன் அவர்கள்**

★ 2008–09 ஆம் ஆண்டு பால் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 8,012 ஆகவும், பால் உற்பத்தி நாளொன்றுக்கு 26.50 இலட்சம் லிட்டர் ஆகவும் உயர்ந்துள்ளது.

★ தமிழ்நாட்டில் பாலின் கொள்முதல் விலை 10.03.2008 முதல் 1 லிட்டர் பசும்பாலுக்கு ரூ.2/– கூடுதலாகவும், 1 லிட்டர் எருமைப்பாலுக்கு ரூ.4/– கூடுதலாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இதனால், 8,012 சங்கங்களின் மூலம் 4.11 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

★ பகுதி–2 திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவுச் சங்கங்களின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க, 2007–08 ஆம் ஆண்டில் ரூ.418.00 இலட்சமும், 2008–09இல் ரூ.132.85 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது. இதில் முறையே ரூ.218.00 இலட்சமும், ரூ.110.85 இலட்சமும் அரசு மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்,
ஆவின் புதிய தயாரிப்பான புரோபயோடிக் தயிரை அறிமுகப்படுத்தினார்.
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன்,
தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., மற்றும்
அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.(24–7–2008)

2006–2007–ஆம் ஆண்டில் ரூ.35 இலட்சத்தினை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 510 குடும்பங்கள் பயனடைவார்கள். இத்திட்டத்தின், மொத்த மதிப்பீடு ரூ.1.06 கோடி ஆகும்.

★ 2006–2007இல், நீண்டகாலமாக விற்பனையாகாமல் இருப்பில் இருந்த பட்டு இரகங்கள் ரூ.21.75 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

★ 2006–2007 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ், சாயக்கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யும் இயந்திரம் ரூ.5 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டு, காட்டம்பட்டி நவீன சாய அலகில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

★ 2007–2008இல், நெசவாளர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஊதியத்தில் 25 சதவிகிதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நூற்பாளர்களுக்கு சிட்டத்திற்கு வழங்கப்பட்ட நூற்புக் கூலி தொகையும் ரூ.2/– ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ 2007–2008 பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.4.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 100 தறிகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 400 நெசவாளர் குடும்பத்தினர் பயன் அடைந்துள்ளனர்.

★ 2007–2008ஆம் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8.20 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 30 தறிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 120 நெசவாளர் குடும்பத்தினர் பயன் அடைந்துள்ளனர்.

★ 2007–2008ஆம் ஆண்டில், நீண்ட காலமாக இருப்பில் இருந்த ரூ.35 இலட்சம் மதிப்புடைய கதர் இரகங்கள் மற்றும் ரூ.87.71 இலட்சம் மதிப்புடைய பட்டு இரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

★ 2007–2008ஆம் ஆண்டில், பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் (S.G.S.Y) திட்டத்தின் கீழ் 450 இராட்டைகள் வாங்க ரூ.58 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, இராட்டைகள் கொள்முதல் செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 450 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

★ 2007–2008இல் பகுதி 2 திட்டத்தின் கீழ் 764 இராட்டைகள் பழுது நீக்கம் செய்ய ரூ.30 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இதனால் 764 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

★ 2008–2009 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.4.83 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 15 தறிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 60 நெசவாளர் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர்.

★ 2008–2009இல் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, 20 இராட்டைகள் கொள்முதல் செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 20 நூற்பாளர் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

★ வாரியத்தின் நிதிநிலை கருதி தமிழக அரசு ரூ.8 கோடி வங்கி கடன் பெற அனுமதி அளித்துள்ளது. இதன் மூலம் கதர் மற்றும் கிராமப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துள்ளது.

**தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்**

★ பகுதி–2 திட்டத்தின் கீழ் 2006–2007 ஆம் ஆண்டு பனைத் தொழிலாளர்களுக்கு இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்க மானியமாக ரூ.20 இலட்சமும், 2007–08இல் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கிடவும் பதநீர் பிரிவில் பாலீதின் பேக்கிங் இயந்திரம், பதநீர் குளிர் பதன இயந்திரம் மற்றும் இதர உபகரணங்கள் வழங்க மானியமாக ரூ.8.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் பட்டுப்போன பனை மரங்களுக்கும் மற்றும் பனைவிதை நடவு செய்திட நிவாரணம் அளிக்க ரூ.42,33,500/– அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ பனைத் தொழிலாளர்களுக்கு பனைமரம், ஈச்சமரம் மற்றும் தென்னை மரங்களிலிருந்து பதநீரை இறக்கவும், விற்கவும், இடம் பெயர்த்து எடுத்துச்செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் உற்பத்தி செய்யவும், 2007–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் 2009 டிசம்பர்த் திங்கள் முடிய மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ், பாளையங்கோட்டை பதநீர் பிரிவிற்கு பதநீர் குளிரூட்டும் இயந்திரம் மற்றும் பாலிதீன் பேக்கிங் மற்றும் இதர உபகரணங்கள் வழங்க, ரூ.21.50 இலட்சம் மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ 2008–2009ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ், 3747 பனைத் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்கி கருப்பட்டி தயாரிப்பதற்கு இலவசமாக கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க மானியமாக, தலா ரூ.4,000/– வீதம் ரூ.1.50 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**பட்டு வளர்ச்சித்துறை**

★ பட்டு முட்டை உற்பத்தியில் இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் (2006–07, 2007–08 மற்றும் 2008–09) 184.525 இலட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் (2003–04, 2004–05 மற்றும் 2005–06) உற்பத்தியைக் காட்டிலும் 101.474 இலட்சம் முட்டைகள் அதிகமாகும். சாதனை உயர்வு 122%.

★ பட்டு முட்டை வளர்ப்பில் இந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 432.041 இலட்சம் முட்டைகள் வளர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளைக் காட்டிலும் 253.124 இலட்சம் முட்டைகள் அதிகமாகும். சாதனை உயர்வு 141% ஆகும்.

★ பட்டுக்கூடு அறுவடையில் இந்த மூன்று ஆண்டுகளில் 27,556.10 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுளின் அறுவடையைக் காட்டிலும் சுமார் 17,106.10 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 164% ஆகும்.

★ கச்சாப் பட்டு நூல் உற்பத்தியில் இந்த மூன்று ஆண்டுகளில் 3,903.30 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் உற்பத்தியைக் காட்டிலும் சுமார் 2,436.30

மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 166% ஆகும். இதில் வெண்பட்டு நூல் உற்பத்தி மூன்று ஆண்டுகளில் மட்டும் 994.95 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் உற்பத்தியைக் காட்டிலும் சுமார் 738.25 மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு 288% ஆகும்.

★ கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் மூன்று ஆண்டுகளில் மட்டும் **1,54,155** நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளை விடவும் **1,26,395** நபர்கள் அதிகமாகும். சாதனை உயர்வு **455%** ஆகும்.

★ அரசு பட்டுக் கூடு அங்காடிகளின் வர்த்தகம் மூன்று ஆண்டுகளில் சுமார் **9,336.80** மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் வர்த்தகத்தைக் காட்டிலும் **3,514.90** மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு **60.4%** ஆகும்.

★ காஞ்சிபுரம் அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் பட்டு நூல் வர்த்தகம், மூன்று ஆண்டுகளில் **464.50** மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் வர்த்தகத்தைக் காட்டிலும் சுமார் **131.50** மெட்ரிக் டன் அதிகமாகும். சாதனை உயர்வு **39.5%** ஆகும்.

★ டான்சில்க் காஞ்சிபுரத்தின் பட்டு நூல் வர்த்தகம் மூன்று ஆண்டுகளில் **1,325.23** மெட்ரிக் டன் ஆக அதிகரித்துள்ளது. இது, அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் வர்த்தகத்தை விடவும் **376.23** மெட்ரிக் டன் அதிகம் ஆகும். சாதனை உயர்வு **40%** ஆகும்.

★ ஒரு ஏக்கருக்கு பட்டுக்கூடு அறுவடை அளவு, மூன்று ஆண்டுகளில் **1,317.138** கிகி என கணிசமான அளவு உயர்ந்துள்ளது. அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் **777.635** கிலோ மட்டுமே. மூன்று ஆண்டுகளில் சாதனை உயர்வு **539.493** கிலோ **(169 %** உயர்வு**)**.

★ மூன்று ஆண்டுகளில் ரூ.**3,860.06** இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் **29,013** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் **12,349** பயனாளிகளுக்கு ரூ.**779.11** இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மட்டுமே வழங்கப்பட்டன. இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் கூடுதலாக ரூ.**3,080.952** இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் **16,664** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

# தமிழரசு

R.N.I.No.21446/70 Regn.No.TN/ARD/48/09
& WPP No.TN/PMG(CCR)518/09-11



தமிழரசு
அலுவலகப் பிரதி



# மக்கள் வாழ்வில் வளம் சேர்த்திட மகத்தான பணிகள்!



தமிழரசு
அலுவலகப் பிரதி

# மக்கள் வாழ்வில் வளம் சேர்த்திட மகத்தான பணிகள்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29.06.2009 அன்று,
உள்ளாட்சித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை
மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை:

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

சிறப்பு வெளியீடு எண்.23

**தமிழரசு** இலவச வெளியீடு

ஜூலை 2009

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

# மக்கள் வாழ்வில் வளம் சேர்த்திட மகத்தான பணிகள்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **29.06.2009** அன்று,
உள்ளாட்சித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை
மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை:

எந்தவொரு நல்ல காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பு இந்துக்களின் எண்ணத்தில் எழுந்திடும் ஒரே சொல் "ஓம்" என்பதாகும். கிறிஸ்தவர்களின் சிந்தனையில் தோன்றிடும் ஒரே சொல் "ஏசு" என்பதாகும். முஸ்லிம்களின் இதயத்தில் முகிழ்த்திடும் ஒரே சொல் "அல்லா" என்பதாகும். என்னைப் போன்ற திராவிட இயக்கத்தவர்களின் எண்ணத்தில் என்றைக்கும் உதயமாகும் ஒரே சொல், "கலைஞர்" என்பதாகும். அந்த ஒரு சொல் சரித்திரமாம் தலைவர் கலைஞர் அவர்களையும், உயர்திரு பேராசிரியர் பெருந்தகை அவர்களையும் வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

கடந்த **26.6.2009** அன்று இந்த மானியக் கோரிக்கை மீது விவாதத்திலே பங்குபெற்று உரையாற்றியிருக்கக்கூடிய, ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் தா.உதயசூரியன், சிவசங்கர், அ.தி.மு.க.வைச் சார்ந்த ஆர்.சாமி, வேலுமணி, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அமரமூர்த்தி, ஜெயபால், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சார்ந்த செல்வி பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சார்ந்த குணசேகரன்,

ம.தி.மு.க.வைச் சார்ந்த டாக்டர் சதன் திருமலைக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த ரவிக்குமார், தொடர்ந்து இன்று இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றி இருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த வேல்முருகன், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த அம்மையார் திருமதி யசோதா, காந்தி, தங்கமணி ஆகியோர் சிறப்பான வகையில் தங்களுடைய கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்து வைத்து, இந்தத் துறைக்குச் சில அறிவுரைகளை, ஆலோசனைகளை இன்னும் ஊக்கத்தோடு செயல்பட வேண்டுமென்ற அந்த உணர்வோடு தங்களுடைய எண்ணங்களை இங்கே பிரதிபலித்திருக்கிறார்கள். அதற்காக நான் முதலில் அவர்களுக்கெல்லாம் இந்தத் துறையின் சார்பிலே நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

**சாதனைகள்**

கடந்த 3 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள், நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள், வழங்கப் பட்டிருக்கக்கூடிய நலத் திட்ட உதவிகள் அனைத்தும் அணி அணியாய் வந்து என் நினைவுகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. தேர்வுகள் எழுதி முடிவுகள் வெளியானதற்குப் பின்னர் தான்பெற்ற நல்ல மதிப்பெண்கள் பட்டியலைத் தனது பெற்றோரிடமும், உற்றார் உறவினர்களிடத்திலும், நண்பர்களிடத்திலும் காட்டி மகிழ்ந்து கொண்டிருக்கும் மாணவன் நிலையில் இந்த மாமன்றத்தில் இப்பொழுது நான் நின்று கொண்டிருக்கின்றேன்.

மாண்பமைந்த இந்தப் பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிருவாகம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய சார்பில் நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள் சிலவற்றை நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

தமிழகத்தின் பட்டி, தொட்டிகள், குக்கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என அனைத்துப் பகுதிகளினுடைய

உள்ளூர் நிருவாகம்; அங்கே செயல்படுத்தப்படக்கூடிய மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் வளர்ச்சித் திட்டங்கள்; இவற்றையெல்லாம் நிறைவேற்றுகின்ற ஒரு சிறப்பான பொறுப்பு – ஒரு மாபெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இந்தத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிருவாகம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய மானியக் கோரிக்கையை **4**–ஆவது முறையாக இந்த அவையிலே தாக்கல் செய்து, குறிப்பாக **2009 – 2010**–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைமீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திற்கு இப்போது பதில் தருகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

## வளர்ச்சிப்பணிகளில் தமிழகம் முன்னிலை

இந்தியாவில் **28** மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஊராட்சி நிருவாகம் அமைந்திருக்கிறது. செயல்திறன், வளர்ச்சிப் பணிகள், நிதிப் பகிர்வு, அதிகாரப் பகிர்வு பற்றி தேசிய அளவிலே அமைந்திருக் கக்கூடிய National Council for Applied Economic Research என்கிற பொருளாதார கணிப்பாய்வுக் கழகத்தில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டிருக்கிறது; அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்; தமிழ்நாடு தொடர்ந்து **3** வருடங்களாக முதல் **4** மாநிலங்களில் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது என்று; அதாவது, **2006 – 07**–ஆம் ஆண்டில் **4**ஆவது இடத்திலும்; **2007 – 08**–ஆம் ஆண்டிலே முதலிடத்திலும்; **2008 – 09**–ஆம் ஆண்டிலே **3**ஆவது இடத்திலும் தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்காக, மத்திய அரசு இந்தத் துறைக்கு ஒரு கோடியே **50** இலட்ச ரூபாயைப் பரிசாக வழங்கியிருக்கிறது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்ல; மத்திய அரசினுடைய 13ஆவது நிதி ஆணையத்தினுடைய தலைவர் டாக்டர் விஜய் கேல்கர் அவர்கள், உலகளவிலே ஒரு சிறந்த பொருளாதார நிபுணராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர்; மத்திய நிதித் துறையினுடைய முன்னாள் செயலராக இருந்து திறம்படப் பணியாற்றியிருக்கக்கூடியவர். அவர் 4.6.2009 அன்று சென்னையிலே நடைபெற்ற 13ஆவது நிதி ஆணையக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அப்போது அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அவர் பேசுகிறபோது, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பாராட்டியிருக்கிறார். குறிப்பாக, மனித வள மேம்பாடு சிறப்பாக உள்ளது; கல்வி அறிவு சத விகிதம் உயர்ந்திருக்கிறது; மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது; சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அதிக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது; சிறப்பான நிருவாகத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது; வளர்ச்சிப் பணியிலே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் அப்போது அவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அது மட்டுமல்ல, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே செயல்படுத்தப்படக்கூடிய தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பற்றி அவர் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது “Tamil Nadu has implemented NREGP very successfully. it is commendable that 3 districts from Tamil Nadu were top of the 22 districts, selected all over the country to receive the award of excellence in NREGA, this year. This reflects the strength and responsiveness of the Gram Panchayats in the State. Tamil Nadu has always been a role model, whose action has been replicated all over the country.” என்று குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார். அதாவது, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப்

பொறுத்தவரையில் இந்திய அளவிலே 22 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

## முன்னோடி மாநிலம்

அதிலே குறிப்பாக தமிழகத்திற்கு மாத்திரம் 3 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு அவை விருதுகளைப் பெற்றிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அதைக் குறிப்பிட்டுச் சொல்லி, அவர் மேலும் குறிப்பிடுகிறார்: தமிழக கிராம ஊராட்சிகளின் வலிமையையும், திறமையையும் இது சுட்டிக்காட்டுகிறது; தமிழ்நாடு மற்ற மாநிலங்களெல்லாம் பின்பற்றப்படவேண்டிய முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அடுத்து, கிராம ஊராட்சியினுடைய சிறப்பான வெளிப்பாட்டிற்கு, அதனுடைய செயல்பாட்டிற்கு நான் ஒரு சான்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசினுடைய முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் தூய்மையான கிராமங்களை, ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து அதற்காகத் தொடர்ந்து "நிர்மல் கிராம புரஸ்கார் விருது" தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நிர்மல் கிராம புரஸ்கார் விருதினை 2004 – 05–ஆம் ஆண்டு 12 ஊராட்சிகள் பெற்றிருக்கின்றன; 2005 – 06–ஆம் ஆண்டு 119 ஊராட்சிகள் அந்த விருதினைப் பெற்றிருக்கின்றன; 2006 – 07–ஆம் ஆண்டு 296 ஊராட்சிகள் அந்த விருதினைப் பெற்றிருக்கின்றன. 2007 – 08–ஆம் ஆண்டில் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்; 1,474 கிராம ஊராட்சிகள் அந்த விருதினைப் பெற்றிருக்கின்றன. இந்திய அளவிலே தமிழ்நாடு இரண்டாவது இடம்; முதல் இடம் மகாராஷ்டிரம். இந்தியா முழுமைக்கும் இதைக் கணக்கெடுத்துப் பார்த்தால், மொத்த விருதுகள் 6,930

வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 1,474 விருதுகளைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்று சொன்னால், இது ஒரு மிகப் பெரிய சாதனை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அந்த சாதனையின் தொடர்ச்சியாக இன்னொன்று பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி; இந் நிதியைப் பொறுத்தவரையில் தமிழகத்திற்கு ஆண்டிற்கு ரூ.114 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது. அதாவது, தமிழகத்திலே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 39; ராஜ்ய சபா அதாவது மாநிலங்களவை உறுப்பினர் 18; ஆக, 57 நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியின் அடிப்படையிலே ஓராண்டிற்கு, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.2 கோடி என்று கணக்கிட்டால் ரூ.114 கோடி. இதை ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு ஒதுக்குகிறது. ஆக இந்த நிதியைத் தொடர்ந்து நாம் பார்ப்போம் என்று சொன்னால் 1993 முதல் இந்த நிதியைப் பயன்படுத்துவதிலே முதல் இடம், இந்தியாவிலே நம்முடைய தமிழ்நாடுதான் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு, இந்தத் துறைதான் காரணம் என்பதையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதாவது, 99 சதவிகித நிதியை முழுமையாக இந்தத் திட்டத்திற்காக நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் திட்டம். இது 2000 ஆவது ஆண்டிலே தொடங்கி வைக்கப்பட்டது. குறிப்பாக, தமிழ்நாட்டிலே காஞ்சிபுரம் மாவட்டத்திலேதான் இந்தத் திட்டம் முதன் முதலில் தொடங்கப்பட்டது. 2000–ஆம் ஆண்டு முதல் 2006–ஆம் ஆண்டு வரையில் 6 ஆண்டு காலம் இந்தத் திட்டத்திற்காக ரூ.713 கோடியை நாம் பெற்றிருக்கிறோம். 2006 தி.மு.க. ஆட்சி வந்த இந்த மூன்று ஆண்டு காலத்தில் 2009– ஆம் ஆண்டு வரையில் இந்தத் திட்டத்திற்காக 1,325 கோடி ரூபாயை நிதியாக நாம் பெற்றிருக்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து, தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கக் கூடிய பெரியார் நினைவு சமத்துவபுரத்திட்டம். இந்தத் திட்டம் முதன் முதலில் 1997–இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினுடைய நோக்கம், தந்தை பெரியார் கண்ட கனவை நிறைவேற்றிட வேண்டும். ஒருவனைப் பார்த்து, "நீ யார்" என்று கேட்டால், எத்தனை பேர், "தமிழன்" என்று சொல்கிறோம். "முதலியார்" என்றோ, "யாதவர்" என்றோ, "பிராமணர்" என்றோ, "வன்னியர்" என்றோ, "தேவர்" என்றோ, "நாயுடு" என்றோ, "செட்டியார்" என்றோதான் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாற வேண்டும்; நாம் ஒவ்வொரு வரும், "தமிழன்" என்று சொல்லக்கூடிய ஒரு நிலை, இந்த நாட்டிலே வந்தாக வேண்டும்; இதுதான் தந்தை பெரியார் கண்ட கனவாகும்.

## பெரியார் நினைவு சமத்துவபுரம்

ஜாதியைப் பற்றிக்கூட நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அடிக்கடி ஒரு மேற்கோளைக் காட்டிக் குறிப்பிட்டுச் சொல்வார். அதாவது, அத்தி மரத்திலே உச்சியிலோ, கிளையிலோ, அடிமரத்திலோ, காய்கள் காய்க்கும்; அப்படி காய்க்கக்கூடிய காய்களை அத்திக்காய் என்றுதான் சொல்கிறோம். அடி மரத்தில் காய்ப்பதை பறங்கிக் காய் என்றோ, கிளையில் காய்ப்பதை புடலங்காய் என்றோ, உச்சியில் காய்ப்பதை வெண்டைக்காய் என்றோ நாம் சொல்வது கிடையாது. மேல் சாதி, கீழ் சாதி கூடாது. சாதி ஒழிக என்று சொன்னால் மட்டும் போதாது; சாதி என்பது சதியின் காரணமாக, அந்தச் சதிக்குக் கால் முளைத்து, அது சாதியாக மாறியது.

அதுமட்டுமல்ல, "சாதி என்ற அந்த எழுத்துக்குக் கடைசி எழுத்தாக அமைந்துள்ள 'தி' என்ற எழுத்துக்கு கொம்பு முளைத்து, அது 'தீ' ஆக

மாறியது; அந்தத் தீயை அணைக்க வேண்டிய பொறுப்பு, நம் ஒவ்வொருவருக்கும் உண்டு'' என்று நம்முடைய முதல்வர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவது உண்டு. எனவே, அனைத்து இனத்தைச் சார்ந்தவர்களும், ஒற்றுமை உணர்வோடு, ஒருமித்த கருத்தோடு ஒன்றாக வாழ வேண்டுமென்பதற்காகத்தான் தந்தை பெரியார் பெயரில் 1997–ஆம் ஆண்டு சமத்துவபுரத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 2001–ஆம் ஆண்டு வரையிலே நாம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலகட்டம் வரையிலே 145 சமத்துவபுரங்கள் அப்பொழுது உருவாக்கப்பட்டன. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பிலே போட்டுவிட்டார்கள். கிடப்பிலே போட்டது மட்டுமல்ல அந்தச் சமத்துவபுரத்தைப் பராமரிக்கின்ற, பழுதுபார்க்கின்ற பணியினைக்கூட அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அதற்காகத்தான் 2006–லே மீண்டும் கலைஞர் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு முதல் பணியாக, சமத்துவபுரத்தைப் பராமரிக்கின்ற அந்தப் பணிக்காக 14.50 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, அந்தப் பழுதுபார்க்கின்ற பணிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்துதான், கடந்த 2008–ஆம் ஆண்டில் ஆளுநர் உரை இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்ட போது மீண்டும் தமிழகத்திலே சமத்துவபுரம் உருவாக்கப்படும். தந்தை பெரியார் வயது 95. அவருடைய வயதைக் குறிக்கக்கூடிய வகையில் 95 இடங்களில் சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்து, சமத்துவபுரங்கள் அமைக்கப்படுவது மட்டுமல்ல, அமைக்கப்படக்கூடிய சமத்துவபுரங்கள் அனைத்திலும் தந்தை பெரியார் அவர்களின் சிலையும் அமைக்கப்படும் என்று அறிவித்து, இந்த 95 இடங்களில் மட்டுமல்ல ஏற்கெனவே இருக்கக்கூடிய 145 இடங்களிலும் தந்தை பெரியார் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்குப்பிறகு 2008 – 09–ஆம் ஆண்டிலே 29 சமத்துவபுரங்களைக்

கட்ட முடிவெடுத்து, அதன் முதல் சமத்துவபுரத்தை வீடியோ கான்பிரன்சிங் மூலமாக நம்முடைய முதல்வர் அவர்கள் திறந்து வைத்தது, உங்களுக்கெல்லாம் தெரியும். திருச்சியிலே 14.6.2009 அன்று அது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து 28 சமத்துவபுரங்கள் இன்னும் 2 அல்லது 3 மாத காலத்திற்குள் அவைகளும் முடிக்கப்பெற்று அவைகளும் விரைவிலே திறந்து வைக்கப்பட இருக்கின்றன. வரக்கூடிய நடப்பாண்டில், 2009 – 2010–ஆம் ஆண்டில், மேலும், 30 சமத்துவபுரங்களைக் கட்டுவதற்கு 75 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**பள்ளிகள் சீரமைப்பு**

அதேபோல், ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகக் கட்டப்பட்டிருக்கக் கூடிய தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள்; இந்தப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பார்த்தால் பழுதடைந்த நிலையில்தான், பராமரிப்பு இல்லாத நிலையில்தான் அவை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றைச் சீரமைக்க வேண்டுமென்று முடிவு செய்து, இந்தத் துறையின் சார்பிலே கடந்த ஆண்டு 2007– 08–ஆம்ஆண்டு, அதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கி அறிவித்தோம்; நம்முடைய பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக ஒரு கணக்கெடுப்பு நடத்தினோம்; அந்த எண்ணிக்கையைக் கணக்கெடுத்தோம். அந்தக் கணக்கெடுத்தபோது தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் 22,000 பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 4,500 பள்ளிகளும், மொத்தம் 26,500 பள்ளிகள் பராமரிப்பின்றி, பழுதான நிலையில் இருந்ததைக் கணக்கெடுத்து; அவற்றில் முதல்கட்டமாக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எங்கெல்லாம்

நிறைவேற்றப்படுகிறதோ, அங்கு முதல்கட்டமாக அந்தப்பணியை எடுத்துக் கொண்டு, அந்தப் பணியிலே ஈடுபட்டோம்.

2006 – 07, 2007 – 08–ஆம் ஆண்டுகளில் 10,248 பள்ளிகளைச் சீரமைக்க 135 கோடி ரூபாய், அதற்காகச் செலவு செய்திருக்கிறோம். கடந்த ஆண்டு 2008 – 09–லே 4,439 பள்ளிகளைச் சீரமைக்க; பேரூராட்சியில் இருக்கக்கூடிய 460 பள்ளிகளையும் சேர்த்து அந்தப் பள்ளிகளைச் சீரமைக்க முடிவு செய்து, அதற்காக 69 கோடியே 36 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதிலே 3,935 பள்ளிகளை முழுமையாகச் சீரமைத்திருக்கிறோம். மீதம் இருக்கக்கூடிய பணிகள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. நடப்பு ஆண்டில், இந்தத் திட்டத்திற்காக மேலும் 85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன் – பள்ளிகள் தொடங்கப்பட்டு, இதுவரையில் சீரமைக்கின்ற பணியிலே எந்த ஆட்சியிலும், யாரும் ஈடுபடவில்லை. இப்படிச் சீரமைக்கின்ற பணியில் ஈடுபட்ட ஒரே ஆட்சி, கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த ஆட்சிதான் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

அடுத்து, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இது 2006–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்ட திட்டம். அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று சொன்னால், இங்கேகூட உரையாற்றியவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றீர்கள். தமிழகத்திலே 12,620 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. கிராம ஊராட்சிகளிலே இருக்கக்கூடிய அடிப்படைப் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்த்து வைக்க வேண்டும்; ஐந்தாண்டு காலத்தில், அந்தப் பணியை நிறைவேற்றிட வேண்டுமென்று

முடிவெடுத்து, ஒரு வருடத்திற்கு 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்து இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு, ஒரு வருடத்திற்குச் சராசரியாக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக 2,524 கோடி ரூபாயைச் செலவு செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்து, அந்தப் பணிகளில் இறங்கினோம். கடந்த 3 ஆண்டு காலத்திலே 7,594 கிராம ஊராட்சிகளுக்கு 1,534 கோடி ரூபாயைச் செலவு செய்து 1,80,567 பணிகளை ஏற்றுக் கொண்டு, அவற்றிலே 1,05,923 பணிகளை நாம் முழுவதுமாகச் செய்து முடித்திருக்கிறோம். மீதமிருக்கக்கூடிய 3,500 பணிகள் இப்போது செயல்பாட்டிலே உள்ளன; அவைகளெல்லாம் விரைவாக முடிக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையிலே அந்தப் பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. வரக்கூடிய நடப்பாண்டிலேகூட 2009 – 2010–லே 2,511 கிராம ஊரட்சிகளுக்காக 507 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் பெருமையோடு தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால், கிராம ஊராட்சிகளில் இருக்கக்கூடிய அடிப்படைப் பிரச்சினைகள், சாலை வசதிகள், சிமெண்ட் சாலைகள், தெரு விளக்குகள், நூல் நிலையங்கள், விளையாட்டுத்திடல்கள், மயானங்கள் இதுபோன்ற அடிப்படைப் பிரச்சினைகளைத்தீர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, இது சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் இங்கே பெருமையோடு மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன்; வரக்கூடிய ஐந்தாண்டு காலத்திற்குள்ளாகத் தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா கிராம ஊராட்சிகளிலும் இருக்கக்கூடிய – எல்லா அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு மாநிலமாக இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாடு முதலிடத்தைப் பெறவிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



தமிழரசு
அலுவலகப் பிரதி

## குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த நடவடிக்கை

அடுத்து, தேசிய வேலை உறுதித் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தவிதமான முறைகேடுகளுக்கும் இடம் தந்துவிடாமல், ஏழையெளிய மக்கள் பயன்படக்கூடிய வகையிலே ஒரு சிறப்பான திட்டமாக மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று, மாநில அரசும் அதனுடைய பங்கைச் செலுத்தி இந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்திய அளவிலே இருக்கக்கூடிய மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதும், எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1,958 கோடி ரூபாய் இதுவரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. தினசரி ஊதியமாக 80 ரூபாய்வரை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இங்கே உரையாற்றிய செல்வி பாலபாரதி கூட பேசுகிறபோது குறிப்பிட்டார்; அதேபோல மற்ற உறுப்பினர்களும் இங்கே பேசுகிறபோது இந்த ஊதியத்தைக்கூட உயர்த்திட வேண்டுமென்று அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இங்கே எடுத்துப் பேசியிருக்கிறீர்கள். எனவே குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அடிப்படையிலே 80 ரூபாய் என்று வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்த நிலையைக்கூட மாற்றி 100 ரூபாய் என்று உயர்த்துவதற்குரிய நடவடிக்கையை இந்தத் துறை எடுத்திருக்கிறது என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 100 நாட்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த வேலைவாய்ப்பைக்கூட அதை 150 நாட்களாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கைகளும் இங்கே எடுத்து வைக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கை இங்கு மட்டுமல்ல; நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய

தேர்தல் அறிக்கையிலேகூட அது இடம் பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் கடந்த **23.6.2009** அன்று நம்முடைய முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு இது சம்பந்தமாக ஒரு கடிதத்தைக்கூட எழுதியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மகளிர் சுய உதவிக் குழுக்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுவைப் பொறுத்தவரைக்கும் **1989**ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திலே தான் இந்தத் திட்டம் முதன் முதலில் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போதே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சுய உதவிக் குழுத் திட்டம் என்பது, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ்ந்திட வேண்டும். யாருடைய தயவையும் எதிர்நோக்காமல், அவரவர்கள் தங்களுடைய சொந்தக் காலில் நிற்கக் கூடிய அந்தச் சூழ்நிலையை அவர்கள் பெற்றாக வேண்டும். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய வட்டாரங்களில் அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப சிறு சிறு தொழில்களை அவர்கள் செய்து கொண்டு அவர்கள் வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வேண்டும்; இதற்கு நிதி தேவை. இந்த நிதியைக் குறைந்த வட்டியில் வங்கிகளிடமிருந்து பெற வேண்டும்; அதற்காகத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. **1989**–லே தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் படிப்படியாக வளர்ந்து, பரந்து, விரிந்து, இன்றைக்குக் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் இதுவரையில் அமைந்திருக்கக் கூடிய மொத்தக் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டால் **3,91,972** குழுக்கள்.

**தமிழகத்திற்குப் பெருமை**

இதிலே இடம் பெற்றிருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை **63** இலட்சம். **63** இலட்சம் பேர்கள் இதில் உறுப்பினர்களாக இடம்

பெற்றிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த 2006–லிருந்து 3 ஆண்டு காலத்திலே உருவாகியிருக்கின்ற குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டால் 75,493 குழுக்கள் உருவாகியிருக்கின்றன. இதில் இடம்பெற்றிருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,27,886 மகளிர்கள் இதிலே உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள்; குழுக்கள் அமைப்பது மட்டும் நோக்கமல்ல. அமைக்கப்படக் கூடிய அந்தக் குழுக்களுக்குத் தேவைப்படக் கூடிய கடனை வங்கிகளிலிருந்து பெற்றுத் தருவதற்கான அந்தச் சிறப்பான முயற்சியை இந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு உதாரணத்தைக் கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். 1989 முதல் மார்ச் 2008 வரை – அதாவது கடந்த 19 ஆண்டு காலத்தில் இந்த சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடனைப் பொறுத்தவரையில் கணக்கெடுத்துப் பார்த்தால் 3,163 கோடியே 39 இலட்சம் ரூபாய். நான் சொல்வது 19 ஆண்டுகால வரலாற்றில் 3,163 கோடியே 39 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போது நான் சொல்லவிருப்பது 2008 – 2009ஆம் ஆண்டில் மட்டும் இந்தத் துறையினுடைய முயற்சியின் காரணமாக 2,174 கோடியே 57 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, 2008 – 2009ஆம் ஆண்டில் கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எவ்வளவு என்று கேட்டால் 1,600 கோடி ரூபாய். ஆனால், சாதனை அளவாக வழங்கப்பட்டுள்ள கடன் 2,174 கோடி ரூபாய். மாவட்ட வாரியாக நானே நேரடியாகச் சென்று, எல்லாக் குழுவினருக்கும் வழங்கினேன் என்பது இங்கிருக்கக் கூடிய பல உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். அது, ஆயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, இரண்டாயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, நான்காயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, ஐந்தாயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு நேரம்

அதற்காகத் தாமதம் ஆனாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் அதை வழங்கினோம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இந்த சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் ஒரு சிறப்புக்குரிய செய்தி என்னவென்று கேட்டால், இன்றைக்கு வங்கிகளிலிருந்து வாங்கியிருக்கின்ற கடனைக்கூட வட்டியோடு திருப்பிச் செலுத்தியதிலே முதல் மாநிலமாக இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஏறக்குறைய **99** சதவீதம் இன்றைக்குத் திருப்பி வங்கியிலே செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ மகளிருக்குக் கிடைத்திருக்கின்ற பெருமை மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக நம்முடைய தமிழகத்திற்கே கிடைத்திருக்கக்கூடிய பெருமையாகத்தான் நாம் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

**பெருமைக்குரிய சாதனை**

அடுத்து நகராட்சி நிர்வாகத்தைப் பற்றிச் சில செய்திகளை நான் இந்த அவையிலே உங்களிடத்திலே எடுத்துவைக்க விரும்புகிறேன். நகராட்சி நிர்வாகம் என்பது உள்ளாட்சி நிர்வாகத்தினுடைய ஒரு கண்ணாக ஊரக வளர்ச்சி விளங்கிக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால்; இன்னொரு கண்ணாக நகராட்சி அமைப்பு விளங்கிக் கொண்டிருக்கின்றது. கிராமங்கள் பேரூராகவும், பேரூர்கள் நகரமாகவும், நகரம் மாநகராட்சிகளாகவும் மேம்படும் என்று சொல்லக்கூடிய அந்த நிலைதான் – உன்னதமான வளர்ச்சியை நாம் பெற்றிட முடியும். அந்த வகையிலே, கடந்த மூன்று ஆண்டுகளில் ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய நான்கு நகராட்சிகள் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் வளர்ச்சிப் பணிகள் இன்றைக்குச் சிறப்பாக இந்தத் துறையின் மூலமாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சாலைப் பணிகள், தெருவிளக்குகள், குடிநீர்

மேம்பாட்டுப் பணிகள், சுகாதார வசதிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், மழைநீர் வடிகால், பேருந்து நிலையங்கள், புதிய அலுவலகக் கட்டடங்கள், திடக்கழிவு மேலாண்மை, பூங்காக்கள், மருத்துவமனைகள், வீட்டுவசதித் திட்டங்கள், நவீன இறைச்சிக் கூடங்கள், நவீன எரிவாயு தகன மேடைகள், மின் ஆளுமைத் திட்டங்கள், கல்வி மேம்பாட்டுப் பணிகள், இப்படிப் பல பணிகள் வளர்ச்சிப் பணிகளாகத் தொடர்ந்து இந்தத் துறையின் சார்பில் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அவற்றில் சில குறிப்பிட்ட சாதனைகளை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இந்த மூன்று ஆண்டு காலத்தில் இந்தத் துறையில் எத்தனையோ சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருந்தாலும், இன்றைக்கு ஒரு பெருமைக்குரிய சாதனையாக விளங்கிக் கொண்டிருப்பது “இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம்” என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம். இது பல நூறு ஆண்டுகளாக இருக்கக்கூடிய பிரச்சினை. இராமநாதபுரம் மக்களுடைய தாகத்தையும், ஏக்கத்தையும் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே திராவிட முன்னேற்றக் கழகம் 2006ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் தலைமையிலே ஆட்சிப் பொறுப்பேற்று, இதே அவையிலே முதல் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது – 22.7.2006 அன்று இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டபோது ரூ.616 கோடி மதிப்பீட்டிலே இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 30.1.2007 அன்று பரமக்குடியிலே அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது.

**இராமநாதபுரம் மக்களின் தாகத்தைத் தீர்த்த திட்டம்**

நம்முடைய முதல்வர் அவர்களே நேரடியாக வருகை தந்து அந்த விழாவிலே பங்கேற்று சிறப்பித்தார்கள். சிறப்பித்தது மட்டுமல்ல, அந்த

விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றுகிறபோது ஓர் அறிவிப்பையும் வெளியிட்டார்கள். இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய தாகத்தைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் அடிக்கல் நாட்டப் பட்டிருக்கிறது. அதேநேரத்தில், இந்த திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மூன்றாண்டு காலத்தில் நிறைவேற்றப்படும் என்று அதிகாரிகளால் குறிப்பு தரப்பட்டிருக்கிறது. எனவே, மூன்று ஆண்டு காலம் என்பதைவிட, குடிநீர்ப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், இதைக் கொஞ்சம் விரைவுபடுத்தி, துரிதமாக்கி, இதைக் குறைத்து, மூன்று ஆண்டு காலம் என்பதைக் குறைத்து, ஓர் இரண்டாண்டு காலத்திலே நிறைவேற்றித் தந்தால், அது சிறப்பாக அமைந்திட முடியும். அப்படி நிறைவேற்றுகிற முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டால், சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு நானே பரிசுகளை வழங்குவேன் என்று அன்றைக்கு அறிவித்தார்கள். அவருடைய அறிவிப்பை இந்தத் துறை ஒரு சவாலாகவே ஏற்றுக் கொண்டு, மூன்று ஆண்டு காலத்திலே நிறைவேற்ற வேண்டிய அந்தப் பணியை இரண்டே ஆண்டுகளிலே நிறைவேற்றி முடித்தது.

கடந்த **11.6.2009** அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் வீடியோ கான்ஃபரன்சிங் மூலமாக அதைத் தொடங்கி வைத்தார்கள். அதைத் தொடர்ந்து கடந்த **15.6.2009** அன்று, முதல்வர் தந்த அந்த உறுதிமொழியோடு, இரண்டாண்டு காலத்திலேயே அதை நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள், ஏறக்குறைய **234** பேர்களுக்கு விருதுகளையும், சான்றிதழ்களையும், பாராட்டுகளையும் வழங்கி, இந்தத் துறைக்குப் பெருமை சென்று சேர்ந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அரேபியா பாலைவனத்தில் ஜம்ஜம் என்ற நீரூற்று ஒன்று உண்டு. ஹஜ் யாத்திரை செல்லக்கூடிய இஸ்லாமிய பெருமக்கள் அதைப் புனித நீராகப் பயன்படுத்துவார்கள். அதேபோல, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒரு புனித நீரூற்றாக வந்து அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டத்தைப்பற்றிப் பலர் பல கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இங்கேகூட, அ.தி.மு.க.வைச் சேர்ந்த தங்கமணி பேசுகிறபோது, ஆக இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்துவிடலாம் என்று நம்முடைய முதல்வர் அவர்களே அறிவித்ததாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். அவர் எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்று சொன்னால், அப்போது தேர்தல் கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் நடந்து கொண்டிருக்கக்கூடிய தேர்தல் அந்தத் தேர்தல் நடந்த காரணத்தினாலே பல கலவரங்கள், பல சூழ்நிலைகள் இங்கே வந்துவிடக் கூடாது. ஒரு மாநிலத்திற்கு மாநிலம் இருக்கக்கூடிய பிரச்சினைகள் அதிகமாகிவிடக் கூடாது, என்பதற்காகத்தான் அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அந்தச் சூழ்நிலையிலேதான் அந்த வார்த்தை வந்ததே தவிர, ஆனால் கால அட்டவணையின்படி இன்று வரையிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லாப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்திலே புளோரைடு கலந்த

நிலத்தடி நீர், கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு, Fluorosis என்ற கடுமையான நோய் பாதிப்பு, இதிலே இந்த இரண்டு மாவட்ட மக்கள் சிக்கி, ஒரு கொடுமையைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். அதற்காகத்தான் இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நீண்ட ஆண்டுகாலமாக அந்த மாவட்டத்திலே ஒரு கோரிக்கையாக இருந்து வந்தது. அதை நிறைவேற்றுகிற முயற்சியிலே பலர் பல சூழ்நிலைகளிலே ஈடுபட்டிருந்தாலும், பல நேரங்களில் சூழ்நிலையின் காரணமாக அது தடைப்பட்டுப் போயிருந்தது. ஆனால், 2006ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, ஆட்சிக்கு வந்தவுடனே இதிலே முழு கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று எங்களுக்கு, இந்தத் துறைக்கு உத்தரவிட்டார்கள். அதற்குப் பிறகு அந்தப் பணியிலே நாங்களும் ஈடுபட்டோம்.

ஜப்பான் நாட்டுக்கு என்னுடைய தலைமையிலேயே இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளோடு, அந்தப் பயணத்தை மேற்கொண்டோம்; சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் போய்ச் சந்தித்தோம். அதற்குப் பிறகு மத்திய அரசின் துணையோடு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற இந்த முயற்சியிலே ஈடுபட்டு, அதன் விளைவாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் மூலமாக 1,334 கோடி ரூபாய்க்கான ஒப்புதலைப் பெற்றோம். அதைத் தொடர்ந்துதான் தருமபுரியிலே இதனுடைய அடிக்கல் நாட்டு விழாவும் கடந்த 26.2.2008 அன்று நடந்தது. முதல் கட்டப் பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் இப்பொழுது இறுதி செய்யப்பட்டு, இன்னும் மூன்று அல்லது நான்கு மாத காலத்திற்குள்ளாக பணிகள் எல்லாம் தொடங்கப்பட இருக்கின்றன.

இங்கேகூட, திருக்கச்சூர் ஆறுமுகம் பேசுகிறபோது, நிதிப் பற்றாக்குறை இருந்தால், அரசே அதிலே நிதியைச் செலுத்தி,

திட்டத்தை நிறைவேற்றலாமே, விரைவுபடுத்த வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். நிதியைப் பற்றி எந்தப் பிரச்சினையும் கிடையாது. திட்டமிட்டபடி எல்லாப் பணிகளும் முறையோடு நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் கூட சொல்ல வேண்டுமென்று சொன்னால், இரண்டாவது கட்டப் பணிக்கான ஒப்பந்தமும், திட்டத்தின் செயல்பாடுகள் கூட திட்டமிட்டபடி காலக்கெடுவின் படிதான் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, வருகிற 2012 ஆண்டு இறுதிக்குள்ளாக அனைத்துப் பணிகளும் முடிவுற்று, அந்த இரண்டு மாவட்ட மக்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகக் குடிநீர் வழங்கப்பட இருக்கிறது.

இன்னும்கூட நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், எப்படி இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 3 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றுவோம் என்று முதலில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், முதல்வருடைய வேண்டுகோளையேற்று, அதை விரைவுபடுத்தி 2 ஆண்டுக் காலத்தில் முடித்து, அதிலே வெற்றி கண்டிருக்கிறோமோ, அதேபோல, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கான முயற்சியிலே இந்தத் துறை நிச்சயமாக ஈடுபடப் போகிறது என்பதையும் நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரைவில் முடிவுறும்**

அடுத்து, கடல்நீரைக் குடிநீராக்கக் கூடிய திட்டம்; சென்னையைப் பொறுத்தவரைக்கும் புழல் ஏரி, பூண்டி ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, கிருஷ்ணா நதிநீர், வீராணம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலமாகக் குடிநீரைப் பெறுகின்றோம். இருந்தாலும், தொடர்ந்து பற்றாக்குறை இருந்து கொண்டுதான் இருக்கிறது; குடிநீரைப் பொறுத்தவரையில், சென்னையிலே பற்றாக்குறை இருந்து

கொண்டுதான் இருக்கிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலேகூட மீஞ்சூர் – காட்டுப் பள்ளியிலே கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய ஒரு திட்டத்திற்காகத் தனியாரோடு ஒப்பந்தம்கூட போட்டு வைத்திருந்தார்கள். நான் மறுக்கவில்லை, ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே கொண்டு வந்த திட்டம் என்பதற்காக தி.மு.க. ஆட்சி வந்தவுடனே, அதைக் கைவிட்டுவிடவில்லை. இது குடிநீர், மக்களுக்காகப் பயன்படக்கூடிய திட்டம். ஆகவே, உடனடியாக முழு முயற்சியிலே ஈடுபட்டு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று எங்களுக்கு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த உத்தரவை ஏற்றுக் கொண்டு, அதற்கானப் பணியிலே ஈடுபட்டோம், அந்த வகையிலே **25.2.2007** அன்று அதனுடைய அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தி ஒப்பந்தபடி ஆகஸ்ட் **2008**–லே இந்தப் பணிகள் முழுமையாக முடிந்திருக்க வேண்டும். ஆனால், நிறுவனத்திலே ஏற்பட்ட சில சங்கடங்கள், பல்வேறு பிரச்சினைகள், பல காரணங்கள், அதனால் கொஞ்சம் தடைபட்டது. ஆனால், இப்போது இருக்கக் கூடிய நிலவரத்தைக் கணக்கெடுத்துப் பார்த்தால், இன்னும் **5** சதவீதப் பணிகள் தான். அந்த நிறுவனம் செய்து முடிக்க வேண்டிய பணிகளில் மிச்சமிருக்கின்றன.

சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரைக்கும், அவர்கள் தொடர்புடைய எல்லாப் பணிகளையும் முழுமையாக முடித்துவிட்டார்கள். நானும், நம்முடைய அதிகாரிகளும் பலமுறை அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று, பல நேரங்களில் ஆய்வு செய்திருக்கிறோம். எனவே, வரக்கூடிய அக்டோபர் மாத இறுதிக்குள்ளாக அனைத்துப் பணிகளையும் முடித்து சென்னைக்கு இந்தக் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மூலமாகக் குடிநீரையும் வழங்கவிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதேபோல், இன்னொரு திட்டம், மத்திய அரசின் துணையோடு நிறைவேற்றப்படக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், சென்னைக்கு அருகே கிழக்குக் கடற்கரைச் சாலை, நெம்மேலி கிராமத்திலே இந்தத் திட்டம் உருவாக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு 993 கோடியே 83 இலட்சம் ரூபாய், மத்திய அரசு இதற்கு மானியமாகத் தரக்கூடிய தொகை 871 கோடியே 24 இலட்சம் ரூபாய். அதற்கான ஒப்புதலையும் தந்திருக்கிறது. மத்திய அரசு இதற்காக, முதற்கட்டமாக, இந்தத் துறைக்கு 300 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. எனவே, இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. நடப்பு நிதியாண்டில் இதனுடைய பணிகள் தொடங்கப்படவிருக்கிறது. எனவே, பணிகள் தொடங்கி 24 மாதக் காலத்திற்குள்ளாக இந்தத் திட்டமும் முழுமை பெற்று, குடிநீர் சென்னைக்கு வரவிருக்கிறது.

## ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற திட்டத்தில் அக்கறை

அடுத்து, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மத்திய அரசினுடைய மானியத் தொகை, மாநில அரசினுடைய மானியத் தொகை, அதேபோல, உள்ளாட்சி அமைப்பினுடைய பங்கு, இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து நிறைவேற்றப்படக்கூடிய ஒரு மிகப் பெரிய திட்டம், இந்தத் திட்டம். சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, 2,032 கோடி ரூபாய் மதிப் பீட்டிலே, 28 திட்டங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, திட்டங்களுக்குரிய அந்த ஆய்வுப் பணியை நடத்தி, இப்பொழுது அந்தப் பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. அதாவது குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள், கழிவுநீர் அமைப்பு வசதிகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், இவையெல்லாம் இப்போது இந்தத் துறையின் சார்பில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகர்,

ஆலந்தூர், ஆவடி, அம்பத்தூர், திருவொற்றியூர், தாம்பரம், மதுரவாயல், உள்ளகரம், புழுதிவாக்கம் போன்ற நகராட்சிகள் மற்றும் போரூர், பெருங்குடி, திருமழிசை, மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பள்ளிக் கரணை, பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை போன்ற பேரூராட்சிகள் மற்றும் நெற்குன்றத்திலே, இந்தத் திட்டத்தின் மூலமாகப் பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மதுரை மாநகராட்சிக்கு மட்டும் **2,497** கோடி ரூபாய் மதிப்பீட்டிலே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, **624** கோடி ரூபாய்க்கான அனுமதியும் பெற்று, அதன் மூலமாகப் பல்வேறு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வைகை இரண்டாம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், **60** கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பணிகளை முடித்து, விரைவிலே அதனுடைய தொடக்க விழா நடைபெறவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும் **3,187** கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, **587** கோடி ரூபாய் மதிப்பீட்டிலே மூன்று பணிகளுக்கு அனுமதியும் தந்து, அந்தப் பணிகள் முடியும் தருவாய்க்கு வந்திருக்கின்றன.

ஒன்று, இரண்டாவது பில்லூர் குடிநீர் திட்டம், இங்கே நம்முடைய தங்கமணி கூட கேட்டார்கள். இரண்டாவது பில்லூர் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், இந்த மூன்று பணிகள் தான்.

## சென்னையில் மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டம்

அதைப்போல சென்னை மாநகராட்சியில், அடிக்கடி மழை வருகிறபோது இந்த மாநகரம் பல்வேறு நேரங்களில் பல பாதிப்புகளுக்கு ஆளாகிறது. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தின் மூலமாக சிறிய மற்றும் பெரிய மழைநீர் வடிகால் அமைப்பதற்காக 1,448 கோடி ரூபாய் செலவிலே திட்டங்கள் தீட்டப்பட்டு அதற்கான அனுமதியும் மத்திய அரசு மூலமாக நாம் பெற்றிருக்கிறோம். அந்தப் பணிகளும் விரைவிலே செயல்பட இருக்கின்றன.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்திலே சென்னை மாநகராட்சி மற்றும் அதை ஒட்டியிருக்கக்கூடிய பல்வேறு நகராட்சிகளில், பேரூராட்சிகளில் நகர்ப்புற ஏழைகளுக்கு, குடிசைப் பகுதி மக்களுக்கு 1,26,584 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

அதேபோல், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இந்த அனைத்துப் பேரூராட்சி அண்ணாமறுமலர்ச்சித் திட்டம் என்பது எப்படி அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக, நாம் ஐந்தாண்டு காலத்திலே அந்தப் பணிகளை நிறைவேற்ற முடிவு செய்து, அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமோ, இந்த அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது, நான்காண்டு காலத்திலே ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணியை இன்றைக்கு நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

அதேபோல நலிவடைந்திருக்கக்கூடிய நகராட்சிகள், அதற்கும் இந்தத் திட்டத்தை நாம் அறிமுகப்படுத்தினோம், 30 நலிவடைந்த

நகராட்சிகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு நகராட்சிகளுக்கும் 75 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல பணிகள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த நலிவடைந்த நகராட்சிகளைப் பொறுத்தவரைக்கும், இந்தப் பேரூராட்சிகளைப் பொறுத்தவரைக்கும் நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப் பேரூராட்சிகளுக்கும் நலிவடைந்த நகராட்சிகளுக்கும் இவ்வளவு திட்டங்கள் எந்தக் காலத்திலும் வந்ததாக வரலாறு கிடையாது. இவ்வளவு நிதியும் கிடைத்ததாக வரலாறு கிடையாது. அதையும் இன்றைக்கு இந்தத் துறை அரசினுடைய ஆணையின்படி இதைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப் பல திட்டங்களை, பல சாதனைகளை இந்தத் துறைகள் நிறைவேற்றிக் கொண்டிருந்தாலும், இரண்டு நாட்களாக இந்த அவையிலே கலந்து கொண்டு, விவாதத்திலே பங்கேற்று பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். முடிந்த வரையிலே அவ்வப்போது சில பிரச்சினைகளுக்கு, சில கேள்விகளுக்கு துறையின் சார்பில் நான் பதில் தந்திருக்கிறேன். இல்லையென்று சொன்னாலும் வரக்கூடிய காலகட்டங்களில் அவற்றிற்குரிய நடவடிக்கையில் நிச்சயமாக இந்தத் துறை ஈடுபடும். இருந்தாலும் சில உறுப்பினர்கள் சில கோரிக்கைகளை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதற்கு சில விளக்கங்களை மாத்திரம் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நிதி ஒதுக்கீடைப் பற்றி நம்முடைய உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி, குணசேகரன், வேலுமணி, சதன் திருமலைக்குமார் ஆகியோர் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு மற்ற மாநிலங்களைவிட குறைவாக இருக்கிறது. அதை உயர்த்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வலியுறுத்தி எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும்

தெரிவிக்கப்படக்கூடிய கருத்துதான் இது. இதை மறக்காமல் நீங்களும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அரசும் இதை மறக்காமல் ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையிலே இதற்கு விளக்கத்தைத் தந்து கொண்டுதான் இருக்கிறது. அதையும் நாம் மறந்துவிட முடியாது. அதிலே பதில் இருக்கிறது. இருந்தாலும் நான் சிலவற்றை உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.

## மாநில வரி வருவாயிலிருந்து 31 சதவீதம் உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு

மாநில அரசினுடைய நேரடி வரி வருவாயில் உள்ளாட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டு 9 சதவீதம். அதாவது 6,241 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 9.5 சதவீதம். அது உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது 6,928 கோடி ரூபாய் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட இருக்கிறது. ஆக, கடந்த ஆண்டைவிட 687 கோடி ரூபாய் கூடுதல். அதை நீங்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அதுமட்டுமல்ல, தொடக்கக் கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல் இதுபோன்ற அடிப்படை வசதிகளுக்கு யார் செலவு செய்வது, அரசுதான் செலவு செய்து கொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. உள்ளாட்சி அலுவலர்களுக்கான ஊதியத்தையும் அரசுதான் இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. இவையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் மாநிலத்தினு டைய சொந்த வரி வருவாயிலிருந்து குறைந்தபட்சம் 31 சதவீதம் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, நிதிப் பகிர்வு குறித்துகூட தேசிய பொருளாதார கணிப்பு ஆய்வுக் கழகத்திலே ஒரு மதிப்பீடு வெளியிட்டிருக்கிறார்கள். அதையும் படித்துப் பாருங்கள். இந்தியாவிலேயே உள்ளாட்சிகளுக்கு

அதிக நிதிப் பகிர்வு, தர வரிசையை எடுத்துப் பார்த்தால் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலே இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதிப் பகிர்வு குறைவு என்பது ஏற்புடையதாக அமைந்திட முடியாது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரம். அதையும் சகோதரி, செல்வி பாலபாரதி அவர்களும், குணசேகரன் அவர்களும், மற்றவர்களும் இங்கே பேசுகிற போது அதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இதற்கான பதில் ஊரக வளர்ச்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 21–லிருந்து 24 வரையில் விரிவாக வந்திருக்கிறது. இருந்தாலும், நான் ஒரு விளக்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். 2006 ஆம் ஆண்டிலே கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று, அமைச்சராக இருக்கக் கூடிய என்னுடைய தலைமையிலே மூன்றாவது உயர் நிலைக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது. இந்த அதிகாரப் பகிர்வைப் பற்றி முடிவெடுப்பதற்காக இந்தக் குழு அமைக்கப்பெற்றது. அது அமைந்ததற்குப் பிறகு, சென்னையிலே நம்முடைய முதல்வர் அவர்களே பங்கேற்கக்கூடிய வகையிலே, கலைவாணர் அரங்கத்திலே கருத்தரங்கு நிகழ்ச்சி ஒன்று நடத்தினோம். பேரூராட்சிகளுடைய தலைவர்கள், நகராட்சிகளுடைய தலைவர்கள், மாநகராட்சிகளுடைய மேயர்கள் எல்லோரையும் அழைத்து, அந்தக் கூட்டத்தை நடத்தினோம். அதிலே சில கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன.

**உள்ளாட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம்**

அதைத் தொடர்ந்து ஊராட்சி அளவிலே இருக்கக் கூடிய தலைவர்களையும் சந்திக்க வேண்டுமென்று முடிவெடுத்து, இங்கே அம்மையார் யசோதா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அத்தனை

ஊராட்சித் தலைவர்களையும் அழைத்து, ஒரே இடத்தில் பேச முடியாது என்பதற்காக, நான்கு மண்டலங்களாகப் பிரித்து, அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தி, அவர்களின் கருத்துகளையும் கேட்டறிந்தோம். அதற்குப் பிறகு பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களையெல்லாம் இணைத்து அமைந்த உயர்நிலைக் குழுவையும் பலமுறை கூட்டி, அதிலும் அது குறித்து விவாதித்து, அதற்குப் பிறகு உயர்நிலைக் குழுவின் சார்பிலே அறிக்கையை நாங்கள் தயாரித்து, கடந்த 10.12.2007 அன்று நம்முடைய முதல்வரிடத்திலே அதை வழங்கினோம். அதற்குப் பிறகு, ஊராட்சிகளைப் பொறுத்தவரைக்கும், 99 பரிந்துரைகள் அரசுக்கு நாங்கள் தந்தோம். அதிலே 62 பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன.

நகர்ப்புற உள்ளாட்சிகளைப் பொறுத்தவரைக்கும் 66 பரிந்துரைகளைத் தந்தோம். அதிலே 47 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்றவை என்னவென்று கேட்டால், அவை பரிசீலனையில் இருக்கின்றன. பல துறைகளைச் சார்ந்திருக்கின்ற அதிகாரிகளோடு, அமைச்சர்களோடு கலந்து பேசி முடிவெடுக்க வேண்டிய பிரச்சினைகள் பல. அதேபோல, மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டிய பிரச்சினைகள் சில இருக்கின்றன. சட்டம் இயற்ற வேண்டும் சட்டத்திருத்தம் கொண்டு வரவேண்டும் என்ற நிலையிலே பல இருக்கின்றன. அது குறித்தும் விரைவிலே முடி வெடுத்து அந்தப் பணியும் நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, அ.தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர் வேலுமணி 26 ஆம் தேதி அன்று இங்கே பேசுகிற போது, சில செய்திகளையெல்லாம் எடுத்துச் சொன்னார். என் மூலமாகப் பதில் வேண்டுமென்றுகூட ஒரு கோரிக்கை வைத்தார். அதிலே அவர் சொன்னது, ஜவஹர்லால் நேரு

தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், மூன்றாவது நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி, ஜெர்மன் நாட்டு K.S.W. நிதி, இவையெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆனால் இப்பொழுது என்ன நிலை என்று அவர் ஒரு கேள்வியைக் கேட்டார். நான் அவருக்குத் தெரிவிக்க விரும்புவது, நகராட்சி நிர்வாகத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 29 – லிருந்து 64 வரையிலே இதற்கான, தெளிவான பதில் இருக்கிறது. நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். இதைப் படித்திருந்தால், இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்கமாட்டீர்கள். இருந்தாலும், நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, தயவு கூர்ந்து உங்களுக்கு நேரம் கிடைக்கிறபொழுது இந்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைத் தயவு செய்து படிக்க வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னொரு கேள்வியையும் அவர் கேட்டார். கவுண்டம்பாளையம் நகராட்சி, வடவள்ளிப் பேரூராட்சிக்குக் குடிநீர் திட்டம் அறிவித்தீர்களே, அது என்ன ஆனது என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். அந்தத் திட்டத்திற்காக, 30 கோடியே, 38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 16 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில், 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முழுமையாக கட்டப்பட்டுள்ளன. 31 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குழாய் பதிக்கின்ற பணியிலே, 13 கிலோ மீட்டர் தூரத்திற்கான பணி முடிவடைந்துள்ளது. 37 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பகிர்மானக் குழாய்கள் பதிக்கின்ற பணியிலே,15 கிலோ மீட்டர் தூரத்திற்கான பணி முடிவடைந்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் டிசம்பர் 2009 –க்குள், நிச்சயமாக மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும் என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, உறுப்பினர் ரவிக்குமார் அவர்கள், தன்னுடைய தொகுதியிலே சமத்துவபுரம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். நேரடியாக அது குறித்து அவர் என்னிடத்திலே பேசியிருக்கிறார். நானும் அவரிடத்திலே பேசியிருக்கிறேன். எனவே, வரும் நிதியாண்டில் அது குறித்து நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குடிநீர் வடிகால் வாரிய பணிகளின் செயல் வேகம்**

குணசேகரன் அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நிறைவேற்றப்படக்கூடிய ஊருணி மேம்பாட்டுத் திட்டத்திலே, டெண்டர் விடுவதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை எப்படிச் சரி செய்யப் போகிறீர்களென்று கேட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இந்தத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்பது அவருக்கும் தெரியும். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இராமநாதபுரம் மாவட்டத்திலே 314 பணிகளுக்கும், சிவகங்கை மாவட்டத்திலே 44 பணிகளுக்கும், ஆக மொத்தம் 358 பணிகளை நாம் நிறைவேற்ற முடிவு செய்து, அதிலே 119 பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளன; அந்தப் பணிகளெல்லாம் தொடங்கியுள்ளன. எஞ்சிய பணிகளும் கூட வருகின்ற ஆகஸ்ட் 2009 க்குள் இறுதி செய்யப்பட்டு, அந்தப் பணிகளும் முழுமை பெறும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திருக்கச்சூர் ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த செல்வி பாலபாரதி, இந்தக் கொடுங்கையூர், பெருங்குடி குப்பை கொட்டக் கூடிய வளாகம் குறித்து குறிப்பிட்டார்கள். சென்னையைப் பொறுத்தவரைக்கும் குப்பைக் கொட்டக் கூடிய வளாகங்களான

கொடுங்கையூர், பெருங்குடி ஆகிய இரண்டு இடங்களிலே இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் பலருக்கும் தெரியும். ஆகவே அது குறித்து அதிகம் விளக்கம் சொல்ல நான் விரும்பவில்லை. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பிரச்சனையை எப்படித் தீர்க்கப் போகிறீர்கள் ? உடனே அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

கொடுங்கையூரைப் பொறுத்தவரைக்கும் debate என்ற அடிப்படையில், விஞ்ஞான முறையிலே குப்பையிலேயிருந்து உரம் தயாரிக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அதற்காக டெண்டர் விடப்பட்டு மாநகராட்சி, தனியாரோடு **9.4.2008** அன்று ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருக் கிறது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு திட்ட அறிக்கை அனுப்பி அனுமதி கேட்டிருக்கிறோம். அதற்குரிய அனுமதி வந்த பிறகு விரைவிலே அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன.

**குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டப் பணிகள்**

அதேபோல, பெருங்குடியில், அங்கிருக்கக்கூடிய குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க, உரம் தயாரிக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அதற்கும் debate அடிப்படையில் டெண்டர் விடப்பட்டு, மாநகராட்சி தனியாரோடு ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அதற்கும் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுமதி கேட்டு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது கிடைத்த பிறகு அந்தப் பணிகள் விரைவாக நடைபெறவிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த வேல்முருகன் பேசுகிறபோது, இந்த உள்ளாட்சி அமைப்பைப் பொறுத்தவரையிலே

இரண்டடுக்கு முறையா, மூன்றடுக்கு முறையா, அதை எப்படி நீங்கள் நிறை வேற்றப் போகிறீர்கள்? எப்படி வரக்கூடிய காலக் கட்டத்திலே தேர்தல் நடத்தப் போகிறீர்கள் என்றெல்லாம் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இது குறித்து விளக்கமாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே பலமுறை குறிப்பிட்டுக்காட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நான் தெரிவிக்க விரும்புவது, தமிழக அரசினுடைய கொள்கையைப் பொறுத்தவரைக்கும், இரண்டடுக்கு முறையே போதும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

## உள்ளாட்சி அமைப்புகளில் இரண்டடுக்கு முறை

ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தின்படி, மூன்றடுக்கு முறையை தமிழ்நாடு அரசு தன்னிச்சையாக மாற்றி விட முடியாது. அதற்கு அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் நிச்சயம் தேவை என்பது எல்லா உறுப்பினர் களுக்கும் நன்றாகத் தெரியும். அதனை செய்ய வேண்டு மென்று மத்திய அரசை நம்முடைய முதல்வர் அவர்களும், இந்த அரசும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டால்தான் இந்த முறையை நாம் மாற்றிட முடியும் என்ற பதிலை நான் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அம்மையார் திருமதி யசோதா அவர்கள் இங்கே பேசுகிறபோது, பணியிடங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறிப்பாக தேசிய வேலை உறுதித் திட்டத்திலே கூடுதல் பணியிடங் கள் உருவாக்கப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கை எடுத்து வைத்தார்கள். ஆகவே, இந்த திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 2,543 கூடுதல் பணியிடங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில், 2,511 பணியிடங்கள் ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.

காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு, கோவை மாவட்டங்களில் மட்டும் 132 மேற்பார்வையாளர் பணியிடங்கள் உயர் நீதிமன்றத்தின் தடையாணை காரணமாக தற்சமயம் பூர்த்தி செய்யப்படவில்லை. விரைவில் அந்தத் தடையாணையை இரத்து செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அந்தப் பணியிடங்களும் பூர்த்தி செய்யப்படும்.

அடுத்து, சில அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன். அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன்பு ஒரு விளக்கம், இப்படி அறிவிப்புகளை வெளியிட்டு விட்டுப் போய்விடுவான், அத்தோடு முடிந்துவிடும் என்று நீங்கள் எண்ணிவிடக் கூடாது என்பதற்காகத்தான் கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவித்த அறிவிப்புகளை உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.

**மூன்றாண்டுகளில் அறிவித்த திட்டங்கள் பெருமளவு நிறைவேற்றம்!**

கடந்த மூன்றாண்டுகளில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் இந்த அவையிலே அறிவித்த அறிவிப்புகள் எவ்வளவு என்று கேட்டால் – கடந்த மூன்று ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக நான் சொல்கிறேன் – அறிவித்த அறிவிப்புகள் 64. அதிலே முழுமையாக இந்தத் துறையின் சார்பில் நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடியவை 58. செயல்பாட்டில் இருப்பவை 6.

இப்படி ஒட்டுமொத்தமாகச் சொன்னால், உங்களுக்குக் கொஞ்சம் குழப்பம் ஏற்படலாம், எனவே ஒவ்வொரு ஆண்டாகக் கணக்கெடுத்து நான் சொல்கி றேன். ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரைக்கும், 2006 – 2007 ல் அறிவித்த அறிவிப்பு 23. அதிலே முழுமையாக முடிந்தவை 22, செயல்பாட்டில் இருப்பது 1, அந்த ஒன்று, வள்ளுவர்

கோட்டத்திற்கு அருகிலே சுய உதவிக் குழுக்களுக்காகக் கட்டப்படக்கூடிய ஒரு விற்பனை மையம். அதைப்பொறுத்தவரை, டெண்டரிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு, அதனால் கொஞ்சம் தாமதமாகி இப்பொழுது அது முடிவுற்று, அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் செயல்பாட்டில் இருக்கக் கூடிய ஒரு பணி, நான் சொன்னது 2006 – 2007.

அடுத்து, 2007 – 2008–இல் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 24. அதிலே முழுமையாக முடிந்தவை 22. செயல்பாட்டில் இருப்பவை 2. என்ன, அந்த இரண்டு என்று கேட்டால், ஒன்று சுய உதவிக் குழுவினருக்கு வழங்கப்படக்கூடிய அடையாள அட்டை. அந்த அடையாள அட்டையைப் பரிசோதனை செய்து பார்த்தோம்.

இரண்டு கிராமப் பகுதிகளிலும், இரண்டு ஊராட்சிப் பகுதிகளிலும் இதனை நாங்கள் சோதித்துப் பார்த்தோம். அதிலே சில மாற்றங்கள் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை வந்தது. அதனால் கொஞ்சம் தாமதமாகியிருக்கிறது. இருந்தாலும், அவைகளையெல்லாம் உடனடியாகக் களைந்து அந்தப் பணியில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம், அது வொன்று.

**விழுப்புரம் கைவினைஞர் தொழில் பூங்கா விரைவில் திறப்பு**

அடுத்து, இரண்டாவது என்னவென்று கேட்டால், விழுப்புரம், கைவினைஞர் தொழிற் பூங்கா, மாமல்லபுரத்திலே சிற்பப் பூங்கா, இங்கே கூட, ஆறுமுகம் அவர்கள் பேசும்போது கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த இரண்டிலே ஒன்று, விழுப்புரம் கைவினைஞர் பூங்காவின் பணி முடிந்தது. விரைவிலே திறக்கப் போகிறோம். மாமல்லபுரம் சிற்பப் பூங்காவைப் பொறுத்தவரைக்கும் என்ன

பிரச்சினை என்று கேட்டால், சில சங்கடங்கள், சில பிரச்சினைகள், சில சட்ட சிக்கல்கள் எல்லாம் வந்துவிட்ட காரணத்தால் அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

2008 – 2009 ஆம் ஆண்டு இந்தத் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 17. அதிலே, முழுமையாக முடிந்தவை 14, செயல்பாட்டில் இருப்பவை 3, இப்போது நான் சொன்னது ஊராட்சி.

அடுத்து, நகராட்சியைப் பொறுத்தவரைக்கும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மூன்று ஆண்டு காலத்திலே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 292. அதிலே முழுமையாக முடிந்தவை 184. செயல்பாட்டில் இருப்பவை 104, நிலுவை 3, இரத்து 1.

இதில் வருட வாரியாகச் சொல்ல வேண்டுமென்றால், 2006 – 2007 –இல் அறிவிக்கப்பட்டவை 97, முழுமையாக முடிந்தவை 68, செயல்பாட்டில் இருப்பவை 26.

2007 – 2008–இல் அறிவித்தவை 117, முழுமையாக முடிந்தவை 77, செயல்பாட்டில் இருப்பவை 39.

2008 – 2009–இல் அறிவிக்கப்பட்டவை 78 , முழுமையாக முடிந்தவை 39, செயல்பாட்டில் இருப்பவை 39. செயல்பாட்டில் இருப்பவற்றைப் பொறுத்தவரைக்கும் அவற்றில் கொஞ்சம் வித்தியாசம் இருக்கலாம். அது அதிகமாகவும் உங்களுக்கு தென்படலாம். உண்மைதான்; மறுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், பெரும்பாலான செயல்பாட்டில் இருக்கக்கூடிய பணிகள் என்னவென்று கேட்டால், பாதாளச் சாக்கடைத் திட்டங்கள். இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைப் பொறுத்தவரையில், மூன்று ஆண்டு காலத்திலே நிறைவேற்றப்படும் என்ற அடிப்படையிலே இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது.

ஆனால், இதுவரையில் எந்தக் காலத்திலும் மூன்று ஆண்டு காலத்திலே அந்தப் பணி முடிந்ததாக வரலாறே கிடையாது. அதிலே, டெண்டர் பிரச்சினை, இடப் பிரச்சினை என்று பல பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், அதை உடனடியாக முடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை. எனவே செயல்பாட்டில் இருக்கக்கூடிய பெரும்பாலான பிரச்சினைகள் எதுவென்று கேட்டால், பாதாளச் சாக்கடைப் பிரச்சினைதான் தொழில் நுட்பக் காரணமாக, டெண்டர் பிரச்சினை காரணமாக, நீதிமன்றப் பிரச்சினை காரணமாக, அந்தப் பணிகளும் தடைப்பட்டிருக்கிறதே தவிர, வேறு அல்ல. அதையும் சரி செய்து, உடனடியாக அந்தப் பணிகளை நிறைவேற்றிடும் முயற்சியில் இந்தத் துறை இப்போது ஈடுபட்டிருக்கிறது.

சொன்னதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்று எடுத்துக்காட்டக்கூடிய வகையிலே தான், இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் நான் இங்கே சொல்ல வேண்டிய அவசியத்திற்கு வந்தேனே தவிர, வேறு அல்ல. அந்த உணர்வோடுதான் வரக்கூடிய **2009 – 2010** ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளையும் அந்த உணர்வோடுதான் இங்கே உங்களிடத்திலே புத்தகமாக அச்சிட்டு முழுமையாக வழங்கியிருக்கிறோம். இருந்தாலும் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டக்கூடிய வகையில் இந்த இரண்டு துறைகளின் சார்பில் சில அறிவிப்புகளை மாத்திரம் – என்னதான் இருந்தாலும் அதனைப் புத்தகத்தில் படிப்பதை விட நான் சொல்கிற போது, அதை நீங்கள் கேட்கிறபோது, அடைகிற மகிழ்ச்சி தனியான மகிழ்ச்சியாக அமைந்திட முடியும் என்ற நம்பிக்கையோடு கோடிட்டு, சிலவற்றை மாத்திரம் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**உள்ளாட்சித்துறை சாதனைக்கு துணை நிற்போருக்கு நன்றி!**

இப்படி உள்ளாட்சித் துறைக்கு எல்லா வகையிலும், துணை நின்று, இந்த வளர்ச்சிக்குத் தொடர்ந்து துணை நிற்கக்கூடிய தம்முடைய அறிவுரைகளை, ஆலோசனைகளைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கும், அதேபோல நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளுக்கும் நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல தலைமைச் செயலாளர், நிதித் துறையினுடைய செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய செயலர், துறையினுடைய தலைவர்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய செயலாளர்கள், தலைவர்கள், மாவட்டத்தினுடைய ஆட்சியர்கள், அனைத்து மட்டத்திலும் இருக்கக்கூடிய அலுவலர்கள், பணியாளர்களுக்கெல்லாம் இந்த நேரத்திலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நிறைவாக நான் சொல்ல விரும்புவது, இப்படிப் பல்வேறு மகத்தான பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி, சாதனைகளைப் படைத்து, மக்கள் வாழ்வில் நலத்தையும், வளத்தையும் சேர்த்திட உறுதி எடுக்கக்கூடிய நிலையிலேதான் இந்தப் பதிலுரையை நான் உங்களிடத்திலே வழங்கியிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து என் உரையை நிறைவு செய்வதற்கு முன்பு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

“விண்ணைக் குலுக்கு மனிதா நீ – ஒரு

விண்மீன்கூட உதிராமல்!

மண்ணைப் புரட்டு மனிதா நீ – சிறு

மண்புழுகூட நசுங்காமல்!

நேற்றைய பகைமை இனி எதற்கு ? – உன்

நிழலின்மீதா வெறுப்புனக்கு ?

சோற்றுப் பானையை பொதுவில் வை – இனி

சுதந்திரச் சுடரை நடுவில் வை!

ஒவ்வொரு முகமும் உறவு முகம் – உன்

ஒவ்வொரு மூச்சையும் அன்பாக்கு!

ஒவ்வொரு இதயமும் பகலாக்கு – நம்

உலகின் இருட்டை வெளியேற்று!

‘வேற்று நாடு’ ‘ என் நாடு’ – எனும்

வேற்றுமை யாவும் தூக்கி எறி!

காற்றும் உனக்குக் கை கட்டும் – பெருங்

கடலும் உனக்கு கைகொட்டும்

பகையில்லாத உள்ளங்கள்

பசியில்லாத இல்லங்கள்

அகிலம் காணும் அக்காலம்;

அதுதான் பூமியின் பொற்காலம்!’’

இந்தக் கவிதை வரிகளைச் சொல்லி, என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★



தமிழரசு
அலுவலகப் பிரதி





# தொழில் வளர்ச்சியின்
# முன்னோடி மாநிலம் தமிழகம் !

தமிழரசு
அலுவலகப் பிரதி

# தொழில் வளர்ச்சியின் முன்னோடி மாநிலம் தமிழகம்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.7.2009 அன்று,

தொழில்துறை மானியக்கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

ஆற்றிய உரை:

சிறப்பு வெளியீடு எண். 24

தமிழரசு இலவச வெளியீடு

ஜூலை 2009

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

# தொழில் வளர்ச்சியின் முன்னோடி மாநிலம் தமிழகம்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.7.2009 அன்று,
தொழில்துறை மானியக்கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை:

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாட்டுக்கோர் புலவர் பாரதியார். 'உழவே தலை' என்பது அய்யன் திருவள்ளுவரின் அற்புத வாக்கு. இன்றைக்கு உழவே தொழிலாக மாறி வருவது, கண்கூடாக நம் அனைவருக்கும் தெரிந்து கொண்டிருக்கிறது. இந்த மாற்றம் அறிவியலால் விளைந்த அதிசயம். உழவும், தொழிலும் இணைந்தே வளர்வது, நமது நாட்டின் சமூக, பொருளாதார உயர்வுக்கு உகந்ததாக அமைந்திருக்கிறது. இந்த அடிப்படை உண்மையை உணர்ந்த காரணத்தால்தான், இந்த அரசு தொடர்ந்து தொழில் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சியைப் பற்றி நான் குறிப்பிடுகிற நேரத்தில், ஒன்றை நினைவுபடுத்தி, இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்தத் தொழில் வளர்ச்சியைத் தமிழகத்திலே

அடித்தளமாக அமைத்துத் தந்திருக்கக்கூடிய ஒரு மாபெரும் தலைவராக இருந்து விளங்கி, இதே தமிழகத்தினுடைய முதலமைச்சராக 1954 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டு வரை இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களை நான் இந்த நேரத்திலே நினைவு கூர்கிறேன். நெய்வேலி நிலக்கரித் திட்டம், திருவெறும்பூர் BHEL நிறுவனம், ஆவடி டேங்க் தொழிற்சாலை, Ashok Leyland, T.I. Cycles, இராஜபாளையத்தில் அமைந்திருக்கக்கூடிய மதராஸ் சிமெண்ட்ஸ் போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் அன்றைக்குத் தமிழகத்திலே உருவாவதற்கு அடித்தளமாக இருந்த ஒரு மாபெரும் தலைவர்தான் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்.

அதேபோல் இன்னொரு செய்தி. 1962 ஆம் ஆண்டில், அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால், ஒப்பற்ற தலைவர், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், "நண்பர்கள் கேட்பதற்கு" என்கிற ஒரு தலைப்பில், தீர்க்கதரிசனமாகக் கட்டுரை ஒன்றை எழுதியிருக் கிறார்கள். அது புத்தக வடிவிலே என் கையில் இருக்கிறது.

"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"

என்று பாரதியார் பாடினார். செல்ஃபோன்கள், ஏன் தொலைபேசிகளே வராத காலகட்டம் அது.

அதைப்போல, அறிஞர் அண்ணா அவர்கள் 1962–லே, அவர் எழுதியிருக்கக்கூடிய கட்டுரையிலே தெளிவாகக்

குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். “தென் நாட்டைத் தொழில்மயம் ஆக்கும் திட்டங்கள் துவக்கக் கழகம் பாடுபடும்; சுங்கத்தீர்வையற்ற துறைமுகம் உருவாக்கப்படும்; காவிரி வட்டத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆமைக்க முயற்சிப்போம்; நெய்வேலி சுரங்கத் திட்டத்தை விரிவுபடுத்துவோம்; அதனை மாநில அரசின் உடமையாக்கிட முயற்சிப்போம்; சேலம் இரும்புத் தொழிற்சாலையைத் துவக்கிடச் செய்வோம்; அணு உலைக்கூடம் அமைக்கும் செயலில் ஈடுபடுவோம்; இஸ்ரேலில் உள்ளவாறு, சூரிய வெப்பத்தை வெளிச்சத்திற்குப் பயன்படுத்துவோம்; கடல் நீரைக்குடிநீர் ஆக்கும் திட்டத்தை மேற்கொள்வோம்; கடலோர வாணிப ஏற்பாடுகளைச்செய்வோம்; சேது சமுத்திரத்திட்டம், தூத்துக்குடி துறைமுகத்திட்டம் ஆகியவற்றை விரைவுபடுத்துவோம்; அவற்றிற்குத் துணைசெய்ய நெடுஞ்சாலைகளை அமைத்திடுவோம்; காகித ஆலைகள், மோட்டார் வாகனத் தொழிற்சாலைகளை உருவாக்குவோம்” என்று தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி குறித்து திட்டங்களை வரிசைப்படுத்தி, தொலைநோக்குப்பார்வையோடு அறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கே கனவு கண்டிருக்கிறார்கள்.

அந்தக்கனவினை நனவாக்கக்கூடிய வகையிலேதான் தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே இன்றைக்கு அற்புதமான திட்டங்கள் தொடர்ந்து உருவாகிக்கொண்டிருக்கின்றன என்பதை நாம் தெளிவாக உணர்ந்துகொண்டிருக்கிறோம்.

கடந்த ஆண்டு இதே அவையில் 5–5–2008 அன்று 2008–2009 ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையினுடைய மானியக்கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, அதன்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கக்கூடிய வாய்ப்பை அன்றைக்கு நான் பெற்றேன். இப்பொழுது இன்று, தொழில் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நிலையில், 2009–2010ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்து, அதன்மீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திலே பங்கேற்று பதில் சொல்லக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

இன்று காலையிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், அ.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு திரு.செ.ம.வேலுசாமி, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு திரு. அ. தமிழரசு, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு திரு கே.மகேந்திரன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு திரு. சு. குணசேகரன் ஆகியோர் இங்கு இந்தத் துறையின்மீது பல்வேறு கருத்துகளை, இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை, அது எப்படித் தீர்க்கப்பட வேண்டுமென்ற அந்த அறிவுரைகளை, ஆலோசனை களையெல்லாம் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்

கிறார்கள். அதற்காக அவர்களுக்கு முதலில் துறையின் சார்பிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொருளாதாரத்திலும், அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் போன்ற மேலைநாடுகள் சிறந்து விளங்கின. அப்போதுகூட பண்பாடு, கலாச்சாரம், சமூக வாழ்வு போன்றவற்றைக் கீழைநாடுகள், குறிப்பாக இந்தியா அதற்கு ஒரு முன்னுதாரணமாக இருந்திருக்கிறது. தற்போது உலக அளவில் பார்க்கிறோம், பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் ஒரு மோசமான சூழ்நிலையிலேயே சிக்கி இந்த நாடு தவித்துக்கொண்டிருக்கிறது. இதன் காரணத்தால், இன்றைக்குப் பல்வேறு நாடுகள், பல்வேறு சூழ்நிலைகளில் பல நிலைகளில் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் மறுத்துவிட முடியாது. எது எப்படி இருந்தாலும் இன்றைக்குப் பொருளாதார வளர்ச்சி, தற்சார்புத் தன்மை, சேமிக்கும் பாங்கு, வாங்கும் திறன் போன்றவற்றால் இந்தியா பெரும் பாதிப்புக்கு ஆளாகாமல் தொடர்ந்து தன்னுடைய வளர்ச்சிப் பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுத்திட முடியாது. இந்த வளர்ச்சிக்குத் தொழில் துறையினுடைய சிறந்த பங்களிப்பு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தொழில் வளர்ச்சியிலே ஒரு சிறந்த முன்னோடி மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு

விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை இன்றைக்கு எல்லோரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், முக்கியமாக நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், முற்போக்கான அடிப்படையான கொள்கைகளை இன்றைக்கு நாம் வகுத்து வைத்திருக்கிறோம். தொழில் வளர்ச்சி என்பது அனைத்துத் தரப்பினரையும் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சியாக அது அமைந்திட வேண்டும். இதுதான் இந்த அரசினுடைய – இந்தத் தொழில் துறையினுடைய அடிப்படைக்கொள்கை என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு **5–9–2008** அன்று சேலத்திலே நடைபெற்ற ஒரு விழா; சேலம் இரும்பாலை விரிவாக்கத் திட்டத்தினுடைய அடிக்கல் நாட்டு விழா. அந்த விழாவிற்குப் பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், அன்னை சோனியா காந்தி அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். அந்த விழாவிலே பங்கேற்று உரையாற்றுகிறபோது, பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர் பிரதமர் மட்டுமல்ல, உலகளவிலே புகழ்பெற்றிருக்கக்கூடிய ஒரு பொருளாதார நிபுணர் என்பதை இந்த அவையில் இருக்கக்கூடிய அனைவரும் தெளிவாக உணர்ந்திருக்கிறீர்கள். அவர் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். Tamil Nadu has emerged as a major industrial

hub of our country. Some call it the detroit of India. I call it the industrial and knowledge power house of India. அதாவது தமிழ்நாடு நமது நாட்டினுடைய மிகப் பெரிய தொழில் மையமாக உருவெடுத்துள்ளது. இம்மாநிலத்தைப் பலர் இந்தியாவினுடைய detroit என்று கூறுகின்றனர். நான் தமிழ்நாட்டை இந்தியாவின் தொழில் மற்றும் அறிவாற்றல் சக்தியின் இருப்பிடமாக அழைத்திட விரும்புகிறேன் என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, India Brand Equity Foundation அதாவது I.B.E.F. நிறுவனத்தினுடைய பொருளாதாரக் கணிப்பு ஆய்வகம் ஓர் அறிக்கையைத் தயாரித்து கடந்த ஜனவரி 2009–லே வெளியிட்டிருக்கிறது. அதிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் Tamil Nadu is amongst the most industrialised States in India. It ranks next only to Maharashtra. The State's G.D.P. (Gross Domestic Product) - grew an impressive 10.69% between 1999-2000 and 2006-2007 to reach U.S. dollar 58.63 billion என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதாவது, இந்தியாவில் சிறந்த தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக விளங்குகிறது. இதில் மகாராஷ்டிராவிற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாம் இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த உற்பத்தி,

உள்நாட்டினுடைய உற்பத்தி 1999–2000–இல் இருந்ததைவிட 2006–2007–இல் 10.69 சதவீதமாக அதிகரித்து, அமெரிக்க டாலர் மதிப்பிலே 58.63 பில்லியனாக உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அதேபோல, கடந்த 27–5–2009 'இந்து' பத்திரிகையிலே தொழில் வளர்ச்சியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். அந்தக் கட்டுரையை Oxford Analytica என்கிற சர்வதேச சுயேட்சை ஆலோசனை நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. அது மேற்கொண்ட தேசிய அளவிலான ஆய்வின்படி வெளிவந்த அந்தக் கட்டுரையிலே, "Tamil Nadu is the most attractive State for foreign firms seeking to invest in India, thanks to its better quality infrastructure and governance" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, தமிழ்நாடு இந்தியாவில் முதலீடு செய்ய விரும்புகிற வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மிகவும் உகந்த – முதலாவதாகத் தேர்வுபெறும் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. இதற்குக் காரணம் தரமான உள்கட்டமைப்பு வசதி, சிறந்த அரசு நிருவாகம் என்பதை அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்திய அரசினுடைய 13–ஆவது நிதி ஆணையத்தினுடைய தலைவர் டாக்டர் விஜய் கெல்கர் அவர்கள், ஏற்கெனவே அவர் சர்வதேச நிதி நிறுவனத்திலே International Monitory Fund - I.M.F.-னுடைய, நிருவாக செயல் இயக்குநராகப்

பொறுப்பிலே இருந்து கடமையாற்றியவர். அவர்கள் கடந்த 4-6-2009 அன்று 13-ஆவது நிதி ஆணையத்தினுடைய கூட்டம் சென்னையிலே நடைபெற்றபோது அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது அவர் பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்; 2007-2008 ஆம் ஆண்டிற்கான per capita gross State domestic product தனி நபருக்கான மொத்த மாநில பொருளாதார உற்பத்தியில் தேசிய அளவிலே 27,580 ரூபாய் என்றும், தமிழ்நாட்டில் இது 32,080 ரூபாய் என்றும் தெரிவித்து இருக்கிறார். அது தமிழகத்திலே தனி நபர் உற்பத்தியைப் பொறுத்தவரைக்கும் அதனுடைய அளவு தேசிய அளவில் இருக்கக்கூடிய சராசரி அளவைவிட கூடுதலாகும்.

அதேபோலத்தான், Centre for Monitoring Indian Economy (C.M.I.E) இந்திய பொருளாதாரக் கண்காணிப்பு மையமும் என்ன சொல்கிறது என்று சொன்னால், மாநிலங்களில் முதலீடு செய்ய பல்வேறு நிறுவனங்கள், அரசுத் துறைகள் கருதியுள்ள தொகை குறித்து, தொடர்ந்து அறிவித்து வருகிறது. அந்த அடிப் படையிலே, இந்த மையத்தினுடைய அறிக்கையின்படி பார்த்தால், 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை தமிழ்நாட்டில் செய்யக் கருதப்பட்ட முதலீடு 1 இலட்சத்து, 73 ஆயிரத்து, 529 கோடி ரூபாயாகும். 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான கணக்கின்படி முதலீட்டுத் தொகை 5 இலட்சத்து, 79 ஆயிரத்து, 191 கோடி ரூபாயாகும். ஆக மூன்றாண்டுகளில் மட்டும், 4 இலட்சத்து, 5 ஆயிரத்து, 662 கோடி ரூபாய் முதலீடு செய்யக்

கருதப்பட்ட தொகையாக அமைந்திருக்கிறது. ஆக, கடந்த மூன்றாண்டுகளில் பார்த்தால், 4 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யக் கருதப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இது தமிழகத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய பெருமை என்பதை நான் பெருமையோடு இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோல், புதிய பொருளாதாரக் கொள்கை அடிப்படையிலே பார்த்தால், தாராளமயமாக்கல் கொள்கை தொடங்கியதற்குப் பின்னால், 1991 ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையில் அரசு செய்திருக்கக்கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம், M.O.U. செய்த அடிப்படையிலே கணக்கெடுத்துப் பார்த்தால், கிடைத்த முதலீடு 26 ஆயிரத்து, 471 கோடி ரூபாய். கடந்த ஓராண்டில் மட்டும், 2008 ஆம் ஆண்டில் மட்டும், 30 ஆயிரத்து, 512 கோடி ரூபாய் முதலீடு. கடந்த 16 ஆண்டு காலத்திலே, அதாவது 1991 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை கிடைத்த முதலீட்டைவிட, சென்ற ஆண்டு, 2008–இல் மட்டும் முதலீடு அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இதுதான் தமிழகத்தினுடைய நிலையான தொழில் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த சான்றாக, சிறந்த அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு, இதே மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்து, அதற்கு நான் பதில் சொல்கிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னேன். 30 ஆயிரம் கோடி ரூபாய்க்குக்

குறையாமல், முதலீடு பெற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன். ஆனால், இன்றைக்குப் பார்க்கிறோம். உலக அளவிலே பொருளாதாரச் சூழ்நிலை எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆக, இந்தச் சூழ்நிலையில்கூட, இப்பொழுது நாம் எந்த நிலையை அடைந்திருக்கிறோம் என்று சொன்னால், 30 ஆயிரத்து 512 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்திருக்கிறோம் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த தொழில் துறையினுடைய பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், கடந்த 13–6–2009 அன்று தேசிய அளவிலே, மாநில அளவிலே, மண்டல அளவிலே, மாவட்ட அளவிலே இருக்கக்கூடிய தொழிற் கூட்டமைப்பினுடைய பிரதிநிதிகள், பெரும் மற்றும் சிறு குறு தொழில் முனைவோர்களுடைய பிரதிநிதிகளையெல்லாம் ஒன்றாக அழைத்து, ஒரு கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தினேன். இதே கோட்டையிலே, நாமக்கல் கவிஞர் மாளிகையிலே, அந்தக் கூட்டத்தை நடத்தினோம். அந்தக் கூட்டத்திலே பங்கேற்ற பலர், அரசு எடுத்துவரக்கூடிய நடவடிக்கைகளை மகிழ்ச்சியோடு வரவேற்று, பாராட்டி, அதற்கு நன்றி தெரிவித்தார்கள். அதேநேரத்தில், சில கோரிக்கைகளையும், சில

பிரச்சினைகளையும் அந்தக் கலந்துரையாடல் கூட்டத்திலே எடுத்து வைத்தார்கள். அது தொடர்பான சில முடிவுகள்கூட நிறைவாக அறிவிப்பிலே வெளியிடப்பட இருக்கிறது.

சில கோரிக்கைகள் பரிசீலனையில் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லி, அதிலே ஒன்றை உதாரணத்திற்கு நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், ஒற்றைச் சாளர முறை (Single Window System) இந்த முறையைப் பொறுத்தவரைக்கும் இதைக் கொண்டுவர வேண்டுமென்று தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாக இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, கடந்த ஆண்டுகூட, நான் இந்தத் துறைக்கான பதில் அளிக்கிறபோது, அறிவிப்பை வெளியிட்டபோது அதிலே குறிப்பிட்டுச் சொன்னேன். அது தொடர்பாக, தொடர்புடைய பல்வேறு துறைகளோடு நாங்கள் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறோம். அதற்குரிய சட்டமுன்வடிவைத் தயாரித்துக்கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டத்தொடரிலே நிச்சயமாக அந்தச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு நம்முடைய தமிழகம் தொடர்ந்து முன்னணியில் இருக்கிறது என்பதை யாரும் மறுத்திட முடியாது. ஆகவே,

தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான், உட்கட்டமைப்பு வசதிகளை நாம் பெருக்கியாக வேண்டும்; அதற்கு நம்முடைய அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத்தெரியும்.

அதிலே, குறிப்பாகச்சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னை விமான நிலைய விரிவாக்கம், புதிய விமான நிலையத் திட்டச்செயலாக்கம், எண்ணூர் மற்றும் சென்னை துறைமுக விரிவாக்கம், மெட்ரோ இரயில் திட்டம், துறைமுகம் – மதுரவாயல் உள்ளிட்ட உயர்மட்டச் சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் விரிவாக்கம், மாநில நெடுஞ்சாலை விரிவாக்கம், மின் உற்பத்தி மேம்பாட்டுத்திட்டங்கள், இதுபோன்ற பல்வேறு திட்டங்களை இன்றைக்கு மத்திய அரசின் துணையோடு நம்முடைய மாநில அரசு தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அதேபோல, SEZ – (Special Economic Zone ) - சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், இதைப் பொறுத்தவரை, நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், இந்திய அளவிலே கணக்கெடுத்துப்பார்த்தால், நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கு மூன்றாவது இடத்திலே இருந்துகொண்டிருக்கிறது. முதல் இடம் ஆந்திர மாநிலம், இரண்டாவதாக மகாராஷ்டிரா மாநிலம்,

மூன்றாவதாக நம்முடைய தமிழ்நாடு. தமிழகத்தைப் பொறுத்தவரையில், இதுவரையில் 49 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நாம் ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம்.

இதிலே ஒன்று, SEZ சட்டம் – 2005. இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது 2006–லே, அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோதுதான் இந்தச்சட்டம் வந்தது. அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே ஒரு சிறப்புப்பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டது. அதற்குப்பிறகு இந்த மூன்றாண்டு காலத்திலே, திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், எவ்வளவு சிறப்புப்பொருளாதார மண்டலங்களுக்கு ஒப்புதலைப்பெற்றிருக்கிறோம் என்று சொன்னால், 48 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நாம் ஒப்புதலைப்பெற்றிருக்கிறோம். இதனுடைய மொத்த நிலப் பரப்பளவு 3,972 ஹெக்டேர் ஆகும். இதன்படிப்பார்த்தால், சராசரியாக ஒரு சிறப்புப்பொருளாதார மண்டலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் அளவு எவ்வளவு என்று கேட்டால், 81 ஹெக்டேர். இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒரு காரணம் உண்டு. இதுவரை தேவைக்கு அதிகமாக யாருக்கும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டுச்சொன்னேனே தவிர, வேறல்ல.

அடுத்து, டிட்கோ. இது, தமிழ்நாட்டைப்பொறுத்தவரைக்கும் நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகளை உருவாக்குவதற்குத்

தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தரக்கூடிய ஒரு பெரும் அமைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த 44 ஆண்டு காலமாக இந்த டிட்கோ தன்னுடைய பணியை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. டிட்கோ கூட்டுறவோடு நாங்குநேரி சிறப்புப்பொருளாதார மண்டலம், தரமணி Tidel Park மற்றும் மூன்று, பொன்னேரி வட்டத்திலே காட்டுப்பள்ளியில் கப்பல் கட்டும் தளம், சிறு துறைமுக வளாகம், கடலூரிலே நாகார்ஜுனா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, பெரம்பலூரிலே சிறப்புப்பொருளாதார மண்டலம் போன்ற பணிகளையெல்லாம் நாம் டிட்கோ மூலமாக இன்றைக்குச்செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல, சிப்காட். சிப்காட்டைப் பொறுத்தவரைக்கும், 38 ஆண்டு காலமாக, தொழில் வளர்ச்சிக்கு சிறப்பாகத் தன்னுடைய பணியைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. நாம் பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், நம்முடைய தமிழகத்தினுடைய சிப்காட்டில் முதல் தொழிற்பேட்டை, 1971 ஆம் ஆண்டு இராணிப் பேட்டையிலேதான், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால்தான் அன்றைக்குத் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து, அவருடைய ஆட்சி காலத்திலேதான், ஒசூராக இருந்தாலும்சரி, கடலூராக இருந்தாலும்சரி, இருங்காட்டுக் கோட்டையாக இருந்தாலும்சரி, தூத்துக்குடி, திருப்பெரும்புதூர்,

ஒரகடம், சிறுசேரி போன்ற பல இடங்களில் இது தொடங்கப்பட்டு, தொழில் வளர்ச்சிக்கு, இதுதான் களம் அமைத்துத்தந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

12 மாவட்டங்களில், 19 தொழில் வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 1,803 தொழில் நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன்மூலமாக, 3,52,000 பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக, மூன்று ஆண்டுகளில் மட்டும் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கக்கூடியவர்கள் 2,27,000 பேர். இன்னும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த ஓராண்டிலே மட்டும் 120 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, 54,000 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. கடந்த அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஐந்தாண்டு காலத்திலே, சிப்காட் தொழிற்சாலைகள் தொடங்க ஒதுக்கீடு செய்த நிலத்தினுடைய பரப்பளவு எவ்வளவு தெரியுமா? 3,608 ஏக்கர். 2006–இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்து, இந்த மூன்று ஆண்டு காலத்தில், ஒதுக்கீடு செய்திருக்கக்கூடிய நிலத்தின் பரப்பளவு எவ்வளவு தெரியுமா? 6,630 ஏக்கர். இரண்டு மடங்கு உயர்ந்திருக்கிறது.

கடந்த நிதியாண்டிலே மட்டும், சிப்காட் நிறுவனத்தின் மூலமாக வந்திருக்கக்கூடிய வருமானம் ரூ.370 கோடி. இதில்,

ரூ.100 கோடியே 40 இலட்சம் இலாபம் மட்டுமே வந்திருக்கிறது. வரலாற்றிலே, இதுவரையிலே, பெறமுடியாதவகையிலே சிப்காட் இவ்வளவு இலாபம் ஈட்டியது இதுதான் முதல்முறை என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தென்மாவட்டங்களில்கூட, தொழில் வளர்ச்சிப் பெருகவேண்டுமென்பதற்காகத்தான், 2006–07 ஆம் ஆண்டு, இதே துறையினுடைய மானியக் கோரிக்கையினைத் தாக்கல் செய்து, நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் பதில் அளித்தபோது, அன்றைக்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். மதுரையிலே, சிப்காட் மூலமாக தொழிற் பூங்கா தொடங்க அன்றைக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதை நிறைவேற்றிட வேண்டுமென்கிற அந்த முடிவோடு, மதுரை தெற்கு வட்டத்தில், அதாவது, விமான நிலையம் இருக்கக்கூடிய அந்தச் சுற்று வட்டாரத்தில், அதன் அருகிலே பல பகுதிகள் தேர்வு செய்யப்பட்டன. வளையங்குளம், எலியார்பதி, சோழங்குருணி, மற்றும் நல்லூர் போன்ற பல பகுதிகள் தேர்வு செய்யப்பட்டன. ஏறத்தாழ, 894 ஏக்கர் நிலம் கையகப்படுத்திடுவெற்குரிய அரசின் அனுமதி, 2–7–2007 ஆம் ஆண்டே வழங்கப்பட்டது. ஆனால், அன்றைக்கு சில பிரச்சினைகள் உருவாயின. சில போராட்டங்கள் நடந்தன. சில நில உடைமைதாரர்கள் அன்றைக்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள். எனவே, இதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு, அதிகாரிகள் தலைமையிலே ஒரு குழுவை நம்முடைய

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு அனுப்பி, அதற்குப் பிறகு ஆய்வு நடத்தி, அதிலே ஓரளவிற்கு நியாயம் இருப்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் உணர்ந்த காரணத்தினால், அந்த இடத்தைக் கைவிட்டு விட்டார்கள்.

அதற்குப்பிறகு தற்போது திருமங்கலம் வட்டத்தில், இதே சிப்காட் தொழிற் பூங்காவினைத் தொடங்க 1,478 ஏக்கர் தரிசு மற்றும் புன்செய் நிலத்தைக் கையகப்படுத்திட வேண்டுமென்றுச் சொல்லி, அதற்காக அரசு 12–6–2009 அன்று அனுமதியையும் வழங்கியிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL) இன்றைக்குச் சிறப்பாகச் செயல்படக்கூடிய நிறுவனங்களில் ஒன்றாக, இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய நிறுவனங்களை, சில நேரங்களில் அவற்றிற்கு விருதுகளைக் கொடுக்க, பரிசுகளைக்கொடுக்கத் தேர்வு செய்வார்கள். அப்படித்தேர்வு செய்கிறபோது, மத்திய அரசினுடைய 9 நிறுவனங்களைத்தேர்ந்தெடுத்து, நவரத்னா நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து நவரத்னா விருதுகளை அந்த நிறுவனங்களுக்கு வழங்குவது உண்டு.

அதேபோல, இன்றைக்குத் தமிழக அரசினுடைய தொழில் நிறுவனங்களில் ஒன்றாகத் திகழக்கூடிய இந்த நிறுவனத்திற்கு, ஒரு ரத்தினமாகத் திகழக்கூடிய நிறுவனம் என்று தொடர்ந்து

இந்த நிறுவனம் அந்தப் பரிசினைப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற நிதியாண்டில், இலாபமாக ரூ.157 கோடியே, 85 இலட்சம் ஈட்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த ஆலையை ரூ.600 கோடி செலவிலே மேம்படுத்தி, அப்படி மேம்படுத்திய காரணத்தால் இந்த ஆலையினுடைய உற்பத்தித்திறன், கடந்த ஆண்டு நாள் ஒன்றுக்கு 520 டன் நிலையிலிருந்து, 720 டன்னாக, உயர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, மத்திய அரசினுடைய விருதுகளை இந்த நிறுவனம் தொடர்ந்து பெற்று வருகிறது.

அதேபோல, சர்க்கரை ஆலைகளைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாட்டிலே 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் உள்ளன. மூன்று பொதுத் துறை ஆலைகள், 22 தனியார் ஆலைகள். ஆகமொத்தம், 41 ஆலைகள் தமிழகத்திலே உண்டு. அவற்றில், மூன்று ஆலைகள் செயல்பாட்டில் இல்லை. மதுராந்தகம் கூட்டுறவு ஆலை ஒன்று, மதுரா ஆலை ஒன்று, தனியார் நிறுவனமாக இருக்கக்கூடிய அருணா சர்க்கரை ஆலை என்கிற மூன்று ஆலைகள்.

இந்தச் சர்க்கரை உற்பத்தியினைப் பொறுத்தவரைக்கும் இங்கு நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், இன்றைக்குத் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

முதலிடம், மகாராஷ்டிரா, இரண்டாவது இடம் உத்தரபிரதேசம், மூன்றாவதாகத் தமிழ்நாடு. கடந்த ஆண்டு மட்டும் 16.16 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை உற்பத்தி செய்திருக்கிறது. அதுமட்டுமல்ல, சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதிலும், நம்முடைய தமிழ்நாடுதான் இன்றைக்கு முன்னோடி மாநிலமாக இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிடுகிறேன். அந்த அடிப்படையிலே, ரூ.1,117 கோடி செலவில் 17 பொதுத்துறை கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. ஆகவே, இந்தப் பணி விரைவிலே தொடங்கப்படவிருக்கிறது. இந்தப் பணி தொடங்கப்பட்டு, 18 மாத காலத்திற்குள் அவை முழுமையாக முடிவடையவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்பு. இங்கேகூட பலர், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அதிலே உரையாற்றியிருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், இங்கு வலியுறுத்தி, வற்புறுத்தி எடுத்துச்சொன்னார்கள். நம்முடைய அரசினைப் பொறுத்தவரைக்கும் ஏதோ தொழிற்சாலைகளைத் தொடங்குவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்காமல், தொடங்கப்படக்கூடிய தொழிற்சாலைகள் வேலைவாய்ப்பினையும் பெறக்கூடிய அந்தச் சூழலை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான்

இந்த அரசினுடைய இலட்சியம். இந்த அரசினுடைய கொள்கை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அண்மையில் வெளியிடப்பட்ட மத்திய புள்ளியியல் நிறுவனம் (C.S.O)கணக்கின்படி பார்த்தால், இன்றைக்கு இந்தியாவிலேயே அதிகத் தொழிற்சாலைகளைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மாநிலம், நம்முடைய தமிழ்நாடுதான். ஆக, தொழிற்சாலைகள் மட்டுமல்ல, அப்படி உருவாகி இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில்தான் முதலிடத்தில் இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் தொடங்கப்பட்ட 31 தொழிற்சாலைகளின் மூலமாக, நேரடியாக 86,562 பேருக்கும், மறைமுகமாக 1,22,130 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு அறிவிப்பிலேகூட, நான் குறிப்பிட்டுச்சொன்னேன், தொழிற்சாலைகளைத்துவக்கக் கூடியவர்கள் உள்ளூரிலே இருக்கக்கூடிய, அந்த மாநிலத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்களுக்கு 75 சதவீதத்திற்குக்குறையாமல் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும். அப்படி வழங்கக் கூடியவர் களுக்கு, தொகுப்புச் சலுகைகள் அரசின் சார்பில் வழங்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை அன்றைக்கு வெளியிட்டோம். முன்பெல்லாம் எப்படிச் சலுகைகள் வழங்கப்பட்டன என்று சொன்னால், முதலீட்டைப் பொறுத்து சலுகைகள் வழங்கப்பட்டன.

தமிழரசு
அலுவலகப் பிரதி

ஆனால், இப்பொழுது நம்முடைய ஆட்சியிலே, முதலீடு மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பையும் அடிப்படையாக வைத்துத்தான் இன்றைக்குச் சலுகைகளெல்லாம் வழங்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுதான் இப்பொழுது நடை முறைப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, கடந்த 3–7–2009 அன்று, இங்கே நம்முடைய சகோதரர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபொழுது குறிப்பிட்டுச் சொன்னார். பல தொழிற்சாலைகளை நானும் என்னுடைய துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளும் நேரடியாகச் சென்று பார்வையிட்டதை எடுத்துச் சொன்னார், உண்மைதான்.

கடந்த 3–7–2009 அன்று ஒரகடம், திருப்பெரும்புதூர் பகுதியில் இருக்கக்கூடிய சிப்காட் வளாகத்தில் அமைந்திருக்கக்கூடிய தொழிற்சாலைகள். தொடங்கப் பட்டிருக்கக்கூடிய தொழிற் சாலைகள், உற்பத்தி நடத்திக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகள், தொடங்கிய நிலையில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், தொடங்கப்படக்கூடிய நிலைக்கு வந்திருக்கக்கூடிய தொழிற்சாலைகள், இன்னும் தொடங்க முடியாத நிலையிலிருக்கிற சில தொழிற்சாலைகள் இவற்றையெல்லாம் பார்வையிடக்கூடிய அந்த வாய்ப்பை நாங்கள் பெற்றோம். அந்த வகையிலே முழுமையாகப் பணிகளை முடித்து, உற்பத்தியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கக்கூடிய குறிப்பாக, இரண்டு தொழிற்சாலைகளை நேரடியாக நாங்கள் போய்ப் பார்த்தோம்.

Nokia, Sanmina என்ற இரண்டு தொழிற்சாலைகள். அந்தத் தொழிற்சாலைகளைப் பார்வையிடச் சென்றபோது, அங்கே இருக்கக்கூடிய பணியாளர்கள், அங்கே பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய, வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கக் கூடியவர்கள், அவர்களுடைய நிலைகள் எல்லாம் என்ன? எந்தெந்த நிலையிலே யார் யார் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைப்பற்றி நேரடியாகவே சென்று ஆய்வு நடத்தினோம், முழுமையாக விசாரித்தோம். நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், அனைத்து நிலைகளிலுமே இருக்கக்கூடியவர்களைப் பொறுத்தவரைக்கும், அந்தப் பணியிலே இருக்கக்கூடியவர்கள் அந்தப்பகுதியைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள், உள்ளூர்க்காரர்களாகவும், அந்த மாவட்டத்தைச்சார்ந்தவர்களாகத்தான் – ஏறக்குறைய 75 சதவீதத்திற்குமேல் ஏன் 80 சதவீதத்தைத்தாண்டக் கூடிய அளவிற்கு வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த மூன்றாண்டுகளில் நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் சரி, மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்யக்கூடிய நிலைகளாக இருந்தாலும், நிதிநிலை அறிக்கையிலும் சில அறிவிப்புகளை வெளியிடுகிறோம். மானியக் கோரிக்கை நடைபெறுகின்றபொழுதுகூட பதில்

தருகிறபொழுது, சில அறிவிப்புகளை வெளியிடுகிறோம். அந்த வகையில் இந்தத்துறையைப்பொறுத்தவரைக்கும், மூன்றாண்டுகளில் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்புகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டால், 51. நான் சொல்வது மூன்றாண்டுகளில். அதிலே முழுமையாக நிறைவேற்றி முடித்திருப்பவை 29. செயல்பாட்டில் இருப்பவை 22.

இன்னும் விளக்கமாக ஆண்டுவாரியாக நான் குறிப்பிட விரும்புகிறேன். 2006–2007 ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகள் 17. அவற்றில் முழுமையாக நிறைவடைந்திருப்பவை 13. செயல்பாட்டில் இருப்பவை 4. 2007–2008–லே அறிவித்த அறிவிப்புகள் 20. முழுமையாக முடிந்தவை 10. செயல்பாட்டில் இருப்பவை 10. 2008–2009–இல் அறிவித்த அறிவிப்புகள் 14. முழுமையாக நிறைவேற்றப்பட்டவை 6. செயல்பாட்டில் இருப்பவை 8. ஆக மொத்தம், மூன்றாண்டுகளில் 51அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, முழுமையாக 29–ஐ நிறைவேற்றி, எஞ்சிய 22 செயல்பாட்டில் இருக்கின்றன. செயல்பாட்டில் இருப்பவை என்று நான் சொல்வதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எந்த நிலை என்று கேட்டால், மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டிய நிலை, நில எடுப்பு நடவடிக்கைகள், அதையும் தாண்டி, நிதியாதாரங்களைப் பெறுவது, அதையும் தாண்டி வழக்குப் பிரச்சினைகள்; ஆக, அந்த நிலையில் இருப்பவற்றைத்தான் செயல்பாட்டில் இருப்பவை என இங்கே நான் குறிப்பிட்டுச்

சொன்னேன். அதுமட்டுமல்ல, இன்னொன்றை நான் உதாரணத்திற்குக் குறிப்பிட விரும்புவது :

கடந்த 3 ஆண்டுகளில் நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 22 MoU, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறோம். இங்கேகூட வெள்ளை அறிக்கை வைக்க வேண்டும் என்று எல்லாம் கேட்டார்கள். வெள்ளை அறிக்கைத் தேவையில்லை. அமைச்சருடைய அறிக்கையை இப்பொழுது நான் உங்களிடத்திலே ஆதாரத்தோடு எடுத்துவைக்க விரும்புகிறேன். இதனுடைய விளக்கங்களை நான் குறிப்பிட விரும்புவது, 22 MoU, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அவற்றில் முழுமையாக முடிந்திருப்பவை 9. முழுமையாக முடிந்திருப்பவை 22–லே 9. அந்த 9 என்னென்ன? அதையும் ஆதாரத்தோடு நான் குறிப்பிடுகிறேன். வரிசைப்படுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒன்று, Motorola, அமெரிக்க நிறுவனத்தைச் சார்ந்தது. இது 27–4–2008 அன்று நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இது MoU செய்யப்பட்ட நேரத்தில் ஒப்பந்தம் போட்டது 135 கோடி ரூபாய். இதுவரையில் இதற்கு முதலீடு செய்திருப்பது எவ்வளவு தெரியுமா? 250 கோடி ரூபாய்.

அடுத்தது Dell Computer, இது அமெரிக்க நிறுவனம். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 22–4–2008 அன்று

இதைத் தொடங்கி வைத்தார்கள். MoU போடப்பட்டபோது, இதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது 280 கோடி ரூபாய். இதுவரையில் இவர்கள் முதலீடு செய்திருப்பது 133 கோடி ரூபாய்.

மூன்றாவதாக, Samsung. இது கொரிய நிறுவனத்தைச் சார்ந்தது. இதையும் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் 13–11–2007 அன்று தொடங்கி வைத்தார்கள். MoU செய்யப்பட்டபோது, ஒப்பந்தம் போட்டது 450 கோடி ரூபாய். இதுவரையில் இவர்கள் முதலீடு செய்திருப்பது 130 கோடி ரூபாய்.

அடுத்து, நான்காவதாக Caparo, இங்கிலாந்து நிறுவனத்தைச் சார்ந்தது. இதையும் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் 5–10–2007 அன்று திறந்துவைத்தார்கள். MoU போடப்பட்டபோது, ஒப்பந்தம் செய்யப்பட்டது ரூபாய் 300 கோடி. இதுவரையில் இவர்கள் முதலீடு செய்திருப்பது 250 கோடி ரூபாய்.

அடுத்து ஐந்தாவதாக Sanmina, அமெரிக்க நிறுவனம். டிசம்பர் 2007–லே தொடங்கப்பட்டிருக்கிறது. MoU செய்யப்பட்டபோது 225 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப் பட்டது. இதுவரையில் இவர்கள் முதலீடு செய்திருப்பது 191 கோடி ரூபாய்.

அடுத்து, ஆறாவதாக Hyundai Motor, இரண்டாம் ஆலை. இது 2-2-2008 அன்று முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. MoU செய்யப்பட்டபோது, 4 ஆயிரம் கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, இதுவரையில் இவர்கள் முதலீடு செய்திருப்பது 3,800 கோடி ரூபாய்.

ஏழாவதாக, Nokia Siemens; இது 16-10-2008 அன்று தொடங்கிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. MoU போடப்பட்ட போது 300 கோடி ரூபாய் ஒப்பந்தம். இதுவரை இவர்கள் முதலீடு செய்திருப்பது 150 கோடி ரூபாய்.

அடுத்து, எட்டாவதாக Hansen Drives, பெல்ஜியம் நாட்டு நிறுவனத்தைச் சார்ந்தது இது. டிசம்பர் 2008-லிருந்து இதனுடைய உற்பத்தி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. MoU செய்யப்பட்டபோது 1,300 கோடி ரூபாய். இதுவரையில் இவர்கள் முதலீடு செய்திருப்பது 1,094 கோடி ரூபாய்.

அடுத்து ஒன்பதாவதாக, Growthlink, தைவான் நாட்டைச் சார்ந்தது. MoU செய்யப்பட்டபோது 300 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்டு, இதுவரையிலே இவர்கள் முதலீடு செய்திருப்பது 150 கோடி ரூபாய்.

ஆக, முழுமையாக முடிந்து. தன்னுடைய உற்பத்தியைத் தொடங்கி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய 9 நிறுவனங்களை வரிசைப்படுத்தி நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

22–லே 9 போனால், மிச்சம் என்ன கணக்கு என்று உங்களுக்குத் தெரியும், 13 இருக்கிறது. அந்த 13–இல், 11 செயல்பாட்டில் இருக்கின்றன. அந்த 11 என்ன என்று விளக்கவா? வெள்ளை அறிக்கை கேட்டீர்களே! அதற்காக நான் விளக்குகிறேன்.

கடந்த 3 ஆண்டுகளில் செயல்பாட்டில் இருக்கக்கூடிய நிறுவனங்களைப் பொறுத்தவரைக்கும், Apollo Tyres, Tessolve அமெரிக்க நிறுவனம், Renault-Nissan 2010–லே கார் உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன. அதேபோல Signet Solar மத்திய அரசினுடைய அனுமதியை 1–6–2009 அன்று பெற்றிருக்கிறார்கள். விரைவிலே அந்தத் தொழிற்சாலைக்குரிய பணி தொடங்கப்பட இருக்கிறது. MRF Limited, நிலம் வாங்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது. Moser Baer மின்சாரப் பணியும், அலுவலகப் பணிகளையெல்லாம் முழுமையாக முடித்து விட்டு, பிரதானக் கட்டடப் பணி நடந்துகொண்டிருக்கிறது. இதுவும் விரைவிலே தொடங்கப்பட இருக்கிறது.

அதேபோல, ATC Tyres நெல்லை மாவட்டத்திலே, கங்கைகொண்டான் பகுதியிலே இந்தத் தொழிற்சாலை உருவாகி வருகிறது. 2009 ஆம் ஆண்டு இறுதியிலே அதனுடைய உற்பத்தியும் தொடங்கப்பட இருக்கிறது.

அதேபோல Daimler 2009 இறுதியிலே உற்பத்தி தொடங்கப்பட இருக்கிறது. Ashok Leyland-Nissan, சிப்காட்

மூலமாக நிலமெல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு அது வழக்குப் பிரச்சினையால் நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது.

அடுத்து, பத்தாவதாக Harsha Group துவக்க நிலையில் இருக்கிறது. 11–ஆவதாக Caterpillar, இந்த ஆண்டின் இறுதியிலே தொடங்கப்பட இருக்கிறது. ஆக 22க்கு 9 இல் உற்பத்தி முழுமையாக தொடங்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. 11 உருவாகி வருகின்றன. மிச்சம் இருப்பவை 2. அந்த 2 என்னவென்று கேட்டால், Tata Steel மற்றும் MPPL Renewable Energy என்கிற இரண்டு நிறுவனம். இது என்ன நிலை என்று கேட்டால், தனிப்பட்ட முறையில் அவர்கள் நிலம் வாங்க வேண்டிய ஒரு பிரச்சினையிலே இருக்கிறார்கள். ஆக, அதுதான் இருக்கக்கூடிய நிலை என்பதையும் நான் இங்கிருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவைமட்டுமல்ல; தொடர்ந்து இன்னும் பல தொழிற் சாலைகள் தமிழகத்திற்கு வர வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்காகத் தொடர்ந்து பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

இங்கேகூட பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அண்மையிலேகூட, ஜப்பான் நாட்டைச் சார்ந்த

ஒரு பெரிய நிறுவனம், Toshiba என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய நிறுவனம், ஏறக்குறைய 800 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்யக்கூடிய வகையிலே, ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட Steam Turbine and Generator–களை தயாரிக்கக்கூடிய ஒரு பெரிய தொழிற்சாலை, எண்ணூரிலே விரைவிலே தொடங்கப்பட இருக்கிறது. அதற்கான M.O.U. ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் 7–7–2009 அன்று நம்முடைய முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தாகி இருக்கிறது.

அதேபோன்று, 10–7–2009 அன்று பேட்டரி மூலமாக இயங்கக்கூடிய மின்சார கார், BAVINA Cars India Limited என்கிற தொழில் நிறுவனம், ராணிப்பேட்டையிலே இருக்கக்கூடிய சிப்காட்டிலே நிறுவப்பட உள்ளது. அதற்காக 100 ஏக்கர் நிலத்தை நாம் அரசின் மூலமாக வழங்கி இருக்கிறோம்; அதற்கான ஆணையையும் வழங்கியிருக்கிறோம். 300 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இந்தத் தொழிற்சாலை தொடங்கப்படுகிறபோது, ஏறக்குறைய 1,500 பேருக்கு நேரடியாக, மறைமுகமாக வேலைவாய்ப்பும் கிடைக்கப்பெற இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே சில சட்டமன்ற உறுப்பினர்கள் சில பிரச்சினைகளையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான விளக்கங்களெல்லாம் என் கையிலே இருக்கின்றன.

ஆனால், உங்களுடைய முகத்தையெல்லாம் பார்க்கிறபோது, எப்போது முடியும் என்ற நிலையிலே நீங்கள் இருந்து கொண்டிருப்பதை நான் உணராமல் இல்லை. எனவே, நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகள் படிப்படியாக, அவை உரிய நேரத்தில், உரிய வகையிலே, அவையெல்லாம் நிச்சயமாக நிறைவேற்றி வைக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிறைவாக ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். "An Idle mind is a devil's workshop" என்று குறிப்பிடுவார்கள். அதாவது, "சாலையோரத்தில் சில வேலையற்றதுகள்; வேலையற்றதுகளின் உள்ளங்களில் விபரீத எண்ணங்கள்; இதுதான் காலத்தின் குறி" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்து வைத்த எச்சரிக்கையாகும். வேலையற்றவர்களாக இருக்கக்கூடியவர்கள் தான், சமூக விரோதிகளாக மாறிவிடுகிறார்கள் என்பதை அறிந்து, புரிந்து வைத்திருக்கக்கூடிய காரணத்தினால் தான், நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வருகின்றபோதெல்லாம் தொழில் துறைக்கு முக்கியத்துவம் தந்து, இன்றைக்குத் தொழிற்சாலைகளை உருவாக்கி, அவற்றின்மூலம் வேலைவாய்ப்பையும் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

"வெறும் கை என்பது மூடத்தனம், விரல்கள் 10 –ம் மூலதனம்" ஒரு தொழிலைத் தொடங்கவேண்டுமென்று சொன்னால், தொடங்கியிருக்கக்கூடிய தொழில் வெற்றி பெறவேண்டுமென்று

சொன்னால், தொழிலாளர்கள், மூலதனம், கட்டமைப்பு வசதிகள், தொழில் அமைதி, சந்தைத் தேவை ஆகியவை நிச்சயமாகத் தேவைப்படுகின்றன. இந்த இலக்கினை உறுதி செய்திட, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கின்ற அரசு தொடர்ந்து பாடுபடுகிறது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைப் பற்றிக் கடந்த காலங்களில் 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று சொல்வார்கள்; அது அந்தக் காலம். ஆனால் இன்றக்குக் காலம் மாறி, தற்போது தெற்கு வளர்கிறது; தேசத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது என்ற நிலையை இன்றைக்கு இந்த அரசு பெற்றிருக்கிறது.

இதற்கெல்லாம் காரணமாக அமைந்திருக்கக்கூடிய நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அதேபோல நம்முடைய நிதியமைச்சர் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், தொழில் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் என்னுடைய பதிலுரையை நிறைவு செய்வதற்குமுன் நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது; உங்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை நான் படித்துப் பார்த்தேன். அனைத்திற்கும் பதில் சொல்ல வேண்டுமென்று எனக்கு ஆசை.

ஆனால் அதற்கு நேரமும் இல்லை; வாய்ப்பும் இல்லை. எனவே நீங்கள் அளித்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக வைத்திருக்கின்ற கோரிக்கைகளையெல்லாம் தொடர்ந்து இந்தத் துறை பரிசீலித்து, அதற்குரிய நடவடிக்கையை, உரிய நேரத்தில், உரிய வகையில் எடுக்கும் என்ற அந்த நம்பிக்கையை மாத்திரம் எடுத்துச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**அறிவிப்புகள்**

★ வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், மியூட்சுவல் பண்ட் நிறுவனங்கள், பங்குச்சந்தை வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றைத் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் வண்ணம் சென்னை அருகில் **நிதிநகரம் (Financial City)** ஒன்று தனியார் பங்கேற்புடன் உருவாக்க முயற்சிகள் எடுக்கப் படும்; இதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அரசு ஏற்படுத்தும்.

★ வாகன உற்பத்தி மற்றும் வடிவமைப்பில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. மின்னணு வன்பொருள், மென்பொருள் உற்பத்தியிலும் சிறந்து விளங்குகிறது. வானூர்தித் தயாரிப்பு தொடர்புடைய நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னோடியாக வருவதற்கேற்ப தமிழ்நாட்டில்

**‘வானூர்திப் பூங்கா திட்டம்’ (Aerospace Park Project)** என்ற ஒரு மாபெரும் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த வானூர்திப் பூங்கா திட்டத்திற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளான ஓடுதளம், வானூர்திப் பொருட்களின் உற்பத்தி மற்றும் சோதனை செய்தல், வானூர்திப்பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் அலகுகள் (MRO), விமானப் பயிற்சிக் கூடங்கள் போன்ற பலவற்றை இத்திட்டம் கொண்டிருக்கும். இத்திட்டம் பொது மற்றும் தனியார் (PPP) பங்கேற்புடன் செயல்படுத்தப்படும்.

★ இந்த அரசு தொழிலாளர் மற்றும் அவர்கள் குடும்ப நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் சிப்காட் வளாகங்களும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும், குறிப்பாக சென்னைப்புறநகர்ப்பகுதிகளும் மிகப்பெரிய அளவில் வளர்ந்து வருவதால் இப்பகுதிகளில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் இரண்டு இலட்சத்திற்கும் மேலான தொழிலாளர்கள் பணிபுரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலகப்பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு வீட்டுவசதி, கல்வி, துப்புரவு, சுகாதாரம், மருத்துவ வசதி, பொழுதுபோக்கு போன்ற தேவைகளை நிறைவு செய்வதற்காக திருப்பெரும்புதூர் பகுதியிலுள்ள சமூக உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்துவது அவசியம் என அரசு கருதுகிறது. எனவே தகுதியான தனியார் நிறுவனங்கள் பங்கேற்புடன் இத்தகைய கட்டமைப்பு வசதிகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

★ தொழிற்சாலைகள் அதிக எண்ணிக்கையில் அமைந்திருக்கும் பகுதிகளில், தொழிலாளர்களுக்கு நியாயமான விலையில் வீட்டு வசதியை, தனியார் பங்கேற்புடன் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யும்.

★ சிப்காட் தொழிற்பேட்டைக்கு அருகில் அமைந்த பகுதிகளிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காக மூன்று பயிற்சி மையங்கள் அந்தப் பகுதிகளில் உள்ள பெரும் தொழிற்சாலைகள் அல்லது தொழில் அமைப்புகள் மூலம் தொடங்கப்படும். இவை திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டானிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்வாய்க்கண்டிகையிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரகடத்திலும் அமைக்கப்படும். இப்பயிற்சி மையங்களில் இத்தொழிற்பேட்டைக்குத் தங்கள் நிலங்களைக் கொடுத்த குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

★ மின்னணு ஊடகங்களின் தற்போதைய வளர்ச்சி, திரைப்படங்கள் உருவாக்குதல், தொகுத்தல், தொடர்பான பயிற்சி அளித்தல், உயிரோட்டமுள்ள படங்கள் (அனிமேஷன்) எடுத்தல் ஆகிய பிரிவுகளுக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இத்துறைக்கு மேலும் ஊக்குவிப்பு அளிப்பதன் மூலம் பெருமளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம் என்பது அரசின் கருத்தாகும். இதற்காக ''**பொழுது போக்கு மற்றும் தொலைத்தொடர்புத்**

**தொழில்நுட்பப் பூங்கா''** ஒன்று தனியார் பங்கேற்புடன் அமைக்கப்படும்.

★ தமிழ்நாட்டில் அமைந்துள்ள தொழில்களின் போட்டித் திறனை தக்கவைத்துக் கொள்ளவும், மேம்படுத்தவும் **'தமிழ்நாடு உற்பத்தி போட்டித் திறன் மேம்பாட்டு மன்றம்'** (State Manufacturing Competitiveness Council) ஒன்றை அரசு ஏற்படுத்தும். இந்தக் குழுவில் தொழில்துறை மற்றும் அரசுப் பிரதிநிதிகள் மற்றும் தொழில்துறை வல்லுநர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இக்குழுவானது தனது அறிக்கையை அவ்வப்போது அரசுக்கு அளிக்கும்.

★ நாட்டில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியில் 75 விழுக்காடு இருப்பு தமிழ்நாட்டிலே உள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் இப்பழுப்பு நிலக்கரி இருப்பினைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் பொருட்டு ஆய்வறிக்கை வழங்கிட நடவடிக்கை எடுக்கும்.

★ தமிழ்நாட்டில் நிலக்கரிப் படுகை மீதேன் வாயுவின் இருப்பும் பெருமளவில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாயு மாசற்ற எரிபொருளாகும். மேற்படி நிலக்கரிப் படுகை மீதேன் வாயுவைப் பயன்பாட்டிற்கு உட்படுத்திட சிறந்த வழிமுறைகளைக் கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்படும்.

★ ஒவ்வொரு தொழிலுக்கும் அமைந்த சூழ்நிலைகள் தனித்தன்மை வாய்ந்தவை என்பதால் சர்க்கரை, தோல்,

இரசாயனம், வாகன பாகங்கள், மின்னணு வன்பொருள் பாகங்கள் மற்றும் பல முக்கிய துறைகளுக்கான துறை சார்ந்த கொள்கைகள் (Sector Specific Policies) உருவாக்கப்படும்.

★ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆண்டொன்றுக்கு 2,45,000 மெட்ரிக் டன்னாக உள்ள உற்பத்தித்திறனை 4,00,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க ரூ.1,000 கோடி முதலீட்டில் ஆலை மேம்பாட்டுத் திட்டத்தைத் தற்போது செயல்படுத்தி வருகிறது. இதன்பொருட்டு எழும் கூடுதல் மரக்கூழ் தேவைக்காகச் சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் குப்பைக் காகிதத்திலிருந்து மரக்கூழ் தயாரிக்கக் கூடிய – நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட மைநீக்கி ஆலை ஒன்றினை ரூ.174 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அமைக்கும். இத்திட்டம் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 2011 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

★ சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையிலும், நீராவி மற்றும் மின்சார உற்பத்திச் செலவைக் குறைக்கும் பொருட்டும், வருவாயை அதிகரிக்கும் பொருட்டும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன ஆலையில் உள்ள நீராவி மற்றும் மின் உற்பத்தி அமைப்புகள் ரூ.135 கோடி மூலதனச் செலவில் புதுப்பிக்கப்படும்.

★ இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலி நோக்கம் உப்பளத்தில் பயன்படுத்தப்படாமலுள்ள **2,200** ஏக்கர் நிலத்தை மேம்படுத்தி ஆண்டுக்கு மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் டன்கள் உப்பு உற்பத்தி செய்ய ரூ.**6.6** கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இதன்மூலம் இப்பகுதியிலுள்ள சுமார் **1,000** பேருக்குக் கூடுதல் வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

★ தொழிற்சாலைகளின் சிறந்த செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்காக, வேலை வாய்ப்பு உருவாக்கம், தொழில் உறவுகள், உற்பத்தித் திறன், ஏற்றுமதிகள், மாசற்ற தொழில்நுட்பப் பயன்பாடு, சுற்றுச்சூழல் நேயம் மற்றும் நிறுவனங்களின் சமுதாயப்பொறுப்பு ஆகியவற்றில் சிறந்த தொழிற் சாலைகளுக்கு விருதுகள் வழங்கப்படும்.

★ தோல் மற்றும் ஜவுளித் தொழில்களுக்காக அமைக்கப்படும் ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு மையங்களுக்கு (CETPs) மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

★ ★ ★





தமிழரசு
அலுவலகப் பிரதி



# அமைதி தவழ்ந்திடும் தமிழகம்

தமிழரசு
அலுவலகப் பிரதி

# அமைதி தவழ்ந்திடும் தமிழகம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20.7.2009 அன்று,

காவல் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

ஆற்றிய உரை

சிறப்பு வெளியீடு எண். 25

**தமிழரசு** இலவச வெளியீடு

ஜூலை 2009

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

# அமைதி தவழ்ந்திடும் தமிழகம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20.7.2009 அன்று,
காவல் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘பொன் வைக்க வேண்டிய இடத்திலே ஒரு சிறிய பூவையாவது வையுங்கள்’’ என்கிற பழமொழிக்கேற்ப தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய கட்டளையை ஏற்று உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன். அதாவது, ‘‘கானகத்திலே யானை தன் குட்டியைத் தூக்கிப்போட்டுப் புரட்டித் தள்ளி விளையாடும். அதைத் துன்புறுத்துவதற்காக அல்ல; பயிற்சி தருவதற்காக; தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக; எதிர்ப்புகளைச் சமாளிப்பதற்காக அந்தப் பயிற்சியை அது வழங்கும். அந்த உணர்வோடுதான், இப்பொழுது நான் இந்த அவையிலே நின்று கொண்டிருக்கிறேன்.

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, அதன்மீது நடைபெற்றிருக்கக் கூடிய விவாதங்களுக்குப் பதிலளிக்கக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கு. பிச்சாண்டி, திரு. இரா. இராஜேந்திரன், திரு. என். மாலைராஜா, அ.தி.மு.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பி.கே. சேகர்பாபு, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்கள், திரு.சி. ஞானசேகரன், திரு. போளூர் ம. வரதன், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த செல்வி கே. பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் உரையாற்றியிருக்கிறார்கள். கனிவாகவும் உரையாற்றியிருக்கிறார்கள், கடுமையாகவும் உரையாற்றி யிருக்கிறார்கள். ஏன்? காதில் தேன் வந்து பாய்வது போலவும் உரையாற்றியிருக்கிறார்கள். அதேநேரத்தில், குற்றங்களையும், குறைகளையும் சுட்டிக்காட்டி, இந்தத் துறைக்கு ஆக்கபூர்வமான கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் முதலில் அவர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் பேசுகிறபோது தொடக்கத்திலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், காவல் துறையைப் பொறுத்தவரையில், இது 18–ஆவது முறையாக இந்த மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது என்று பெருமையோடு

எடுத்துச்சொன்னார். 18 என்பது ஒரு விசேஷமான நாள். 18 ஆம் பெருக்கு என்று சொல்வார்கள். விவசாயிகளுக்கு வளம் சேர்க்கக்கூடிய நாளாக அது அமையும். அதுபோல், 18–ஆவது முறையாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கை தமிழக மக்களுக்கு நலன் சேர்க்கக்கூடிய வகையிலே நிச்சயமாக அமையும் என்பதை நான் தொடக்கத்திலேயே குறிப்பிட விரும்புகிறேன். Crime and punishment – குற்றமும், தண்டனையும் என்பது மனிதர்கள் ஒன்றுகூடி வாழத் தொடங்கிய காலம் முதல் இருந்து வருகிறது. பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு நிலைகளில் பரிணாம வளர்ச்சியை அது தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கிறது.

நீதியை நிலைநாட்ட தன்னுடைய கையை வெட்டிக்கொண்டான் பொற்கைப் பாண்டியன்; கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்க மகனையே தேர்க் காலில் இட்டுக் கொன்றான். மன்னன் மனுநீதிச் சோழன்; குற்றமற்ற கோவலனுக்குக் கொலைத் தண்டனை வழங்கிய தவறை உணர்ந்து உயிர் துறந்தான் பாண்டிய நெடுஞ்செழியன். இவைகள் எல்லாம் பண்டையகால தமிழகத்தினுடைய நீதி நிருவாகமாக அமைந்திருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதும், குற்றச்செயல்கள் குறித்து விசாரிப்பதும், கொடுஞ்செயல்களில் ஈடுபட்டோருக்குச் சட்டபடி தண்டனையைப் பெற்றுத் தருவதும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதும், பொது அமைதியை நிலைநாட்டுவதும், காவல் துறையினுடைய தலையாய கடமையாக அமைந்திருக்கிறது.

ஆக்ஸ்போர்டு அகராதியின்படி, Police என்ற வார்த்தைக்கு, A system of regulation for the preservation of order and enforcement of law. அதாவது, சமூகக் கட்டுப்பாட்டைக் காப்பதற்கும், சட்டத்தை அமலாக்குவதற்கும் ஏற்படுத்தப் பட்டிருக்கக்கூடிய அமைப்புதான் Police என்பதாகும். இந்த வகையிலே, தமிழகக் காவல் துறை இன்றைக்குச் சிறப்பாகப் பணியாற்றி, 150–ஆவது ஆண்டினுடைய அந்த வரலாற்றிலே இடம்பெற்றிருக்கிறது.

மறைந்த முதுபெரும் தலைவராக விளங்கிய மதிப்பிற்குரிய திரு. கக்கன்ஜி அவர்களுடைய நூற்றாண்டு விழாவை நம்முடைய அரசு கொண்டாடவிருக்கிறது. அவர் எளிமைக்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்துகாட்டியவர். 1966ஆம் ஆண்டு, 43 ஆண்டுகளுக்கு முன்னால், இதே அவையில் அவர் உள் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, காவல் துறை மானியக் கோரிக்கையினைத் தாக்கல் செய்து, அதிலே நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் சொல்கிறபோது, இரத்தினச் சுருக்கமாக, ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். "நமது மாநிலத்தில் போலீசின் பெருமையை இந்த மன்றமும் அறியும். மக்களும் அறிவார்கள். பாரத நாட்டில் மட்டுமல்லாமல், பல்வேறு தேசங்களிலிருந்து வந்து பார்ப்போர்கள் எல்லாம் மதறாஸ் போலீசின் பெருமையைப் பாராட்டி வாழ்த்தியிருக்கிறார்கள்" என்று அவர் பேசிய பேச்சு அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது.

அதுமட்டுமல்ல, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக

பொறுப்பிலிருந்தபோது, இதே அவையில் அவர் சொன்னது, லண்டன் ஸ்காட்லாந்துக்கு இணையாக நம்முடைய காவல் துறையை ஒப்பிட்டு அவரும் பேசியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, காவல் துறையினருடைய கடினமான வாழ்க்கையைப் பற்றி, ஏறத்தாழ அரை நூற்றாண்டிற்கு முன்னே, நம்முடைய தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள், தானே எழுதி, அதிலே அவரே நடித்து, நடத்தப்பட்ட ஒரு நாடகம், "உதயசூரியன்" நாடகம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

அதிலே தாலாட்டுப் பாடல் ஒன்று வரும். போலீஸ்காரருடைய மனைவி தன்னுடைய குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பாடிய தாலாட்டுப் பாடல் அது. அந்தப் பாடலை பலமுறை நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த அவையிலே, மேற்கோள் காட்டி உரையாற்றியிருக்கிறார்கள். இப்பொழுதுகூட அவரிடத்திலே கேட்டால், மனப்பாடமாக அப்படியே சொல்லக்கூடிய ஆற்றல் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். நானும் எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தேன், மனப்பாடம் செய்து சொல்ல வேண்டுமென்று. சொல்வதற்குத் தயார், எங்காவது தவறு வந்துவிடும். அதை அவர் கண்டுபிடித்துவிடுவார் என்கிற காரணத்தினால், கொஞ்சம் அச்சத்தோடு, நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

‘ஆராரோ! ஆரிரரோ! ஆணழகா கண் வளராய்!

அஞ்சு பத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளர வந்த

அஞ்சுகமே கண் வளராய்!

போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு,

புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்!

துப்பாக்கி எடுத்துக்கிட்டு போகின்ற நொப்பனிடம்

பழம்பாக்கி கேட்டுக்கிட்டு வழி மறிக்கும் கடன்காரன்

வருகின்ற காட்சிகளைக் காணாமல் கண் வளராய்!

நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு

ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே!

குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகின்ற
குலவிளக்கே!

கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர் கண் வளராய்!

காக்கி உடை போட்டுக்கிட்டு, சேப்புத்தொப்பி மாட்டிக்கிட்டு

நாட்டைக் காக்கும் வீரனுக்கு, உன்னைப் போல

நாலு வந்து பிறந்துவிட்டால்....காவி உடை வேணுமடா....

கமண்டலமும் தேவையடா....கண்மணியே! கண் வளராய்!

என்று ஒரு போலீசாருடைய குடும்பத்தினுடைய சோகச் சூழ்நிலையை, அன்றைக்கே அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, 1962 ஆம் ஆண்டு, நமது தலைவர் கலைஞர் அவர்கள், இதே அவையில் எதிர் வரிசையில் அமர்ந்திருந்தபோது, காவல் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது நடைபெற்ற விவாதத்தில் பங்குபெற்று உரையாற்றும்போது, இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். கடும் மழையிலும், கொடும் வெயிலிலும், நள்ளிரவிலும், கொள்ளைக்காரர்கள் மத்தியிலும், கள்வர்களிடையிலும் தங்களுடைய உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், தியாக சீலர்களாக அவர்கள் கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாராட்டி, அவர்களுடைய உழைப்பினுடைய மேன்மையை அவர் உணர்ந்த காரணத்தினால், மேலும் பல சலுகைகளை காவல் துறைக்கு வழங்கிட வேண்டுமென்று இதே அவையிலே அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

ஆகவே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில், ஏதோ ஆட்சியில் இருக்கிற நேரத்தில் மட்டுமல்ல, ஆட்சியில் இல்லாத நேரத்திலும் நம்முடைய காவல் துறையினருக்கு என்னென்ன வேண்டும் அவர்களுக்கு, என்னென்ன பணிகளை நாம் நிறைவேற்றித் தர வேண்டும், அவர்கள் மீது கொண்டிருக்கக்கூடிய அக்கறை இன்று நேற்றல்ல அது தொடர் கதையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் நமக்கு ஆதாரமாக இருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், காவல் துறைக்காகப் பல்வேறு திட்டங்களை, அவர்கள் ஆற்றக்கூடிய பணிகளை உணர்ந்து அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். அதிலே சிலவற்றை மட்டும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். காவல் துறையினுடைய கணினிப் பிரிவு, மகளிர் காவல் பிரிவு, பொருளாதாரக் குற்றப் பிரிவு, தமிழ்நாடு கமாண்டோ படைப் பிரிவு, கமாண்டோ படைப் பிரிவிற்கு பயிற்சி நிலையம், Q Branch பிரிவு, இப்படிப் பல்வேறு பிரிவுகளை, பல்வேறு திட்டங்களை காவல் துறைக்காக அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

நான் இன்னொன்றையும் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய தமிழக காவல் துறைக்குப் பல சலுகைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்ற எண்ணத்தோடு 3 Police Commission–களை அவர்தான் அமைத்துத் தந்தார். அந்த 3 Police Commission–களும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலேதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பிலே இருந்தபொழுதுதான் உருவாக்கித் தரப்பட்டிருக்கின்றன. முதல் Police Commission 1969 ஆம் ஆண்டு திரு. ஆர்.ஏ. கோபாலசாமி அய்யங்கார், ஐ.பி.எஸ்., அவர்கள் தலைமையிலே அமைந்தது. அதற்கடுத்து, இரண்டாவது Police Commission–1989 ஆம் ஆண்டு திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் அமைந்தது. அதற்குப் பிறகு 2006 ஆம் ஆண்டிலே ஆட்சிக்கு வந்து, 3–ஆவது Police Commission திரு.ஆர். பூர்ணலிங்கம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையிலே அமைந்தது. இந்த 3 Police Commission–களும் தந்திருக்கக்கூடிய

பரிந்துரைகளின் அடிப்படையிலேதான், இப்பொழுது காவல் துறையினருக்கு வழங்கப்படக்கூடிய சலுகைகளாக இருந்தாலும் சரி, நிருவாகச் சீர்திருத்தங்களாக இருந்தாலும் சரி, அவையெல்லாம் இப்பொழுது அமைந்து கொண்டிருக்கின்றது. உதாரணமாக ஊதிய உயர்வு, குடியிருப்பு வசதிகள், சலுகை விலையிலே மளிகைப் பொருள்கள், சீருடை சீரமைப்பு, 5 வகையாக இருந்த காவல் நிலையங்களை 3 வகையாக மாற்றியதன் அடிப்படையிலே பணியிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிப் பல்வேறு சலுகைகள் இந்த ஆட்சியிலே தொடர்ந்து அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்னொன்று, காவல் துறையினுடைய நிதி ஒதுக்கீட்டைப் பற்றி இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் இருக்கக்கூடிய சில பகுதிகள் ஒன்றாகச் சேர்ந்து Madras Presidency என்ற நிலையிலே ஒரு மாநிலமாக இருந்தபொழுது, அப்பொழுது அந்த மாநிலத்திற்கு அதாவது 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த அன்று. அந்த ஆண்டு இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்று கேட்டால், 3 கோடியே 87 இலட்சம் ரூபாயாகும். அது படிப்படியாக இன்றைக்கு வளர்ந்து வந்து 2009–2010 ஆம் ஆண்டு காவல் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிதி ஒதுக்கீடு 2,855 கோடி ரூபாயாகும்.

அதேபோல, 1947 ஆம் ஆண்டு காவல் துறையினரின் மொத்த எண்ணிக்கையைப் பார்த்தால், ஒட்டுமொத்த காவலர்களின் எண்ணிக்கை 36,937. 1956 ஆம் ஆண்டு, அதாவது தமிழ்நாடு என்று தனி மாநிலமாகப் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு, காவலர்களின்

எண்ணிக்கை 23,977. இப்பொழுது பணியிலே இருக்கக்கூடிய காவலர்களின் எண்ணிக்கை 1,03,098 பேர். ஆக நிதி ஒதுக்கீடும் உயர்ந்திருக்கிறது; காவலர்களுடைய எண்ணிக்கையும் உயர்ந்து வந்திருக்கின்றது. ஊதியமும் உயர்ந்து வந்திருக்கிறது; ஆகவே, இந்த அடிப்படையிலே, இந்தக் காலக் கட்டத்திலே மக்கள் தொகையும் உயர்ந்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்த்தால் ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கள் தொகை ஒரு இலட்சம் என்று கணக்கெடுத்துக் கொண்டால். ஒரு இலட்சம் பேருக்கு எவ்வளவு காவலர்கள் இருந்திருக்கிறார்கள் என்று ஒவ்வொரு மாநிலத்திலும் கணக்கெடுத்துப் பார்த்தால், மேற்கு வங்கத்திலே 92 பேர், கர்நாடகா மாநிலத்திலே 94 பேர், ஆந்திராவிலே 96 பேர், கேரள மாநிலத்திலே 128 பேர், குஜராத்திலே 130 பேர். தேசிய சராசரியாக எடுத்துப் பார்த்தால் 122 பேர். நம்முடைய தமிழ்நாட்டிலே 133 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, காவல் நிலையங்களினுடைய எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தாலும், தமிழ்நாடு மூன்றாவது இடத்திலே இன்றைக்கு இருக்கிறது. முதலில் ஆந்திரா, அதற்கடுத்து இரண்டாவதாக உத்தரப் பிரதேசம், மூன்றாவதாக தமிழ்நாடு. ஏன் நாம் மூன்றாவதாக இருக்கிறோம் என்று கேட்டால், அதற்கும் ஒரு காரணம் உண்டு. தமிழ்நாட்டைவிட மக்கள்தொகையாக இருந்தாலும் சரி, பரப்பளவாக இருந்தாலும், அந்த இரண்டு மாநிலங்களும் உத்தரப் பிரதேசமாக இருந்தாலும், ஆந்திர மாநிலமாக இருந்தாலும், அந்த இரண்டு மாநிலங்களும் பெரிய அளவிலே இருக்கின்றன. அதனால்தான் இன்றைக்கு தமிழ்நாடு 3–ஆவது இடத்திலே இருந்துகொண்டிருக்கிறது. மக்கள்தொகை

அடிப்படையிலே பார்த்தால்கூட தேசிய அளவிலே 88 ஆயிரம் பேருக்கு ஒரு காவல் நிலையம்; நம்முடைய தமிழகத்திலே 53 ஆயிரம் பேருக்கு ஒரு காவல் நிலையம் அமைந்திருக்கிறது. பரப்பளவின் அடிப்படையில் பார்த்தால்கூட, தேசிய அளவிலே 254 கிலோமீட்டருக்கு ஒரு காவல் நிலையம்; நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 106 சதுர கிலோமீட்டருக்கு ஒரு காவல் நிலையம் அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல, தமிழ்நாடு காவல் துறை என்பது இன்றைக்குப் பரந்து விரிந்து இருக்கக்கூடிய ஒரு பெரும் அமைப்பாக, ஒரு சிறப்புக்குரிய அமைப்பாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்குப் பல்வேறு பிரிவுகளின் மூலமாக தன்னுடைய கடமைகளை இன்றைக்குத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு, கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு, போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு, சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு, வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு, சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு, வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, தடய அறிவியல் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு, சிறப்பு இலக்குப் படை, சமூக நீதிப் பிரிவு, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, கடலோர காவல் படைப் பிரிவு, இரயில்வே காவல் படை, குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப் படை, ஊர்க் காவல் படை, குதிரைப் படை, மோப்ப நாய்ப் படைப் பிரிவு இப்படிப் பல்வேறு பயிற்சி நிலையங்கள். இன்றைக்குப் பல்வேறு பிரிவுகளாக இந்தக் காவல் துறை தங்களுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆக,

இப்படிப் பல பிரிவுகளாகப் பிரிந்து பணியாற்றக்கூடிய காரணத்தால்தான் குற்றங்களின் தன்மையை அறிந்து, அதற்கேற்ற வகையில் உரிய நடவடிக்கையை எடுப்பதற்குப் பல்வேறு வகைகளில் அது ஏதுவாக அமைந்திருக்கிறது. ஆக, இப்படி அமைந்திருக்கக் கூடிய இந்தப் பிரிவுகளெல்லாம் இன்றைக்குப் போட்டிபோட்டுக் கொண்டு தங்களுடைய கடமையை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், தமிழக சிறப்புக் காவல் படை, அதாவது கடுமையான குற்றவாளிகள், தீவிரவாதிகள் பலர் இன்றைக்கு எங்கே அடைக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், பெரும்பாலும் புது டில்லியிலே அமைந்திருக்கக்கூடிய திஹார் சிறையிலேதான் அடைக்கப்படுகிறார்கள். ஆக அந்த அளவிற்கு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சிறைச்சாலையாக அந்த சிறை அமைந்திருக்கிறது. ஆக, அப்படிப்பட்ட திஹார் சிறையினுடைய பாதுகாப்புப் பணி நம்முடைய தமிழகச் சிறப்புக் காவல் படையிடத்திலேதான் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னால் இதுதான் நம்முடைய காவல் துறையினுடைய சிறப்புக்கு, நம்பிக்கை பெற்றிருக்கக்கூடிய ஒரு துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

அடுத்து, மகளிர் காவல் பிரிவு. இந்த மகளிர் காவல் பிரிவு என்பது முதன்முதலில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்திலேதான், 1973 ஆம் ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் இது தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் அதிக அளவிற்கு இன்றைக்கு மகளிர், காவலர்களாக இருக்கிறார்கள்;

10,130 மகளிர் காவலர்களாக இருக்கிறார்கள். 196 மகளிர் காவல் நிலையங்களும் தமிழகத்தில் அமைந்திருக்கின்றன. இவர்கள் மகளிர் சம்பந்தப்பட்ட வழக்குகள் மட்டுமல்ல, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, குற்றங்களைக் கண்டுபிடித்துத் தடுப்பது, அதையும் தாண்டி, போக்குவரத்துகளைக் கட்டுப்படுத்துவது, இப்படிப் பல்வேறு பணிகளை இவர்கள் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் தாண்டி, இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், கமாண்டோ பிரிவிலேகூட இன்றைக்கு மகளிர் இடம்பெற்றிருக்கிறார்கள்.

அதேபோல, கடலோரக் காவல் படை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே இன்றைக்கு இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாடுதான் முதலாவதாக இருந்துகொண்டிருக்கிறது. தமிழகக் கடற்கரையினுடைய நீளம் 1,706 கிலோமீட்டர். மீனவ கிராமங்கள் 591 இருக்கின்றன. படகு இறங்கு தளம் தமிழகத்திலே 400 அமைந்திருக்கிறது. கள்ளக்கடத்தல், கடல் பகுதியில் நடைபெறக்கூடிய குற்றங்களைத் தடுப்பது, தீவிரவாதிகள் ஊடுருவல், மீனவர்கள் பாதுகாப்பு போன்றவற்றை 12 கடல் சார்ந்த காவல் நிலையங்களும், 12 புறக் காவல் நிலையங்களும், 100 சோதனைச் சாவடிகளும் இதன்மூலமாகதான் இன்றைக்குத் தமிழகக் கடல் பகுதியை மக்கள் பங்கேற்போடு இன்றைக்கு அந்தப் பணியை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையினுடைய நவீனமயத்தைப் பற்றியெல்லாம்கூட இங்கே பேசிய சிலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நம்முடைய காவல்

துறை இன்றைக்குச் சிறப்பாக இருப்பதற்கு, தொடர்ந்து நவீனப்படுத்தக்கூடிய முயற்சியிலே ஈடுபட்டிருக்கிற காரணத்தால்தான் இந்தச் சிறப்பை நாம் தொடர்ந்து பெற்று வருகிறோம். இந்தியாவிலேயே முதன்முதலாக காவல் துறையிலே கணினிப் பிரிவை ஏற்படுத்திய ஆட்சி, தி.மு.க. ஆட்சிதான், கலைஞர் தலைமையிலே அமைந்திருக்கக்கூடிய இந்த ஆட்சிதான். 1971 ஆம் ஆண்டு இது முதன்முதலில் தொடங்கப்பட்டது. காவல் துறையை நவீனமயமாக்கக்கூடிய திட்டத்தை 1997–98 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் துணையோடு, அவர்களுடைய பங்கேற்போடு அந்தப் பணியை இன்றைக்கு நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்டுவது, வீட்டுவசதி, வாகன வசதி அளித்தல், நவீன ஆயுதங்கள், தகவல் தொடர்புக் கருவிகள், கணினிகள் வழங்குதல் மற்றும் காவல் துறைக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்தப் பிரிவின்மூலமாக நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். இதுவரை இந்தத் திட்டத்தின்கீழ் 967 கோடியே 24 இலட்சம் ரூபாய், அதாவது 1996–97 ஆம் ஆண்டு முதல் 2008–2009 ஆம் ஆண்டு வரை, 967 கோடியே 24 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரையில் இந்தப் பிரிவிற்காக நாம் செய்திருக்கக்கூடிய செலவு 883 கோடியே 62 இலட்சம் ரூபாய். அதுமட்டுமல்ல; கடந்த 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறையின் ரோந்துப் பணிகளுக்காக அவர்களுக்கு 100 Hyundai Accent கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், இதுபோன்ற கார்கள் டெல்லியிலும் கிடையாது, மும்பையிலும் கிடையாது, அங்கே

பார்க்கவே முடியாது; நம்முடைய சென்னை மாநகரத்திலேதான் அதுவும் அமைந்திருக்கிறது.

அடுத்து, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம். இதன்மூலமாக இப்போது 24,576 குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. மொத்தமுள்ள 1,03,098 காவல் துறையினரில் 44,951 பேருக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அதாவது, 44 சதவீதம் மொத்தமாக அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 7 ஆயிரம் வீடுகள் கட்ட அரசு அனுமதி தந்திருக்கிறது. இந்த மூன்றாண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டிருக்கக்கூடிய வீடுகளின் எண்ணிக்கை 5,560.

காவல் நிலையங்களைப் பொறுத்தவரை நம்முடைய தமிழகத்தில் 1,466 இருக்கின்றன. இதிலே சொந்தக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய காவல் நிலையங்கள் 1,199. எஞ்சியிருக்கக்கூடிய 267 காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு கொள்கைரீதியாக முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றபோது, அதாவது 2006 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது அப்போது காவல் துறையிடம் காலியாக இருந்த இரண்டாம் நிலைக் காவலர்களுடைய காலி இடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டால், 12,000 பணியிடங்கள் காலியாக இருந்தன. அதனால்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனே, இந்தக் காலியிடங்கள் உடனடியாக

நிரப்பப்படும் என்றவொரு அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையில், இப்போது 11,024 பேர் பணியிலே சேர்ந்திருக்கிறார்கள். கருணை அடிப்படையில் 310 பேருக்குப் பணியாணை வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், 4,000 பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தப் பணியும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் மிக அதிக எண்ணிக்கையில் நிரப்பப்பட இருக்கிறார்கள்; அந்த முறை, அந்த விளக்கம், அந்த விவரம் நிறைவாக என்னுடைய அறிவிப்பிலே வெளியிடப்பட இருக்கிறது என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, கடந்த ஆண்டு மிக முக்கியமான 4 நக்சலைட்டுகளை... இங்கேகூட பேசுகிறபோது நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அதுபோல சிலர் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். தீவிரவாதிகளுடைய நிலைகளைப் பற்றியெல்லாம் அடையாளம் காட்டினார்கள். ஆகவே, கடந்த ஆண்டு மிக முக்கியமான 4 நக்சலைட்டுகளை... நம்முடைய காவல் துறையினர் பிடித்து ஒரு பெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். அர்த்தநாரீஸ்வரன் என்கிற மாணிக்கம், 1967 ஆம் ஆண்டு மக்கள் போர்ப் படைக் குழுவை தமிழகத்தில் அமைத்தவர் அவர். தருமபுரியிலே 4 மிராசுதாரர்களைக் கொன்றிருக்கக்கூடிய அந்த வழக்கிலே தேடப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஏறக்குறைய 37 ஆண்டு காலம் தலைமறைவாகவே வாழ்ந்திருக்கிறார். அவர் கடந்த 12-4-2009 அன்று நம்முடைய

காவல் துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல ஜோலார்பேட்டை சிவலிங்கம் என்கிற சிவா. ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு போலீசார், மூன்று நக்சலைட்டுகள் ஆகியோரைக் கொன்ற வழக்கிலே சம்பந்தப்பட்டிருக்கக்கூடியவர். இவரும் 38 ஆண்டுக் காலம் தலைமறைவாகவே இருந்திருக்கிறார். கடந்த 10–2–2009 அன்று இவரும் தனது கூட்டாளி சாமிநாதனுடன் நம்முடைய காவல் துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல கிருஷ்ணகிரி என்.கே. கோபால். இவர் ஒரு நக்சலைட். 1973–1974 ஆம் ஆண்டில் இரண்டு மிராசுதாரர்களைக் கொன்ற வழக்கில் தேடப்பட்டுக் கொண்டிருந்தவர். இன்ஸ்பெக்டர் சீத்தாராமன் கொலை முயற்சி வழக்கிலும் இவருக்குச் சம்பந்தம் இருக்கிறது. இவர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு, பரோலில் வெளியே வந்தபோது, அப்போது தப்பித்து, அதற்குப் பிறகு 22 ஆண்டு காலம் தலைமறைவாகவே வாழ்ந்திருக்கிறார். இவரும் கடந்த 25–6–2009 அன்று நம்முடைய காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு இப்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். கொடைக்கானல் பகுதியைப்பற்றிகூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். கொடைக்கானல் பகுதியிலே பயிற்சி முகாம் அமைப்பதற்கு மாவோயிஸ்டுகள் முயன்றபோது, தொடக்கத்திலேயே அது கண்டுபிடிக்கப்பட்டு, அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டு, தமிழகத்திலே இன்றைக்கு அது வேரூன்ற முடியவில்லையென்று சொன்னால், அதற்குக் காரணம் நம்முடைய காவல் துறைதான் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழக விடுதலை இயக்கம், மாவோயிஸ்டுகள் போன்ற தடை செய்யப்பட்டிருக்கக்கூடிய

இயக்கங்கள் இன்றைக்கு நமது காவல் துறையினரின் தீவிரக் கண்காணிப்பில் இருக்கின்ற காரணத்தால், பல மாநிலங்களில் தீவிரவாதங்கள் தலைதூக்கி இருந்தாலும், நம்முடைய தமிழகத்திலே முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது நம்முடைய காவல் துறையின் சாதனைதான் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, திருடப்பட்டிருக்கக்கூடிய சொத்து தொடர்பான சில புள்ளி விவரங்களை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், நகரமயமாதல் ஏற்படக்கூடிய அந்தச் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலும், இதுபோன்ற குற்றங்கள் நாட்டிலே இப்போது கொஞ்சம் பெருகிக்கொண்டுதான் இருக்கின்றன. அதை நாங்கள் மறுக்கவில்லை. உதாரணத்திற்கு 2007–லே நடைபெற்ற சொத்து தொடர்பான குற்ற எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது 17,619–ஆக இருந்தது. 2008 ஆம் ஆண்டு அது 19,735 ஆக அதிகரித்திருக்கிறது. இருப்பினும் இதுபோன்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே இன்றைக்கு நமது காவல் துறை எந்தளவுக்கு முனைப்போடு ஈடுபடுகிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். உதாரணமாக 2008–லே பதிவு செய்யப்பட்டிருக்கின்ற 19,735 வழக்கில் 16,096 கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதையும் மொத்தமாகப் பார்க்கிறபோது 82 சதவீதம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அதேபோல களவுபோன பொருள்களின் மதிப்பு 63 கோடியே 3 ஆயிரம் ரூபாய். மீட்கப்பட்டிருப்பது, 47 கோடியே 61 இலட்சம் ரூபாய். ஆகவே 76 சதவீதம் மீட்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

கொலைக் குற்றங்களைப் பற்றியெல்லாம் இங்கே வரிசைப்படுத்திச் சொன்னார்கள். இந்தக் குற்றங்களைப் பொறுத்தளவில், குடும்பத் தகராறு, வாய்த் தகராறு, முன்விரோதம், காதல் விவகாரம், கொடுக்கல்–வாங்கல், சொத்து தகராறு என இதுபோன்ற நிலைகளில் இந்தக் கொலைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அந்த வகையிலே பார்த்தால் 2008–லே 1,630 கொலைகள் நடந்திருக்கின்றன. குடும்பத் தகராறு காரணமாக 429 கொலைகளும், வாய்த் தகராறு காரணமாக 427 கொலைகளும், முன்விரோதம் என்ற அடிப்படையில் 284 கொலைகளும், காதல் விவகாரம் என்ற அடிப்படையில் 155 கொலைகளும் நடந்திருக்கின்றன. திருட்டு, கொள்ளை, வழிப்பறி என இவற்றிற்காக நடந்த கொலைகள் பற்றி பார்க்கிறபோது மிகமிகக் குறைவாகத்தான் நடந்திருக்கிறது. ஆனால் எதில் அதிகமாக நடந்திருக்கிறது என்று சொன்னால், குடும்பத் தகராறு. அதில் திடீரென்று உணர்ச்சிவசப்படக்கூடிய காரணத்தால் நடைபெற்ற கொலைகள்தான் அதிகமாக நடந்திருக்கின்றன. இந்தக் கொலைகளில் 50 சதவீதம் அண்மையில் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் இதுபோன்ற கொலைக் குற்றங்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிப்பதிலே நமது காவல் துறை இன்றைக்குச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற 1,630 கொலைக் குற்றங்களில் 1,526 கொலைக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, போக்குவரத்துக் காவல், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 10 இலட்சம்

வாகனங்கள் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன. இங்கே உறுப்பினர்களெல்லாம் பேசும்போதுகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்றைக்கு நாட்டிலே எடுத்துப்பார்த்தால், மகாராஷ்டிராவிற்கு அடுத்து நம்முடைய தமிழகத்திலேதான் அதிகமான வாகனங்கள் இருக்கின்றன. அதாவது 1 கோடிக்கு மேல் வாகனங்கள் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்றன. வாகன எண்ணிக்கை பெருகுகின்ற போது, விபத்துகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன. அதை மறுக்க முடியாது.

2007 ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கக்கூடிய விபத்துகளை எடுத்துப்பார்த்தால் 59,140 விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலே இறந்தவர்களின் எண்ணிக்கை 11,034 பேர்கள். 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற விபத்துகள் 60,409. இதன்மூலமாக நடந்திருக்கக்கூடிய இறப்பு 11,813 பேர்கள். இதுபோன்ற நிகழ்வுகளை அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கின்றபோது நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அடைகின்ற வேதனைக்கு அளவே கிடையாது. அதனால், காவல்துறை அதிகாரிகளைச் சந்திக்கின்றபோது, அல்லது அவர்களை அழைத்துக் கூட்டங்களை நடத்துகின்றபோது, இதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லி, இதை எப்படியாவது கட்டுப்படுத்தவேண்டும், இதைக் குறைக்க வேண்டுமென்று தொடர்ந்து அறிவுறுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் எடுத்துச் சொல்லவிரும்புகிறேன்.

அதேநேரத்தில், கடந்த ஆண்டு விபத்திலே சிக்கி படுகாயம் அடைந்திருக்கக்கூடிய 5,387 பேர்கள், காவல்துறையினருடைய துரித நடவடிக்கைகளால் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். நடப்பாண்டில் 2,533 பேர்கள் விபத்திலிருந்து மீட்கப்பட்டு காப்பாற்றப்

பட்டிருக்கிறார்கள். போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 2008 ஆம் ஆண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதாவது 53,40,864 வழக்குகள் பதிவு செய்யப்பெற்று, 32,361 ஓட்டுநர்களின் உரிமங்களும் ரத்து செய்யப்பட்டு, அதேபோல, வாகனங்களுக்கான அனுமதி ரத்து எவ்வளவு என்று கேட்டால் 434. இந்த வழக்குகளின்மூலமாக இந்தத் துறைக்கு வசூலாகியிருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று கேட்டால், ரூபாய் 28,95,00,000 வருவாயாக வந்திருக்கிறது. இதை நாம் வருவாயாகக் கருதிவிடக்கூடாது. இதை விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சி என்றுதான் நீங்கள் எண்ணிடவேண்டும். இந்தப் புள்ளிவிவரங்களைப் பொறுத்த வரைக்கும் காவல்துறையினருடைய போக்குவரத்துப் பிரிவினுடைய முனைப்பான செயல்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக இருந்தாலும், இந்தப் போக்குவரத்து விபத்துகளை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டுமென்று காவல்துறை மாத்திரம் நினைத்தால் போதாது, இதிலே அனைத்துத் தரப்பைச் சார்ந்தவர்களும், விதிமுறைகளை முறையான வகையிலே கடைபிடித்தால்தான் விபத்துகளை தடுத்திட முடியும். உயிரிழப்புகளையும் நாம் தவிர்த்திட முடியும் என்பதை இந்த அவையின்மூலமாக நான் அனைவருக்கும் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து, சட்டம் ஒழுங்கு. கடந்த ஆண்டில் சட்டம் ஒழுங்கு, பொது அமைதி, ஆக மிகச் சிறப்பாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே அழுத்தம் திருத்தமாக உறுதியாகச் சொல்ல முடியும். எத்தனையோ சிக்கலான, சிரமமான, கொந்தளிப்பான சூழ்நிலைகள் நம்முடைய மாநிலத்திலே அவ்வப்போது ஏற்பட்டது உண்டு. பெரும் புயல், கடும் மழை,

பேரலை, இவற்றிற்கிடையே கப்பலை கரை சேர்க்கக்கூடிய கலத்தினுடைய தலைவனைப்போல நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அறிவுரைகளோடு, ஆலோசனைகளோடு நம்முடைய காவல் துறை திறமையாக அனைத்தையும் சமாளித்து, தமிழகத்திலே அமைதியை நிலைநாட்டி, சட்டம் ஒழுங்கினை எந்த அளவிற்குப் பாதுகாத்தது என்பதை நாடு நன்றாக அறியும்.

உதாரணமாக, முக்கியத்துவம் வாய்ந்த நினைவு நாட்கள். பிரச்சினைக்குரியதாக விளங்கிய திருவிழாக்கள். அரசியல் கட்சிகள், வர்த்தக சங்கங்கள், தொழிலாளர் அமைப்புகள், விவசாயிகள், வழக்கறிஞர்கள், மாணவர்கள், பல்வேறு மதச்சார்பு அமைப்புகள், போன்றோர் நடத்திய ஆர்ப்பாட்டங்களாக இருந்தாலும் சரி, மறியலாக இருந்தாலும் சரி, சாலை மறியலாக இருந்தாலும் சரி, உண்ணா விரதங்களாக இருந்தாலும் சரி, பொது வேலைநிறுத்தங்களாக இருந்தாலும், அப்படிப்பட்ட போராட்டங்களுக்கெல்லாம் அவர்களுடைய கருத்துக்கு சுதந்திரம் தரக்கூடிய வகையிலே எந்தவித தங்குதடையுமின்றி அவர்களையும் அனுமதித்து, அதேநேரத்தில் பொது அமைதிக்கும், சட்டம் ஒழுங்கு இயல்பு வாழ்க்கைக்கும், எந்தவித களங்கமும் வந்துவிடாமல் மிகத் திறமையாக காவல்துறையினரால் சமாளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது உள்ளபடியே நமது காவல்துறையினரை நாம் நிச்சயமாகப் பாராட்டியாகவேண்டும் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல கடந்த நவம்பர் 2008 ஆம் ஆண்டு மும்பை மாநகரில் தீவிரவாதிகளுடைய தாக்குதல் நடைபெற்றது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த நேரத்தில், அந்தச் சூழ்நிலையில், நடைபெற்ற சில நாட்களிலேயே மேதகு குடியரசுத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய அமைச்சர் பெருமக்களும், முக்கியப் பிரமுகர்களும், வெளிநாட்டு இந்தியர்களும் பங்கேற்கக்கூடிய வகையிலே ஒரு பெரிய மாநாடு நம்முடைய சென்னையிலே நடந்தது. அதாவது, ‘Pravasi Bharathiya Divas’ என்கிற பெயரில் அந்த மாநாடு நடந்தது. சென்னையிலே எந்தவித சலசலப்புக்கும் இடம் தராமல் சட்டம், ஒழுங்கை எந்த அளவிற்கு நாம் கடைப்பிடித்து அந்த மாநாட்டைச் சிறப்போடு நடத்தினோம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

அது மட்டுமல்ல, அந்த சமயத்தில் மும்பையில் நடைபெறுவதாக இருந்த இந்தியா–இங்கிலாந்து கிரிக்கெட் போட்டி. அந்தப் போட்டி மும்பையிலே நடைபெற முடியாத ஒரு சூழ்நிலை. சரி, அருகிலிருக்கக்கூடிய வேறு மாநிலத்திலே நடத்தலாம் என்று யோசித்த போது அங்கும் அந்த வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களும் அச்சப்பட்டார்கள். ஆனால், அந்தக் கிரிக்கெட் போட்டியை மிக அமைதியான முறையிலே நம்முடைய சென்னை மாநகரத்திலே நடத்தி முடித்திருக்கிறோம் என்று சொன்னால் அது நம்முடைய தமிழகத்தினுடைய காவல் துறையினுடைய சிறப்பான சட்டம், ஒழுங்கு நிருவாகமே காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து N.S.G. தேசிய பாதுகாப்புப் படை. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்கூட இதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இந்த தேசிய பாதுகாப்புப் படை என்பது மத்திய அரசால் 1984 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதனுடைய தலைமையகம் டெல்லிக்கு அருகிலிருக்கக்கூடிய மானேசர் என்கிற இடத்தில் அமைந்திருக்கிறது. அதாவது இந்தப் படையினுடைய நோக்கம் என்னவென்று கேட்டால், இதனுடைய பணி என்னவென்று சொன்னால், தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புதான் இந்த N.S.G. என்கிற அமைப்பு. அண்மையிலே மும்பை மாநகரத்தில் நடந்த தீவிரவாதத் தாக்குதலை முழுமையாக முறியடித்த அமைப்புதான் இந்த N.S.G.படை.

அப்படிப்பட்ட N.S.G.படை டெல்லியிலிருந்து மும்பைக்குச் செல்வதற்கு கொஞ்சம் தாமதமாகியிருக்கிறது. இதை அடிப்படையாக வைத்து இந்த அனுபவத்தின் அடிப்படையிலே மண்டல அளவிலே இந்த அமைப்பினை, இந்தப் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு முடிவெடுத்தது. இதுதொடர்பாக உடனே நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த தேசிய பாதுகாப்புப் படையினுடைய பிரிவை, இந்த மண்டலப் பிரிவை தமிழகத்திலே உருவாக்க வேண்டும் என்று பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு 1–12–2008 அன்று கடிதம் எழுதினார்கள். நம்முடைய முதல்வருடைய வேண்டுகோளை ஏற்ற பிரதமர் அவர்கள் அதற்கு அனுமதி தந்தார்கள். சென்னையிலே கடந்த 1–07–2009 அன்று அது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சிக்குக்கூட மத்திய உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் வந்திருந்தார்கள். நானும் அந்த

நிகழ்ச்சியிலே பங்கேற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றேன். இது தற்காலிகமாக அசோக் நகரிலே இருக்கக்கூடிய காவல் பயிற்சி மையத்திலே இப்பொழுது 241 கமாண்டோக்களைக் கொண்டு இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நிரந்தரமாக இந்த முகாமை உருவாக்குவதற்கு காஞ்சிபுரம் மாவட்டத்திலே நெடுங்குன்றம் பகுதியிலே 85.31 ஏக்கர் நிலத்தை அரசு வழங்கியிருக்கிறது. இதற்காக மத்திய அரசு 54 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே முகாம் அமைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் நம்முடைய காவல் துறையும், இந்த தேசிய பாதுகாப்புப் படையும் இணைந்து செயல்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் தீயணைப்புத் துறை. தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டில் 286 தீயணைப்பு நிலையங்கள் அமைந்திருக்கின்றன. அதிலே 6,698 அலுவலர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் 3 தீயணைப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டன. 2008–2009 ஆம் ஆண்டில் 334 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. மேலும் 694 பேரைத் தேர்ந்தெடுக்கும் பணி இப்பொழுது அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு அது நடந்து கொண்டிருக்கிறது. 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 25 புதிய தீயணைப்பு வண்டிகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. கடந்த டிசம்பர் 2008–லே தமிழகத்தைத் தாக்கிய நிஷாப் புயல். அந்த சமயத்திலே தங்களுடைய உயிரையே பணயம் வைத்து இரவென்றும், பகலென்றும் பாராமல் கடுமையாக உழைத்த, அதிலே தீயணைப்புத் துறையினரைப் பொறுத்தவரைக்கும் ஒரு சிறப்பான பணியை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் என்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று.

அதுபோல மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையைப் பற்றி நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால் 2006 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது தமிழகத்திலே மதுபான சில்லரை விற்பனைக் கடைகள் 6,699 இருந்தன. ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கக்கூடிய கோரிக்கைகளின் அடிப்படையிலே 133 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன.அதுமட்டுமல்ல, விற்பனை நேரத்தைக்கூட குறைக்க வேண்டும் என்று நம்முடைய முதல்வர் முடிவு செய்து, மொத்தமாக 4–00 மணி நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது.

மே 2006–இல் சில்லறை விற்பனைக் கடைகளோடு இணைந்த 5,272 பார்கள் இருந்தன. அது இப்போது படிப்படியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 1,484 பார்கள் மூடப்பட்டு விட்டன. ஆகவே, படிப்படியாகக் குறைக்கப்பட்டு 3,788 பார்கள் மட்டுமே இப்போது தமிழகத்தில் இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, இங்கு மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். சில பட்டியலையெல்லாம்கூட இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவர் தொடக்கத்திலே சொன்னது, அம்மாவினுடைய ஆட்சியிலே சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு பேணிப் பாதுகாக்கப்பட்டது என்றெல்லாம் பெருமையோடு எடுத்துச்சொன்னார்கள். தயவுசெய்து அவர் "முழு பூசணிக்காயை சோற்றிலே மறைத்துவிடக்கூடாது" என்ற அன்பான வேண்டுகோளை

நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஆட்சி பொற்கால ஆட்சியாம்; பொற்கால ஆட்சி?

திண்டிவனத்திலே உங்கள் ஆட்சியிலே. அன்றைக்கு ஆளுநர் காரைத் தாக்குவதற்கான முயற்சியிலே ஈடுபட்டபோது காவல்துறையினர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்களே அதுதான் பொற்கால ஆட்சியா?

அதேபோல தேர்தல் ஆணையர் சேஷன், ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்கியிருக்கிறபோது உள்ளேயிருந்து வெளியே வரமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, தாஜ் கோரமண்டல் என்கிற ஓட்டலில் இருந்து வெளியே வரமுடியாத அளவிற்கு சூழ்நிலை வந்து, காவல் துறையினுடைய துணையைக் கேட்கிறபோது, பாதுகாப்பைக் கேட்கிறபோது கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஆட்சி எந்த ஆட்சி? இதுதான் பொற்கால ஆட்சியா, அவரது ஆட்சிதான் பொற்கால ஆட்சியா?

அதுமட்டுமல்ல, ஜெரினா கஞ்சா வழக்கு–யார் உங்களுக்கு பிடிக்கவில்லை என்று முடிவு செய்கிறீர்களோ அவர்கள்மீது எல்லாம் சுலபமாகப் போடக்கூடிய ஒரு வழக்கு, கஞ்சா வழக்கு. ஆக அந்த வழக்கைப் போட்டு என்னென்ன கொடுமைகள் எல்லாம் உங்களுடைய ஆட்சி காலத்தில் நடந்தன. இதையெல்லாம் மறந்துவிட்டு இன்றைக்கு அதைப் பொற்கால ஆட்சி என்று எப்படி உங்களால் சொல்ல முடிகிறது? பெரிய பட்டியலே நானும் கையிலே வைத்திருக்கிறேன். வளர்ப்பு மகன்; அதையெல்லாம் சொன்னால் உள்ளபடியே நேரம் காணாது; அந்த அளவுக்குப் பெரிய பட்டியல் இருக்கிறது.

தமிழரசு

முகமூடி அணிந்த 8 பேர் தாம்பரத்திலே வர்த்தகரான சுப்ரமணியன் என்பவரது மகனை 1–7–2004 அன்று கடத்திய செய்தி. 3–7–2004 அன்று மீனவர் சங்க நிர்வாகிகளில் ஒருவரான தமிழரசன், காசிமேட்டு கும்பல் ஒன்றால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம். 7–7–2004 அன்று திருவல்லிக்கேணியில் வசிக்கும் கிருபானந்தன் என்ற பொறியாளர், கும்பல் ஒன்றால் கடத்தப்பட்டு 17,000 ரூபாய் பணமும், 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆவணங்களும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன.

செஞ்சி அருகே 9–7–2004 அன்று வெற்றிலை பாக்குக் கடை நடத்திவரும் பெண்மணி ஒருவர், 4 நபர்களால் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அண்ணா நகரிலே 12–7–2004 அன்று தனது அடுக்கு மாடி வீட்டில், தனியாக இருந்தபோது 28 வயது குடும்பத் தலைவி ஒருவர் கழுத்தை நெறித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

15–7–2004 அன்று அண்ணா சதுக்கம், காவல் நிலையத்தைச் சார்ந்த காவல் துறை துணை ஆய்வாளர் (போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்) ஒருவரும், தலைமைக் காவலரும் மெரினா கடற்கரையிலே ஒரு இளம் தம்பதியினரைத் தாக்கி கொள்ளையடித்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதெல்லாம் நடக்கவில்லையா; பெரிய பட்டியலே இருக்கிறது.

இதையெல்லாம் இல்லை, இல்லை, அதெல்லாம் சொன்னால் நேரமே காணாது. அதுமட்டுமல்ல, அவர் மேலும் பேசுகிறபோது இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். வீரப்பன் தேடுதல் வேட்டையிலே ஈடுபட்டு அதற்காக அவர்களுக்கு

சிறப்பு இலக்கு படையிலே, அவர்கள் பணியைப் பாராட்டி அவர்களுக்கு அங்கீகாரம் தரக்கூடிய வகையிலே பதவி உயர்வு தரப்பட்டதைப்பற்றி அவர் குறிப்பிட்டுச் சொன்னார். உண்மைதான். நாங்கள் மறுக்கவில்லை. **29–10–2004** அன்று அந்த உத்தரவு வழங்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அனைவருக்கும், அவர்கள் வகித்து வந்த அந்தப் பணிக்கு மேலே உள்ள அடுத்த நிலைக்குப் பதவி உயர்வு அளித்து, ஆணை வெளியிடப்பட்டது. அதாவது தலைமைக் காவலர், துணை ஆய்வாளராக, துணை ஆய்வாளர் ஆய்வாளராக, ஆய்வாளர் துணைக் கண்காணிப்பாளராக இவர்கள் இவ்வாறு உயர்த்தப்பட்ட பதவியிடத்தை பதவியேற்கும் நாளில், அந்தப் பணியில் உள்ளோர் பட்டியலில் இவர்கள் பெயர் கடைசியாக இடம் பெற வேண்டும் என்று அந்த ஆணையில் உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாடு அரசு சார்நிலைப் பொது விதி **35–**ன்படி ஒருவரது பணிமூப்பினை தேர்வு ஆணையத்தால் T.N.S.P.C.- தேர்வாணையத்தால்தான் தரவரிசைப்படியோ அல்லது பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளன்று இருக்கக்கூடிய பணி மூப்பு பட்டியலை வரிசைப்படுத்தித்தான் நிர்ணயிக்க வேண்டும். எனவே பதவி உயர்வு பெற்ற காவல் துறையினருக்கு ஒரு முறை அளிக்கப்பட்ட பதவி உயர்வை அடுத்த பதவி உயர்விற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் அடுத்த பதவி உயர்வு அவர்கள் இயல்பான விரைவுபடுத்தப்பட்ட பதவி உயர்வுக்கு முன்பே, ஏற்கெனவே வகித்த பணிமூப்பின்படி கணக்கில் கொள்ளவேண்டும் என்றும் நம்முடைய அரசு **3–10–2007** அன்று உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து 29–10–2004–இல் வெளியான ஆணைப்படி ஒரு நிலைப்பதிவு உயர்வு பெற்றவர்களில் 48 பேர் உயர்நீதிமன்றத்திலே சென்று வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். முதலில் உயர்நீதிமன்றம் இதற்குத் தடைபோட்டது, இடைக்காலத் தடை வழங்கியது. பின்பு இந்த இடைக்கால ஆணையை அது விலக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, இதனுடைய இறுதி ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆணை வந்ததற்குப் பிறகு, நிச்சயமாக அது முறையாக, இந்த அரசு அதில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் காவலர்களுக்கான பயிற்சிக் காலம் 6 மாதத்திலிருந்து 4 மாதங்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டுச்சொன்னார். அதற்கு ஒரு விளக்கம். காவல் துறையில் பணியிடங்கள் அதிக அளவில் காலியாக இருந்ததால் விரைவில் காவலர்கள் பணியில் சேர ஏதுவாக, இந்தப் பயிற்சிக் காலம் ஒரு முறை மட்டும், அதாவது 2007–2008 ஆம் ஆண்டு மட்டும் குறைக்கப்பட்டது. அது இப்போது மாற்றி தற்போது மறுபடியும் 6 மாதகாலமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கடந்த வெள்ளிக்கிழமை அன்று அவர்கள் கட்சியைச் சார்ந்த, திரு. வைத்திலிங்கம் அவர்கள் இதே அவையில் பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம்கூட எடுத்துச் சொன்னார். அவர், இருப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவர்

கொடநாட்டிற்கு, குன்னூருக்கு போயிருப்பதாக எங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. இருந்தாலும், இந்த அவையிலே அதைப்பற்றிச் சொல்வது என்னுடைய கடமை என்ற அந்த உணர்வோடு நான் குறிப்பிட விரும்புகிறேன். திரு. வைத்திலிங்கம் அவர்கள் இங்கே பேசுகிறபோது புதிய மகளிர் காவல் நிலையம் இந்த ஆட்சியிலே திறக்கப்படவில்லை என்று சொன்னார். திண்டுக்கல் டாக்டர் பாஸ்கரன், பேராசிரியர் சரவணன், வெல்டிங் குமார், கொடுங்கையூர் இரமேஷ், ஊரப்பாக்கம் குமார், ஜெயின் கோயில் கொலை இவற்றைப் பற்றியெல்லாம் பேசினார். அவற்றைக்குறித்துப் பலரும் அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மகளிர் காவல் நிலையத்தைப் பொறுத்தவரை நம்முடைய தமிழகத்தில் மொத்தம் உள்ள 1,466 காவல் நிலையங்களில் 196 காவல் நிலையங்கள் மகளிர் காவல் நிலையங்கள். 3–ஆவது காவல் ஆணையம் கூடுதலாக காவல் நிலையங்களைத் திறந்திட பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. இதனால்தான் அரசு தற்சமயம் புதிய மகளிர் காவல் நிலையங்களைத் துவக்க முடியாத ஒரு சூழ்நிலை. இருந்தாலும் கடந்த 2 ஆண்டிலே நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், மகளிர் காவலர்களைப் பொறுத்தவரைக்கும் 3,180 பேர் இந்த 2 ஆண்டு காலத்திலே மகளிர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மகளிர் காவல் நிலையத்தைப் பற்றிப் பேசக்கூடியவர்கள் இதைப் பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். அவர்கள் ஆட்சியில், 5 ஆண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது எத்தனை மகளிர் காவலர் நியமிக்கப்பட்டார்கள் என்று சொன்னால், 5 வருடத்திலே 4,600 பேர். ஆனால் இரண்டு ஆண்டு காலத்திலே 3,180 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த மகளிர் காவல் நிலையத்தைப் பற்றிப் பேசக்கூடியவர்கள்

ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். மகளிர் என்ற அந்தப் பிரிவையே தமிழகக் காவல்துறையில் உருவாக்கித் தந்தது, இதோ இங்கே அமர்ந்திருக்கக் கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள்தான்; **1973** ஆம் ஆண்டில். அதையும் நீங்கள் மறந்து விடக்கூடாது.

அதுபோல, திண்டுக்கல் டாக்டர் பாஸ்கரன் கொலையைப் பற்றிக் கேட்டார்கள். அந்தக் கொலை தொடர்பாக அவரைக் கடத்தப் பயன்படுத்திய வாகனம், கடந்த **21–6–2009** அன்று திண்டுக்கல்லிலே கண்டுபிடிக்கப்பட்டு அதிலே கொலையாளிகள் பயன்படுத்திய **3** செல்போன்களும் கிடைத்திருக்கின்றன. இதற்காக தனிப்படைகள் அமைக்கப்பட்டு CBCID தீவிர விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, சரவணன், அசோக் நகர் சரவணன் கொலையைப் பற்றிக்கூட கேட்டார்கள். இதற்காக **10** தனிப் படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகள் தேடப்பட்டு வருகின்றனர். சம்பவ இடத்தில் பதிவான கைரேகைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இதனுடைய வழக்கு புலன் விசாரணையில் இருக்கின்றது.

கொடுங்கையூர் இரமேஷ் கொலையைப் பற்றிக்கூட கேட்டார்கள். இது தொடர்பான வழக்கு யானைக்கவுனி காவல் நிலையத்தில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வடக்கு மண்டல இணை ஆணையர், பூக்கடைக் காவல் நிலைய துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் **12** காவல் துறை அதிகாரிகளைக் கொண்ட **3** தனிப்படைகள் இந்தக் கொலையைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கின்றன. இதனுடைய மண்டை ஓடு கூட அண்மையிலே, நேற்றையதினம் கிடைத்தது என்ற அந்தச்

செய்தியைக்கூடச் சொன்னார். உண்மைதான், மண்டை ஒடு ஒன்றுகூட கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது யாருடைய மண்டை ஓடு என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. முடிவு செய்யப்பட முடியாத சூழ்நிலையிலே அது தடவியல் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதனுடைய விவரம் வந்தததற்குப் பிறகு, உண்மைச் செய்தி என்ன என்பதைத் துறையின் சார்பிலே நிச்சயமாக வெளியிடப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வெல்டிங் குமாரினுடைய கொலையைப் பற்றிக்கூட கேட்டார்கள். புழல் காவல் நிலையத்திலே இதுசம்பந்தமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நெட்டை இரமேஷ் என்பவருடைய தந்தை மணி என்பவரைக் கொன்ற முன்விரோதத்தின் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் நடந்திருப்பதாகத் தெரியவருகிறது. இதுதொடர்பாக கார்த்திக், பழனி மற்றும் சுந்தரம் ஆகியோர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நெட்டை இரமேஷ் இப்போது தேடப்பட்டு வருகிறார். வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது.

அடுத்து ஊரப்பாக்கம் குமார் கொலையைப் பற்றிக்கூட கேட்டார்கள். ஊரப்பாக்கம் ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் குமார் என்பவர் **27-6-2009** அன்று ஊரப்பாக்கத்திலே கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்த வழக்கு சம்பந்தமாக இரண்டு எதிரிகள் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். **13** எதிரிகள் நீதிமன்றத்திலே வந்து சரணடைந்திருக்கிறார்கள். வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது. ஜெயின் கோவில் கொலையைப்பற்றிக் கேட்டார்கள். விசாரணை அடிப்படையிலே **7-6-2009** அன்று ராம்

பகதூர் கோலி, சூரஜ் பகதூர் கோலி, சீதா தேவி, ரமேஷ், ஷேர் பகதூர் மற்றும் அமர் ஆகியோர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சுமார் 9 கிலோ 225 கிராம் எடையுள்ள நகை மீட்கப்பட்டிருக்கிறது. கலியன் என்ற கூர்காவும் கைது செய்யப்பட்டிருக்கிறார். தப்பி ஓடிய வேறு சிலரையும், பொருள்களையும் மீட்க Interpol உதவியோடு கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது தன்னைப்பற்றி இணையதளத்தில் வந்த ஒரு செய்தியைப் பற்றி வேதனையோடு இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது பற்றிய ஒரு விளக்கம். Athikaalai.com என்ற இணையதளத்தில் வந்த செய்தி குறித்து வேலூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 901/2008 என வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கணினிக் குற்றங்களை விசாரிக்கும் Cyber Crime பிரிவினர் விசாரணை மேற்கொண்டு அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியாவிலிருந்து இந்தத் தகவல் நடராஜ் பிரகாஷ் என்பவரது இணையதளத்திலிருந்து வெளியானதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த நபரைப் பற்றிய விவரங்கள் Interpol மூலமாக விசாரிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல, நெல்லை மாவட்டத்திலே நடந்திருக்கக்கூடிய கொலைகளைப் பற்றியெல்லாம்கூட அவர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். அதேபோல, நம்முடைய சட்டமன்ற எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்திலே 6 மாதங்களில் 52 கொலைகள் நடந்திருக்கின்றன. இதிலே மாவட்டத்திலே மாத்திரம் 45, மாநகரத்திலே 7. ஆக, அந்த

52–லே 51–இல் குற்றவாளிகள் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டு, முறையாக விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூர் மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களிலே 36 கொலைகள் நடந்தன என்று திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அதையும் தாண்டிச் சொல்கிறேன். 6 மாதங்களில் 44 கொலைகள் நடந்திருக்கின்றன. அந்த 44 கொலைகளில், 42 இனங்களில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு முறையான விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இதுசம்பந்தமாக நான் ஒன்றைக்கூட குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இது சம்பந்தமாக 27–06–2009 அன்று பல மாவட்டங்களில் குறிப்பாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்குக் கொலைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. எனவே இதுபற்றி விசாரிக்க வேண்டும்; இதுபற்றி என்ன நடவடிக்கை காவல் துறையினால் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிக்கூட ஆய்வு நடத்துவதற்காக நாமக்கல் கவிஞர் மாளிகையில் காவல் துறை, சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகளையெல்லாம் அழைத்து, அதுபற்றி விளக்கம் கேட்டிருக்கிறார்கள். உரிய நடவடிக்கை விரைவாக எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியும் இப்போது நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, குள்ளஞ்சாவடி காவல் நிலைய மரணத்தைப் பற்றி எடுத்துச்சொல்லி,

அதற்காக அமையப்பெற்ற விசாரணைக் கமிஷன் என்னவாயிற்று என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இதுகுறித்து விசாரித்திட ஒய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஜனார்த்தனம் அவர்களைக் கொண்டு அந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. அதற்காக **21–11–2007**–இல் அரசு ஆணையிட்டது. விசாரணை ஆணையம் **18–11–2008** அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அந்த அறிக்கையைத் தந்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் இப்போது ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிந்து, நாளை சட்டப்பேரவையிலே அது வைக்கப்படவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு அவர் விடவில்லை, இன்னொன்றையும் கேட்டார். சங்கராபுரம் ஒன்றியத்தினுடைய தலைவராக இருக்கக்கூடியவர் மீது இந்த ஆட்சி பொய் வழக்கெல்லாம் போடுகிறது என்று வேதனையோடு எடுத்துச் சொன்னார். அது தவறான செய்தி. அவர் இதைத் தயவுசெய்து தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நான் இந்த விவரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சங்கராபுரம் ஒன்றியத்தினுடைய தலைவர் சந்திரசேகரன் என்பவர்மீது உள்ள வழக்கு இப்போது போடப்பட்ட வழக்கு அல்ல. ஏறக்குறைய **1992** ஆம் ஆண்டுமுதல் அந்தக் குற்றப்பதிவு அவர் மீது இருந்துகொண்டிருக்கிறது. அவர்மீது என்னென்ன வழக்குகள் இருக்கின்றன என்று கேட்டால், இரண்டு கொலை வழக்குகள், இரண்டு கொலை முயற்சி வழக்குகள், ஒரு கொள்ளை வழக்கு என இப்படி மொத்தம் **7** வழக்குகள் இருக்கின்றன. இதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று

சொன்னால், அந்த 7 வழக்குகளிலே இப்போது போடப்பட்டது, இந்த ஆட்சியிலே போடப்பட்டது இரண்டு வழக்குகள்தான். அ.தி.மு.க. ஆட்சியிலேதான் அவர் மீது 5 வழக்குகளும் போடப்பட்டிருக்கின்றன. அதை நீங்கள் முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, அவர் ஒன்றியத் தலைவராக இருக்கின்ற காரணத்தால், அந்த ஒன்றியத்திற்கு என்று இருக்கக்கூடிய வாகனத்தைத் தவறான வகைகளிலெல்லாம் பயன்படுத்தியிருக்கிறார் என்பதற்கு அதற்கும் ஒரு வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, 10–5–2009–லே ஒரு கொள்ளைச் சம்பவம். 28–5–2009–லே மருத்துவர் விசுவநாதன் என்பவரை துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய சம்பவம். ஆகவே, இவை குறித்து இவர் மீது வழக்குகளெல்லாம் இருக்கின்றன. தொடர்ந்து பல குற்ற வழக்குகளில் ஈடுபட்டதாலும், பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்ததாலும், உரிய விசாரணைக்குப் பின் முறைப்படி கடந்த 18–6–2009 முதல் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். எனவே, இவரைக் கைது செய்ததிலே எந்தவிதமான அரசியல் உள்நோக்கமும் கிடையாது, எந்தவிதமான பொய் வழக்கும் கிடையாது. அத்தனையும் உண்மைதான் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, திரு. சேகர்பாபு அவர்கள் இங்கே பேசுகிறபோது, பெண்கள் கடத்தல் குறித்து அவர் இங்கே ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார். அதுவும், புள்ளிவிவரங்களோடு, பல மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுக்காட்டிச் சொல்லியதில், தமிழ்நாடு இதில் முதல் இடத்தில் இருக்கின்றது என்ற ஒரு தவறான செய்தியை இந்த அவையிலே அவர் பதிவு செய்து இருக்கிறார்.

அதற்காக ஒரு விளக்கம். பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றம் குறைவாகத்தான் இருக்கிறது. நான் அவர் சொன்னதைப்போல பொத்தாம்பொதுவாக சொல்லாமல், ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். அதாவது, தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட புத்தகம் கூட கையில் இருக்கின்றது. அதற்கான ஆதாரம் கையில் இருக்கின்றது. அந்த, தேசிய குற்ற ஆவணக் காப்பகப் புத்தகத்தில் 2007 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இத்தகைய குற்றம் ஆந்திராவிலே 24,738–ம், உத்தரப்பிரதேசத்தில் 20,993–ம், மஹாராஸ்டிராவில் 16,974–ம், ராஜஸ்தானில் 14,270–ம், மேற்கு வங்கத்தில் 11,546–ம், குஜராத்தில் 8,220–ம், சிறிய மாநிலமான கேரளாவிலே 7,837–ம், நம்முடைய தமிழ்நாட்டிலே 7,711–ம் பதிவாகி இருக்கின்றது. ஆகவே, தமிழ்நாட்டில் பெண்களுக்கான குற்றம் அதிகமாக இருக்கிறது என்று கூறுவது உள்ளபடியே தவறானது. ஒருவேளை குறைவிலே முன்னிடத்தில் இருப்பதை அப்படிச் சொன்னாரோ என்னவோ என்பது எனக்குப் புரியவில்லை.

2009 ஆம் ஆண்டு ஜூன் வரை, இதுசம்பந்தமாக 583 கடத்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 523 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல், போக்குவரத்துக் காமிரா சென்னை மாநகரில் செயல்படவில்லை என்ற ஒரு செய்தியை எடுத்துச்சொன்னார். சென்னை மாநகரில் போக்குவரத்துக் கண்காணிப்பிற்காக 20 சாலைச் சந்திப்புகளில் பொருத்துவதற்காக ரூ.2.5 கோடி செலவில் 20 கேமராக்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டன. இவை 19 சாலை சந்திப்புகளில் பொருத்தப்பட்டு,

போக்குவரத்து கண்காணிப்புக்காக அது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வேல்ஸ் இந்தியா சாலை சந்திப்பில் பொறுத்தப்பட வேண்டிய இருபதாவது கண்காணிப்பு கேமரா தொடர்பு இணைப்புப் பெற்று அது விரைவில் நிறுவப்படும். அதுபோல், சென்னை மாநகர காவல் துறையில் Will Phone செயல்படவில்லை என்று சொன்னார்கள். Will Phone என்பது Wireless Loopline Phone அதைப் பற்றி சொன்னார்கள். சென்னை மாநகரில் காவல் துறைக்கு 300 Will Phone–கள், அதுபோல், சென்னைப் புறநகர் காவல் துறைக்கு 300 Will Phone–கள் வாங்குவதற்கு அரசு ஆணையிட்டது. தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கு பெங்களூர் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தாருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதுவரை, 585 தொலைபேசி இணைப்புகள், சென்னை மற்றும் புறநகர் காவல் நிலையங்களுக்கும், அலுவலர்களுக்கும் நிறுவப்பட்டு அவை நல்ல முறையில் இயங்கிவருகின்றன. அடுத்து, D.G.P. அலுவலகத்தில், காமராஜர் சாலையில், D.G.P. அலுவலகத்தில் இருக்கக்கூடிய ஒரு நினைவுத் தூண். அதாவது, காவலர்களாக இருக்கக்கூடியவர்கள் உயிர் நீத்து, அவர்களைப் போற்றக்கூடிய வகையில் அமைந்து இருக்கக்கூடிய ஒரு நினைவுத் தூண். அது இடிக்கப்படுகிறது என்று அவர் இங்கே எடுத்துச்சொன்னார். அந்தச் செய்தி உண்மைதான். ஆனால் என்ன காரணம் என்று அவர் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்காக நிறுவப்பட்ட அந்த நினைவுச் சின்னம் நீண்டகாலமாகி அது பழுது ஆகிவிட்டது என்ற காரணத்தினாலே, அங்கே பல புகழ்பெற்ற நினைவுச் சின்னங்களைப்போல புதிய நினைவுச் சின்னம் கிரானைட் கற்களால்

அது சிறப்பாக அங்கே உருவாகிக்கொண்டுள்ளது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அறிவிப்புகளை நான் வெளியிடவேண்டும். ஆனால் அந்த அறிவிப்புகள் வெளியிடப்படுவதற்கு முன்பு, ஒரு விளக்கத்தையும் நான் தெரிவித்தே ஆகவேண்டும். இந்த ஆட்சி பொறுப்பேற்ற மூன்று ஆண்டு காலத்தில், பல அறிவிப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டிருக்கின்றது. அப்படி வெளியிடப் பட்டிருக்கக்கூடிய அறிவிப்புகளைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தத் துறையின் சார்பில் அறிவித்த அறிவிப்புகள் 86. 85 அறிவிப்புகள் முறையாக ஆணையிடப்பட்டு அது செயல் வடிவத்தில் வந்திருக்கின்றன. குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் நான் குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்று சொன்னால், 2006–2007 ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகள் 39. அதில் 38 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிலுவையில் இருப்பது ஒன்றே ஒன்று. அது, நிலுவையில் இருக்கக்கூடிய ஒன்று என்னவென்று கேட்டால், சிறப்புக் காவல் படைக்கு மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பனியன்கள் வாங்குவது. அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. அதுபோல், 2007–2008 ஆம் ஆண்டில் அறிவித்தவை 25. அதில் முறையாக ஆணையிடப்பட்டுள்ளவை 25 ஆகும். 2008–2009 ஆம் ஆண்டு அறிவித்தவை 22 ஆகும். அதில் ஆணையிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளவை 22 ஆகும். இதற்கான விவரங்கள் எல்லாம் புத்தக வடிவில் அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான்

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இது தொடர்ந்து புதிய அறிவிப்புகளைப் பற்றி இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நிறைவாக நான் இங்கே குறிப்பிட விரும்புவது, நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், ‘எந்தவொரு நிரபராதியும் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது’ என்பது அடிப்படைக் கொள்கையாக அமைந்திருக்கிறது. அதேபோல, காவல் துறையினரின் கடமையைப் பொறுத்தவரையில், ‘எந்தவொரு குற்றவாளியும் தண்டனையிலிருந்து தப்பித்து விடக்கூடாது’ என்பதுதான் சமுதாயத்தினுடைய எதிர்பார்ப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த இரண்டையும் நிறைவேற்றும்போதுதான், உண்மையாக சட்டம்–ஒழுங்கும், நீதி நிருவாகமும் காப்பாற்றப்படுகின்றன என்பது பொருளாகும். எனவே, காவல் துறையினரைப் பொறுத்தவரையில், அவர்களுடைய கடினமான பணிச் சுமையைப் பற்றியும், ஓய்வறியாத உழைப்பைப் பற்றியும் நாம் தெளிவாக உணர்ந்திருக்கிறோம். எனவே, அவர்களுடைய சேவை தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டும்; அது இன்னும் சிறப்புப் பெறவேண்டும். அப்படிச் சிறப்புப் பெறுவதற்கு நிச்சயமாக கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரசு என்றைக்கும் துணை நிற்கும் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, இங்கே நீங்கள் வழங்கியிருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம், துறையின் சார்பிலே நாங்கள் முழுமையாகப் படித்திருக்கிறோம். உரிய நேரத்தில், உரிய வகையிலே நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கைகள் துறையின் சார்பில் எடுக்கப்படும் என்ற நம்பிக்கையை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, உறுப்பினர்கள்

தந்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை மனந்திறந்து, பெருந்தன்மையோடு திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**அறிவிப்புகள்**

தமிழ்நாட்டிலுள்ள 84 புறக்காவல் நிலையங்களும் படிப்படியாக காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும். இந்த ஆண்டு 15 புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

மறைமலை நகர், திருவள்ளூர், இராணிப்பேட்டை, சத்துவாச்சாரி, பண்ருட்டி, உடுமலைப்பேட்டை, குன்னூர், திருப்பரங்குன்றம், சாத்தூர் ஆகிய இடங்களில் புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும். மாண்புமிகு அமைச்சர் திரு. எ.வ. வேலு மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜீவா ஒ. சுப்பிரமணியன், திரு. கோ.க. மணி, திரு. கோவை தங்கம் ஆகியோர் வைத்துள்ள கோரிக்கைகளின் அடிப்படையில், ஏறத்தாழ 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 புதிய காவலர் குடியிருப்புகள் கட்டப்படும். வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் படிப்படியாகச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். நடப்பாண்டில் 72 காவல் நிலைங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும். மாண்புமிகு அமைச்சர்கள் டாக்டர் க. பொன்முடி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், திரு. இ. பெரியசாமி, திரு. எ.வ. வேலு மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. சு. சிவராஜ், திரு. கோ.க. மணி,

திரு. கே.ஆர். இராமசாமி, திரு. சி. சண்முகவேலு, திரு. எம். அன்பழகன், திரு. ஆர். சின்னசாமி, திரு. ச. இலட்சுமணன், திருமதி. சங்கரி நாராயணன், திரு. என்கேகே.பி. ராஜா, திரு.ஜீவா ஒ. சுப்பிரமணியம், திரு. த. தியோடர் ரெஜினால்டு, திரு. கோவை தங்கம், திரு. துரை சந்திரசேகரன் ஆகியோரின் கோரிக்கைகளும் ஏற்கப்பட்டிருக்கின்றன.

உளுந்தூர்ப்பேட்டை, செங்கம், நாகப்பட்டினம், திருச்சுழி, வள்ளியூர் ஆகிய ஐந்து இடங்களில் துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கான குடியிருப்புடன்கூடிய முகாம் அலுவலகங்கள் கட்டப்படும்.

ரூ.1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் 90 காவல் நிலையங்களில் அடிப்படை வசதிகளான கழிப்பிடம், பெண் குற்றவாளிகளுக்கான தனிக் காவல் அறை, குடிநீர் வசதி போன்றவை செய்து தரப்படும்.

வேலூர் மாவட்டம், சுந்தரம்பள்ளியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கு ரூ.3 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும். தற்போது மாதம் ஒன்றுக்கு தொகுப்பூதியமாக ரூ.900 பெற்று வரும் 1,149 பகுதி நேர துப்புரவுப் பணியாளர்கள் 1–8–2009 முதல் 1,300–3,000 என்ற கால முறை ஊதிய விகிதத்தில், ரூ.300 தர ஊதியத்துடன் (Grade Pay) காவல் நிலையத் துப்புரவாளர்களாகப் பணியமர்த்தப்படுவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. முருகவேல் ஆகியோரின் கோரிக்கைகளையேற்று, ஒரு புதிய காவல் கோட்டம் உருவாக்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்களின் கோரிக்கையையேற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, 1–9–2009 முதல் ஒவ்வொரு மாதத்திலும் முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகள் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மக்கள் குறை கேட்கும் நாட்களாக நிர்ணயிக்கப்படும். 9,000 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பப்படும்.

தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி, 1–8–2009 முதல் நகரப் பகுதிகளில் பணியாற்றும் காவலர்களுக்கு ரூ.80–லிருந்து ரூ.100 ஆகவும், ஊரகப் பகுதிகளில் பணியாற்றும் காவலர்களுக்கு ரூ.55–லிருந்து ரூ.75 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். பதக்கங்களுக்கான படி தற்போது காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.40 ஆகவும், தலைமைக் காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50 ஆகவும் உள்ளதை, 1–8–2009 முதல் ரூ.100 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்களின் கோரிக்கையை ஏற்று, புதுக்கோட்டை மாவட்டம்

வல்லத்திராக்கோட்டையில் ஒரு புதிய காவல் நிலையம் தொடங்கப்படும். தீயணைப்புத் துறைக்கு 60 நீர்த்தாங்கி வண்டிகள், 8 தண்ணீர் லாரிகள் மற்றும் ஒரு அவசர கால மீட்பு ஊர்தி வாங்கப்படும். மேலும், இத்துறையில் பணிபுரியும் இயக்குநர் முதல் நிலைய அலுவலர் பதவி வரை பொதுப் பயன்பாட்டுக் குழு முறையில் செல்போன் இணைப்பு வழங்கப்படும்.

சிறுசேரி, இருங்காட்டுக்கோட்டையிலுள்ள சிப்காட் தொழில் பூங்காங்களிலும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்களின் கோரிக்கையையேற்று, தலைஞாயிறிலும், திரு. ஏ. ராஜேந்திரன் அவர்களின் கோரிக்கையையேற்று, வாழப்பாடியிலும் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும். மாண்புமிகு அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களின் கோரிக்கையையேற்று, விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூரிலும், சட்டமன்ற உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்களின் கோரிக்கையையேற்று, சேலம் மாவட்டம், எடப்பாடியிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கான சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

டாஸ்மாக் நிறுவனத்தில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களின் தொகுப்பூதியம் ரூ.3,500–இலிருந்து ரூ.4,000 ஆகவும், விற்பனையாளர்களின் தொகுப்பூதியம் ரூ.2,400–இலிருந்து ரூ.2,800 ஆகவும், பார் உதவியாளர்களின் தொகுப்பூதியம் ரூ.1,800–இலிருந்து ரூ.2,100 ஆகவும், 1–8–2009–இலிருந்து உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் மற்றும் திரு. மு. அப்பாவு ஆகியோரின் கோரிக்கைகளையேற்று, கத்தோலிக்கத் திருச்சபையினர் இறை வழிபாட்டில் பயன்படுத்தி வரும் பூசை ரசம் மீதான சிறப்பு உரிமக் கட்டணம் தற்போதுள்ள ரூ.40,000ஐ ரூ.10,000 ஆகக் குறைக்கவும், உரிமக் கட்டணத்தை ரூ.200 லிருந்து ரூ.50 ஆகக் குறைக்கவும், விண்ணப்பக் கட்டணத்தை ரூ.400லிருந்து, ரூ.100ஆகக் குறைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

★ ★ ★

